
2000 முதல் 2003 வரை

G.C.E - O/L

9 PAPERS

தமிழ்மொழியும் இலக்கியமும்

TAMIL LANGUAGE & LITERATURE



அஸ்ரன் வெளியீடுகள் :-

க.பொ.த சாதாரணதரம் (G.C.E O' Level)

(12 வருட பரீட்சை வினாக்களும் விடைகளும்)

* தமிழ்மொழியும் இலக்கியமும்
* விஞ்ஞானமும் தொழினுட்பவியலும்
* சமூகக்கல்வியும் வரலாறும்
* வணிகக்கல்வியும் கணக்கீடும்
* கணிதம்
* ஆங்கிலமொழி
* சைவசமயம்

க.பொ.த உயர்தரம் (G.C.E A' Level)

(10 வருட பரீட்சை வினாக்களும் விடைகளும்)

* இரசாயனவியல்
* உயிரியல்
* பொருளியல்
* கணக்கீடு
* தமிழ்
* புவியியல்
* பௌதிகவியல்
* இணைந்த கணிதம்
* வணிகக்கல்வி
* அளவையியல்
* அரசியல் மூலதத்துவங்கள்
* இந்து நாகரிகம்

* பொதுவிவேகம் - ஆண்டு - 5 புலமைப்பரிசில்

(10 வருட பரீட்சை வினாக்களும் விடைகளும்)

பொதுப் பரீட்சைகள் :-
(வினா விடைப் பயிற்சிகள்)

* எழுதுவினைஞர் பரீட்சை
* ஆசிரிய போட்டிப் பரீட்சை
* SLAS
* SLEAS

Astan Publications

No : 100 A/1,W. A. Silva Mawatha, Colombo - 06.

Ordinary Level

தமிழ்மொழியும் இலக்கியமும் I, II & III

09 papers

பரீட்சை வினாக்களும் விடைகளும்

(2000 - 2003)

அஸ்ரன் பதிப்பகம்

100 A/1 W. A. சில்வா மாவத்தை, கொழும்பு – 06.

Ordinary
Level

09
papers

கல்வீப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2003 டிசெம்பர்

தமிழ்மொழியும் இலக்கியமும் I

ஒரு மணித்தியாலம்

- பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. 'சிரித்த **பங்கயம்** ஒத்த செங்கண் இராமன்'. பங்கயம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
(1) முல்லை (2) குவளை (3) தாமரை (4) மல்லிகை

02. 'முல்லையில் காதற் பெண்ணின் **முறுவலைக்** காணலாம்'. இங்கு முறுவல் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
(1) நாணம் (2) சிரிப்பு (3) விருப்பு (4) அழகு

03. 'தந்தனன் நினக்கு யானே **வானரத்** தலைமை' வானரம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்
(1) குரங்கு (2) அரக்கர் (3) தூதுவன் (4) தேவன்

04. சங்கு சுட்டாலும் **வெண்மை** 'தரும்' வெண்மை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
(1) தண்மை (2) நுண்மை (3) கருமை (4) இருள்

05. '**அறம்** ஒன்றே தரும் மெய்யின்பம்' அறம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
(1) புறம் (2) குற்றம் (3) இழிவு (4) மறம்

- பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

06. 'மிக நெருக்கமான நட்பு' என்ற பொருளைத் தருவது
(1) கெழுதகைமை (2) கூட்டுறவு (3) இங்கிதம் (4) அன்புடைமை

07. மனிதர்களாலே தேடற்பாலன கல்வி, செல்வம் என்னும் இரண்டுமாம். கல்வி, செல்வம் இரண்டினதும் தொகைப் பெயர்
(1) இருநிதி (2) இருபொருள் (3) இருபற்று (4) இருமரபு

08. சபை, பொதுவில், மன்றம் என்ற சொற்கள் குறிக்கும் பொருள்
(1) அரண்மனை (2) அங்காடி (3) அம்பலம் (4) அந்தப்புரம்

09. தன்னலத்திற்காகப் பிறர் சொத்தை அல்லது உழைப்பைப் பயன்படுத்தல் என்பதை உணர்த்தும் சொல்
(1) தனியுரிமை (2) சர்வாதிகாரம் (3) சுரண்டல் (4) ஏகபோகம்

10. வாழையின் இளங்காய்
(1) கச்சல் (2) வடு (3) குரும்பை (4) பிஞ்சு

11. முரசறைந்து அரசனுடைய கட்டளையை மக்களுக்கு அறிவிப்பவன்
(1) ஒற்றன் (2) கலைஞன் (3) சேவகன் (4) வள்ளுவன்

12. 'மியூசியம் (Museum) என்பதற்குப் பொருத்தமான கலைச்சொல்
(1) சுவடிகள் கூடம் (2) புகலரண்
(3) தொல்பொருள் திணைக்களம் (4) அருங்காட்சியகம்

13. 'இன்னும் விளக்கேத்தல்ல' - இங்கு விளக்கேத்தல்ல என்பதன் திருத்தமான வடிவம்
(1) விளக்கேற்றவில்ல (2) விளக்கேற்றவில்லை
(3) விளக்கேத்தவில்லை (4) விளக்கேத்தவில்ல

14. 'உருத்திராட்சப் பூனைகளை நம்பி நாம் ஏமாறக்கூடாது'. இங்கு 'உருத்திராட்சப் பூனை' என்ற மரபுத் தொடரின் உட்பொருள்
(1) உருத்திராட்சமாலை அணிந்து திரியும் ஒருவன்
(2) நல்லவனைப் போல் நடிக்கும் நயவஞ்சகன்
(3) தீயவழியில் ஒழுகி மனம் திருந்திய ஒருவன்
(4) எடுத்ததற்கெல்லாம் சந்தேகப்படும் ஒருவன்

15. "வயிற்றுப் பிழைப்புக்காக நீ கரடி விடுகிறாய் என்பது எனக்கு தெரியும்." 'கரடி விடுதல்' என்ற மரபுத் தொடரின் உட்பொருள்
(1) விடாப்பிடியாய் இருத்தல் (2) பயமுறுத்திக் காரியத்தைச் சாதித்தல்
(3) பொய்யைக் கூட்டிக் கூறுதல் (4) கரடியைக் கொண்டு விளையாட்டுக் காட்டுதல்

16. பேரும் புகழும் என்னும் இணைமொழியின் பொருள் தரும் வேறோர் இணைமொழி
(1) சீரும் சிறப்பும் (2) ஊரும் பேரும் (3) பட்டம் பதவி (4) ஈடும் எடுப்பும்

17. வசதிகள் இருப்பினும் சிலவேளைகளில் அவற்றை நன்கு அனுபவிக்க முடிவதில்லை என்னும பொருளைத் தரும் பழமொழி
(1) கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை (2) கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை
(3) உண்ணாச்சொத்து மண்ணாய்ப் போகும் (4) சுகமும் துக்கமும் சுழலும் சக்கரம்

18. 'ஆறிய கஞ்சி பழங்கஞ்சி' என்ற பழமொழியின் கருத்து
(1) கஞ்சி ஆறிவிட்டால் குடிக்க முடியாமல் இருக்கும்.
(2) எக்காரியத்தையும் நிதானமாகச் செய்தல் நன்று.
(3) இளமையில் பழகாத காரியம் முதுமையில் வராது.
(4) எக்காரியத்தையும் பிற்போடாது உடன் செய்தல் நல்லது.

19. ஒரு சிலரின் பிற்காலச் சிறப்பினை இளம் வயதுச் செயல்களிலிருந்தே அறியலாம் என்பதை விளக்கும் பழமொழி
(1) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? (2) தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.
(3) விளையும் பயிரை முளையிலே தெரியும். (4) இலையும் பழுப்பும் எங்கும் உண்டு.

20. நல்ல காரியமென நினைத்துச் செய்யத் தீயதாய் முடிதலை விளக்கப் பொருத்தமான உவமைத் தொடர்
(1) கனியிருக்க காய் கவர்தல் போல (2) கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல
(3) ஆற்றிற் கரைத்த புளிபோல (4) இரண்டு தோணியிற் கால் வைத்தது போல

• பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

21. 'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை' என்ற வாக்கியத்தின் எழுவாய்
(1) நல்லார் (2) ஒருவர் (3) அவர் (4) மழை

22. தரப்பட்ட தொடர் வகைக்குப் பொருந்தாத ஒரு தொடர் இடம்பெறும் வரிசை
(1) எழுவாய்த் தொடர் - கலா பாடினாள், குதிரை ஓடியது, அம்பு பாய்ந்தது
(2) பெயரெச்சத் தொடர் - பாடிய கலா, ஓடிய குதிரை, பாய்ந்த அம்பு
(3) உரிச்சொற்றொடர் - சாலச் சிறந்தது, இனி வருவேன், கடிநகர்
(4) வினையெச்சத் தொடர் - பாடி முடித்தாள், ஓடிச் சென்றது, பாய்ந்து வந்தது.

23. 'பசி வந்தால் பத்தும் பறந்து போம்' இங்கு பத்து என்பது
(1) முதலாகு பெயர் (2) அளவையாகுபெயர்
(3) உவமையாகு பெயர் (4) பண்பாகுபெயர்

24. 'இன்சொல் இன்பம் தரும்' - இன்சொல் என்பது
(1) பண்புத் தொகை (2) உவமைத் தொகை
(3) வேற்றுமைத் தொகை (4) அன்மொழித் தொகை

25. படர்க்கைக்கே உரித்தான பெயர்களுள் ஒன்று, முன்னிலைக்கும் வருவதுண்டு. அது
(1) நீங்கள் (2) நீவிர் (3) தாங்கள் (4) நீர்

26. அறநூல், அறிவியல் நூல், தத்துவ நூல், தொழில் நூல் என நூல்கள் பலவகைப்படும். இவ்வாக் கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள `, ´என்ற குறியீடு
(1) காற் புள்ளி (2) அரைப் புள்ளி (3) முக்காற் புள்ளி (4) முற்றுப் புள்ளி

27. பின்வரும் கூற்றுக்களில் அலட்சிய மனப்பான்மையைக் காட்டுவது எது?
(1) நடந்ததைப் பற்றிக் கவலைப்படாதே; நடக்க வேண்டியதைக் கவனி
(2) காணாமல் போய்விட்டதா? என்ன செய்வது?
(3) போய்விட்டதா? இனி, என்ன செய்யப் போகிறாய்?
(4) இவ்வளவு தானே? போனால் போகட்டும்; விட்டுத் தள்ளு.

28. நாங்கள் ஆசிரியர்களுடன் நடந்து சென்ற போது கரையோரத்தில் ஒங்கி வளர்ந்திருந்த தென்னை மரங்களைக் கண்டு களித்தோம். - இவ்வாக்கியத்தில் ஏழாம் வேற்றுமைப் பொருளை ஏற்ற சொல்
(1) நாங்கள் (2) ஆசிரியர்கள் (3) கரையோரம் (4) தென்னை மரங்கள்

29. 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்' என்ற பழமொழியில் வந் துள்ள சொற்கள்
(1) பெயர், வினை,உரி, என்பன (2) பெயர், வினை, இடை என்பன
(3) பெயர், வினை என்பன (4) பெயர், உரி, இடை என்பன

30. 'திருக்குறளில் இல்லாத பொருள் வேறெங்கும் இல்லை' - இங்கு கையாளப்பட்டுள்ள அணி
(1) உவமை (2) உருவகம் (3) தற்குறிப்பேற்றம் (4) உயர்வு நவிற்சி

- பின்வரும் வாக்கியங்களில் ஒவ்வொன்றினதும் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

31. ஔவையார் ஆத்திசூடியிற் கூறிய ஒவ்வொரு கருத்தும்
(1) எமக்கு அறிவூட்டுவனவாய் அமைந்துள்ளன.
(2) எமக்கு அறிவூட்டுவதாய் அமைந்துள்ளது.
(3) எமக்கு அறிவூட்டுவதாய் அமைநதுள்ளன.
(4) எமக்கு அறிவூட்டுவனவாய் அமைந்துள்ளது.

32. கல்விச் சீர்திருத்த ஆணைக் குழுவினர்
(1) பல ஆலோசனையை முன் வைத்தது.
(2) பல ஆலோசனைகளை முன் வைத்தது.
(3) பல ஆலோசனைகளை முன் வைத்தனர்.
(4) பல ஆலோசனைகளை முன் வைத்தன.

33. இசை, நாடகம், ஓவியம், சிற்பம், இலக்கியம் முதலிய அழகியற் கலைகளுள்
(1) இசை, ஓவியம், இலக்கியம் என்பவை ஆற்றல் மிக்கது.
(2) இசை, ஓவியம், இலக்கியம் என்பது ஆற்றல் மிக்கது.
(3) இசை, ஓவியம், இலக்கியம் என்பவை ஆற்றல் மிக்கவை.
(4) இசை, ஓவியம், இலக்கியம் என்பன ஆற்றல் மிக்கது.

- பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழைகளற்ற வாக்கியத்தினைத் தெரிவு செய்க.

34. (1) எதிர்க் கட்சியினராற் கொண்டு வரப்பட்ட பிரேரணை பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
(2) எதிர்க் கட்சியினராற் கொண்டு வரப்பட்ட பிரேரனை பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
(3) எதிர்க் கட்சியினராற் கொண்டு வரப்பட்ட பிரேரனை பாராழுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
(4) எதிர்க்கட்சியினராற் கொண்டு வரப்பட்ட பிரேரணை பாராலுமன்றத்தில் ஏற்றுக் கொல்லப்பட்டது.

35. (1) அறிஞ்ஞர் பலர் சேர்ந்து இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.
(2) அறிஞ்ஞர் பலர் சேர்ந்து இலக்கிய ஆராட்சியில் ஈடுபட்டுள்ளனர்.
(3) அறிஞர் பலர் சேர்ந்து இலக்கிய ஆராச்சியில் ஈடுபட்டுள்ளனர்.
(4) அறிஞர் பலர் சேர்ந்து இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

- பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

கிளையினில் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல
கிளைதொறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்!
(விழுது - ஆலமர விழுது)

36. குரங்கு உண்மையில் தொட்டது எதனை?
(1) கிளையினை (2) பாம்பினை (3) விழுதினை (4) விளக்கினை

37. குரங்கிடம் ஏற்பட்ட எத்தகைய உணர்வு இப்பாடல் முழுவதிலும் சித்திரிக்கப்பட்டுள்ளது?
(1) வியப்பு (2) துன்பம் (3) அச்சம் (4) பரிதாபம்

38. 'உச்சி போய்த் தன்வால் பார்க்கும்' - இவ்வாறு குரங்கு செய்ததன் காரணம் யாது?
(1) தாவித் தாவி வந்ததில் தனது வால் அறுந்து விட்டதோ என எண்ணி
(2) தனது வாலில் பாம்பு கடித்து விட்டதோ என எண்ணி
(3) தனது வாலினைப் பாம்பென எண்ணி
(4) தான் ஒருவாறு தப்பி வந்துவிட்டேன் என எண்ணி

39. இப் பாடலில் குரங்கின் செயல்கள் அனைத்தையும் எண்ணிப் பார்க்கையில் உமது நினைவுக்கு வரும் பழமொழி யாது?
(1) கேடுவரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே
(2) தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்.
(3) மழைக்கால் இருட்டென்றாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது.
(4) மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்

- கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

40. (அ) முட்டையினுள்ளே இருக்கும் சிறிய குஞ்சின் மூக்குக்கு அருகில் முட்டைப் பற்கள் உண்டு.
(ஆ) இவ்வாறு அவை வெளியே வந்ததும் அப்பற்கள் தாமாகவே உதிர்ந்து விடும்.

(இ) முதலைகளும் முதலை வகைப் பிராணிகளும் முட்டையிலிருந்து பிறக்கின்றன.

(ஈ) முள் போன்ற முட்டைப் பற்களின் உதவியால் குட்டிகள் மேலோட்டை உடைத்து வெளியே வரும்.

(உ) கோழி முட்டையை விடச் சற்றுப் பெரிதான முதலையினுடைய முட்டையின் மேலுறை வெண்மை யாகவும் கடினமாகவும் இருக்கும்.

(1) உ, இ, அ, ஈ, ஆ (2) இ, உ, அ, ஈ, ஆ

(3) இ, உ, ஈ, அ, ஆ (4) உ, ஆ, அ, ஈ, இ

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2003 டிசெம்பர்

தமிழ்மொழியும் இலக்கியமும் II

இரண்டு மணித்தியாலங்கள்

1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(அ) மாறிவரும் உலகில் எதுவும் மாற்றத்துக்குள்ளாதல் தவிர்க்க முடியாததொன்று, நீங்கள வாழும் பிரதேசம் பத்து வருடங்களுக்கு முன்னர் இருந்ததை விட இப்போது பல்வேறு மாற்றங்களுக்கும் உட்பட்டிருப்பதை அவதானிப்பீர்கள்; அல்லது பிறர் சொல்லக் கேட்டிருப்பீர்கள். இன்னும் பத்து வருடங்களில் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தொடர்பாடல் வசதிகள், வாழ்க்கை முறை போன்றவற்றில் உங்கள் பிரதேசத்தில் ஏற்படக் கூடிய மாற்றங்களை அனுமானித்து அவை பற்றி எடுத்துரைக்கும் ஒரு விளக்கக் கட்டுரை.

(ஆ) 'வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்' என்பர். நகைச் சுவைப் பாடல்கள், கதைகள், சம்பவங்கள், துணுக்குகள், கேலிச் சித்திரங்கள் போன்றவை சிரிப்பதற்கு மட்டுமன்றி சிந்திக்கவும் வைக்கக் கூடியவை. இத்தகையவற்றைப் படித்துச் சுவைத்து அனுபவித்த நண்பர்கள் இருவர் இவற்றைப் பகிர்ந்து கொள்ளும் வகையிலமைந்த ஓர் உரையாடல்

(இ) 'மீதூண் விரும்பேல்' என்பது ஆன்றோர் மொழி. பண்டைக் காலத்தில் நம் முன்னோர்கள் சிறந்த உணவு வகைகளை உண்டனர்; அதனால் தேகாரோக்கியத்துடன் நீண்ட நாள் வாழ்ந்தனர். இன்றோ நிலைமை மாறிவிட்டது. அளவுக்கு மிஞ்சி உண்ணுதல். சுவையொன்றை மட்டும் கருத்திற் கொண்டு நிறையுணவை அலட்சியம் செய்தல், நேரந் தவறி உண்ணுதல், மிகவும் எளிதாகவும் குறைந்த விலையிலும் பெறக் கூடிய சத்துள்ள உணவு வகைகள் பற்றி அறிந்திருக்காமை என்பன காரணமாக இன்று நோய்களும் அதிகரித்த வண்ணமுள்ளன. எனவே பல்வேறு நோய்களிலிருந்தும் மனிதன் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டுமானால் நல்ல உணவுப் பழக்கவழக்கங்கள் இன்றியமையாதன என்பதை வலியுறுத்தி உலக சுகாதார தினத்தன்று நீங்கள் நிகழ்த்தும் ஒரு சொற்பொழிவு

(ஈ) வைத்தியசாலை ஒன்றுக்கு நீங்கள் சென்ற வேளையில் அங்கு கண்ட காட்சிகளையும் உங்களுக்கு ஏற்பட்ட மனப்பதிவுகளையும் உள்ளடக்கிய ஒரு விவரணம்

(உ) வங்கி ஊழியராகக் கடமையாற்றும் அவர் என்றும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றைக் கடைப்பிடிப்பவர். ஆனால் அவருடைய நேர்மைக்கும் சத்தியத்திற்கும் பல சோதனைகள் ஏற்பட்டதுண்டு. இருந்தபோதிலும் அவர் மனம் தளராது நேர்மையுடனும் கண்ணியத்துடனும் வாழ்ந்து காட்டினார். இதனைக் கருப்பொருளாகக் கொண்டு வாசகர் மனதைக் கவரும் வகையிலான ஒரு கற்பனைச் சிறுகதை.
(கதையில் இடம்பெறும் கதாபாத்திரங்களுக்கு விரும்பிய பெயர் இடலாம்).

2. கீழே தரப்பட்டுள்ள (அ), (ஆ), (இ, (ஈ) என்னும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் சுருக்கத்தை 15-20 சொற்களில் அமையக் கூடியவாறு வேறுவேறாக எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

(அ) கல்வி என்பது ஓர் இலக்கன்று; இலக்கை எய்துவதற்கான ஒரு கருவியேயாம். அதாவது நாம் பிள்ளைகளைக் கற்பிக்க வேண்டும் என்பதற்காக மட்டும் கற்பிப்பதில்லை; அவர்களை வாழ்க்கைக்கு தகுதியுடையவர்களாக்குவதே நமது நோக்கமாகும். இந்த உண்மையை நாம் உணர்ந்து கொள்வோமாயின் பிள்ளைகளை உண்மையிலே வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்யத்தக்க கல்வி முறைமை ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டியது மிகவும் முக்கியமானது என்பதை உள்ளங்கை நெல்லிக் கனி போற் காண்போம். யாதேனும் ஒரு கல்வி முறைமையை முதலில் கண்ட அளவிலேயே அதனை அப்படியே ஏற்றுக் கொள்வது நன்றன்று; அவ்வாறே நடைமுறையில் நெடுங்காலமாக இருந்து வரும் பழைய கல்வி முறைமையானது உண்மையிலே பொருத்தமுடையதோ அன்றோ என்று ஆராய்ந்து பாராமல், அதனைத் தொடர்ந்து கடைப் பிடிப்பதும் நன்றன்று.

(ஆ) சரீர சுகத்தின் பொருட்டாவது, தருமத்தின் பொருட்டாவது யாவரும் தங்கள் தங்கள் வரவுக்கேற்ப மட்டாகச் செலவு செய்தல் வேண்டும். வரவுக்கு மேலே செலவு செய்யப் புகுவோர் கடன்படத் தலைப்பட்டுப் பெருந்துன்பத்தையும் அவமானத்தையும் அடைவர். கடனுடையவருக்கு இம்மை மறுமை இரண்டினும் இன்பமேயில்லை. எத்துணை பெரும் செல்வராயினும் கடன்படத் தலைப்படுவோர் விரைவிலே தங்கள் செல்வமெல்லாம் இழந்து தரித்திரராவர். இம்மையிலே மனிதர்கள் அனுபவிக்கும் துன்பங்களெல்லாவற்றினும் கடனால் உண்டாகுந் துன்பத்தின் மிக்க துன்பம் யாதொன்றும் இல்லை. தாயைக் கண்டாற் போலப் பேரானந்தத்தோடு ஒருவனைக் கண்டு அவனிடத்தே கடன்பட்டவர் பின்பு அவன் எதிர்ப்படும் போது பேயைக் கண்டாற் போலப் பெரும் பயத்தோடு அவனைக் கண்டு ஒளிப்பிடந்தேடி ஓடுவர்.

(இ) வாழ்க்கையில் நேரும் துன்பத்தை மக்கள் அனைவரும் வெறுக்கின்றனர். ஆயினும் கலைவடிவு பெறும் துன்பத்தை எவரும் வெறுப்பதில்லை. ஆழ்ந்து நோக்கினால், காவியம், ஓவியம், இசை, நாடகம் முதலியவற்றுள் துன்பப் பகுதி உள்ளத்தைக் கொள்ளை கொள்வது போல், இன்பப் பகுதி உள்ளத்தைக் கவர்வதில்லை. சிலப்பதிகாரத்தில் மதுரைக் காண்டம் பலமுறை கற்கப்படுவதற்கும், கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டமும் சுந்தர காண்டமும் திரும்பத் திரும்ப படிக்கப்படுவதற்கும் காரணம் இதுவே. ஷேக்ஷ்பியர் என்னும் ஆங்கிலப் பெரும்புலவர் இன்ப நாடகமும் துன்ப நாடகமுமாகப் பலவற்றை இயற்றியிருந்தும், அவருடைய துன்ப நாடகங்களே சிறந்தனவாகப் போற்றப்பட்டு விளங்குவதற்கும் இதுவே காரணம்.

(ஈ) இரவெல்லாம் இருளில் மயங்கி உறங்கிக் கிடந்த மக்கள், பொழுது விடிந்தவுடன் ஒரு பெரிய விளக்கம் பெற்று அடங்கா மகிழ்ச்சியடைகின்றனர். மலையிலுள்ளவர்கள் மலையைச் சுற்றிச் சுற்றிப் பார்த்து வியப்படைகிறார்கள். கடற்கரையிலுள்ளவர்கள் கடற்கரையையும் காட்டிலுள்ளவர்கள் காட்டையும் வயலிலுள்ளவர்கள் வயலிடங்களையும் இங்ஙனமே சுற்றிச் சுற்றிப் பார்த்து வியப்படைகிறார்கள். மக்களைப் போலவே செடி, கொடிகள், மலர்கள் முதலியனவும் மான்கள், மயில்கள், குயில்கள் முதலிய சிற்றுயிர்களும் இரவெல்லாம் உறங்கிக் கிடந்து, பொழுது விடிந்த பின் மகிழ்ச்சியாக ஆரவாரிக்கின்றன. அதனால், இவ்வுலகம் பொழுது விடிந்ததும் இவ்வளவு பேரொளியோடு விளங்குவதற்குக் காரணம் என்னவென்று அவர்கள் எண்ணிப் பார்த்தனர். முடிவில், சூரியனே இவ்வளவுக்குங் காரணம் என்று ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

3. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து, அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

உடற்கூறில் இன்றியமையாத உறுப்பு கை ஆகும். கையானது கால், கழுத்துப் போன்று சீக்கிரம் சோர்வடைவதில்லை. முழு வாழ்வில் ஒருவர் பலகோடி முறைகள் விரல்களை மூடித்திறப்பர். கையினுள் தசைகள், தசைநார்கள் முதலியன வலை போன்ற அமைப்பைப் பெற்றிருப்பதால் அவற்றைப் பயன்படுத்தி விரல்கள் முன்கை ஆகியவற்றை எத்திசையிலும் இயக்கலாம். விரல்களில் பெரு விரலின் உதவியின்றி ஓர் ஊசியையும் தூக்க முடியாது. சைகை மூலம் ஊமை பேசவும் மரியாதை, நட்பு இவற்றைப் பகிரவும் சண்டை போடவும் கையே அவசியமாகிறது. தன் கையே தனக்கு உதவி, வெறும் கை முழம் போடுமா? அடிக்கிற கைதான் அணைக்கும் போன்றவை கை தொடர்பான முது மொழிகள்.

மனித வளர்ச்சியின் தொடக்க காலத்தில் மனிதனும் குரங்கு போலக் கைகளை முன்னங்கால்க ளாகப் பயன்படுத்தினான். பின்னர் இரு கால்களாலும் நடக்க கற்றுக் கொண்டான். ஆனால் குரங்கின் முன்னோர் மரத்தில் வசிப்பதையே தொடர்ந்தன. மனிதன் நிமிர்ந்து நடக்கத் தொடங்கிய போது குச் சிகளையும் கற்களையும் பிடிக்கவும் பொருள்களைக் கண், மூக்கு அருகே கொணரவும் கை பயன்ப ட்டது. பழங்களைப் பறிக்கும் கை கற்களையும் குச்சிகளையும் ஏந்தியது. இதனால் கைகளால் மேலும் பலமாகக் கற்களைப் பழமரத்தில் வீசவும், பூமிக்கடியில் கிழங்குகளைத் தோண்டி எடுக்கவும் முடிந்தது. இயற்கையை ஏவல் கொள்ள மனிதன் எடுத்த முதல் முயற்சிகள் இவை. காட்டை நாடாக்க, பொருள்களை உண்டாக்க, கலை, கலாசாரம் போன்றவற்றை வளர்க்க உதவியவை கைகளே. மனிதனை மனிதனாக மாற்றியவை இக்கைகளே.

(அ) விரல்களையும் முன்கையையும் எத்திசையிலும் அசைக்க உதவுவன எவை?
(ஆ) "விரல்களில் பெருவிரலின் உதவியின்றி ஓர் ஊசியினையும் தூக்க முடியாது" இவ்வசனத்தின் உட்கருத்து யாது?
(இ) மனிதனுக்கும் குரங்குக்கும் இடையே உரையாசிரியர் காணும் ஒற்றுமை யாது? வேற்றுமை யாது?
(ஈ) இயற்கையைக் கட்டுப்படுத்த மனிதன் எடுத்த ஆரம்ப முயற்சிகள் நான்கினைக் குறிப்பிடுக.
(உ) மரியாதை, நட்பு என்பவற்றைப் பகிர்ந்து கொள்ளக் கைகள் எவ்வாறு உதவுகின்றன என நீங்கள் கருதுகிறீர்கள்?
(ஊ) இவ்வுரைப் பகுதியில் இடம்பெறும் பழமொழி ஒன்றைக் குறிப்பிட்டு அதன் கருத்தை எழுதுக.
(எ) "மனிதனை மனிதனாக மாற்றியவை கைகள்" இது பற்றிய உமது விளக்கத்தைத் தருக.

4. வெள்ளத்தாற் பாதிக்கப்பட்ட அயற் பிரதேச மாணவர்களுக்கு உதவுவதற்கு உங்கள் பாடசாலை முன்வந்துள்ளது. அதற்கான திட்டமொன்றைத் தயாரித்து ஓர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாணவர் தலைவராகிய உங்களிடம் அதிபர் பணித்துள்ளார்.

அதற்கமைய பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு அதிபரிடம் சமர்ப்பிப்பதற்கான 100 சொற்கள் கொண்ட அறிக்கை ஒன்று தயாரிக்க.

(அ) ஆசிரியர்களுடனும் மாணவர் பிரதிநிதிகளுடனும் கலந்தாலோசித்தல்.
(ஆ) விசேட கூட்டமொன்றில் ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் உதவி கோருதல்.
(இ) ஆசிரியர், மாணவர் ஆகியோர் கொண்டு வரும் பொருள்களைச் சேகரிப்பதற்கான ஒழுங்குகள்
(ஈ) பொருள்களைப் பொதி செய்வதற்கான ஒழுங்குகள்
(உ) பொதிகளை எடுத்துச் சென்று பாதிக்கப்பட்ட மாணவருக்கு விநியோகிப்பதற்கான ஒழுங்குகள்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2003 டிசெம்பர்

தமிழ்மொழியும் இலக்கியமும் III

இரண்டு மணித்தியாலங்கள்

1. (அ) "யாரை நீ யவலிக் கின்றனை
பெருகுமிகுத் துயருனக் குற்ற பெற்றியென்
திருகலில் சிந்தையாய் செப்புக".
(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) 'திருகலில் சிந்தையாய்' என்ற தொடர் யாரைக் குறிக்கின்றது.
(iii) 'இத்துயருனக்குற்ற பெற்றியென்' இதனை உமது மொழி நடையில் இலகுபடுத்தி எழுதுக.
(iv) "செப்புக' என்பதன் கருத்தை எழுதுக.

(ஆ) "அறிவுக் கூர்மைக்கும் வயதுக்கும் தொடர்பு இல்லை என்பதை உங்களால் உணர்ந்து கொண்டோம். எங்கள் அறிவுக் கண்கள் திறந்தன."
(i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்கு கூறப்பட்டது?
(iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
(iv) 'கண் திறத்தல்' என்ற மரபுத் தொடரின் பொருள் யாது?

(இ) "கிழவியட மகன்ர விலாசமென்ன? அந்தக் காயிதத்தைக் காணயில்ல. நான் சும்மா தந்தியடிச்சன் எண்டு சொல்லீற்றன்."
(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்கு கூறப்பட்டது?
(iii) இங்கு குறிப்பிடப்படும் கிழவி பலராலும் எவ்வாறு அழைக்கப்பட்டாள்?
(iv) 'கிழவியட மகன்ர விலாசமென்ன' என்ற கேள்விக்குக் கொடுக்கப்பட்ட விடை என்ன?

(ஈ) "மாருதி அல்ல னாகில்
நீ எனும் மாற்றம் பெற்றேன்
ஆர் இனி என்னோ(டு) ஒப்பார்?"
(i) இவ்வாறு தனக்குள் எண்ணியவன் யார்?
(ii) இவ்வெண்ணத்தில் வெளிப்பட்டு நிற்கும் உணர்ச்சி யாது?
(iii) 'மாருதி' என்பது யாரைக் குறிக்கின்றது?
(iv) 'மாருதி அல்லனாகில் நீ எனும் மாற்றம் பெற்றேன்' என்ற இவ்வாக்கியத்தின் எழுவாய் எது?

(உ) "நில் அங்கே. நீ விதைத்ததைத் தானே அறுவடை செய்கிறாய். சகுந்தலா நீ பதிவிரதை என்பது உண்மையானால் நீ பதிவீட்டில் இருப்பதே மேல்"
(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) இக் கூற்றில் இரு வேறு உணர்வுகள் வெளிப்பட்டு நிற்கின்றன. அவற்றுள் ஒன்றை எழுதுக?
(iii) 'நீ விதைத்ததை தானே அறுவடை செய்கிறாய்' - இது குறிப்பாக எதனை உணர்த்து கின்றது?
(iv) பதி என்பது இங்கு என்ன பொருளில் வந்துள்ளது?

2. பின்வரும் செய்யுள்களின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.

(அ) அட்டாலும் பால் சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

(ஆ) 'நல்லை, நல்லை; அறச் சமர்த்தி நீயே கண்டேன்;
நன்னுதலார் அனைவரினும் இந்திரசாலம்
வல்லை, வல்லை; விறகுகளும் களவே; செம்பொன்
மங்கலநாண் உன் கழுத்தில் இருக்க, ஏதும்
இல்லை எனச் சொல்லுவது சற்றும் ஏலா (து)
இதனை எனக் (கு) ஈவாய்' என்(று) இயம்ப, **வேடர்**
பல்லம்உயிர் நிலைவாயில் பட்ட மான் போல்,
பதைபதைத்துப் பைந்தொடியாள் பதறி வீழ்ந்தாள்.

(இ) அயில் கடந்(து) எரிய நோக்கும்
அரக்கரைக் கடக்க, ஆழித்
துயில் கடந்(து) அயோத்தி வந்தான்
சொற்கட வாத தூதன்
வெயில் கடந் திலாத காவல்
மேருவின் மேலும் நீண்ட
எயில் கடந்(து) இலங்கை எய்தி
அரக்கன(து) இருக்கை புக்கான்

(ஈ) செயத்தகா மேன்மை வேண்டிச் சேணடைந்துள்ள நொந்து
பயத்தொடுங் கயத்திற் சிக்கிப் பாடுபட் டெழுந்து மன்ன
னயத்திடை யுற்ற நீரி னழுங்கினன் மணிப்பீடத்தின்
வயக்களி றுண்ட வெள்ளிற் கனியென மாள்கி ருந்தான்

(உ) இப்பரி சிவர்க்குத் தக்க வகையினால் இன்பம் நல்கி
முப்புரஞ் செற்றார் அன்பர் முன்பெழுந் தருளிப் போனார்
அப்பெரி யவர்தந் தூய அடியிணை தலைமேற் கொண்டு
மெய்ப்பொருட் சேதி வேந்தன் செயலினை விளம்பலு ற்றேன்

3. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடை தருக.

(அ) அங்கதன் தூதுப் படலத்தில் இராவணனது வீரம் இழித்துரைக்கப்பட்டிருக்கும் முறையினை விளக்குக.

(ஆ) இளையான் குடிமாறநாயனார் சிவனடியார்களை உபசரிப்பதில் வல்லவர் என்பது எடுத்துரைக்கப் பட்டிருக்கும் வகையினை ஆராய்க.

(இ) நமுறூதும் அவனது படையினரும் கொசுப்படையின் தாக்குதலால் நிலைகுலைந்து தோற்றுப் போனமை சித்திரிக்கப்பட்டிருக்கும் முறையினை விவரிக்க.

4. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடை தருக.

(அ) பொற்கிழிகள் அறுந்து விழ வேண்டி அவ்வைப் பெருமாட்டியார் பாடிய பாடல்களில் ஈதல் பற்றியும் நீதிமன்றத்தில் வழக்காடுதல் பற்றியும் கூறப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

(ஆ) சகுந்தலை - துஷ்யந்தன் கதையில் கணையாழி பெறும் முக்கியத்துவத்தை ஆராய்க.

(இ) அறிவுடை நம்பி கதையை ஆதாரமாகக் கொண்டு பூங்குன்றன், இளநாகன் ஆகியோரது குணாதிசயங்களை ஆராய்க.

• 5, 6, 7 ஆகிய ஏதேனும் ஒரு வினாவுக்கு மட்டும் விடை எழுதுக.

5. 'கவிதை உள்ளம் படைத்தோன் இயற்கையில் இன்பங் காணலாம்' - இக் கருத்து 'கவிதை உள்ளம்' பற்றிப் பாடிய கவிஞரால் எடுத்துரைக்கப்பட்டிருக்கும் முறையினை விளக்குக.

6. (அ) சகீனாவின் பெருமிதத்துக்குக் காரணங்களாக இருந்தவை எவை?
(ஆ) அவளது பெருமிதத்தை அர்த்தமற்றதாக்கிய ரஸாக்கின் கேள்வி யாது?
(இ) ரஸாக்கின் கேள்வியினால் சகீனாவின் மனதில் தோன்றிய எண்ணங்களை விவரிக்க.

7. (அ) மணிமேகலைக் கதையில் மணிமேகலா தெய்வம் பெறும் முக்கியத்துவம்
(ஆ) தங்கம்மா பற்றிய கவிதையில் அச்சும்மாவின் உருவத்தோற்ற வருணனை

கல்வீப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2003 டிசெம்பர்

தமிழ்மொழியும் இலக்கியமும் I

விடைகள்

வினா இல.	விடை	வினா இல.	விடை	வினா இல.	விடை	வினா இல.	விடை
01.	3	11.	4	21.	4	31.	2
02.	2	12.	4	22.	3	32.	3
03.	1	13.	2	23.	2	33.	3
04.	3	14.	2	24.	1	34.	1
05.	4	15.	3	25.	3	35.	4
06.	1	16.	1	26.	1	36.	2
07.	2	17.	2	27.	4	37.	3
08.	3	18.	4	28.	3	38.	3
09.	3	19.	3	29.	2	39.	4
10.	1	20.	2	30.	4	40.	2

கல்வீப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2003 டிசெம்பர்

தமிழ்மொழியும் இலக்கியமும் II

விடைகள்

1. (அ) **பத்து வருடங்களின் பின் நான் வாழும் பிரதேசம்**

பழையன கழிதலும் புதியன புகுதலும் இயல்பே. இதற்கு இணங்க எமது நாட்டின் பிர தேசங்கள் பல்வேறு துறைகளில் பற்பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளன. நான் வாழுகின்ற கிருஷ்ணபுரப் பிரதேசம் ஆறு வயதுச் சிறுவனாக இருக்கும் போது இருந்த நிலையிலிருந்து இன்று மாறி உள்ளமை போன்றே இன்னும் பத்து வருடங்களில் பிரமிக்கத்தக்க அளவு மாற்றங்களுக்கு உள்ளாகிவிடும் என்பதே எனது நம்பிக்கை.

நகரத்திலிருந்து ஐந்து கிலோமீற்றர் தொலைவில் உள்ள கிருஷ்ணபுரம் அமைதியான சுகாதாரம் பேணப்பட்ட காற்றோட்டமுள்ள பிரதேசமாக இருந்ததாக அறிகின்றேன். அங்கு தமிழ், சிங்கள, முஸ்லீம் மாணவர் கல்வி கற்பதற்கேற்ற அரசாங்க பாடசாலைகள், அடிப்படை வசதிகள் குறைந்த நிலையில், ஆசிரியர் பற்றாக்குறையுடன் காணப்பட்டதாம். இன்றோ இரு மொழி மூலப் பாடசாலைகள் ஐந்திலும் கட்டட, தளபாட வசதிகளுடன் ஆளணி வசதிகளும் காணப்படுகின்றன. பொதுப் பரீட்சையிலோ, புறக்கிருத்தியச் செயற்பாடுகளிலோ முன்னணி வகிக்கின்றனர். பத்து வருடங்களில் இப் பிரதேசப் பாடசாலைக் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு சகல வகுப்பறைகளும் குளிரூட்டி வசதி, ஒலிபெருக்கி வசதி, உள்ளகத் தொலைபேசி இணைப்பு வசதிகளுடன் காட்சி அளிக்கும்.

தாய்மொழி மூலக் கல்வியைப் பயின்ற மாணவர் யாவரும் ஆங்கில மொழிமூலக் கல்வியைப் பயிலுவர். தத்தம் தாய்மொழியுடன் அந்நிய மொழி ஒன்றையும் கற்பர். மேலும் இலவச சீருடை, இலவச நூல்களைப் போலவே மாணவர் விரும்பிய இடைவேளை உணவை இலவசமாகவே வகுப்பறைக்கு விநியோகிப்பர். வகுப்பறைகள் இருபத்தைந்து மாணவர் கணனி வசதியுடனும் திரையில் விளக்கங்களைப் பார்த்துப் படிக்கும் வசதியுடனும் அமைக்கப்படும். வேகமாக முன்னேறும் உலக நாடுகளுடன் போட்டி போடக் கூடிய அறிவும் ஆற்றலும் பெற்றிருப்பர்.

இப்பிரதேச சுகாதார நிலைமை முன்னைய மக்களால் நன்கு பேணப்பட்டு வந்த போதிலும், அதிகரித்து வந்த மக்கள் குடியேற்றத்தாலும், கடற்கரைப் பிரதேச விற்பனையாளராலும், தெருவோர அங்காடிகளாலும் துர்நாற்றம் வீசுகிறது. பிரதேச மூதாதையரின் வேண்டுகோளின்படி

அரசாங்கம் எடுத்த தீவிர நடவடிக்கையால் தனியார் நிறுவனம் ஒன்று பன்னிரண்டு மணி நேர வீதி சுத்திகரிப்பு நடவடிக்கையை மேற்கொள்கிறது. இனிவரும் பத்து வருடங்களில் கழிவுகள் யாவும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்பட்டு விடும். சுற்றுப் புறச்சூழல் சுகாதாரத் திணைக்களத்தின் பராமரிப்பின் கீழ் வந்து விடும்.

கிருஷ்ணபுரத்திலிருந்து இருபது நிமிடங்களில் நகரப்பகுதியை அடையக் கூடியதாயிருந்தது. இன்று அதிகரித்த வாகனங்களால் பல மணிநேரம் வீணாகிறது. இன்னும் பத்து வருடங்களில் மின்சார இணைப்பு பேரூந்து சேவை ஏற்பட்டு விடும். வாகனப் போக்குவரத்துக்கான நேர ஒதுக்கீடுகளும் விசாலமாக்கப்பட்ட வீதிகளும் உருவாகிவிடும். இங்கிருந்து நாற்பதே நிமிடங்களில் அறுபது (60) கி.மீற்றர் தொலைவைக் கடக்க அதிவேக பாதை உருவாகிவிடும்.

எமது பிரதேசத்தில் தொலைபேசி வசதிகளுடன் ஒரு சில வைத்தியரும், தொழில் முகவர் ஒருவர் மட்டுமே வாழ்ந்து வந்ததாக அறிகிறேன். இன்றோ வீட்டுக்கு வீடு தொலைபேசி, தொலைநகல், மின் அஞ்சல் வசதிகள் வந்துவிட்டன. இனிவரும் பத்து வருடங்களில் உலகமே மிக மிகச் சுருங்கி விடும் கட்டத்தில் நினைத்த உடனேயே ஆளைப் பார்த்தபடியே தொலைபேசியில் கதைக்கும் வாய்ப்பு இப்பிரதேசத்திற்கு வந்துவிடும். மக்கள் இடம்பெயர் தொலைபேசி இணைப்புகளுடன் வாழும் வாய்ப்பு ஏற்பட்டு விடும்.

தனித்தனி இல்லங்கள் யாவும் நவீனமயப்படுத்தப்பட்டு தனி மாடி வீடுகளாக்கப்பட்டு விடும். தொடர்மாடி வீட்டுத் தொகுதிகள் உருவாகிவிடும். மக்களின் வாழ்க்கைப் பாணியும் மாறிவிடும். வசதிமிக்க பல்பொருள் சந்தைகள் உருவாகிவிடும். உணவுப் பொருட்கள் யாவும் பொதிகளில் அடைக்கப்பட்டு உடனடிப் பாவனைக்கேற்றதாக விற்கப்படும்.

நான் வாழும் பிரதேசம் முன்பிருந்ததை விடவும், இன்று இருக்கும் நிலையை விடவும், இரண்டாயிரத்து பதின்மூன்றாம் ஆண்டளவில் கல்வியிலும், சுகாதாரத்திலும் முன்னேறி, போக்கு வரத்திலும், தொடர்பாடல் முறையிலும் நவீன மயமாக்கப்பட்டு உலகிலே முக்கியமானதொரு பிரதேசமாகத் திகழும் என்பது நிச்சயம்.

(ஆ) **"வாய் வீட்டுச் சிரித்தால் நோய் வீட்டுப் போகும்"**

கோபி :- என்னடா பத்திரிகையும் கையுமாகச் சிரித்தபடி ஓடி வாறாய்?

பாலா :- இங்க பாரடா. படிச்சுக் கொண்டிருந்தனடா. தலையிடியில அப்படியே மேசையில சரிஞ்சிட்டேன். கொஞ்ச நேரத்தால மேசைக்குக் கீழே அடுக்கிக் கிடந்த பழைய பேப்பரை எடுத்தன். 25% கழிவு எதுக்கெண்டு பாரேன்.

கோபி :- பார்ப்போம். ஆ! என்ன, சவப்பெட்டிக்கு விலைக்கழிவா?

(முதலாவது படத்தில் - பிரேதப் பெட்டிகள் யாவும் தீர்ந்து விட்டன என இருக்க - இரண்டாவது படத்தில் - பெரிய எழுத்தில் 25% கழிவுடன் விற்கப்படும் என்ற பலகை உள்ளது. அதனருகே சுற்றிவர மலர் வளையங்கள். இது என்னவாக இருக்கும் என யோசித்துக் கொண்டு சற்று மேலே பார்த்தால் - ஒன்றன் மேல் ஒன்றாகப் பல பிரேதப் பெட்டிகள் கூரை வரை அடுக்கப்பட்டிருக்கின்றன. நடுவே முதலாளி மிகுந்த கவலையுடன் வாங்க யாரும் வரமாட்டார்களா என்ற ஏக்கத்துடன் இருக்கிறார்.)

பாலா :- டே! எவ்வளவு கருத்தோட்டம் மிக்க கேலிச் சித்திரம் என்டு பாரன்.

கோபி :- ஓம் ஓம் சண்டை ஒய, வீரரின் இழப்பும் குறைய பெட்டி விற்கிறவர் பாடும் பரிதாபமாய் போட்டுது. (இருவரும் சிரிக்கிறார்கள்)

பாலா :- சரி பாட்டுக் கேட்டபடி படிப்பம் இருவரும்

கோபி :- எல்லாம் பழைய பாட்டுத் தான் போகுது. சரி படிப்பம்.
வானொலியில் .....
ஏனடா நீ நேற்றைக்கிங்கு வரவில்லை என்றால்
பானையிலே தேளிலிருந்து பல்லால் கடித்ததென்பார்.

கோபி :- தேள் பல்லால் கடிச்சதாம்.
பாரதியாரின் கற்பனையைப் பாருடா.

பாலா :- அடுத்ததைக் கேள் .....
எட்டு நாளாய் செத்துக் கிடந்த சாரைப் பாம்பைச் சந்த மாமா
எட்டி நிண்டு தொட்டுப் போட்டேன் தோழ மாமா
ஓட்டைப் பானைக்கே ஓணான் பூந்தது சந்த மாமா
அடிக்கப் போனேன் கடிக்க வந்தது - தோழ மாமா
இப்ப என்ற தலையிடியும் போச்சுது.

கோபி ஓம் ஓம் உண்மை தான், எங்கட பாட்டி வாய் விட்டுச் சிரிச்சா நோய் விட்டு போகும் என்று அடிக்கடி சொல்லுவா.

பாலா :- கோபி! உனக்கு கணனி சிஸ்ட கவசம் தெரியுமா?

கோபி :- ஓம் ஓம் கந்த சஷ்டி விரத நாளிலே அம்மாவோடு சேர்ந்து இதைச் சொன்னாத் தான் அம்மாவோட சோறு சாப்பிடலாம்.

பாலா :- அதில்லை அதில்லை.
காக்க காக்க கம்யூட்டர் காக்க
அடியேன் சிஸ்ட அழகு வேல் காக்க
வின்டோசைக் காக்க வேலன் வருக
கனெக்ஷன் கொடுத்து கனக வேல் காக்க
இன்ரநெட் தன்னை இனியவேல் காக்க
.....
.....
வைரஸ் வராமல் வைரவேல் காக்க

கோபி :- ஆஹா! ஆஹ! என்ன அருமை
இந்தக் கவசம் முழுசாக இருக்கா?
விழுந்து விழுந்து சிரிக்கலாமடா.
லண்டனுக்கு இ-மெயில் பண்ணப் போறனடா.
ஆஹா! ஹஹ்ஹா

(பாலா - கோபி இருவரும் நினைத்து நினைத்து சிரிக்கிறார்கள்.)

கோபி :- எழுதியவரின் திறமையைப் பார். எம்மைச் சிரிக்க வைத்தது மட்டுமே. எவ்வளவோ சிந்திக்கவும் வைத்து விட்டார். இன்னும் கொஞ்ச நேரம் கதைத்து விட்டுப் படிக்கலாமடா.

பாலா :- டே! முல்லா, தென்னாலிராமன் கதைகளை எங்கட டீச்சர் சொல்லுவாடா. வகுப்பே சிரிப்பால அதிரும்.

கோபி ஓம் நினைவிருக்கடா. அதுக்குப் பிறகு தான் கதை வாசிக்க விருப்பம் வந்தது. ஒவ்வொரு கதையும் எவ்வளவு படிப்பினையைத் தந்தது பாத்தியா?

பாலா நீ இதைச் சொல்ல இன்னொன்று ஞாபகம் வருகுது. நான் அக்காவை டாக்டரிடம் கூட்டிச் செல்லும் போது அவவின் சின்ன மகனும் வந்தான்.
அங்கே மருந்தக வாசலில்
பார்வை நேரம் :- காலை 9.00 - 1.00 மணி வரை
மாலை 3.00 - இரவு 8.00 மணி வரை என இருந்ததைப் பார்த்த சிறுவன் "காலையில் எழுப்பினதும் டாக்டருக்குக் கண் தெரியாதோ? ஏன் 9 மணிக்கு என்று எழுதியிருக்கு?" என்றானே. அவனுடைய சிந்தனை எப்படிப் போயிருக்கு பார்த்தியா?

நான் சிரித்தபடி திரும்ப, அங்கிருந்தவர்களும் தத்தம் நோயை மறந்து சிரித்தனர்.

கோபி :- உண்மை தான் பாலா நகைச்சுவைப் பாடலோ, கதைகளோ எம்மைச் சிரிக்க வைத்துத் தெம்பூட்டுகின்றன. பத்திரிகைத் துணுக்குகளும் கேலிச் சித்திரங்களும் சிந்தனையைத் தூண்டவல்லன.

பாலா :- ஏனடா (f)பனியஸ்ட் ஹோம் (Funniest Home) என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்தனியா? எத்தனை சம்பவங்களை காட்டுகின்றார்கள். இவை மிக்க நகைச்சுவையானவை. வாய் விட்டுச் சிரிக்க வைப்பன. நோய் இன்றி வாழ்வோம். இனி வா படிப்போம்.

(இ) **சொற்பொழிவு**

"நோயின்றி வாழ்வோம"

இங்கு குழுமியிருக்கும் அனைவருக்கும் காலை வந்தனங்கள். இன்று உலக சுகாதார தினத்தில் நாம் எம்மைப் பற்றிச் சிந்தித்தல் அவசியம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற ஆன்றோர் வாக்கின்படி மானிடராகிய நாம் அனைவரும் நோயின்றி வாழ முயற்சித்தல் அவசியம். நாம் வாழ்ந்தால் தான் உலகமும் வாழும்.

இன்று நோய் பற்றிப் பேச வேண்டிய அவசியம் என்ன? இப்பொழுது யாருடன் கதைத்தாலும், எனக்கு "டயபிற்றீஸ், கொலஸ்ரோல், பிரஷர், ஆதரைட்டீஸ், கான்சர்" எனப் பலரும் மாறி மாறி வருத்தங்கள் கூறும் காலமாகிவிட்டது. இதற்கான காரணம் எமது உணவு முறையே.

அளவான நிறைவான உணவை நேரத்திக்கு உண்டு வருவது மிக மிக அவசியம். நாக்கிற்கு சுவை தரும் உணவாயினும் அளவோடு உண்ணப் பழகிக் கொள்ளல் அவசியம். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும் அல்லவா?

கேட்டால் மூன்று வேளை மட்டுமே சாப்பிடுவோம் என்பர். ஆனால் இடைநேரங்களில் பற்றீஸ், பகோடா, கட்லட், கேக், முறுக்கு ஆகிய நொறுக்கு தீனிகளைத் தின்று கொண்டே இருப்பர். எமது நாட்டு உணவு முறைப்படி மூன்று வேளை உணவே கொழுப்புச் சத்து அதிகம் உடையது. இவ்வாறு உண்பவருக்கு உடல் உழைப்பு அவசியம். எனவே உணவைக் குறைத்துக் கொள்ளல் வேண்டும். உண்டி சுருங்குதல் பெண்டிற்கு மட்டுமா அழகு? ஆடவர்களுக்கும் இளம் பிள்ளைகளுக்கும் அழகு தானே?

இன்றைய அவசரகதி வாழ்க்கையில் உடனடித் துரித உணவு வகைகள் எம்மத்தியில் நீங்காத இடம் பெற்று விட்டன. சுகாதாரமற்ற சூழலில் இலாபமாகப் பெறும் மரக்கறி வகைகளைத் துப்புரவற்ற பாத்திரங்களில் சமைக்கும் உணவுகள் குறைவான விலைக்கு விற்கப்படுகின்றன. மசாலாப் பொடிகளின் வாசனை நாக்கையும், மூக்கையும் கவரக்கூடியதாக இருக்கும். இது நாவை மட்டுமே திருப்தி செய்யுமே ஒழிய உடலுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்காது. சபையில் இருக்கும் சிறுவர்களே! இளைஞர்களே! நூடில்ஸ், பற்றீஸ், ரோல்ஸ், கொக்கோலா என்ப வற்றை இன்றிலிருந்து கைவிடுங்கள்.

மனிதனால் ஆக்கப்பட்ட எந்த ஒரு அற்புதமான இயந்திரத்தையும் விட மனித உடல் மிக மிக அற்புதமானது. இறைவனால் படைக்கப்பட்ட எம்முடலின் எல்லாப் பகுதிகளும் உடல் நலத்தைக் காத்துக் கொள்ளும் வகையில் இயங்கும் தன்மை உடையனவாயிருக்கின்றன. சிறப்பு மிக்க மனிதனுக்கு இயல்பான உணவு தான் பொருத்தமானது. உணவு சத்துள்ளதாகவும், குறைந்த விலையில் கிடைக்கக் கூடியதாயும் இருப்பதை அறியாத பலர் நோயுறுகின்றனர். பதப்படுத்தப்பட்ட உணவுகளும், அதிகப்படியான விலங்குப் புரத உணவுப் பாவனையும் நோயை ஏற்படுத்தும்.

டயபீற்றீஸ் எனப்படும் நீரழிவைக் கட்டுப்படுத்த பாகற்காயும், வெந்தயமும் துணையாவது போன்றே உயர் இரத்த அழுத்தத்தை வெள்ளைப்பூண்டு தடுக்கக் கூடியது. திராட்சை இரத்த நாளங்களை சரி வர இயங்கத் துணை செய்வது. பீட்ரூட், கரட் சாறுகளும் முட்டைக்கோஸ், புரூக்கோலி என்பன நுரையீரல் மார்பகப் புற்று நோயைத் தணிக்க வல்லன. டாக்டர் றொபர்ட் பியர்சன் கிச்சிலிப் பழங்கள் (சிட்ஸ்ரஸ் - தோடை, எலுமிச்சை) புற்று எதிர்ப்புப் பொருட்கள் கொண்டவை என்று கூறியுள்ளார். இத்தகைய அறிவினை மக்கள் நிச்சயம் பெறல் அவசியம்.

மேலும் இயற்கையான உணவுகளை உண்டு மன இறுக்கமற்ற வாழ்க்கையை மேற் கொண்டால், நோயின்றி இன்பமாக வாழலாம். தேகாப்பியாசமும், நிறைவான சத்துணவும் அளவான உணவும் உட்கொள்ள எம் சிறாரை வழிநடத்தி வாழ்வோமாக.

வணக்கம்.

(ஈ)

வைத்தியசாலையின் மனப்பதிவுகள்

பரந்து வானளாவ உயர்ந்து கண்ணுக்குக் குளிர்ச்சியான நிறத்தில் கம்பீரமாகக் காட்சி அளித்தது அந்த வைத்தியசாலை. பலராலும் எதிர்பார்த்திருந்த வைத்தியர் குழுவினரின் சேவை இலங்கை மக்களுக்கு கிடைத்துள்ளமை ஓர் வரப்பிரசாதமே.

எந்த வைத்தியராலும் கண்டறிய முடியாததும், எந்த மருந்துக்கும் குணமாகாததுமான வருத்தங்களைக் குணப்படுத்துவதாக அறிந்து, நானும் எனது சின்னம்மாவை அங்கு அழைத்துச் சென்றேன். கட்டடத்தை அண்ணார்ந்து பார்த்தபடி நாங்கள் இறங்கினோம். கட்டட நுழைவாயிலை அடையவும் அழகான கண்ணாடிக் கதவுகள் நகர்த்தப்பட்டன. உள்ளே சென்றதும் சர்வதேச விமானநிலையம் ஒன்றோ அல்லது ஐந்து நட்சத்திர ஹோட்டலோ என்ற ஓர் பிரமிப்பு. வைத்தியசாலை என்பதற்கு அடையாளம் எதுவும் தென்படவில்லை. அத்துணை அழகாகவும், தூய்மையாகவும், நறுமணத்துடனும் இரம்மியமான சூழலில் வருத்தத்தையே மறந்து நின்றோம்.

சீருடையணிந்த இளம் பெண்கள் சுறுசுறுப்பாக இயங்க அங்கு வேலை செய்பவர்கள் என உறுதியானது. அதே போல் உடையணிந்த மூவர் கணனிகளின் முன்பாக அமர்ந்தபடி எங்களை வரவேற்று பெயர், விபரங்களை எழுதினர். நாம் நோயின் அறிகுறிகளைக் கூறி எந்த வைத்தியரை நாம் சந்திப்பது என்பதைக் கேட்டறிந்தோம். உரிய வைத்தியரின் பெயரையும் எழுதிய கோவையை எம்மிடம் தந்து, நாம் செல்ல வேண்டிய மாடி, அறை இலக்கம் என் பவற்றைக் கூறினார். விசாலமான கூடத்திலே நடந்து சென்றதும் திறந்த வெளியிலே அழகான ஆசனங்களில் எங்கள் நாட்டவர் ஒரு சிலர் அமர்ந்திருந்தனர். கண்ணையும், மனதையும் கவரத்தக்க அழகான மென்வர்ணச் சித்திரங்கள், அலங்கார வேலைப்பாட்டுடனான பல்வேறு வடிவச் சாடிகள் ஆகாயத்திலிருந்து விட்டது போன்று, மெல்லிய நிறங்களில் அமைந்த திரைச்சீலைகள் காற்றுக்கு அசைந்தாடிக் கொண்டிருக்க, நாமும் இரசித்தபடியே மாடிப்படியைத் தேடி நகர்ந்தோம்.

வலப்புறமாகப் பத்துப் பதினைந்து பேர் நடமாடவே திரும்பினேன். அப்போது தான் வைத்தியசாலை தான் என்பது உறுதியானது போல மருந்தகம் தென்பட்டது. அதனருகே இருந்த படிகளில் ஏறிச் சென்றால் அங்கு சாய்வாக அமரக் கூடிய ஆசனங்களில் இருந்து தொலைக்காட்சி பார்த்தபடி ஒரு சிலர் இருந்தார்கள். மீண்டும் எங்கு வந்துள்ளேன் என்ற கேள்வி எழுந்தது. சீருடைப் பெண்களைக் கண்டு அவர்களிடம் சென்றேன். சரியான இடத்தைக் காட்டவும், நாமும் தொலைக்காட்சியில் படம் பார்த்தபடி வந்த வேலையையும் மறந்தோம்.

அருகில் இருந்தவர் அசையவும், எமது வாய்ப்பு வந்ததை உணர்ந்து உள்ளே சென்றோம். மிகச் சிறிய அறையில் வைத்தியர் மட்டுமே இருந்தார். இருந்த ஒரு மேசையில் எந்த ஒரு பொருளும் இருக்கவில்லை. வணக்கம் கூறிய பின் அமரும்படி கூறி ஒரு பெட்டியை எடுத்துத் திறந்து தேவையான பொருட்களை மேசை மீது வைத்தார். பிரச்சினைகளைக் கேட்டறிந்த பின் ஏதோ ஒன்றிற்கு மின் இணைப்புக் கொடுத்தார். தலையில் ஒரு வெளிச்சம், கையில் ஒரு வயரின் நுனியில் மிக மிகச் சிறிய வெளிச்சத்துடன் அதனை எனது சித்தியின் மூக்கினுள் செலுத்திச் சோதனை செய்தார். வேதனை, மூக்கில் கூச்சம் இவற்றுடன் பொறுமையாக இருந்தார். சிறிது நேரத்துள் - தொண்டைக் குரல்வளை, மூச்சுக்குழல் யாவற்றையும் விளக்கமாக அறிந்த வைத்தியர் தனக்கு ஒத்தாசை தந்தமைக்கு நன்றி தெரிவித்தார். இருமலும் தும்மலும் எனது சித்திக்கு இடைஞ்சலைக் கொடுத்தது. வைத்தியர் மிகவும் அன்பாக அறுவைச் சிகிச்சை செய்யத் தேவையில்லை என்றார். வருத்தத்தின் பெயரைக் கூறி, எழுதிய மருந்து வகைகளின் விபரம் கூறி, எவ்வாறு மருந்து எடுக்க வேண்டும் என்பதையும் கூறினார். எந்தத் தாதியின் உதவியுமின்றித் தானே அக்கருவிகளைச் சுத்தம் செய்து மீண்டும் பெட்டியினுள் வைத்த பின் யாவரும் கடமை முடிந்து செல்ல, நாமும் நம்பிக்கையுடனும் ஏனைய வைத்திய சாலைகளில் காணாத காட்சிகளின் மனப் பதிவுகளுடனும் வீடு வந்தோம்.

(உ) **"வாய்மை வெல்லும்"**

இராமானுஜம் சாய்வு நாற்காலியில் அமர்ந்த வண்ணம் ஏதோ தியானத்தில் இருப்பதை காந்தன் தனது மேல்மாடி சாளரத்தினூடாக அவதானித்தார். இருவரும் வெவ்வேறு மாடிக் கட்டடங்களிலிருந்தாலும் ஒருவரை ஒருவர் காணக் கூடிய வகையில் இப்போது அமைக்கப்படும் மாடி மனைகள் அமைந்துள்ளமை மனக்கவலைக்குரியது. இருந்தாலும் காந்தன் இராமானுஜத்தைக் கண்டதும், அவரது மனத் திரையில் பழைய நினைவலைகள் சட்டென முன்வந்து ஊசலாடியது.

அவருக்கு அப்போ முப்பத்தைந்து வயதிருக்கும். வங்கியில் முகாமையாளராகப் பதவியுயர்வும் கிடைத்து விட்டது. அவரோ கடமையில் கண்ணும் கருத்துமாக உள்ளவர். பட்டயக் கணக்காளராகவும் தனது தகைமையை உயர்த்திக் கொண்டார். இவருடைய தகுதிக்கேற்ப ஒரு பட்டதாரியே காதலியாக அமைந்தார். திருமணம் செய்து இனிதாக இல்லறம் நடத்தி வந்தார். காரியாலயத்தில் சகல துறைகளையும் கண்காணித்து வந்தார். சக ஊழியரது இன்னல்களைத் தானே முன் வந்து தீர்த்தும் வைப்பார்.

இராமானுஜர் தம்பதிகளுக்கு மூன்று குழந்தைச் செல்வங்கள் இருந்தனர். பெற்றோரின் அரவணைப்பும், பேரன் பேத்தியின் அன்பும் ஆதரவும் குழந்தைகளை பண்பாளராகவும், புத்திசாலிகளாகவும் வளர்ந்து வர வாய்ப்பாக இருந்தது. மூத்த மகனுக்கு பதினொரு வயதிருக்கும். பாடசாலைக்குக் காரில் போகும் போது பெரும்புயலடித்து வீதியோரமிருந்த நிழல் தரும் பெருவிருட்சம் விழுந்து காரோடு சாரதியும், மகனும் அவ்விடத்திலேயே இறந்து விட்டனர். இச் செய்தி இராமானுஜர் குடும்பத்திற்கு பேரிடியானது. மீளாத்துயரில் ஆழ்ந்தனர். இந்த நல்ல மனிதருக்கு இவ்வித துயர் ஏற்படத்தான் வேண்டுமா? என அயலவரும், உற்றார் உறவினரும், வங்கி ஊழியரும், பிறரும் கூட அலறித்துடித்தனர்.

இராமானுஜர் பழைய நிலைக்கு மீள நாட்கள் பல ஆகின. இதற்கிடையில் வங்கியில் அவருக்கு உதவியாக இருந்தவர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் திட்டம் போட்டார். வாடிக்கையாளர் ஒருவருக்குப் பெருந்தொகைப் பணத்தைக் கடன் கொடுப்பதற்கான ஆவணங்களில் இராமானுஜரின் அனுமதியுடன் அவரது கையொப்பமும் பெற்று உதவி செய்தார். ஒரிரு மாதங்களில் அந்த உதவியாளர், வெளிநாடொன்றிக்கு இரு கிழமை லீவில் சென்று விட்டார். இரு மாதங்களாகியும் உதவியாளர் மீண்டும் வரவும் இல்லை. அவருடைய கபட நாடகம் வெளிவந்த போதிலும் அவரைப் பாதிக்கவுமில்லை. இராமானுஜரே குற்றவாளியாகினார். தொழிலிலிருந்து இடைநிறுத்தப்பட்டார். மனைவியின் ஆதரவும், உற்றாரின் அரவணைப்புடனும் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது.

கபட நாடகக் கதாநாயகன் வெளிநாட்டிலும் வாழிடம் கோரி பல இன்னல்களுக்குட்பட்டு நாடு கடத்தப்பட்டார். பலருக்கும் சூழ்ச்சி புலனாகியது. தானே சென்று இராமானுஜரிடம் மன்னிப்புக் கோரினார். வேலையுமிழந்த நிலையில் தானே சென்று சட்டவல்லுனரிடம் தன் பிழையை ஒப்புக் கொண்டார். நீதி தேவனும் விழித்தெழுந்தார். இராமானுஜருக்கு வேலையுடன் ஊதியப் பணமும் கிடைத்தது. உதவியாளர் இடமாற்றத்துடன் பதவி குறைக்கப்பட்டார். இராமானுஜருக்குக் கிடைத்த பணம் மாடி வீடு கட்டித் தானும் வாழ்ந்து வாடகைக்கும் கொடுக்க வாய்ப்பாக அமைந்தது. கடமை உணர்வுடனும் கண்ணியம் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்த வாழ்க்கை இராமானுஜருக்கு மேலும் சமூகத்தில் மதிப்பையும் உயர்வையுமே கொடுத்தது.

2. (அ) கல்வி ஓர் இலக்கை எய்துவதற்கான கருவி. எந்தக் கல்வி முறை ஆயினும் ஆராய்ந்து பார்த்து, பிள்ளைகளை வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்யத்தக்கதாக இருப்பின் நடைமுறைப்படுத்த வேண்டும்.

(ஆ) எவரும் வரவுக்கேற்ப செலவு செய்ய வேண்டும். தவறின் கடன்பட்டுத் துன்புறுவர். பெருஞ் செல்வரும் கடன்பட்டால் இம்மை மறுமையிலும் துன்புறுவர். இம்மையில் கடனால் படும் துன்பமே கொடியது.

(இ) வாழ்க்கையில் வரும் துன்பத்தை வெறுக்கும் மக்கள் கலைகளிலும், இலக்கியங்களிலும் துன்பப் பகுதிகளை இரசிப்பதுடன், விரும்பி வாசிக்கின்றனர். சேக்ஸ்பியரின் இன்பியல், துன்பிய நாடகங்களுள் துன்பியல் நாடகமே பெரிதும் போற்றப்படுகின்றது.

(ஈ) மக்கள் எங்கெங்கு வாழ்ந்தாலும் பொழுது விடிந்ததும் மகிழ்ச்சி அடைகின்றனர். தாவரங்களும் சிற்றுயிர்களும் கூட விடிந்ததும் மகிழ்ச்சி அடைகின்றன. இவற்றிற்கு சூரியனே காரணம் என்பதை மக்களே சிந்தித்து உணர்ந்தனர்.

3. (அ) வலை போன்ற அமைப்பையுடைய தசைகளும், தசை நார்களும், வ ல்களையும், முன்கைக ளையும் எத்திசையிலும் அசைக்க உதவுகின்றன.

(ஆ) பெருவிரலின் துணையின்றி எந்த ஒரு சிறுகாரியத்தையும் செய்ய முடியாது என்ற உண்மையே இதன் உட்கருத்தாகும்.

(இ) மனிதனுக்கும் குரங்குக்கும் இடையே காணக் கூடிய
ஒற்றுமை :
முற்காலத்தில் குரங்கைப் போலவே மனிதனும் கைகளையே முன்னங்கால்களாகப் பயன் படுத்தினான்.
வேற்றுமை :-
1. பிற்காலத்தில் மனிதன் கைகளால் வேலைகளைச் செய்து இரு கால்களாலும் நடக்கத் தொடங்கினான். ஆனால் குரங்கு அவ்வாறு செய்யவில்லை.
2. பிற்கால மனிதன் மரத்தில் வசிக்கவில்லை. ஆனால் குரங்கு தொடர்ந்தும் மரத்திலேயே வசிக்கின்றது.

(ஈ) இயற்கையைக் கட்டுப்படுத்த மனிதன் முதன்முதலில்
1. குச்சிகளையும் கற்களையும் பிடித்தான்.
2. கண், மூக்கு ஆகியவற்றின் அருகே பொருட்களைக் கொண்டு சென்றான்.
3. பலமாக கற்களைப் பழமரங்களை நோக்கி வீசினான்.
4. பூமிக்கடியில் வளரும் கிழங்கு வகைகளைத் தன் கைகளால் தோண்டி எடுத்தான்.

(உ) மரியாதையை எடுத்துக் காட்ட - கைகளைக் கூப்பி வணங்குதல், அணிவகுப்பு மரியாதை செய்தல்.
நட்பை எடுத்துக் காட்ட கைலாகு கொடுத்தல், அன்போடு சிநேகபூர்வமாகக் கைகளால் அணைத்தல் மூலம் செய்யலாம்.

(ஊ) 1. தன் கையே தனக்குதவி - ஒருவரது கைகளே ஒருவருக்கு எப்போதும் உறுதுணையாகும்.
2. வெறுங்கை முழம் போடுமா? - அளப்பதற்கு தேவையான ஒன்று இருந்தால் தான் அது தொடர்பான எதனையும் செய்யலாம்.
3. அடிக்கிற கை தான் அணைக்கும் - அன்பும் உரிமையும் உள்ளவரே தான் அடிக்கவும் பின்னர் அணைக்கவும் முற்படுவர்.

(எ) மனிதன் கைகளால் கலை கலாசாரங்களை உருவாக்கி உலகுக்குத் தந்துள்ளான். எத்தனையோ விதமான பொருட்களை உற்பத்தி செய்துள்ளான். காடுகளை அழித்து, நாடு, நகர்களை உருவாக்கியுள்ளான்.

4. **வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அயல் பிரதேச மாணவர்களுக்கு உதவுவது தொடர்பான அறிக்கை**

திங்களன்று கல்லூரி ஆசிரியர்கள், மாணவ பிரதிநிதிகளுடன் வெள்ள நிவாரணம் விடயமாகக் கலந்தாலோசிக்கப்பட்டது. சகல மாணவரிடமும் ஆசிரியரிடமும் உலர் உணவு உதவி கோருவதாக எடுக்கப்பட்ட முடிவு சகலருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலர் உணவுகளை வெள்ளிக்கிழமை பகல் பன்னிரண்டு மணிக்குள் "அ" மண்டபத்தில் ஒப் படைத்தல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. வெள்ளி, சனிக்கிழமைகளில் மாணவப் பிரதிநிதி களும் சிற்றூழியர்களும் கல்லூரியில் தங்க சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும். நான்கு ஆசிரியர் கண்காணிப்பர்.

பொதிகளில் காலி, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் உள்ள மூன்று பாடசாலைகளின பெயர், விலாசம் எழுதப்பட்டு, விநியோகிக்கும் ஒழுங்கில் வாகனத்தில் ஏற்ற சிற்றூழியர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கோட்டக்கல்வி அலுவலகம் ஒழுங்கு செய்த வாகனத்தில் திங்கள் காலை ஐந்து மணியளவில் பொதிகளை ஏற்றிப் புறப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டுள்ளது. அதனோடு கல்லூரி வாகனத்தில் பொதிகளை விநியோகிப்பதற்காக மாணவ பிரதிநிதிகள் நால்வரும், பிரதி அதிபரும், ஆசிரியர் இருவரும், பாடசாலை நலன்புரிச் சங்க செயலரும் செல்லவுள்ளனர். இவர்களுக்கான உணவு வசதிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2003 டிசெம்பர்

தமிழ்மொழியும் இலக்கியமும் III

விடைகள்

1. (அ) (i) சுவிஷேசகரால் / குருவானவரால் / நற்செய்தியாளரால் கூறப்பட்டது.
(ii) ஆத்ம விசாரியை / ஆன்மிகனை / உண்மைக் கிறிஸ்தவனைக் குறிக்கின்றது.
(iii) இத்துன்பம் உன்னை வந்தடைந்த வழி என்ன?
(iv) சொல்லுக / கூறுக / விளம்புக / இயம்புக என கருத்து எழுதலாம்.

(ஆ) (i) பூங்குன்றனால்
(ii) திருமாவளவனுக்கு / அறிவுடை நம்பிக்குக் கூறப்பட்டது.
(iii) திருமாவளவன் / அறிவுடைநம்பி / மாறு வேடத்தை களைந்த பின் கூறப்பட்டது.
(iv) அறிவுண்டாதல் / தெளிவுண்டாதல்.

(இ) (i) சூசைப்பிள்ளையால்
(ii) சங்கரப் பிள்ளைக்குக் கூறப்பட்டது.
(iii) அந்தோக் கிழவி என அழைக்கப்பட்டது.
(iv) எனக்குத் தெரியாது சூசைப்பிள்ளை மகன் காயிதம் அனுப்பயில்ல. அது என்ர வேலை.

(ஈ) (i) அங்கதன்
(ii) அளவற்ற மகிழ்ச்சி / அளவற்ற பெருமிதம்
(iii) அனுமன்
(iv) நான்

(உ) (i) சார்ங்கரவனால் கூறப்பட்டது.
(ii) இரக்கம் / கோபம் / வெறுப்பு
(iii) சகுந்தலை முன் செய்த தவறின் விளைவு.
(காந்தருவமணமும் அதனால் ஏற்பட்ட துன்பமும்)
(iv) கணவன் என்ற பொருளில் வந்துள்ளது.

2. (அ) பொருள் :- எவ்வளவு தான் காய்ச்சினாலும பாலின் சுவை குன்றாது. எவ்வளவு தான் சுட்டு எரித்தாலும் சங்கின் வெண்மை நிறம் மாறாது. பண்புடைய மேன் மக்கள் எத்தகைய வறுமையிலும் தகுதியை இழக்கமாட்டார்கள். பண்பற்றவர் எவ்வளவு நெருங்கினாலும் நல்ல நண்பர்களாக மாட்டார்கள்.

சிறப்பு :- "கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே"
இவ்வடிகள் மூலம் மேன்மக்களின் நற்பண்பு விளக்கப்பட்டுள்ளது. எவ்வளவு தான் துன்பங்கள், துயரங்கள், கேடுகள் வந்தாலும் தமது நிலையிலிருந்து மாறாது பண்புடனே இருப்பர் என்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) பொருள் :- "நீ மிகவும் நல்லவள், மிகவும் கெட்டிக்காரி என்பதையும் கண்டு கொண்டேன். அழகிய நெற்றியுடைய பெண்கள் எல்லோருள்ளும் மாயாசாலம் செய்வதில் நீ மிகவும் வல்லவளாக உள்ளாய். நீ விறகுகளையும் களவாகவே கொண்டு வந்தாய். செம்பொன்னால் செய்யப்பட்ட கயிறு உன்னுடைய கழுத்தில் இருக்கும் போது என்னிடம் எதுவும் இல்லையென்று சொல்லுவதை என்னால் ஏற்க முடியாது. இதனை எனக்குத் தருவாயாக" என்று (அரிச்சந்திரன்) கூற உயிர் நிற்கும் இடத்தில் வேடர்களின் அம்பு பட்ட மான் துடிதுடிப்பது போல பசுமையான வளையல்களை அணிந்தவளாக சந்திரமதி துடிதுடித்து பதற்றம் அடைந்து விழுந்தாள்.

சிறப்பு :- "பல்லம் உயிர் நிலைவாயில் பட்டமான் போல, பதைபதைத்துப் பைங்கொடியாள் பதறி வீழ்ந்தாள்"

புலையன் (அரிச்சந்திரன்) மங்கலநாண் கூறியதும் சந்திரமதி பட்ட வேதனை சித்தரிக்கப்பட்டுள்ளது. இது உவமையணி மூலம் விளக்கப்பட்டுள்ளது. பின்வரு மாறு உவமானம், உவமேயம், பொதுத்தன்மை என்பன காட்டப்படல் வேண்டும்.

உவமானம் :- அம்புபட்ட மான்
உவமேயம் :- அரிச்சந்திரன் சொற்கேட்ட சந்திரமதி
பொதுத்தன்மை :- பதைபதைத்து விழுந்தமை.
உருபு :- போல

(இ) பொருள் :-

வேற்படையை விட மிகுந்த நெருப்பை உண்டாக்கக் கூடிய பார்வையை உடைய அரக்கர்களை அழிப்பதற்காகப் பாற்கடலில் பள்ளி கொள்வதை விடுத்து அயோத்தியில் அவ தரித்தவனான இராமனது சொல்லை மீறி நடவாத தூதுவன் (அங்கதன்) கதிரவன் கடந்து செல்லாத காவலைக் கொண்டதும் மேருமலையைக் காட்டிலும் உயர்ந்து நீண்டதுமான மதிலைத் தாண்டி இலங்கையை அடைந்து இராவணனின் இருப்பிடத்தைச் சேர்ந்தான்.

சிறப்பு :- மதிலின் காவலும் உயரமும் மிகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது.
உயர்வு நவிற்சியணி கையாளப்பட்டுள்ளது.

(ஈ) பொருள் :-

செய்யக்கூடாத செயல்கள் பலவற்றைச் செய்து மேன்மை பெற வேண்டும் என விரு ம்பி அதிக தூரம் சென்று உடல்வருந்தி மனப்பயம் காரணமாக நீர்த்தேக்கமொன்றில் விழுந்து அகப்பட்டு அதினின்று சிரமப்பட்டு எழுந்து அவ்விடத்திலுள்ள நீர் காரணமாக வருத்தமடைந்து வெற்றி பொருந்திய யானை உண்ட விளாம்பழம் போல மணிகள் பதிக்கப்பட்ட பீடத்தில் வெறுமையோடு நமுறாது இருந்தான்.

சிறப்பு :-

நமுறாதின் தளர்வுற்ற மனநிலை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. உவமையணி கையாளப் பட்டுள்ளது. யானை உண்ட விளாம்பழம் வெளித்தோற்றத்தில் முழுமையாகவும் உள்ளே வெறுமையாகவும் இருப்பது போல நமுறாதும் வெளித்தோற்றத்தில் மன்னனைப் போலவும் அகத்தே தளர்வு மிக்கவனாகவும் இருந்தான் என்பது இவ்வுவமை மூலம் எடுத்துக் காட்டப்பட்டு ள்ளது.

(உ) பொருள் :-

இவ்வாறு இளையான்குடிமாறன் நாயனாருக்கு ஏற்ற விதத்தில் பேரின்பத்தை வழங் கியருளி முப்புரங்களை அழித்தவரான நடராசப் பெருமான் பக்தராகிய இளையான்குடிமாற நாயனாரின் முன் எழுந்தருளி மறைந்துவிட்டார். அந்தப் பெரியவரான இளையான்குடி மாறநாயனாரின் மாசற்ற இரு திருவடிகளையும் தலைமேல் வைத்து வணங்கிக் கொண்டு சேது நாட்டில் வாழ்ந்த மெய்ப்பொருள் நாயனார் செய்த தொண்டினை இனிமேல் பாடுவேன்.

சிறப்பு :-

அடுத்த நாயனாரின் வரலாறு கூறுவதற்கான தோற்றுவாயாக இவ்வடி அமைந்துள்ளது. இளையான்குடிமாற நாயனார் புராணம் நிறைவு பெற்று விட்டது. இனி மெய்ப்பொருள் நாயனார் தொண்டினைப் பற்றிக் கூறப்போகிறேன்.
இத் தொடர் அடுத்து கூறப்போகும் நாயனாரின் சரித்திரத்திற்கு தோற்றுவாயாக அமைந்துள்ளது.

3. (அ) இராவணனது வீரம் இழித்துரைக்கப்படுமாறு :-

1. இராவணன் போருக்கு அஞ்சி அச்சம் கொண்டு அரணுக்குள் புகுந்து பதுங்கிக் கொண்டிரு ந்தான் என இராமன் கூறியதாக அங்கதன் இராவணனுக்குக் கூறுவதன் மூலம் இராவணனது வீரம் இழித்துரைக்கப்படுகிறது.

2. தாடகையின் உடலைப் பருந்துண்ணச் செய்த வேளையிலும், மாமனான சுபாகு விசுவாமித் திரரின் வேள்வியைக் கெடுக்கச் சென்று படைகளுடன் இறந்த வேளையிலும், சூர்ப்பனகையை மானபங்கப்படுத்திய வேளையிலும் போரிட எதிர்த்து வராத இராவணன் இனிச் செய்யப் போகும் வீரச் செயல் ஏதும் உண்டோ என இராமன் கூறியதாக அங்கதன் கூறுகிறான். இதுவும் இராவணனது வீரம் இழித்துரைக்கப்படும் இன்னொரு சந்தர்ப்பமாகும்.

3. இலக்குமணன் இராமனை விட்டுப் பிரியுமாறு வஞ்சனை செய்து, அவன் பிரிந்த சமயம் பார்த்து, தனிமையில் இருந்த சீதையைக் கள்ளமாக கவர்ந்த இராவணன் போர் வலிமை உடையவனா என இராமன் கேட்டதாக அங்கதன் கூறியதும் இராவணனது வீரத்திற்கு இழுக்கானதே.

4. இலங்கைக்கு இராமனின் தூதுவனாகச் சென்ற அனுமன் இராவணனின் மகனான அட்ச குமாரனை சாந்து போல ஆகுமாறு தரையிலிட்டு அரைத்து விட்டு இலங்கையையும் கட லையும் கடந்து வந்ததன் பின்னரும் அனுமனைக் கொல்ல வேண்டும் என்று எண்ணம் வரவேண்டியவன் இன்னும் அவ்வாறு கொல்லவராமை இராவணனின் வீரத்திற்கு இழுக் காகவே குறிப்பிடப்படுகிறது.

5. தன் குலத்தில் பிறந்த ஒற்றர்களின் உயிரைக் கவராது விட்ட போதும், வருணபகவான் கண்கூடாக எதிரில் வந்து அணை கட்டுமாறு வணங்கிக் கூறிய போதும், இலங்கையின் ஆட்சியை வீபீடணுக்குக் கொடுத்த போதும், கடலை முயன்று அணை கட்டிய போதும் வராத இராவணன் இனி வருவானா? வீரம் உண்டா? என இழித்துக் கூறப்பட்டது.

6. திரிகூட மலையின் சுக்கீரீவன் அணிந்திருந்த கீரீடத்தை இழந்த பின்னரும் அந்த சுக் கீரிவனைக் கொல்லுவதற்குத் தொடர்ந்து வராத இராவணன் இனி எவ்வாறு போர் செய்யப் போகிறான் என அவனது வீரம் இழித்துரைக்கப்படுகிறது.

(ஆ) நடராசப் பெருமானின் அடியவர் எனக் கூறித் தமது வீட்டுக்கு வரும் அடியவர் யாராயிருப்பினும் கரம் குவித்து அன்பும் ஆர்வமும் உள்ள வார்த்தைகளால் வரவேற்பார். அடியவர்களின் திருவடிகளைக் கழுவி அமரச் செய்து அர்ச்சனை செய்வார். பின் பல சுவையுள்ள உணவுகளை கொடுத்து திருவமுது செய்விப்பார்.

நடராசப் பெருமானால் வறுமையுற்ற மாறனார் முன்னர் போலவே சிவனடியாரை உபசரித்து வந்தார். உள்ளம் தளராமல் பொருட்களை விற்று உபசரித்தார். தக்கவற்றை பிற இடத்தில் வாங்கியும் தன்னையே விற்றும், முன்பிலிருந்து எவ்விதத்திலும் மாறுபடாது திருப்பணிகளைத் தளர்வின்றிச் செய்தார்.

சிவபெருமானே தவ வேடந்தாங்கி மாறனாரின் வீட்டுக்கு எழுந்தருளிய போது, இரவு வேளை மழை பொழியும் நேரத்தில் உணவு எதுவும் இல்லாது சிந்தித்தார். உடனே நாயனார் பகலிலே விதைத்த நெல்லை வாரிக் கொண்டு வந்து சமைத்து உணவு அளித்தமை என்பவை மாறனார் சிவனடியார்களை உபசரிப்பதில் வல்லவர் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

(இ) கொசுப்படைகள் நமுறூதின் வீரர்கள் ஆண்மையாகிய வீரத்தை இழக்கச் செய்தமையை தத்ரூபமாகச் சித்திரிக்கின்றார் சேகுனாப் புலவர். எட்டுத் திசையிலும் படர்ந்த மேகத்திடையே வரும் கொசுக்கூட்டங்கள் நிறைந்த கூர்மையான உறிஞ்சிகளால் நெருங்கிக் குத்தி பேரவாக் கொண்டு இரத்தத்தைக் குடிக்க பகைவரும் வலிமையை இழந்து ஏக்கமுற்றனர். இறைவன் இடியைக் கூவி அழைத்து முறை தவறுபவர்களை பல முனைகளிலும் சென்று சூழ்ந்து அழிக்கும்படி ஏவிய கொசுக் கூட்டம் கரிய மேகக் கூட்டம் பெய்கின்ற மழை போலப் பெரு கியது. கள்ள நெஞ்சம் உடையவர்களை அடைந்து பேரிரைச்சலுடன் கடிக்கவும், இரைச்சலில் பலர் மாளவும் செய்தனர். சிலர் சேயிடம் அறியாது நடுங்கி அலைந்தனர். கருமேகம் பெய்த மக்கம் விளைவிக்கும் கொசுக்களுக்கு ஆற்றாது பகைவர் ஓடினர். பகைவர் வீட்டுக்குச் செல் லும் வழியே தெரியாது கலங்கினர். சிலர் கொடிய தீயை விருப்புடன் தேடி வாட்டமுற்று ஒளித்தனர். தீயின் புகையில் தம்மை மறைத்த போதும் கூர்மையான நகங்களையுடைய கொசுக்கள் உள்ளறைக்குள் புகுந்தும் தாக்கியதனால் பகைவர்கள் அலை போல அசைந்து நடுங்கிக் கொண்டிருந்தார்கள் எனச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

நமுறூதும் கொசுக் கூட்டத்தின் தாக்குலுக்குகஞ்சி, கொடுமையை விளைவிக்கும் படைகளை வீசி விட்டு, பொன்முடியும் கீழே விழ, படைக்கலங்களையும் நழுவ விட்டு, கால் கை நடுங்க சினம் மாறி ஆற்றாமையால் குனிந்த வேளை தோள்களில் கொசுக்கள் தாக்க அவனும் ஓடினான் என சித்திரிக்கப்பட்டுள்ளது.

4. (அ) **ஈதல்**

அவ்வைப் பெருமாட்டியார் ஈதல் பற்றிப் பாடுகையில் ஒருவன் இன்னொருவரிடம் ஒன்றைக் கேட்கும் முன்பே குறிப்பறிந்து கொடுப்பது - முயற்சியால் ஈட்டப்பட்ட பொருளாகும் என்றார். அதாவது கொடுப்பவனே விரும்பி கொடுப்பது ஆகும். ஒருவரிடம் வந்து கேட்கும் போது கொடுக்கப்படுவது கொடையாகும். மீண்டும் மீண்டும் ஒருவரை நாடி நடந்து சென்று அவரி டமிருந்து பெறும் பொருள் நடைக்கூலி என்றும் கூறி, அவ்வாறு பலமுறை நடந்து சென்று கெஞ்சிக் கேட்டும் மற்றவன் கொடுக்காவிட்டால் அவனது சந்ததி அற்றுப் போகும் என்றும் பாடினார்.

நீதிமன்றத்தில் வழக்காடுதல்

வழக்கொன்றிற்கு நடுவர்கள் உண்மையைக் கண்டறிந்து நேர்மையான தீர்ப்பளிக்கும் சமயத்தில், செல்வமும், பேச்சு ஆற்றலும் உடைய ஒருவன் இலஞ்சத்தைப் பெற்று குறுக்கிட்டு, வாதாடி, அவ்வழக்கை தள்ளி விட முனைவானாகில், அவன் மக்களை இழந்து விடுவான். அவனது சுற்றமும், பரம்பரைத் தொடர்பும் முழுமையாக அற்றுப் போகும். நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்ட ஒருவன் தொடுத்த வழக்கினைத் எதிரிக்காக திறமையுடன் வழக்காடுபவனுக்கு துணையாக ஒருவன் நின்று அவ்வழக்கினை தோல்வியுறச் செய்ய முயற்சிப்பவன் பாதிக்கப்பட்ட அந்த வழக்காளியும் சுற்றத்தினரும் அழுத கண்ணீரால் சந்ததியற்று அழிந்து போவது உறுதி என்றும் பாடியுள்ளார்.

(ஆ) **கணையாழியின் முக்கியத்துவம்**

சகுந்தலை துஷ்யந்தன் ஒன்று சேருவதற்கும், பின்னர் பிரிவதற்கும் மீண்டும் சேருவதற்கும் கணையாழியே மூலகாரணமாகிறது. சகுந்தலை கதையோட்டத்திற்கும், கதைத் திருப்பத்திற்கும் கணையாழியே கருவியாக அமைகிறது. இருவரும் காந்தர்வ மணம் புரிந்தமைக்கு அத்தாட்சியாக அணிவிக்கப்பட்டதும் கணையாழியே. துருவாசமுனிவர் இட்ட சாபத்திற்கு விமோசனமாக அமைவதும் கணையாழியே. கணையாழியை துஷ்யந்தன் கண்டதும் சகுந்லையின் நினைவு வந்துவிடும் என்றவாறு கூறினார். இருவரும் பிரிந்து துன்பப்படுவதற்கும் காரணமாக இருந்தது அதே கணையாழி தொலைந்தமையாகும். இருவரும் ஒருவரையொருவர் தவறாகக் கருதவும், தர்க்கிக்கவும் காரணமாக அமைந்ததும் கணையாழி தான். துஷ்யந்தனுக்கும் பழைய நினைவு களை ஏற்படுத்தி இருவரையும் சேர்த்து வைத்ததும் கணையாழி தான். இவ்வாறு கணையாழி முக்கியத்துவம் பெறுகிறது.

(இ) **பூங்குன்றனின் குணாதிசயங்கள்**

கௌரவமாக வாழ வேண்டும் பிறரிடம் கடமைப்படக் கூடாது என்று எண்ணுபவர். குடும்பப் பொறுப்பு உடையவர் - தனது மகளுக்கு ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதற்காக நிலத்தை விற்றவர். தனக்கு உரிமை இல்லாத பொருளில் ஆசை வைக்கமாட்டார். பிறர் பொருளில் ஆசைப்படாதவர். நிலத்தில் உரிமை இல்லாதபோது அதில் உள்ள புதையலில் எவ்வாறு உரிமை இருக்க முடியும் என அதில் ஆசை வைக்காதவர். தனது நற்பெயரிலும் குலப் பெருமையிலும் அக்கறை கொண்டவர். நீதி நியாயங்களை ஏற்றுக் கொள்ளும் பண்புள்ளவர். உண்மையும் நேர்மையும் மிக்கவர். குலப்பெருமையை நிலைநாட்டுவதே நோக்கமாக உடையவர்.

இளநாகனின் குணாதிசயங்கள்

உண்மையும், நேர்மையும் உயர்ந்த பண்பும் உடையவர். புதையலைக் கண்டெடுத்ததும் தனக்கென எடுக்காது, பூங்குன்றனுக்குக் கொடுக்கும் நல்ல பண்பு உடையவர். புதையலைச் சரிபாதியாகப் பிரித்தெடுக்க மறுத்தமை. சொந்த உழைப்பினால் முன்னேற வேண்டும் என விரும்புவர். மகனுக்காக நிலத்தை வாங்கி, அவனை உழைத்துப் பொருளீட்ட விரும்பினார். நீதி நியாயங்களை ஏற்றுக் கொள்ளும் பண்புடையவர். குலப் பெருமையை நிலை நிறுத்த விரும்புகிறவர். மனசாட்சியின்படி நடப்பவர்.

5. "கவிதை உள்ளம் படைத்தோன் இயற்கையில் இன்பங் காணலாம்" என்ற கருத்து "கவிதை உள்ளம்" என்ற பாடலில் எம்.ஏ.நு.மான் அவர்கள் உதாரணங்கள் மூலம் எடுத்து விளக்குகின்றார். வெண்முகில், வீசு தென்றல், புலரிப்போது, விழும் பனித்துளி இத்தகைய இயற்கையின் அசைவுகள் தோறும் இன்பத்தை நுகரலாம். இவற்றைவிட விண்ணிலே உலக வாழ்வின் உண்மையைக் கூடத் தெளிந்து இன்பத்தை அடையலாம். இந்த இயற்கை எழிலைக் கவிதை மூலம் நுகர்ந்து இன்பம் அனுபவிக்கலாம் என்றார்.

மேலும் இளந்தளிர்கள், மலர்கள் என்பவற்றின் அழகை இரசிக்கலாம். மென்மையான இளந் தளிரினும், மல்லிகையின் நறுமணத்திலும் நெஞ்சம் மகிழலாம். மலர்ந்த மலரின் தேனை நுகரலாம். செவ்வல்லியின் தூய்மையை உணரலாம். முல்லை மலரின் சிரிப்பில் காதல் பெண்ணின் முறுவலைக் காணலாம். புல் நுனியில் விழும் பனித்துளியின் அழகை இரசிக்கலாம் என மலர்களில் இன்பங் காணலாம் என வியந்தார்.

இதைப் போன்றே கவிஞர் உயிரினங்களிலும் இயற்கையின் இன்பத்தைக் கண்டு மகிழ்ந்ததைக் கூறுகிறார். பசுமையான கிளைகளில் தாவிப் பாயும் குயில்களின் குரலோசையிலும், சின்னக் குருவிகளின் நீண்ட ஊசி மூக்கினால் தேனைப் பருகும் அழகிலும் தனது மனதைப் பறி கொடுத்தார். இழைகள் பின்னும் பட்டு நூற்பூச்சியோடும் பல கதை பேசலாம் என்றும், பறவையின் சிறகுத் துடிப்பில் இன்பச் சுவையை நுகரலாம் என்றும் இரசித்து கவிதை பாடி வாசகர் யாவரையும் மகிழ்விக்கிறார்.

6. (அ) சகீனாவின் பெருமிதத்துக்குக் காரணங்கள் :-

சகீனா இவ்வுலகில் அறுபது வருடங்கள் வாழ்ந்து விட்ட பெருமிதம் உடையவர். தனது கடைசிக் காலத்தில் மகன் ரசாக் இருக்கிறான் என்ற தைரியம் இருந்தது. மேலும் தனக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணத்துடன் பெருமிதமாக இருந்தாள்.

(ஆ) மகன் ரசாக் தாயின் பெருமிதத்தை அர்த்தமற்றதாக்கப் பல கேள்விகள் கேட்டான்.
"உலகம் தெரிந்த மாதிரிப் பேசுகின்றாயே
உன்முகம் உனக்குத் தெரியுமா"?

"ஒலகம் தெரிஞ்ச மாதிரிப் பேசுரியே
ஒன்ட முகம் உனக்குத் தெரியுமாகா"?
இவ்வாறு கேட்டு பெருமிதத்தைக் குறைத்து விட்டான்.

(இ) ரஸாக் கேள்விகள் பல கேட்டதால் சகீனாவின் மனதில் சிறுவயது நினைவுகள் தோன்றின. சகீனா கண்ணாடியில் முகம் பார்த்த போது தாயார் கண்டிக்கவும் வேதனைப்பட்டாள். பின்னர் தானே ஆகாது எனத் தானே பார்க்காது விட்டமையை எண்ணிப் பார்த்தாள். ஒன்ட முகம் உனக்குத் தெரியுமா என்பது சகீனாவின் எண்ணத்தைக் கிளறிவிட்டதாகவே எண்ணத் தோன் றுகிறது. இவ்வாறு பல காரியங்களை "ஆகாது" என கைவிட்டதையும், தட்டு வேளிக்குள் மறைந்து வாழ்ந்ததால் காலத்தையும் மாற்றத்தையும் அறியாமலே காலம் அழிந்தமையையும் எண்ணி நொந்தாள். தான் ஏமாற்றப்பட்டு விட்டதையும், தான் பலரிடம் ஏமாந்ததையும் நினைத்தாள். எல்லாவற்றையும் மீள நினைத்து தான் இருட்டறை வாழ்க்கை மேற் கொண்டு வீணானதை எண்ணி மிகவும் வேதனைப்பட்டாள்.

7. (அ) மணிமேகலை துறவு மார்க்கத்தில் செல்லவும், உதயகுமாரன் மணிமேகலையைச் சேர விடாது தடுத்ததும் மணிமேகலா தெய்வமேயாகும். மேலும் மணிமேகலையை மணிபல்லவ தீவிற்கு கொண்டு சென்று விட்டதும், பழம் பிறப்பை உணர்த்தியதும் அத் தெய்வமே ஆகும். வேற்றுரு எடுக்கவும், ஆகாய வழியில் செல்லவும், பசியின்றி இருப்பதற்குமான மந்திரங்களை மணிமேகலைக்குச் சொல்லிக் கொடுத்ததும் மணிமேகலா தெய்வம் தான். புத்தபீடிகையைக் காப்பவளாகிய தீவதிலகையை மணிபல்லவ தீவில் காண வாய்ப்பு கிட்டியதும் அத் தெய்வத்தா லேயே. மேலும் கோமுகிப் பொய்கையில் அட்சயபாத்திரம் பெற்று உலகத்தின் பசியைப் போக்கும் தர்மத்தை செய்யவும் மணிமேகலாத் தெய்வத்தால் வாய்ப்பு கிட்டியது. அறவண அடிகளிடம் உபதேசம் பெற மணிமேகலா தெய்வம் வழிகாட்டி உதவியதாலும் மணிமேகலைக் கதையில் மணிமேகலா தெய்வம் முக்கியத்துவம் பெறுகிறார்.

(ஆ) அச்சும்மா வறுமையின் கோரப்பிடியில் சிக்கி உள்ளாள். மெலிந்து வாடி வெளிறிப் போன தோற்றத்தவளாக உள்ளாள். குச்சுக்கைகள், சும்பற் கால்கள், பழுப்பேறிய மேனி, போருக்குப் பயன்படுத்தும் வாளை ஒத்த காரை எலும்புகள், கதை சொல்லும் கண்கள், பரட்டைத்தலை, பழஞ்சீலைப்பூ முடிச்சு, வரண்ட சிரிப்பு, சிறிய முட்டி வயிறு, சிரங்குப் புண்கள் உடைய கால்களை உடையவளாகவும் காணப்படுகிறாள்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2002 டிசெம்பர்

தமிழ்மொழியும் இலக்கியமும் I

ஒரு மணித்தியாலம்

- பின்வரும் பந்தியில் ஐந்து சொற்கள் தடித்த எழுத்தில் உள்ளன. இச் சொற்கள் ஒவ்வொன்றும் உணர்த்தும் பொருளை பந்தியின் கீழ் அவ்வச் சொற்களுக்கு எதிரே அடைப்புக்குறிகளுக்குட கொடுக்க ப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்க.

நல்லறிஞரது உள்ளக கமலத்தில் இருந்து பிறப்பது இயற்கவியாகும். இத்தகைய கவி பாடுவோர் உலகிற் சிலரேயாவர். அன்னார் இயற்றும் அருங்கவிதைகளில மாந்தர் அறிந்து உய்தற்குரிய விழுமியக் கருத்துக்கள் அமைந்து மிளிரும்.

1. கமலம் [(1) மலர் (2) தாமரை (3) மல்லிகை (4) தடாகம்]

2. அன்னார் [(1) அன்புடையோர் (2) அறிஞர் (3) அத்தகையோர் (4) ஆற்றலுடையோர்]

3. மாந்தர் [(1) புலவர் (2) சான்றோர் (3) மகளிர் (4) மக்கள்]

4. உய்தல் [(1) ஈடேறுதல் (2) வேண்டுதல் (3) மதித்தல் (4) போற்றுதல்]

5. விழுமிய [(1) தேவையான (2) அழியாத (3) சிறப்பான (4) தெளிவான]

- பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

6. ராஜ்யம் என்ற வடசொல்லின் தமிழ் வடிவம்
(1) ராச்சியம் (2) இராச்சியம் (3) இராட்சியம் (4) ராட்சியம்

7. பாம்பாட்டுவோன் இசைக்கும் கருவி
(1) புல்லாங்குழல் (2) மகுடி (3) நாதசுரம் (4) உடுக்கை

8. பிச்சை, சந்தேகம் என்ற இரண்டு கருத்துக்களையும் உணர்த்தும் சொல்
(1) ஐயம் (2) தருமம் (3) தானம் (4) சமுசயம்

9. காமம், குரோதம், லோபம், மோகம், மதன், மாச்சரியம் என்பவற்றின் தொகைப் பெயர்
(1) ஆறறிவு (2) ஆறுகுணம் (3) ஆறுபகை (4) ஆறுதொழில்

10. ஈ-மெயில் (E-mail) என்பதற்குப் பொருத்தமான கலைச்சொல்
(1) வலைதளம் (2) பண்பலை (3) தொலைநகல் (4) மின்னஞ்சல்

11. பல்கலைக்கழகங்களின் வளர்ச்சிக்காக அரசாங்கம் வழங்கும் நிதியுதவி
(1) வெகுமானம் (2) வேதனம் (3) மானியம் (4) சன்மானம்

12. எவருடைய துணையுமின்றித் தானே தனித்து நின்று காரியத்தை வெற்றிகரமாக முடிக்கும் திறமை யுடையவன்
(1) அசகாயசூரன் (2) சர்வாதிகாரி (3) சேனாதிபதி (4) ஆக்கிரமிப்பாளன்

13. பிள்ளை என்ற இளமைப் பெயர் பின்வருவனவற்றுள் எதனுடன் பொருந்தி வராது?
(1) கிளி (2) குரங்கு (3) கீரி (4) அணில்

14. உவரி, சாகரம், பரவை என்னும் சொற்களாற் குறிக்கப்படுவது
(1) ஒலி (2) ஆகாயம் (3) வண்டு (4) கடல்

15. பின்வருவனவற்றுள் இருவேறு பொருள் தரும் சொற்றொடர் எது?
(1) அதிக வீட்டுவேலை (2) கிராமமுன்னேற்றச் சங்கம்
(3) பழைய மாணவர் விடுதி (4) மலைநாட்டுக்காட்சி

16. விலைவாசிகள் அதிகரித்த நிலையில் மக்கள் வயிற்றைக்கட்டி வாழ்கின்றனர். 'வயிற்றைக்கட்டுதல்' என்ற மரபுத் தொடருக்குப் பொருத்தமான மற்றொரு மரபுத் தொடர்
(1) கச்சை கட்டுதல் (2) வயிற்றிலடித்தல் (3) வாய்புதைத்தல் (4) வாயைக்கட்டுதல்

17. நுனிப்புல் மேய்தலால் ஆழமான அறிவைப் பெறமுடியாது. 'நுனிப்புல் மேய்தல்' என்றால்
(1) ஒன்றும்விடாது படித்தல் (2) மனப்பாடஞ் செய்தல்
(3) மேலெழுந்தவாரியாகப் படித்தல் (4) அக்கறையின்றிக் கற்றல்

18. 'பாதுகாப்பாக இருக்குமென்று எண்ணிச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் சில, துன்பத்தை தருவதும் உண்டு' என்பதை விளக்கும் பழமொழி
(1) முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் (2) வேலிக்கு வைத்த முள் காலிலே தைத்தது
(3) மடியில் கனமிருந்தால் வழியில் பயம் (4) நல்ல மரத்துக்கு ஒரு புல்லுருவி

19. எவருடைய புத்திமதியையும் கேட்காது தமது விருப்பப்படி நடத்தலை விளக்கப் பொருத்தமான உவமைத் தொடர்
(1) கடடுக்கடங்காத காளை போல (2) விளக்கிலே மொய்த்த விட்டில் போல
(3) முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டது போல
(4) வளர்த்த கடா மார்பிற் பாய்ந்தது போல

20. மன்றத் தலைவர் இதுவரை செய்து வந்த தில்லுமுல்லுகள் அம்பலமாகின. 'தில்லுமுல்லு' என்ற இணைமொழியின் கருத்தை தரும் மற்றோர் இணைமொழி
(1) தாறுமாறு (2) பொய்புரட்டு (3) கொடுக்கல்வாங்கல் (4) நல்லது பொல்லாதது

- பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

21. பின்வருவனவற்றுள் எழுத்துப்போலிக்கு உதாரணம்
(1) தேசம் (2) மையல் (3) நேயம் (4) சாம்பல்

22. தோன்றல் விகாரப்புணர்ச்சிக்கு உதாரணம்
(1) மட்பாண்டம் (2) காலைக்கதிரவன் (3) நீல வானம் (4) கடலலை

23. "உறுபசி தீர்ப்பாய் என்று எண்ணி வந்தேன்" என்ற வாக்கியத்தில் வந்துள்ள சொற்கள்
(1) பெயர், வினை, இடை, உரி என்பன (2) பெயர், வினை, இடை என்பன
(3) பெயர், வினை, உரி என்பன (4) பெயர், இடை, உரி என்பன

24. பின்வருவனவற்றுள் விளித்தொடருக்கு பொருத்தமான உதாரணம்
(1) பரதன் வந்தான் (2) வந்தான் பரதன் (3) வந்த பரதன் (4) பரதா வா

25. தரப்பட்ட சொல்வகைக்குப் பொருந்தாத ஒரு சொல் இடம்பெறும் வரிசை
(1) தன்மை வினைமுற்று - வந்தேன், வருகிறேன், பாடினோம்.
(2) முன்னிலை வினைமுற்று - வந்தாய், படித்தீர், பாடுகின்றாய்.
(3) படர்க்கை வினைமுற்று - வந்தான், வருகின்றான், வந்தது.
(4) வியங்கோள் வினைமுற்று - வாழிய, வளரும், வளர்க.

26. அவன் கூலி வேலை செய்கின்றான். "கூலிலை" என்பது
(1) பண்புத்தொகை (2) நான்காம் வேற்றுமைத்தொகை
(3) மூன்றாம் வேற்றுமைத்தொகை (4) உம்மைத்தொகை

27. பின்வரும் வாக்கியங்களுள் எழுவாய் வெளிப்பட்டுத் தோன்றாத வாக்கியம் எது?
(1) மனோகரனும் அகிலனும் நேற்றுப் பாடசாலைக்குப் போனார்களா?
(2) மனோகரன் அகிலனுடன் நேற்றுப் பாடசாலைக்குப் போனானா?
(3) மனோகரா, அகலனுடன் நேற்றுப் பாடசாலைக்குப் போனாயா?
(4) மனோகரன் அகிலனை நேற்றுப் பாடசாலைக்குக் கூட்டிப் போனானா?

28. "என்ன நடந்தாலும் எமது கொள்கையைக் கைவிடமாட்டோம்". 'எமது' என்பதில் உருபேற்ற பெயர்ச்சொல்
(1) நான் (2) எம் (3) நாம் (4) நாங்கள்

29. இக் கவிதை பாரதியாரால் பாடப்பட்டது என்ற வாக்கியத்தில் 'பாடப்பட்டது' என்பது
(1) பிறவினை (2) செயப்பாட்டுவினை (3) எதிர்மறைவினை (4) செய்வினை

30. பின்வருவனவற்றுள் "ஐயோ" எனும் இடைச்சொல் வியப்புப் பொருளை உணர்த்தி நிற்கும் வாக்கியம்.
(1) "ஐயோ என் அருமைச் செல்வனை அரவந் தீண்டி விட்டதே!"
(2) "ஐயோ, கரடியொன்று திறந்த வாயுடன் வருகின்றதே!"
(3) "ஐயோ, அவர் இறந்து விட்டாரா? இனி என் செய்வோம்!"
(4) "ஐயோ, இக் கார்மேகவண்ணனாம் இராமனின் அழகே அழகு!"

- பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றினதும் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

31. ஆசிரியர்கள் ஒவ்வொருவரும்
(1) தத்தம் வீட்டுக்குச் சென்றனர். (2) தம் வீட்டுக்குச் சென்றனர்.
(3) தங்கள் வீட்டுக்குச் சென்றனர். (4) தமது வீட்டுக்குச் சென்றனர்.

32. நடந்து முடிந்த பரீட்சையில்
(1) ஏதாவது ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கும்படி கேட்கப்பட்டோம்.
(2) எவையேனும் ஐந்து வினாவுக்கு விடையளிக்கும்படி கேட்கப்பட்டோம்.
(3) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கும்படி கேட்கப்பட்டோம்.
(4) ஏதாவது ஐந்து வினாவுக்கு விடையளிக்கும்படி கேட்கப்பட்டோம்.

33. துன்பம், வருத்தம், சினம், அச்சம் என்னும் நான்கு
(1) மெய்ப்பாடும் ஒன்றற்கொன்று தொடர்புள்ளது.
(2) மெய்ப்பாடுகளும் ஒன்றற்கொன்று தொடர்புள்ளவை.
(3) மெய்ப்பாடுகளும் ஒன்றற்கொன்று தொடர்புள்ளது.
(4) மெய்ப்பாடும் ஒன்றற்கொன்று தொடர்புள்ளன.

- பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழைகள் அற்ற வாக்கியத்தினை தெரிவு செய்க.

34. (1) சுமதி காச்சல் மாறினதும் வெந்நீரில் குளித்தாள்.
(2) சுமதி காய்ச்சல் மாறியதும் வெந்நீரில் குளித்தாள்.
(3) சுமதி காய்ச்சல் மாறியதும் வென்னீரில் குளித்தாள்.
(4) சுமதி காற்சல் மாறியதும் வெந்நீரில் குளித்தாள்.

35. (1) மேலைத்தேய நாகரீகத்தின் செல்வாக்கு எமது கலை கலாசாரங்களை பாதித்துள்ளது.
(2) மேலைத்தேய நாகரிகத்தின் செல்வாக்கு எமது கலை கலாச்சாரங்களைப் பாதித்துள்ளது.
(3) மேலைத்தேய நாகரீகத்தின் செல்வாக்கு எமது கலை கலாச்சாரங்களைப் பாதித்துள்ளது.
(4) மேலைத்தேய நாகரிகத்தின் செல்வாக்கு எமது கலை கலாசாரங்களைப் பாதித்துள்ளது.

- பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

சாதிமத பேதங்கள் மூடவழக்கங்கள்
தாங்கி நடைபெற்றுவரும் சண்டை யுலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலக்கழிப்போம், பின்னர்
ஒழித்திடுவோம், புதியதோர் உலகம் செய்வோம்
பேதமிலா அறிவுடைய அவ்வுலகத்திற்குப்
பேசு சுயமரியாதை உலகு எனப் பேர் வைப்போம்
ஈதேகாண்! சமூகமே யாம் சொன்னவழியில்
ஏறுநீ ஏறுநீ ஏறுநீ ஏறே
(ஊதை-காற்று)

36. கவிஞர் சிருஷ்டிக்க விரும்பும் உலகிற்கு அவர் வைக்க விரும்பும் பெயர் யாது?
(1) பேதமிலாஉலகு (2) புதியஉலகு (3) அறிவுஉலகு (4) சுயமரியாதைஉலகு

37. தாம் வாழ்ந்த காலத்து உலகிலிருந்து ஒழிக்கப்பட வேண்டியவை எனக் கவிஞராற் கருதப்படாதவை
(1) சாதிமதபேதங்கள் (2) மூடவழக்கங்கள் (3) துரும்புகள் (4) சண்டைகள்

38. இப்பாடலை கவிஞர் எத்தயைக உணர்வோடு பாடியுள்ளார்?
(1) இரக்கம் (2) ஆவேசம் (3) துன்பம் (4) பரிகாசம்

39. "சண்டை உலகிதனை ஊதையினில் துரும்பு போல அலக்கழிப்போம்" - இதில் உவமானமாக வந்துள்ளது
(1) ஊதையினில்துரும்பு (2) சண்டைஉலகு (3) போல (4) அலக்கழித்தல்

- கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக் கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

40. (அ) இலக்கியம், நுண்கலைகள், அறிவியல் போன்றன யாவும் ஆக்கக் கறபனைகளின் விளைவுகளேயாம்.
(ஆ) முன்னர் நாம் அனுபவித்த நிகழ்ச்சியொன்றினை மீண்டும் நமது மனக்கண் கொண்டு நோக்குதல் மீள் ஆக்கக் கற்பனையாகும்.

(இ) கற்பனை இருவகைப்படும்.

(ஈ) ஆனால் பழைய அனுபவங்களின் பிம்பங்களைப் புதிய முறையில் நாம் தொகுத்து அமைப்போமா யின் அது ஆக்கக் கற்பனையாகும்.

(உ) அவை மீள் ஆக்கக் கற்பனை, ஆக்கக் கற்பனை என்பனவாகும்.

(1) ஆ, ஈ, இ, உ, அ (2) இ, உ, ஆ, ஈ, அ

(3) இ, உ, ஈ, ஆ, அ (4) இ, உ, அ, ஈ, ஆ

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2002 டிசெம்பர்

தமிழ்மொழியும் இலக்கியமும் II

இரண்டு மணித்தியாலங்கள்

1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(அ) எமது இயற்கை மூலவளங்களுள் தண்ணீர் பிரதானமானதொன்று. மக்கள் உயிர்வாழ்க்கைக்கு மட்டுமன்றி இந் நிலவுலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்குமே நீரானது மிகவும் அவசிய தேவை யாகும். ஆனால் இன்று எமது நாட்டின் சில பகுதிகளில் நீர்ப்பற்றாக்குறை நிலவ, வேறு சில பகுதிகளில் மிதமிஞ்சிய நீர் காணப்படுகின்றது. நீரை மனிதன் பயன்படுத்தும் வகைகள் பற்றி யும் இன்று நிலவும் நீர்ப்பிரச்சினைகள் பற்றியும் அப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிவகைகள் பற்றியும் ஆராய்ந்து ஒரு விளக்கக்கட்டுரை.

(ஆ) இன்று எமது நாட்டில் விளையாட்டுத்துறையில் பெருமளவு ஆர்வம் ஏற்பட்டுள்ளது. பல்வேறு விளையாட்டுப் போட்டிகளிலும் எமது நாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் சாதனை புரிந்து வருகின்றனர். எமது நாட்டுக்குப் பேரும் புகழும் ஈட்டித்தந்துள்ளனர். இத்தகைய விளையாட்டு க்களில் போதிய பயிற்சியும் ஆர்வமும் பள்ளிப்பருவத்திலேயே மாணவர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தி நீர் மாணவர் மன்றத்தில் நிகழ்த்தும் சொற்பொழிவு.

(இ) மனிதவாழ்வு கிடைத்தற்கரியதொன்றாகும். இவ் வாழ்வை நாம் ஒவ்வொருவரும் நன்கு பயன்படு த்திக் கொள்ள வேண்டும். ஆகவே வாழ்நாளிலே எதோ ஒரு குறிக்கோளை வகுத்துக கொண்டு அதனை நிறைவேற்ற எவன் அல்லும் பகலும் உழைக்கின்றானோ அவனே உண்மையில வாழ் ந்தவனாவான். இந்த வகையில் உமது வாழ்வின் எதிர்கால இலட்சியங்கள் பற்றிய உமது கருத்து வெளிப்பாடு.

(ஈ) பறவைகள் பலவிதம்; மிருகங்கள் பலவிதம்; ஊர்வன பலவிதம்; அவற்றின் இயல்புகளும் பல விதம். அந்த சீவராசிகளிடமிருந்து மனிதன் கற்றுக்கொள்ள வேண்டியன பலவுள. இவற்றை அடிப்படையாகக் கொண்டு இரு நண்பர்களிடையே நிகழ்ந்த உரையாடல்

(உ) தனது படிப்பை முடித்துவிட்ட சங்கர் வேலை தேடி திரிகின்றான். ஆனால் அவனது முயற்சி பலனளிக்கவில்லை. விவசாயியான அவனது தந்தை தம்மோடு வயலில் வேலை செய்யும்படி அவனைத் தூண்டுகின்றார். சங்கரோ வெளிநாடு சென்று பிழைக்க வேண்டுமென்ற தன் எண் ணத்தை வெளியிடுகிறான். வேறு வழியின்றி சங்கரின் தந்தை கடன்பட்டு வெளிநாடு செல்வதற் காக அவனைக் கொழும்புக்கு அனுப்பி வைக்கின்றார் ..... இதன் பின் நடந்தவற்றை சுவைபட விளக்கும் ஒரு கற்பனைச்சிறுகதை.

2. கீழே தரப்பட்டுள்ள அ, ஆ, இ, ஈ என்னும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் சுருக்கத்தை 15-20 சொற்களில் அமையக்கூடியவாறு வேறுவேறாக எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

(அ) தேனீக்கள் மலர்களிலிருந்து தேனைச் சேகரிப்பது போலவே, மாணவரும் நூல்களிலிருந்து அறிவைச் சேகரித்தல் வேண்டும். மாணவர் அறிவைச் சேகரிப்பதற்கு மிகவும் வாய்ப்பான இடம் நூலகமேயாகும். நூலகத்திலே மாணவர் இன்பப் பொழுதுபோக்குக்காகவும் வாசிக்கலாம்; அறிவை ஈட்டுவதற்காகவும் வாசிக்கலாம்; ஆராய்ச்சி செய்வதற்காகவும் வாசிக்கலாம். பெரும்பாலான பாடசாலைகளில் சிறிய அளவிலாயினும் நூலகங்கள் உள்ளன. சில பாடசாலைகளில் எல்லா வசதிகளுமுடைய நல்ல நூலகங்கள் உள்ளன. இன்னுஞ் சில பாடசாலைகளில் வகுப்பறை நூலகங்களும் உள்ளன. மாணவர் தமது வகுப்பறையிற் பெறும் அறிவை விரிவாக்கி வளப்படுத்து வதற்கு இத்தகைய நூலகங்களை இயலுமான அளவு பயன்படுத்த வேண்டும்.

(ஆ) இரயில் பாதையின் ஒரு பக்கத்தில் மனிதர்கள் அடிக்கடி நடந்து சென்றதனால் ஏற்பட்ட ஒற் றையடிப்பாதையில் ஒரு மனிதன் அந்த நள்ளிரவு வேளையில் நடந்து கொண்டிருந்தான்.

பாதையைக் கண்ணால் பார்த்துக் கொண்டு அவன் நடக்கவில்லை. காலின் உணர்ச்சி கொண்டே நடந்தான். இரயில் தண்டவாளத்தின் ஒரமாகக் குவிந்திருந்த கருங்கல் சல்லிகளில் அவனுடைய கால்கள் சிலசமயம் தடுக்கின. ஒற்றையடிப்பாதையின் மற்றொரு பக்கத்தில் வேலியைப போல் வளர்ந்திருந்த கற்றாழைச் செடிகளின் முட்கள் சிலசமயம் அவனுடைய கால்களில் குத்தின. அவற்றையெல்லாம் அந்த மனிதன் சற்றும் பொருட்படுத்தவில்லை. தடைகளைப் பொருட்படுத்தாமல் விரைவாக நடந்தான்.

(இ) மனிதன் வெறும் முளையறிவு மட்டும் படைத்தவன் அல்லன். அவன் உள்ளமும் உடையவன். விஞ்ஞானம் மனிதனது சிந்தனையாற்றலை வளர்த்து, முளையால் அறியும் அறிவை விருத்தி செய்கின்றது. இந்த அறிவு மட்டும் இருந்தால் மனிதன் வெறும் இயந்திரம் போலாகிவிடுவான். அவனை உள்ளம் உடையவனாக்குவது, உணர்ச்சியுடையவனாக்குவது, அழகியல் நயப்புடையவனாக்குவது, மனிதப்பண்புள்ளவனாக்குவது இலக்கியக் கல்வியே ஆகும். முளையும் உள்ளமும் ஒருசேர வளர்ச்சியடையும் போதே மனிதன் முழுமனிதனாகின்றான். பண்பட்ட சமூக உறுப்பினன் ஆகின்றான். ஆதலால் விஞ்ஞானக்கல்வியும் இலக்கியக் கல்வியும் தம்மு பிணங்காமல இணங்கி நிற்றல் வேண்டும்.

(ஈ) அன்பென்றால் என்ன? அது பல வர்ணமுள்ள வானவில்லுப் போன்றது; வாழ்வென்னும இருண்ட முகிற் கூட்டங்களை ஒளியில் தேய வைப்பது; மக்களுக்கு மகிழ்ச்சியை வாரி வாரி இறைப்பது; நித்திரையில் ஆழ்ந்திருக்கும் குழந்தையைப் பாருங்கள். அங்கே தொட்டிலை ஆட்டிக் கொண்டு நிற்கும் தாயின் உள்ளத்தில் உதிப்பது என்ன? இந்த அன்பு தான். சுடுகாட்டில் ஆதரவாகக் கூடி நிற்போர் உள்ளத்தில் மிளிர்வது என்ன? இதே அன்பு தான். எம்மைப் போன்ற சாதாரண மக்களை அரசகுமாரர் ஆக்குவது அன்பென்னும் மந்திரவித்தை அன்றோ? பெரிய வெற்றி வீரனின் அருஞ்செயல்களுக்கு ஆதாரமாயிருப்பது அன்பன்றோ?

3. பின்வரும் உரைநடைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும். அகப்பையில் வந்ததைத் தான் மற்றையோர்க்குப் பரிமாறாலாம். இல்லாத ஒன்றினை வழங்க, என்று வற்புறுத்துவதில் பயனில்லை. அவ்வாறு வற்புறுத்துவது அறியாமை. மனிதப் பண்புகளைப் பொறுத்தளவில் இதே நிலைப்பாடு தான். பண்புகள் என்றால் ரூபாய்க்கு எத்தனை என்று கேட்பவர்களும் உள்ளனர். அத்தகையவர்களைப் பண்புகளைப் பரிமாறச் சொன்னால் அவர்கள் எங்கு போவார்கள்? எனவே பண்புகள் பற்றிய அறிவு வேண்டும். பின்னர் அவற்றை உணர்தல் வேண்டும். அடுத்து பண்புகளை ஏற்றுக் கொள்ளும் நிலை தோன்றும். அதன் பின்னரே, பண்புப் பரிவர்த்தனை நிகழ்கின்றது. சிறு பராயத்திலிருந்தே நல்ல மனிதப் பண்புகளில் பரிச்சயம் ஏற்படும் அளவிற்குப் பிள்ளைகளுக்கு தேவையான சூழலையும் ஏற்படுத்தி, அனுபவங்களையும் வழங்கும் பொறுப்பு குடும்பம், பிள்ளை வாழுகின்ற சுற்றம், பாடசாலை, கோவில் ஆகியவற்றை சார்ந்தது. இச் சமூக நிறுவனங்கள் இளந்தலைமுறையினரின் பண்பு வளர்ச்சியிலும், ஒழுக்க வளர்ச்சியிலும் சிரத்தை எடுக்கும் போதே, பண்புள்ள, ஒழுக்கமுள்ள சமுதாயம் உருவாக முடிகிறது. இதற்கு இச்சமூக நிறுவன உறுப்பினர்கள் சிரத்தை எடுத்தால் மட்டும் போதாது; தாமும் ஒழுக்கசீலர்களாக வாழ்ந்து காட்ட வேண்டும். மனிதப் பண்புகளும் ஒழுக்க சீலங்களும் வாழுகின்ற சூழலில் வளர்ந்து வருகின்ற இளஞ்சந்ததியினர் தாமும் அவற்றை அறிந்து கொள்ளவும், அவற்றுடன் பரிச்சயம் பெறவும், உறவு கொண்டாடவும் முயல்வர். அந்த வகையில் நல்லொழுக்கத்தை கற்றுக் கொள்வதிலும், கற்றபடி ஒழுகுவதிலும் பிள்ளைகளுக்குச் சிரமம் தோன்றாது.

(i) பண்புப் பரிவர்த்தனைக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுபவை எவை?
(ii) "சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும்" என்ற பழமொழி இங்கு என்ன அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகின்றது?
(iii) "பண்புகள் என்றால் எத்தனை ரூபாய்க்கு எத்தனை என்று கேட்பவர்களும் உள்ளனர்" என்ற கூற்று மூலம் இவ்வுரைப்பகுதியின் ஆசிரியர் மறைமுகமாகக் கூறுவது என்ன?
(iv) பண்பும் ஒழுக்கமும் உள்ள சமுதாயத்தினை எவ்வாறு உருவாக்கிக் கொள்ள முடியும்?
(v) இங்கு சமூக நிறுவனங்களாகக் குறிப்பிடப்படுபவை எவை?
(vi) பிள்ளைகள் ஒழுக்கத்தைக் கற்றுக் கொள்ளவும் கற்றபடி ஒழுகவும் உகந்த சூழல் யாது?
(vii) பின்வரும் சொற்களின் பொருளை எழுதுக.
(அ) பரிவர்த்தனை (ஆ) பரிச்சயம் (இ) சிரமம்

4. எமது நாட்டில் இன்று "பொலித்தீனின்" பாவனை அதிகரித்து வருவதால் பல தீங்குகள் ஏற்படுகின்றன எனப் பல சமூக நிறுவனங்கள் எச்சரித்துள்ளன.

இவ் எச்சரிக்கையை சுட்டிக்காட்டியும் பொலித்தீனை அதிகளவில் பயன்படுத்துவதால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், அப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் என்பவற்றை எடுத்துக் காட்டியும் செய்தித்தாள் ஆசிரியருக்கு 100 சொற்கள் அளவில் ஒரு கடிதம் எழுதுக.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2002 டிசெம்பர்

தமிழ்மொழியும் இலக்கியமும் III

இரண்டு மணித்தியாலங்கள்

- 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கும் விடை தருக.

(அ) "பயன் முழுமையாகக் கிட்டவில்லை. முனிவர் சிறிது இரங்கி அருள் செய்தார். 'நான் இட்ட சாபத்திற்கு விமோசனம் கிடையாது என்றாலும் இந்த விடயத்தில் சகுந்தலையின் கணவன் அவளுக்கு கொடுத்த அணிகலன் ஒன்றை அவன் காண நேரிட்டால் நானிட்ட சாபமும் நீங்கும்' என்று சொல்லி அவ்விடத்தை விட்டு நீங்கினார்."

(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்கு கூறப்பட்டது?
(iii) இங்கு குறிப்பிடப்படும் முனிவர் யார்?
(iv) சகுந்தலையின் கணவன் பெயர் யாது?

(ஆ) "..... அன்பர் பூசை அளித்த நீ அணங்கினோடும்"
என் பெருமை உலகை எய்தி இரு நிதிக் கிழவன் தானே
முன்பெரும் நிதியம் ஏந்தி மொழிவழி ஏவல் கேட்ப
இன்பமார்ந்திருக்க ....."

(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்கு கூறப்பட்டது?
(iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
(iv) இங்கு 'இருநிதிக் கிழவன்' எனக் குறிப்பிடப்படுபவன் யார்?

(இ) "நீதி வழுவாத நம் சோழ அரசரிடம் செல்லுங்கள். உங்கள் வழக்கிற்கு அங்கே நல்ல தீர்ப்புக் கிடைக்கும்"

(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) எச்சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?
(iii) இங்கு குறிப்பிடப்படும் வழக்கில் சம்பந்தப்பட்ட இருவரினதும் பெயர்களைத் தருக.
(iv) இங்கு குறிப்பிடப்படும் சோழ மன்னனின் பெயர் யாது?

(ஈ) "வராம என்ன செய்யச் சொல்ரா? மாடு மாதிரி ஒழைச்சாலும் புண்ணியமில்ல".

(i) இக் கூற்று இடம்பெறும் கதையின் தலைப்பு யாது?
(ii) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(iii) யாருக்கு கூறப்பட்டது?
(iv) இக் கூற்றினை எழுத்து வழக்கு நடையில் எழுதுக.

(உ) "ஆதியான் றிருநக ரடுக்குஞ் ஜீவநற்
பாதைநீ யறிதியேற் பகர்தி ....."

(i) இக்கூற்று இடம்பெறும் நூல் எது?
(ii) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(iii) யாருக்கு கூறப்பட்டது?
(iv) "ஜீவநற் பாதை" என்பது என்ன?

2. பின்வரும் செய்யுள்களின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி, அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில உள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.

(அ) ஆளும் நாயகர் அன்பர் ஆனவர் அளவி லார்உளம் மகிழவே
நாளும் நாளும்நி றைந்து வந்து நுகர்ந்த தன்மையின் நன்மையால்
நீளும் மாநிதி யின்பரப்பு நெருங்கு செல்வம் நிலாவி எண்
தோளினார் அளகைக்கி ருத்திய தோழ னாரென வாழுநாள்.

(ஆ) கையினில் உலக்கை பற்றிக் காந்தளின் உதிரம் பாய,
மெய்யினில் வெயர்நீர் சிந்த விழியினில் அருவி பாய,
நெய்யினில் முடித்த கூந்தல் நெல்குத்தும் கொடுமை காணா
மையினில் திகழ்வேல் கண்ணார் அரம்பையர் மறுகிச் சோர்ந்தார்.

(இ) நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கன்மேல் எழுத்துப் போற் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத் தார்க் கீந்த உபகாரம்
நீர் மேல் எழுத்துக்கு நேர்.

(ஈ) அரக்கர்கோன் அதனைக் கேட்டான்
"அழகிற்றே ஆகும்" என்றான்;
குரக்கினத் தலைவன் நின்றான்
கொற்றவர்க்(கு) உற்ற(து) என்றான்;
"இரக்கம(து) இழுக்கம்" என்றான்
இளையவன், இனி நாம் அம்பு
துரக்குவ(து) அல்லால் வே(று) ஓர்
சொல் உண்டோ? என்னச் சொன்னான்.

(உ) வெறுவான வெளிமீது மழைவந்து சீறும்
வெறி கொண்ட புயல் நின்று கரகங்கள் ஆடும்
நெறி மாறு படநூறு சுழி வந்து சூழும்
நிலையான தரை நீரில் இலை போல் ஈடாடும்.

3. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினுக்கு விடை தருக.

(அ) சந்திரமதியின் பரிதாபநிலையும் அரிச்சந்திரனின் சத்தியம் தவறாமையும் அவர்கள் இருவருக்கு மிடையே இடம்பெற்ற உரையாடலிலிருந்து புலப்படுமாற்றை விளக்குக.

(ஆ) "தன் தலைவனுக்கு விசுவாசமாக இருத்தல், சொல்வன்மை, துணிவுடைமை இவை மூன்றும் தூதுவன் ஒருவனுக்குரிய இலட்சணங்களாகும். இவ் இலட்சணங்கள் யாவும் ஒருங்கே அமையப் பெற்றவன் அங்கதன் ஆவான்". இக் கூற்றின் பொருத்தத்தினை ஆராய்க.

(இ) போருக்கெழுந்த நமுறூதின் படைகளும் இபுறாஹிம் நபி அவர்களின் படை அணியினரும் நமுறூது அழிவுண்ட படலத்தில் வருணிக்கப்பட்டிருக்குமாற்றை விளக்குக.

4. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினுக்கு விடை தருக.

(அ) "கம்பரும் சேக்கிழாரும் உவமையைக் கையாளுவதில் இணையற்றவர்கள்". இக் கூற்றினை "உவமைநயம்" என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(ஆ) காவியத்தலைவி கதீஜா நாயகியின் குணநலன்களை உமறுப்புலவர் கூறியிருக்குமாற்றை விளக்குக.

(இ) "பழமைக்கும் புதுமைக்குமிடையே காணப்படும் முரண்பாடுகளைச் சித்திரிப்பதே பழையதும் புதியதும் கதையாகும்". இக் கூற்றினைப் பொருத்தமான ஆதாரங்களுடன் விரித்துரைக்க.

• 5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.

5. (அ) மணிமேகலா தெய்வம் மணிமேகலையைக் கொண்டு சென்று மணிபல்லவத்தில் வைத்தமைக்கான பிரதான காரணங்கள் எவை என ஆதாரத்துடன் விளக்குக.

(ஆ) மணிபல்லவத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளை விவரிக்க.

6. (அ) வறுமையின் கொடுமை தங்கம்மாவையும் அவளது குடும்பத்தினரையும் எப்படியெல்லாம் பாதித்தது என்பதை விவரிக்க.

(ஆ) இதனைக் கவிஞர் எடுத்துக் கூறியிருக்கும் முறையிலுள்ள சிறப்புக்களைக் குறிப்பிடுக.

7. 1940 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மலையகத்தில் பின்வரும் துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியினை "மலையகமும் தமிழிலக்கியமும்" என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு மதிப்பிடுக.
(அ) சிறுகதை இலக்கியம் (ஆ) நாவல் இலக்கியம்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2002 டிசெம்பர்

தமிழ்மொழியும் இலக்கியமும் I

வினா இல.	விடை	வினா இல.	விடை	வினா இல.	விடை	வினா இல.	விடை
1.	2	11.	3	21.	2 , 3	31.	1
2.	3	12.	1	22.	2	32.	3
3.	4	13.	2	23.	1	33.	2
4.	1	14.	4	24.	4	34.	2
5.	3	15.	3	25.	4	35.	4
6.	2	16.	4	26.	2	36.	4
7.	2	17.	3	27.	3	37.	3
8.	1	18.	2	28.	3	38.	2
9.	3	19.	1	29.	2	39.	1
10.	4	20.	2	30.	4	40.	2

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2002 டிசெம்பர்

தமிழ்மொழியும் இலக்கியமும் II

விடைகள்

1. (அ) நீரின் முக்கியத்துவமும் பாவனையும்

உயிரினங்களின் அவசிய தேவைகளுள் நீர் முதலிடம் வகிக்கிறது. தண்மையான நீரின்றி எவ் வுயிரும் வாழ்தலரிது. ஓரறிவுயிராகிய புல்லும் தரையில் தலை காட்டாது. எமது நாட்டைப் பொறுத்தள வில் நாம் ஆறுகள், குளங்கள், கிணறுகள், கால்வாய்கள், நீர்வீழ்ச்சிகள் மூலமும், குழாய் கிணறுகள், குழாய் மூலமும் நன்னீரைப் பெறுகிறோம். இயற்கை அன்னையின் கொடையை எவ்வித கவலையுமின்றி, அவதானமின்றி, கட்டணம் எதுவுமின்றி அனுபவித்தோம். ஆனால் இன்று கட்டணத்துடன், கட்டுப்பாட்டுடன், பாவனை செய்ய வேண்டிய நிலைகள் ஏற்பட்டுள்ளன.

'வான் நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று'

வானம் தரும் மழையால் உலகம் வாழ்ந்து வருவதால், உலகத்து வாழும் உயிர்களுக்கு மழையை அமிர்தம் என்று உணரத்தக்கதாகும். மேலும் வள்ளுவர், மேகம் கடலிலிருந்து நீரைக் கொண்டு சென்று, பின் அதனிடத்திலே பெய்யாமல் விடுமானால், பெரிய கடலும் தன் வளம் குன் றிப் போய்விடும் என்கிறார். தொடர்ந்து உலகம் பசியால் வாடிப் போகும் வாய்ப்பும் ஏற்படும்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த நீரை நாளாந்த பாவனைக்கு, விவசாயத்துக்கு, கைத்தொழி லுக்குப் பயன்படுத்துவதுடன், மின்வலு உற்பத்தியிலும் நாம் பயன்படுத்துகிறோம். இலங்கையைச் சுற்றி வர நூற்றுக்கும் மேற்பட்ட பல பெரிய, சிறிய ஆறுகள் பற்பல கிளைகளுடன் பாய்ந்து பேரழ கையும் குளிர்ச்சியையும் தந்த போதிலும், காலாகாலங்களில், ஆற்று நீர் வற்றி, வரட்சி ஏற்பட்டு நீர் ப்பற்றாக்குறையும் நிலவத்தான் செய்கிறது. மழை மிகக் குறைவாக கிடைக்கும் வறள் வலயங்களான மன்னார், அம்பாந்தோட்டைப் பிரதேசங்கள் கடந்த இரண்டு வருடங்களாக கடும் வறட்சியையும் நீர் ப்பற்றாக்குறையையும் எதிர்நோக்கி வந்துள்ளன.

நீர்வீழ்ச்சிகள் ஊற்றெடுக்கும் மலைப்பிரதேசங்கள் கூட அதிசயிக்கத் தக்க வகையில் நீர்ப்பற்றாக் குறையை எதிர்நோக்குகின்றன. காரணம் வானம் பொய்ப்பதே ஆகும். மலைப்பிரதேசங்களில் மக்கள் நீண்ட தூரம் சென்று நீரை ஏந்தி, மலைகளில் ஏறி வருவதைக் காணலாம்.

இத்தகைய பிரச்சினைக்கு முக்கிய காரணம் பருவ மழை பொய்த்தல் ஆகும். அதோடு கிடை க்கும் நீரை நம் மக்கள் சேமித்து வைத்துப் பாவிக்கும் பழக்கமற்றவர்களாகப் பொறுப்பற்றவர்களாக நடப்பதும் ஒரு காரணமாகும். நல்ல நீரை அவசிய தேவைக்கு மட்டும் பாவித்தும், சுத்தமற்ற நீரைப்

பூமரங்களுக்கு பாவித்தும் அதிக பலனைப் பெறலாம். உணவுப் பொருட்களைக் கழுவிய நீரை மர ங்களுக்கு ஊற்றலாம்.

ஆற்றுநீரை அன்றாட உணவுத் தேவைக்கும், குளிக்க, குடிக்க, உடுப்புகள் தோய்க்கவும் மாடுகளைக் குளிக்க வார்க்கவும் மக்கள் பயன்படுத்துவதால், நீர் அசுத்தமாவதுடன், சுகாதாரமற்றதாக வும் காணப்படுகிறது. இதனால் நோய்கள் பரவும் வாய்ப்பு ஏற்படுகிறது. சில இடங்களில் தொழிற்சாலைக் கழிவு நீரும் ஆற்றில் விழும் சந்தர்ப்பங்களும் உண்டு. குப்பைகள் ஆற்றோரங்களில் போடுவதாலும் நீர் மாசடைகிறது.

இயற்கை அன்னையின் கொடையான நீரை நாம் பயன்படுத்துவதில் கூடிய கவனம் தேவை. கவனக் குறைவு, உதாசீனச் செய்கையால் பலர் நீரின்றி இன்னலுற நேரிடுகிறது.

எல்லோருக்கும் நீரைக் கிடைக்கச் செய்யவே அரசாங்கம் நீரை சுத்தப்படுத்தி, தேக்கிக் குழாய் மூலம் விநியோகிக்கின்றது. அவ்வாறு கொடுக்கும் நீரையும் விரயமாக்குவதனால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். மீற்றர் முறையில் கட்டணத்தை அரசாங்கம் அறவிடுகிறது. அதிலும் களவு வேலை செய்வதில் மக்கள் அக்கறை காட்டுகின்றனர். தெருவோரக் குழாய்களைப் பா[illegible]வர்களும், குழாயை மூடுவதில் அக்கறை இல்லை. எந்த நேரமும் நீர் வீணாய் ஓடுவதையே கா[illegible] முடிகிறது.

இத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்க கண்காணிப்புக் குழுவினரை அமைத்தலும், அடிக்கடி திருத்த வேலைகளைச் செய்தலும் அவசியம். நீர் விநியோகத்தை ஒழுங்காக்கி, பாவனையைக் கட் டுப்படுத்தி, விரயமாக்குபவர்களுக்குத் தண்டம் செலுத்தும் முறையையும் ஏற்படுத்தினால் ஓரளவுக்குப் பிரச்சினை தீரலாம்.

குழாய்கிணறுகள் உருவாக்கக் கூடிய இடங்களில் அவற்றையும் உருவாக்குவது அவசியம். கடலோரப் பிரதேசங்களில் உள்ள உல்லாச பயண விடுதிகள், ஹோட்டல்கள் முதலியவற்றில் மும் பாய் போன்ற நகரங்களைப் போல உப்பு நீரை மலசலகூடங்களில் கழிவகற்ற பயன்படுத்தலாம். மேலும் பாவித்த நீரை மீண்டும் சுத்திகரித்துப் பாவிக்கும் முறையும் நீர்ப் பற்றாக் குறையைத் தீர்க்க ஓர் வழியாகும். கைவிடப்பட்ட புராதன குளங்களைத் திருத்தி அமைத்தல் அவசியம். நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்தினால் விவசாயம் முன்னேறும்.

நீர் சம்பந்தமான நோய்கள், நீரின் பாவனை, நீரைப் பாதுகாக்கும் வழி, நீரின் அவசியம் பற்றி பாடசாலைகளிலும், ஊடகச் சாதனங்களிலும் விளக்கங்கள் கொடுத்து, மனித இனத்தை உணரச் செய்தல் மிக மிக அவசியமாகும்.

(ஆ) சொற்பொழிவு

தலைவர் அவர்களே! என் மதிப்பிற்குரிய ஆசிரியர்களே! என் அன்புச் சகோதரர்களே என் அன்பார்ந்த வணக்கம்.

பாடசாலைகளில் முதலாந்தவணை விளையாட்டுப் போட்டிகள் களை கட்டத் தொடங்கும் சந் தர்ப்பத்தில் விளையாட்டுத் துறை பற்றி ஒரிரு வசனங்கள் உரைக்கலாம் என வந்துள்ளேன். இன்று எமது நாட்டைப் பொறுத்தளவில் விளையாட்டுத் துறையில் அநேகமானோர் ஈடுபடுவதை அவதானிக்க முடிகிறது. வீர வீராங்கனைகள் ஒலிம்பிக், சார்க் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி வெள்ளி, தங்கப் பதக்கங்களை நாட்டுக்கு ஈட்டித் தந்த பெருமை வாய்ந்தவர்கள். தமக்கு மட்டுமன்றி நாட்டுக்கே பெருமை தேடியவர்கள். இவர்கள் ஆர்வத்துடன் சுயமுயற்சியில் ஈடுபட்டதால் தான் வெற்றி பெற முடிந்தது.

பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறத் தாமாக முன் வர வேண்டும். தாமாகவே பயிற்சியாளரை சந்தித்துத் தேவையான பயிற்சிகளைப் பெற்றுப் போட்டிகளில் பங்கு கொள்ளல் வேண்டும். ஒய்வான நேரங்களில் உடலுக்கு உரமூட்டக் கூடிய விளையாட்டுகளில் ஈடுப டுவது மூளைக்கும் நல்லது. படிப்புடன் விளையாட்டிலும் முன்னேற முடியும். நகரப் பாடசாலைகளில் வாய்ப்புகள் கூட இருந்த போதிலும் மாணவர் ஊக்கம் காட்டுவது குறைவு. கிராமப் புறங்களிலிருந்து நமது நாட்டுக்கு பெருமை தேடித்தந்த வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க, ஒலிம்பிக் ஓட்டப் போட்டியில் பங்கு பற்றி வெற்றி பெற்றமைக்கு, அவரது அயரா முயற்சியும் பயிற்றுவிப்பாளரது முயற்சியும் துணை நின்றது. மேலும் தமயந்தி தர்ஷா, ஷிரானி குலவன்சா ஆகியோரும் பாடசாலைக் காலத் திலிருந்தே விளையாட்டின் ஆர்வத்தால் பெயர் எடுத்தவர்கள்.

நீச்சல் ஒட்ட வீரராகத் தமிழ் இளைஞன் பாடசாலை மாணவன் முதலிடம் பெற்றான். கிரிக்கட் விளையாட்டிலும் பாடசாலை தான் முதல் நிலைப் பயிற்சியைக் கொடுத்தது. எனவே நாம் பாடசாலையில் விளையாட்டுத் துறையில் எந்த வகைப் பயிற்சிகளைப் பெறலாம் என ஆர்வத்தோடு செயற்பட்டுப் போட்டிகளில் கலந்து சிறப்புற வேண்டும். தட, களப் போட்டிகளில் முதலிடம் பெறுபவர்கள் பாடசாலை கள் மத்தியிலும், இலங்கை ரீதியிலும், பின் இலங்கைக்கு வெளியிலும் பங்குபற்றும் வாய்ப்பினைப் பெறுவர்.

அரசாங்கமும் இன்று விளையாட்டுத் துறையில் அதிக ஈடுபாடு கொண்டு பலவிதத்தில் உதவிகள் செய்து மாணவரை ஊக்குவிக்கின்றது. என்வே மாணவராகிய நாம் பாடசாலைக் கல்வியின் போதே கல்வியுடன் விளையாட்டையும் முறையாகப் பயின்றால் வெற்றி பெறுவதுடன் எதிர்கால வாழ்வுக்கும் வழிகாட்டும். மாணவச் சகோதரர்களே நாங்கள் அமைக்கப் போகும் நீச்சல் சங்கத்தில் சேர்ந்தும், உதைப்பந்தாட்டச் சங்கத்தில் சேர்ந்தும் பயிற்சி பெற்று, வெற்றி பெறுவீர்களாக! நன்றி. வணக்கம்.

(உ) சிறுகதை

பொன்னாள்

சங்கர் படிப்பை முடித்து விட்டு வேலை தேடி கிடைக்கவில்லை. தந்தையுடன் விவசாயம் செய்யவும் அவனுக்கு மனமில்லை. வெளிநாடு போய்ப் பிழைக்க வேண்டும் என்றே விரும்பியதால் வேறு வழியின்றித் தகப்பன் கடன்பட்டு சங்கரை கொழும்புக்கு அனுப்பி வைக்கின்றார். அங்கு சங்கரின் தகப்பனாரின் நண்பன் கோபாலின் வீட்டிலேயே தங்கினான். கோபாலுக்கு அறிமுகமான ஒரு த்தர் மூலம் கனடா செல்வதற்கான முயற்சிகள் செய்யத் தொடங்கினான். கோபாலின் மகன் ரவியும் இதே வழியைப் பின்பற்றி வெற்றியடைந்தமையால் அதே வழியைத் தொடர்ந்தான். தன் குடும்பத்தவரைச் சந்தோஷமாக வாழ வைக்க விரும்பி எடுத்த பயணம். ஏதோ ஒரு வருடத்தில் கனடா மண்ணில் காலடி வைத்து விட்டான்.

இந்த ஒரு வருடத்திற்குள் குடும்பத்தார் பட்ட துயரங்களுக்கு அளவே இல்லை. சங்கரின் கடி தமோ, கதையோ இல்லை. கடன்காரரும் தொல்லை கொடுத்தனர். தகப்பன் காற்பங்கு கடனைத் திருப்பிக் கொடுத்த அளவில் சங்கரின் செய்தியும் வர மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்.

மாதாமாதம் குளிரில் கஷ்டப்பட்டு வேலை செய்த பணமும் வர வீட்டாரும் படிப்படியாக கட னையும் முடித்து விட்டனர். தம்பி சந்திரனும் உயர்தர வகுப்பில் தேறி பல்கலைக்கழகம் சென்றான். தங்கை லலிதா கெட்டிக்காரி. அவளும் படிப்பிலும் விளையாட்டிலும் ஒன்று சேர்ந்தாற் போல் முன்ன ணியில் நிற்பாள். அவளையும் படிப்பிக்கும் ஆர்வத்துடன் இருந்த சங்கருக்கு திடீரென தொழிற்சாலை இயந்திரத்தில் கைவிரல் மாட்டியதால் துண்டாடப்பட்டு விட்டது. சங்கர் யாரிடம் தன் நிலையைக் கூறுவது. ரவி ஒருத்தனே அவனுக்கு ஒர் ஆறுதல். எந்த வேலையானாலும் ரவியின் உதவியுடன் செய்து ஒருவாறு ஆறுமாத காலம் கடத்தி விட்டான். இரண்டு வருடங்களால் கனடாப் பிரஜையாக இலங்கை வர விரும்பினாலும் தன் பெற்றோரை இந்நிலையில் சந்திக்க மனம் இடம் கொடுக்கவில்லை.

தங்கை லலிதாவுக்கு விளையாட்டுத்துறை அமைச்சால் பல விருதுகள் கிடைத்துப் பாராட்டுகள் பெறக் கொழும்பு வந்த வேளை நல்ல வரன் ஒருவர் கோபால் மூலமாகப் பெண் கேட்டு, இரு வீட் டாரும் கதைத்து முடிவெடுத்தனர். இச் செய்தியை சங்கருக்கு தெரிவிக்க, அவனும் ரவியுமாக இல ங்கை மண்ணில் காலடி எடுத்து வைத்தனர். சங்கருக்கு அந்த நாள் தான் பொன்னாள் என்று கூற வேண்டும்.

தாய், தந்தை, தம்பியையும் கொழும்புக்கு வரவழைத்த சங்கர் தங்கை லலிதாவின் திருமண நிச்சயதார்த்தத்தையும் திருமணத்தையும் விமரிசையாகவே எல்லோரும் மகிழச் செய்து முடித்தான். பெற்ற அன்னையின் அரவணைப்பின் போது தான் சங்கரின் கைவிரலைக் கண்டவள் கதறி அழுதாள். என்ன சந்தோஷம் என்றாலும் இதனைக் குடும்பத்தவர் எவராலும் தாங்க முடியவில்லை.

கோபால் உற்ற நண்பன் என்பதை இந்நேரம் மெய்ப்பித்தார். தன் மகளைச் சங்கருக்கே திரு மணம் செய்து வைப்பதாக உறுதிபூண்டு நிச்சயதார்த்தம் செய்து வைத்தார். அனைவரும் ரவியையும் சங்கரையும் சந்தோஷமாக வழியனுப்பினார்கள்.

2. (அ) மாணவர்கள் அறிவுக்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் ஆராய்ச்சிக்காகவும் நூல்களை வாசிக்கலாம். அறிவை விரிவாக்கப் பாடசாலைகளிலும் வகுப்பறைகளிலும் உள்ள நூலக நூல்களை பயன்படுத்த வேண்டும்.

(ஆ) ஒரு மனிதன் நள்ளிரவில் இரயில் பாதையின் பக்கத்து ஒற்றையடிப் பாதையின் வழியே கருங்கற்களும் முட்களும் கால்களில் குத்திய போதிலும் பொருட்படுத்தாது காலின் உணர்ச்சி வழியே விரைவாக நடந்தான்.

(இ)	விஞ்ஞானக்	கல்வி	மனிதனின்
	அறிவை	வளர்க்கிறது.	இலக்கியக்
	கல்வி	உள	பண்பு
	விருத்தியையும்	அழகியல்	உணர்வையும்
	வளர்க்கிறது.	அறிவும்	உள்ளமும்
	வளர	மனிதன்	முழுமை
	அடைகிறான்.		
(ஈ)	அன்பு	வாழ்க்கைக்கு	ஒளியையும்
	மகிழ்ச்சியையும்	தருவது.	தாயின்
	உள்ளத்திலும்	சுடுகாட்டில்	கூடி
	நிற்போர்	உள்ளத்திலும்	இருப்பது
	அன்பு.	சாதாரண	மக்களின்
	உயர்வுக்கும்	வீரனின்	சாதனைக்கும்
	அன்பே	ஆதாரம்.	

3. (i) பண்புப் பரிவர்த்தனைக்குப் பண்புகள் பற்றிய அறிவு, அவற்றை உணரும் தன்மை என்பவற்றுடன் பண்புகளை ஏற்றுக் கொள்ளும் நிலையும் அவசியம் தேவை.

(ii) பண்புள்ளவர்கள் தான் பண்பை மற்றவர்களுக்குப் பரிமாற முடியும்.

(iii) பண்புகள் என்றால் என்ன என்றும், அது பற்றிய அறிவு எதுவுமில்லாத மனிதரும் உள்ளனர் என்பதையும் மறைமுகமாகக் கூறுகிறார்.

(iv) பெற்றோரும், குடும்பத்தவரும், சமூக நிறுவனங்களின் அங்கத்தவரும் இளந் தலைமுறையினரை நற்பண்புகளுடனும், ஒழுக்கத்துடனும் வளரக் கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் தாமும் ஒழுக்க சீலர்களாக வாழ்ந்து காட்டி வழி நடத்தல் வேண்டும்.

(v) குடும்பம், சுற்றம், பாடசாலை, கோயில் என்பன ஆகும்.

(vi) மனிதப் பண்புகளும் ஒழுக்க சீலங்களும் வாழுகின்ற சூழல் பிள்ளைகளுக்கு ஏற்ற சூழல் ஆகும்.

(vii) (அ) பரிவர்த்தனை - பண்டமாற்று, பரிமாறுதல், மாற்றிக் கொள்ளல்
(ஆ) பரிச்சயம் - பழக்கம்
(இ) சிரமம் - கஷ்டம், இடர்பாடு, களைப்பு

4.

"ஜீவா இல்லம்"
ஜெயந்தி நகர்,
கொழும்பு
02-12-2002

கௌரவ ஆசிரியர்,
"தினக்குரல்"
கொழும்பு.

ஐயா !

பொலித்தீன் பாவனைத் தடை

நாட்டிலே பொலித்தீனின் பாவனையைச் சூழல் பாதுகாப்பு நிறுவனம், சமூக சேவைகள் திணைக்களம், சுகாதார திணைக்களம் என்பனவும் தடை செய்துள்ளது. மேலும் வணக்கத் தலங்களுக்கு யாத்திரை செல்வோருக்குப் பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டுள்ள போதிலும் பாவனை தொடருகிறது. மக்கள் வசதியின் பொருட்டு பாவித்துவரினும் அதனால் ஏற்படக் கூடிய பிரச்சினைகளைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பொலித்தீனாலான தாள்கள், பைகள், பாவனையின் பின் எரித்தும் அழியாது. புதைத்தாலும் உக்காது. மீள் சுழற்சிக்கும் உட்படுத்த முடியாது. கண்டபடி எறிவதால் காற்றுடன் பறந்து சூழலை அசுத்தமாக்கும். நீரை ஏந்தி வைத்து நுளம்புகள் பெருக வாய்ப்பாகிறது. குப்பையுடன் எரிந்தாலும் உக்காது. குப்பையைக் காய விடாது துர்நாற்றம் எழச் செய்யும்.

வீதிகளில் திரியும் கட்டாக்காலிகள் எச்ச உணவுடன் பொலித்தீனையும் உண்பதால் பாதகம் ஏற்படும். சிறுவர்கள் வாயில் வைத்து ஊதி வெடித்து விளையாடுவதும், தலையில் போடுவதும் ஆபத்தை விளைவிக்கும். இப் பிரச்சினைகளுக்கான தீர்வு முறைகளை மக்கள் அறிவது மிக்க நன்மையாகும்.

பொலித்தீனுக்குப் பதிலாகக் கடதாசி, துணி, தோலாலான பைகளைப் பாவித்தல், பொலித்தீனால் ஏற்படக் கூடிய தீமைகளை ஊடகங்கள் மூலம் மக்களுக்கு உணர்த்தல், அரசாங்கம் பொலித்தீன் பாவனையைத் தடை செய்யும் சட்டத்தை அமுலாக்கல் ஆகியவை மூலமும் மக்களைப் பாதுகாக்கலாம்.

சூழல் நட்புறவு கொண்டுள்ள கந்தளம உல்லாசப் பிரயாணிகள் உணவகம் (Kandalama Hotel) "ஒடெல்" (ODEL) நிறுவனம் என்பன முறையே கழிவினை மீள் சுழற்சிக்குட்படுத்தியும், கடதாசி, துணிப் பைகளில் பொருட்களை விற்று வருவது முன்னுதாரணங்களாகும்.

எனது இக் கடிதத்தை இங்கு வாழும் மக்களின் எதிர்கால நலனுக்காகத் தங்கள் தினக் குரல் பத்திரிகையில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

நன்றி

இப்படிக்கு,
உண்மையுள்ள,
..இ.புண்ணியன்..
(இ.புண்ணியன்)
நலன் விரும்பி.

குறிப்பு :-

பொலித்தீனால் மூடப்பட்ட பொருட்களில் பொலித்தீனில் "எச்சரிக்கை" முச்சுத் திணறலைத் தடுக்க.

இந்த பொலித்தீன் பைகளை - குழந்தைகளின் தொட்டில், கட்டில், விளையாடும் இடங்களருகே வைத்தலைத் தவிர்க்க.

பிளாஸ்டிக் விளையாட்டுப் பொருட்களும் - "5 வயதிற்கு கீழ்ப்பட்ட சிறுவர்களுக்குக் கொடுக்கப்படாது" என்ற குறிப்பும் உள்ளது.

'இது விளையாட்டுப் பொருள் அல்ல' என்ற குறிப்புகள் அவதானிக்கப்பட வேண்டும்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2002 டிசெம்பர்

தமிழ்மொழியும் இலக்கியமும் III

விடைகள்

1. (அ) 1. அநகூயையால் கூறப்பட்டது.
2. பிரிவதைக்குக் கூறப்பட்டது.
3. துருவாசமுனிவர்
4. துஷ்யந்தன்

(ஆ) நடராசப்பெருமானால் / சிவபெருமானால் / சிவனால்
1. சிவனடியாராக வந்த இறைவனால்
2. இளையான்குடிமாறநாயனாருக்கு / மாறனாருக்கு
3. சிவபெருமான் சோதியாக காட்சியளித்த வேளை / சிவகாமவல்லியோடு இடபவாகனத்தில் எழுந்தருளிக் காட்சியளித்த வேளை.

(இ) 1. நன்னனால்
2. நன்னன் தன்னால் தீர்ப்பு வழங்க முடியவில்லை என்று கூற இனி எங்கு செல்வோம் என இளநாகன் வினவிய போது
3. இளநாகன், பூங்குன்றன்
4. திருமாவளவன் / அறிவுடைநம்பி

(ஈ) 1. இருட்டறை
2. ரஸாக்
3. சகீனா
4. "வராமல் என்ன செய்யச் சொல்கிறாய்? மாடு மாதிரி உழைத்தாலும் புண்ணியமில்லை."

(உ) 1. இரட்சணிய யாத்திரிகம்
2. ஆத்தும விசாரியால்
3. சுவிசேஷனுக்கு
4. மோட்சப்பாதை / சொர்க்கம்

2. (அ) தம்மை ஆட்கொள்ளும் நடராசப் பெருமானுடைய பக்தர்களின் அடியவர்களின் திரு உள்ளங்கள் மகிழ்ச்சியடையும்படி தினமும் திருவமுது செய்தமையால், பெற்ற நன்மையால் நெடுங்காலமாகத் தங்கியிருக்கும் செல்வச் சிறப்பு நிதியம் தம்மிடத்தில் நிலைபெற்றிருக்க எண் தோள்களை உடைய நடராசப் பெருமானார் அழகாபுரிக்கு அரசராக அமரச் செய்த தோழராகிய குபேரனா என வாழ்ந்து வரும் நாளில்

சிறப்பு :-

மாறனாரின் செல்வச் சிறப்புக் கூறப்படுகிறது. சிவபெருமானால் செல்வச் சிறப்பு மிக்க அழகாபுரிக்கு அரசனாக்கப்பட்ட குபேரனுக்கு நிகரான செல்வம் படைத்தவராக மாறனார் விளங்கினார் எனக் கூறப்படுகிறது.

(ஆ) கையிலே உலக்கையைப் பிடித்து காந்தள் மலரான அக் கையில் உதிரா சிந்த, உடலிலிருந்து வியர்வை சிந்த, கண்களிலிருந்து கண்ணீர் அருவி போலப் பாய வாசனை நெய் பூசி முடிந்த கூந்தலையுடைய பெண் நெல் குத்துகின்ற கொடுமையைக் கண்டு மை பூசிய வேல் போன்ற கண்களையுடைய தேவ மகளிர் வருந்திச் சோர்வுற்றனர்.

சிறப்பு :-

துன்பம் என்பதையே அறியாத தேவலோகப் பெண்கள் கூட சந்திரமதியின் நிலைமை கண்டு வருந்தினர் என்பதன் மூலம் சந்திரமதியின் துன்பநிலை எடுத்துக் காட்டப்படுகின்றது.

(இ) நல்லவருக்குச் செய்த உதவி கல்லில் செதுக்கப்பட்டது போல நிலையானது. நல்லவரல்லாத இரக்கமில்லாதவருக்கு செய்யும் உதவி நீரில் எழுதிய எழுத்து தெரியாமலே போய் விடுவது போலாகிவிடும்.

சிறப்பு :-

இரக்கமில்லாதவருக்குச் செ யும் உதவி நீரில் எழுதிய எழுத்துத் தெரியாமலே போவது போலாகிவிடும் என உவமையணி மூலம் விளக்கப்பட்டுள்ளது.

(ஈ) அரக்கர்களின் அரசனான வீபிடணன் அது அழகிய செயலாகும் என்றான். குரங்கினத் தலைவன் சுக்கிரீவன் அரசர்க்கு ஏற்றதே என்றான். இலக்குவணன் இராவணனுக்கு இரக்கம் காட்டுவது தவறு என்றான். அம்பை விட்டுப் போர் செய்வதே அல்லாமல் பிறை சொல்லும் உண்டா என்று கேட்டான்.

சிறப்பு :-

இங்கு இலக்குமணனின் குணம் வெளிப்படுகிறது. இரக்கமற்ற இராவணனிடம் இரக்கம் காட்டுவது தவறு எனக் கூறித் தனது வெறுப்பைக் காட்டுகிறான். ஏனையோரை விட வித்தியாசமான கருத்தைத் தெரிவிக்கிறான்.

(உ) வெட்டவெளி எங்கணும் மழை சீறிப் பெய்யும் ஆவேசம் கொண்டு வீசிய புயல் கரகம் ஆடுவது போல் இருந்தது. வழி மாறும் பல நூற்றுக்கணக்கான சுழிகள் வந்து சேர நிலையான தரை தத்தளிக்கின்றது. இது உவமை அணி மூலம் விளக்கப்படுகிறது.

3. (அ) சந்திரமதியின் பரிதாப நிலை :-

அரிச்சந்திரனுக்கும், சந்திரமதிக்கும் இடையே சுடலையில் நடந்த உரையாடல் மூலம் சந்திரமதியின் பரிதாப நிலையை நன்கு உணர முடிகிறது. பாம்பு கடித்த மகன் லோகிதாசனைச் சுமந்து வந்த சந்திரமதி சுடலையிலே தன்னந் தனியனாய் எரிப்பதற்கான ஆயத்தம் செய்த வேளை சுடலையை காவல் காத்துக் கொண்டிருந்த அரிச்சந்திரன் வந்தது யார் என அறியாது, பிணத்தைச் சுட அனுமதிக்காததுடன் கால்களால் பிள்ளையின் இறந்த உடலை ஏற்றி வீசியமையைக் கண்ணுற்ற அத் தாயின் நிலை பரிதாபகரமானது.

அரிச்சந்திரன் தனது மகன் தான் பாம்பு தீண்டி இறந்தவன் என்பதை அறியாத துயரமான நிலையில் பிணத்தைத் தூக்கி வந்தவளும் தன் மனைவி சந்திரமதி தான் என்பதையும் அறியாத நிலையில், சந்திரமதியை நோக்கி, "அடி! மூடத்தனமானவளே! எனக்குத் தர வேண்டிய பொருட்களத் தராமல் பிணத்தை எரிக்க நான் விடமாட்டேன். நீ களவாக எரிக்க அத்தனை துணிச்சலோ?" எனக் கோபித்துத் தடுத்தமை மிக்க வேதனைக்குரியதே.

பிணத்தை உதைத்தும் கதறியபடி நிலத்தில் விழுந்து எக் கதியுமற்று, வாய் பிதற்றி, அவ்வூரின் முறைகளை, மரபுகளை அறியாதவளாய், புலையனுக்கு வழங்க எப்பொருளும் இல்லாதவளாய்த், தனித்தவளாய் அழுது நின்றாள். எரிந்து போன குறக்கட்டையில் நெருப்பேற்றி வைக்கும் அளவிற்கு வறியவளாய், துணித்துண்டோ, வாய்க்கரிசியோ, கொடுக்கக் கூட வழியில்லாதவள் எனக் கூறும் சந்திரமதியின் நிலை பரிதாபகரமானது.

அரசியான சந்திரமதி சுடலை காக்கும் புலையனின் பாதங்களில் வீழ்ந்து கதறி அழுது, எப்படியும் தன் புதல்வனின் பிணத்தைச் சுடுவதற்கு அனுமதி கேட்பதும் ஓர் அவல நிலையே.

சந்திரமதி அரிச்சந்திரனைப் பார்த்து, "அறிவும், கருணையும் உடையவனே! உறவினரும் வசதியும் இருந்தால் தனித்தவளாக, இறந்த புத்திரனின் உடலையைச் சுமந்து வந்து, எரிந்த குறக்கட்டையில் எரிப்பேனா எனக் கேட்டுக் கதறி அழுது சுடுவதற்குக் கருணை செய்யும்படி (புலையனின்) அரிச்சந்திரனின் கால்களில் விழுந்து அழும் நிலைக்கு அரசியான சந்திரமதி ஆளானமை மிக மிகப் பரிதாபத்துக்குரியதே.

இவ்வாறாகச் சுடலையில் அரிச்சந்திரனுக்கும் சந்திரமதிக்கும் இடையே நடந்த உரையாடல் மூலம் அவளது நாதியற்ற பரிதாபகரமான நிலை நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளது.

அரிச்சந்திரனின் சத்தியம் தவறாமை :-

அரிச்சந்திரன், சந்திரமதி உரையாடல் மூலம் அரிச்சந்திரனின் சத்தியம் தவறாமையை நன்கு உணரமுடிகிறது.

சுடுகாட்டை காக்கும் புலையனாக தொழில் பார்க்கும் அரிச்சந்திரன் அவனது தலைவனின் ஆணைப்படியே பிணம் சுடத் தேவையான பொருட்களை கேட்டு வந்தான். சந்திரமதியின் மீது இரக்கம் கொண்டு தன் தலைவன் தனக்கு வாழ்க்கைப் படியாகத் தந்த வாய்க்கரிசியை மட்டும் விலக்களித்ததாக கூறியதிலிருந்து சத்தியத்திலிருந்து விலகாத தன்மையும், அபலைக்காக இரக்கம் கொண்டமையும் புலனாகிறது. சந்திரமதி அழுது இரங்கி கேட்டதனால் காற்பணமும், கொள்ளி ஆடைத்துண்டும் மட்டும் கொடுத்து விட்டுப் பிணம் சுடலாம் என அதட்டிக் கூறி உண்மையைக் காப்பாற்றினான்.

சந்திரமதி "பணம் ஏது, கொள்ளித் துண்டேது, பாவியாகிய என் மீது உனக்கு இரக்கமில்லையா? பிணத்தைச் சுட என் செய்வேன்" என விழுந்தழுத வேளை அவளது தாலியைக் கண்ட அரிச்சந்திரன் அவள் மீது கடுங் கோபம் கொண்டான். பெண்களுள் இந்திர சாலத்தில் வல்லவள் எனக் கடிந்து தாலியையே பிணஞ் சுடப் பொருளாய்த் தரும்படி கேட்டான். இந்தச் செயல் அவன் சத்தியத்தில் நிலை தவறாத தன்மையைப் புலனாக்கிறது. எப்பொருளும் வாங்காது சுடுகாட்டில் பிணம் எரிக்க விட முடியாததால் (தலைவனின் கட்டளைப்படி) அவன் தன் சத்திய நிலை மாறாது அவளிடம் தாலியைத் தரும்படி கேட்கிறான். இது அரிச்சந்திரன் சத்தியத்தைக் காக்கும் தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

அரிச்சந்திரனைத் தவிர வேறு எவர் கண்ணுக்கும் புலப்படாத தாலி, புலையன் கண்ணுக்குத் தென்படும் நிலை ஏற்பட்டதை நினைத்துப் பதறி விழவும், கலங்கி அழவும் அரிச்சந்திரனும் உண்மையை உணர்ந்து விட்டான். இதுவரையும் உண்மையைக் காப்பதற்காக, அபலைக்கு இரங்கிய போதும் மனதைக் கல்லாக்கிப் பிணம் சுடத் தர வேண்டிய பொருளை மட்டுமாவது கேட்ட நிலை சத்தியத்தின் வழி நின்றமையை எடுத்துக் காட்டுகிறது.

வாய்மை கூறியதாலேயே, உண்மை வழியில் நின்றதாலேயே தான் மனைவிக்கும், மகனுக்கும் இத்துணை துன்பம் ஏற்பட்டது என்றும் அதுவே விண்ணிலும் மண்ணிலும் தூய்மை தருவது. சத்தியம் துன்பம் தந்தாலும் ஈற்றில் இன்பத்தையும், தூய்மையையும், நிம்மதியையும் தருவது என அறிவுரை கூறி சந்திரமதியை தேற்றுகிறான். இவை அரிச்சந்திரன் இறுதி வரை சத்தியத்தின் வழி நின்றமையை எடுத்துக் காட்டுகிறது.

(ஆ) தன் தலைவனுக்கு விசுவாசமாக இருத்தல் :-

இராமன் அங்கதனை இராவணனிடம் தூது செல்லுமாறு அழைத்ததும், இராவணனுக்கு கூறுவது என்ன எனக் கேட்டுப் பணியவும், அவன் கூறியவாறு பணிவோடு தூது போகின்றான். தன்னை மதித்துத் தூதுவனாக அனுப்பியமையை இட்டுப் பெருமை அடைந்த அங்கதன் - இராமனின் அம்பு போல வேகமாகச் சென்றான் என்றால் அங்கதனுக்கு இராமபிரான் மேலிருந்த விசுவாசம் சொல்லுந்தரமன்றோ?

'சொற்கடவாத தூதன்' - 'இராமனின் வார்த்தையை மீறி நடக்காத தூதன்' என்ற கூற்றே அங்கதன் விசுவாசமுள்ளவனாகத் தான் வந்த நோக்கத்தைத் தன் தலைவனின் செய்தியை உறுதியாகக் கூறினான்.

மேலும் அங்கதன் தன் தந்தையைப் பற்றி கூறி, அத்தகையவனின் மகன் தான் தான் என்றதும் இராவணன் அங்கதனின் தந்தையான வாலி தனது நண்பன் தகுந்த வீரன் என்று உறுதியாகக் கூறி, அத்தகையவனின் மகனான "நீ சாதாரண மனிதனான இராமனுக்குத் தூதனாக வந்துள்ளாயே?" என்றும், "உன் தந்தையைக் கொன்ற இராமனுக்கே நீ தூதனாக வந்தாயே" என்றும் கூறிய வேளையிலும், எவ்வித மனமாற்றமும் இன்றித் தன் தலைவனுக்கு விசுவாசமாகச் செயற்பட்ட தன்மையும் அவதானிக்க முடிகிறது. மேலும் அங்கதன் இராவணன் என்ன கூறிய போதிலும், "என் தலைவன் கட்டளையிட்டுள்ள சொல்லைச் சொல்லும் பொருட்டாக வந்தேன்" எனக் கூறித் தலைவனுக்கு விசுவாசமாக இருக்கும் தன்மையைப் புலப்படுத்துகின்றான்.

சொல்வன்மை :- அங்கதன் இராவணனுக்கு விடை கூறும் பொழுது, இராமனை வியந்து

கூறி, நீ ஓதும் வேதங்களில் உட்பொருளாய் விளங்குபவனும், மேம்பட்டுத் தோன்றுகின்ற ஊழ் வினைக்குத் தலைவனுமான இராமன் அனுப்பிய தூதன் நான் - என்ற சொல்லாட்சி போற்றத்தக்கதே. ஊழ்வினையை ஞாபகப்படுத்தியது அவனுடைய சொல் வன்மைக்கு ஓர் எடுத்துக் காட்டு. இராவணனைத் தனது வாலிலே கட்டி நான்கு திக்கு மலைகளிலே பாய்ந்து திரிந்த வாலியின் மகன் நான் - எனக் கூறிய அங்கதனின் சொல்வன்மை சிறப்பானதே. தகப்பனின் வீரத்தைக் கூறித் தன்னை அறிமுகப்படுத்தித் தானும் அவ்விதமானவனே எனக் குறிப்பாலுணர்த்திய திறமையை உணர முடிகிறது.

துணிவு :-

இராமன், தூதனாக அரக்கர் கோனிடம் செல்லும்படி கூறியதும், இராமனைத் தரையில் விழுந்து வணங்கிச் சிங்கமானது வானத்தில் செல்வது போலக் கம்பீரமான தோற்றத்துடன் இராமனின் அம்பு போல மிக விரைவாக இராவணனின் சபையைச் சென்றடைந்தான். அங்கே இராவணன் மிக்க கோபத்துடன் சிவந்த கண்களுடன் நிமிர்ந்து பார்த்து, அவன் வந்த காரணம் என்ன? அவனை ஏவலாளர் கொன்று தின்பதற்கு முன் தெரிவிக்கும்படி அதட்டவும், மிக்க வலி மையான பற்கள் வெளியே தெரியும்படி சிரித்தமை, எவ்வித அச்சமும் இல்லாத அவனது அபார துணிச்சலைக் காட்டுகிறது.

மிக்க வீரரான அரக்கர் தலைவனிடம், சொன்னவுடன் புறப்பட்டுச் சென்ற அங்கதனின் துணிச்சலை மெச்ச வேண்டும். அவனுக்குத் தகப்பனின் வீரதீரச் செயல் துணிவை ஊட்டியுள்ளது.

இராமனின் கட்டளைப்படி சூரியனே கடந்து செல்லாத காவல் உடையதும், மிக உயரமான மதிலையும் தாண்டி இராவணனின் சபையைத் தனியனாக அடைந்த துணிவு பாராட்டத்தக்கது.

இராவணன் சபைக்கு அங்கதன் சென்றதும், 'முன்பு அழிவைச் செய்த அனுமனோ இவன்' என இராவணன் வியப்படைந்து பார்த்த பார்வையை நோக்கிய அங்கதன் மேலும் துணிவைப் பெற்றிருப்பான். எவ்வித அச்சமுமின்றித் துணிந்து தான் யார், வந்த நோக்கம என்ன? எனவும் கூறி இராவணனது முடிவும் யாதோ? என வினவிய துணிச்சலும் துணிச்சல் தான். தூதனை (அங்கதனை) கொல்லும்படி இராவணன் நான்கு அரக்கரை ஏவிய போதும் கூட அவன் துணிவுடன் வீரர் நால்வரையும் எடுத்து உயரத்தே எறிந்து தலைகள் அறும்படி செய்தான். ஓலமிட்டு அவர்கள் உயிரைக் காலால் மிதித்தான். மேலும் அங்கு நின்ற வீரரைப் பார்த்து, "இராமனின் அம்புகள் வர முன் எங்காவது பாதுகாப்பான இடத்திற்கு ஓடுங்கள்" எனவும் துணிச்சலுடன் கூறி விட்டுப் புறப்பட்டு விட்டான்.

(இ) நமுறூதின் படை அணி :- (வர்ணனை)

1. யுத்த நடவடிக்கைகளில் பயிற்றப்பட்ட அறிவு மிக்க மக்கள், கணித்துக் கூறும் சோதிடர், நெருங்கிய நண்பர்கள் சூழ நமுறூதின் படை அணி சென்றது.
2. துன்பத்தை ஏற்படுத்துபவர்களுக்கு இதுதான் வழியென்று நரகத்துக்குச் செல்ல அழைப்பு விடும் தூதுவர் போன்ற படைவீரர்கள் அணிவகுத்துச் சென்றனர்.
3. படையினர் கொண்டு சென்ற பேரி, தவில், சின்னம், பீலி, முழவு, தண்ணம் ஆகிய போர்க் கருவிகள் சமுத்திரம் போல இரைச்சல் செய்தன.
4. இவ் ஆயுதங்கள் யாவும் ஒருவனாகிய இறைவனை ஒழுங்காகப் பணியுங்கள், இல்லையெனில் இப்போதே பாய்ந்து வரும் வளைந்த முகத்தையுடைய யானையை எதிர்த்து வாருங்கள் என ஆரவாரித்தன. இப் படையணியிலே வேகமாகச் செல்லும் குதிரைகள், கரியமலை போன்ற யானைகள், அழகான பொற்றேர்கள், முத்துப் பல்லக்குகள், குளிர்ச்சியான விரிக் கப்பட்ட குடைகள், பறக்கின்ற கொடிகள், அம்புகள் ஏராளம் ஏராளமாக இருந்தன. படை அணியினர் பெரும் சினத்தவராய்ச் சென்றனர். மேலும் இப்படையிலே பெண்கள் கூட்டமும் சந்திர வட்டக்குடையின் உள்ளே அளவுக்கு அதிகமாகச் சென்றனர்.

நபி அவர்களின் படை அணி (வர்ணனை)

எழுபது தோழர்களைக் கொண்டதாக நபி அவர்களது படை அணி சென்றது. நல்ல நேரான வழியிலும் வாய்மையின் வழியிலும் நின்று அதே வழியிலே தகுதி பூண்டு தவத்தின் வழி நிற்கும் தேரோடு தீய ஒழுக்கமின்றி, ஒளி பொழியும் வள்ளலாகிய நபி, பேரிகை முழக்கத்தோடு போருக்குச் சென்றார். தலைப்பாகையையும், தஸ்பீஹுமணியை வேலாக்கி, உடலில் கவசத்தோடு மதம் சிந்தி வரும் யானை முன்னே வர, கலீமா என்ற குதிரை கொண்டு மலக்குகள் கொடிக் கூட்டங்களையும் கொண்டு வரும், இறைவனது அணியையும் நபி அவர்கள் தமதாக்கிக் கொண்டார். மலை முகட்டில் உள்ள வானத்து மேகம் இடி முழங்கியது போன்ற சத்தத்துடன் படையணியினர் சென்றனர். இறைவனது அணியினர் எண்ணிக்கையில் குறைவாக இருந்த போதிலும் பலத்தில் முன்னணி வகித்துள்ளனர் என்பதை உணரமுடிகிறது.

4. (அ) உவமைகளைக் கையாள்வதில் இணையற்ற சிறப்பு வாய்ந்தவர்களாகக் கம்பரும் சேக்கிழாரும் விளங்குகின்றனர். இவர்களுள் கம்பர் கையாண்ட உவமைகளை நோக்கின் .....

இராமனின் அழகை வியந்து பாடுகையில் - அவனது கண்களைச் 'சிரித்த பங்கயம் ஒத்த செங்கனார் இராமன்" என்றான். எல்லோரும் அறிந்த - பங்கயம் - தாமரையைக கொண்டு நாம் கண்டு அறியாத இராமனின் கண்களின் அழகை வர்ணிக்க நினைத்தான். அதுவும் தாம ரையைச் சிரிக்க வைத்தான். சிரித்த தாமரையைப் போன்ற கண்கள் - என்றான். சிரிக்கும் இயல்பை அந்த தாமரைக்கு ஏற்றி விட்டான். தாமரை போன்ற கண்கள் என்று கூறி இருந்தால், அதற்கு விரிதல், மலர்தல், வாடுதல், கூம்புதல் முதலிய நிலைகள் இருப்பதால் இராமபிரானின் கண்கள் இந் நிலைகளில் எந்த நிலையில் உள்ள தாமரையை ஒத்தன எனச் சந்தேகம் எழ லாம் அல்லவோ? அதனால்த் தான் கம்பன் சந்தேகம் இன்றிப் புதிதாக மலர்ந்த தாமரை மல ரை ஒத்த மலர்ந்த மகிழ்ச்சியுடன் கூடிய கண்களைக் கொண்ட இராமன் எனக் கூறி இராமபிரானின் அழகை வியந்தார்.

மேலும் இராமபிரானின் அழகை வியந்து கூற வந்து சொல்லிற்கு அப்பாற்பட்ட நிலையில் அழகைக் கூற முடியாது என்ற நிலையைக் காண முடிகிறது. காட்டிலே இராமன் தம்பி இலக் குவனனோடும், மனைவி சீதையுடனும் நடந்து செல்கின்ற காட்சியை வர்ணிக்க தொடங்கி, மாலை வெயில் இராமனின் நீல மேனியில் பட்டுத் தெறிந்த காட்சி கம்பனின் கற்பனையில் வரவே அதனைக் கவியாக வடிக்கின்றான். 'மையோ, மரகதமோ, மறிகடலோ, மழை முகிலோ' எனத் தொடங்கி மேலும் அவன் அழகை கூறச் சொற்கள் இன்றித் தவிக்கும் நிலை வரவே, "ஐயோ", இவன் வடிவு என்பதோர் அழியா அழகு உடையான்," எனக் கூறி முடிக்கின்றான். "ஐயோ" - என்ற சொல் இரக்க குறிப்பை உணர்த்தியது. தனது ஆற்றாமையைக் கூறி மேலும் இராமனின் அழகு வியக்கத்தக்கதாக்கி வர்ணிக்க முடியாததாக்கி விடுகிறார்.

இலக்குவனது கோபத்தைக் கூற வந்த கம்பர் "மூட்டாத காலக் கடைத்தீ" என்று குறிப் பிட்ட காரணத்தைப் பார்க்கையில் - தாழ்ந்த ஒர் உவமையையே கையாண்டுள்ளார். இங்கு கல்வி, கேள்விகளில் சிறந்த இலக்குவனனையே சினம் கொண்ட நிலையில் பேச வைக்கிறார் கம்பர். தமையனுக்குக் கிடைக்க வேண்டிய முடியை ஏமாற்றிப் பறித்தமையின் விளைவே இலக்குவனனின் மூட்டாத காலக் கடைத்தீ. இத் தீ மேல் உலகத்தையும் சுட்டெரிக்கக் கூடிய கொடுமையானது. இங்கு இந்த உதாரணத்தைக் கையாளாது விட்டிருப்பின் இலக்குவனது கோபம், வாசகர்களுக்கு இத்துணை கொடுமையானது என்பது புலனாகி இருக்காது.

குணநலம், அறிவு நலம் மிக்க இலக்குவனது மனோ நிலை கனல் போல் எழுந்த சினம் காரணமாக மிகவும் தாழ்ந்த நிலைக்குச் சென்று விட்டதனால், அவன் வாயிலிருந்து வந்த வார்த்தைகளும் அவ்வாறே தாழ்வானவையாய் அமைதல் பொருத்தம் என்றே கம்பர் கையாண் டுள்ளார். வாசகருக்கு அவ்வார்த்தை தான் இலக்குவனன் கோபத்தை உணர உதவியது.

இராமனுக்குக் கிடைக்க வேண்டிய முடியைப் பரதனுக்கு கைகேயி பெற்று வைத்த நிக ழ்வும், கம்பருக்கும் பெரும் துன்பத்தை விளைவித்ததோ என்னவோ, அதனை "சிங்க குருளைக்கு இடு தீம் சுவை ஊனை, நாயின் வெங்கண் சிறு குட்டனை ஊட்ட விரும்பினாளே!" என்று குறிப்பிட்டார். பலராலும் பலவிதமாகப் போற்றிப் பேசப்பட்ட பரதனை இலக்குவன் வாயிலாகப் "பொறாமைப் பட்ட சொறி நாய்" என்று கூற வைத்த கம்பனின் கவித்திறமையை வியக்கத்தான் வேண்டும். குலம், கல்வி, குண நலன்கள் யாவும் பெற்ற பரதனை, இவ்வாறு மிக மிகத் தாழ் வாக குறிப்பிட்டு கூறியதன் மூலம் மட்டும் தான் இலக்குவனது கோப உணர்வு வெளிக் காட்டப்பட்டுள்ளது. வாசிப்பவர் இவ் உவமை மூலம் உண்மையாகவே இலக்குவனது மனநிலை உணரக் கூடியதாய் உள்ளது. இத்தகைய உவமைகள் மூலம், கூற வந்த விடயங்களைத் தத்ரூபமாகக் காட்டும் திறமை கவிச்சக்கரவர்த்திக்கே உரிமையானது எனலாம்.

சேக்கிழார் - (உவமைச் சிறப்பு)

கண்ணப்பருடன் நாணனும், காடனும் காளத்தி மலை ஏறினர். அங்கே இறைவன் குடுமித் தேவரைக் கண்ட நாணன் தன்னை மறந்து கட்டி அணைத்து வழிபட்டு நின்றான். நெடுநேரமாகியும் பிரிய மனமில்லாது நின்றவனாய் அருகில் நின்றவனையும், மறந்தவனாய், மலையினின்றும் இறங்கி வரும் போது, காடன் திண்ணனைப் பார்த்து, அத்துணை தாமதித்ததற்குக் காரணம் கேட்கவும், அதுவும் கேட்காத நிலையில் திண்ணன் நடந்தான். அதற்கு நாணனோ பதிலளிக்கையில், இங்கு மலையில் தேவன் தம்மைக் கண்டு அணைத்துக் கொண்டு, "வங் கினைப் பற்றிப் போதா வல்லுடும்பு என்ன நீங்கான்." எனப் மிகப் பொருத்தமாகக் கூறினான். சேக்கிழார் திண்ணன் இறைவனை, சிவலிங்கத்தைக் கட்டி அணைத்து ஆரா அன்புடன் இறு கத் தழுவிப் பிரிக்க முடியாதவாறான பிடியில் நின்ற தன்மையை - "மரப்பொந்தைப் பிடித்துக் கொண்டு விடாத உடும்பைப் போல விடமாட்டேன் என்று தங்கி விட்டான்." என்று நாணன் வாயிலாக மிகப் பொருத்தமாக கூறுவித்தார்.

வேடுவர் தாமறிந்த, அதன் இயல்பு அறிந்த ஒன்றையே உவமையாகக் கூறலாம். கல்வி அறிவோ, சிறந்த பண்புகள் எதுவோ அற்ற வேடர் காட்டுச் சூழலிலே, தாம் கண்ட விலங்கையோ, பறவையையோ, காட்சியையோ அன்றி வேறு எவற்றைக் கூறியிருப்பினும அங்கு பொருத்தமற்றதாகவும் வாசகருக்கு விளக்கமற்றதாகவுமே இருந்திருக்கும்.

உடும்பு தெரியாதவருக்கும் அதன் பிடியின் இறுக்கம் வேள்வியால் - காதால் கேட்டு அறிந்ததே. எனவே பக்தியை அழகுபட நல்லதோர் உவமையை எடுத்தாண்டு சேக்கிழார் உச்ச நிலையை எய்திவிட்டார்.

(ஆ) அரபு நாட்டில் பிறந்து, தீனுல் இஸ்லாத்தைப் பரப்பிய நபிகள் நாயகம் அவர்களது மனைவியருள் முதல் மனைவியான கதீஜா நாயகி அவர்கள் நபி பெருமானைப் பின்பற்றி, இஸ்லாத்தை முதன் முதலில் ஏற்று இருபத்தைந்து ஆண்டுகள் உயிரும், உடலும் ஒன்றிய இல்லற வாழ்வை நடத்தியவராவார். இறை வணக்கமும், நல்லறிவும், பொறுமையும் வாய்க்கப் பெற்ற நாயகி எல்லோருடனும் அன்புடனும் பழகும் தன்மையும், நல்லவர்களுடன் தொடர்பு வைக்கும் பழக்கமும் கொண்டவர். வறியவர்க்கு இரங்கிப் பொருள் வழங்கும் பண்பும் பெற்று, கற்பு நலம் வாய்ந்தவராக விளங்கினார். கதீஜா அம்மையாரை நாடி வறியவரும், மக்கா நகர வணிகரும் பொன், பொருள் வாங்கிச் செல்வது வழக்கமாயிருந்தது எனின் அவரது கொடைப் பண்பு எத்தகையது என ஊகிக்கலாம்.

கதீஜா நாயகியின் நற்செயல்கள் மூலம் அவருடைய குணநலன்களை உணர முடிகிறது. வறுமையில் வாடியவர்க்குப் பொருள் வழங்கி உதவியமையும், கணவனுக்கேற்ற மனைவியாக வாழ்ந்து, இஸ்லாத்துக்கே தன் செல்வம் அனைத்தையும் செலவழித்து வறுமையுற்றமையும், நாயகம் சோர்வடையும் போதெல்லாம் தோள் கொடுத்து அரவணைத்து நின்றமையும் குறிப் பிடத்தக்கன. மேலும் செல்வத்தைப் பெருக்கும் முறைகளையும், வாணிப நுணுக்கங்களையும் அறிந்தவர். விண்ணும், மண்ணும் போற்றக் கூடியவாறு நற்செயல்கள் பல செய்[illegible]சிமை பெற்று விளங்கினார்.

(இ) கார்த்திகேசுவின் கதாபாத்திரம் ஊடாக, அவனுக்கும் (கதை கூறுபவருக்கும்) வண்டியில் பிரயாணம் செய்பவருக்கும் இடையே நடந்த உரையாடல் மூலமாக பழமைக்கும், புதுமைக் குமிடையே காணப்படும் முரண்பாடுகள் எடுத்துக் காட்டப்படுகின்றன.

மாட்டுவண்டியை ரயில் நிலையத்துக்கு ஓட்டிச் செல்லும் பொழுது தான், முன்னைய காலத்தில் வண்டிலுக்கு இருந்த வரவேற்பையும், மரியாதையையும் நினைவுபடுத்துகிறான கார்த் திகேசு. இப்போ தம்பிமார்களுக்கு எடுத்ததற்கெல்லாம் வீட்டு வாசலில் கார். அதிலே ஓடித்திரிந் தால் தான் நாகரிகம் என்று நினைப்பவர்கள் வாழும் காலம் எனக் கூறுகிறான். பதினைந்து வருடங்களாக வண்டி ஓட்டியதை மறந்து, கார் வந்ததும் வந்த நாயனக்காரருக்கு மாட்டுவண்டியில் ஏறிப் பழக்கமில்லையாம் என்று கூறி அவனை அவனுடைய வீட்டுக்காரர் (வண்டியில் பிரயாணம் செய்பவரின் பெரியப்பன்) தட்டிக் கழித்ததை நினைவுபடுத்தி வேதனைப்படுகிறான்.

பழைய காலத்தில் அந்த வீட்டுக்காரர் அன்பாகப் பாசமாகத் தன்னை நடத்தியவை யாவும் புதிய கார்க்காரன் வந்ததும் கெட்டு விட்டதை நினைவுபடுத்துகிறான். காவோலை விழத்தான் வேண்டும். குருத்தோலை வரத்தான் வேண்டும். அதற்காகப் பழையதை மறக்கவோ மறுக்கவோ முடியாது எனக் கூறுகிறான். மேலும் கார் வந்தது வண்டி போயிற்று. புதியதைக் கண்டதும் பழையதைக் கைவிட்டார்கள் என்று கூறி தன்னைப் போல் கூலிவண்டியால் பிழை த்தவர்கள் பலர். அவர்கள் யாவரும் கார் வந்ததும் பிழைப்பற்றுப் போய் விட்டார்கள் எனக் கூறி வேதனைப்படுகிறான்.

புதுப் பெண்ணைக் கண்டதும் வயதான தாய்க் கிழவியைச் சாகடிக்கலாமா? எனக கேட்டு பழையதற்கும் புதியதற்கும் இடையிலான முரண்பாட்டை கூறி விளக்கி வேதனைப்படுகிறான். "ஓண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியைக் கலைக்கப் பார்த்ததாம்", "முந்தி வந்த செவியைப் பிந்தி வந்த கொம்பு மறைக்கப் பார்த்ததாம்" என்றவாறு எடுத்துக் கூறியது முரண்பாட்டைப் புலனாக்குகிறது. மோட்டார் கார்களை அந்நியப் பிசாசுகள், அந்நிய முதல் அதில் செலவழிப்பதும் வெளியே தான் போவதாகக் கூறி வண்டியும் மாடும் உள்நாட்டுச சொத்து, அதற்குக் கொடுக்கும் பணமும் வெளியே போவதில்லை எனக் கூறி வண்டியால உள்ள பலனை எடுத்துக் கூறுகிறார்.

என்றாலும் போர் காரணமாகப் பெற்றோல் கட்டுப்பாடு உண்டாகவே மீண்டும் பழைய வண்டிக்கு கிராக்கி ஏற்பட்டதைக் கூறிப் பெருமைப்படுகிறான். அதே வேளை போர் ஓய்ந்து விட்டால் மீண்டும் தமக்கு வண்டி வேலையின்றி வறுமை வந்து விடுமோ என்ற ஏக்கமும் ஏற் படுகிறது. கார்த்திகேசுவின் இத்தகைய ஏக்க உணர்வும், மனக் கவலையும் பழையதற்கும் புதியதற்கும் இடையிலான முரண்பாட்டை நன்கு புலனாக்குகின்றன.

5. (அ) மணிமேகலையைத் தவ நெறியில் செலுத்துவதற்காகவே மணிமேகலா தெய்வம் அவளை ஆகாயமார்க்கமாக மணிபல்லவத் தீவிற்கு கொண்டு சென்றது. அத் தெய்வம் உதய குமாரனிடம் சென்று அவளை விரும்புவதைத் தவிர்க்கும்படியும் கூறி, சுதமதியிடமும் மணிமேகலை இனி பௌத்த நெறியில் செல்வாள் என்றும் கூறி மறைந்தது. (உவ வனத்தில் மணிமேகலையும், சுதமதியும் இருக்கும் போது தெய்வம் மாய வித்தைக்காரியின் வேடத்தோடு வந்து சக்கரவாளக் கோட்ட வரலாறு கூறவும் சுதமதி உறங்கி விட்டாள். இவ் வேளை தான் தெய்வம் மணிமேக லையைத் தூக்கிச் சென்றது.) சுதமதி தெய்வம் கூறிய சக்கரவாளக் கோட்டத்திற்குச் செல்ல அங்கு ஒரு தூணில் உள்ள பாவை, "மணிமேகலை உங்கள் முற்பிறப்பை அறிந்து கொண்டு ஏழாம் நாள் இங்கு வருவாள்" என உணர்த்தியது. முற்பிறப்பை உணரச் செய்யவுமே தெய் வம் மணிபல்லவத்திற்கு மணிமேகலையைத் தூக்கிச் சென்றது. மேலும் தெய்வம், மணிமேகலை க்கு சமயவாதிகளுடைய கொள்கைகளை அறியச் செய்யவும், ஆகாய வழியே செல்லவும், பசியின்றி இருப்பதற்கான மந்திரங்களையும் உபதேசிக்கவுமாக மணிமேகலையை தூக்கிச் சென்றது.

(ஆ) மணிபல்லவத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் :-

மணிபல்லவத்தில் கண் விழித்த மணிமேகலை அது புதிய இடம் என வருந்தவும், அவள் முன் புத்த பீடிகை தோன்றவும் அதனை வணங்கினாள். அதனால் அவளது முற்பிறப்பு விபரங் களை உணர்ந்ததால் மணிமேகலா தெய்வம் அவளுக்கு முன் தோன்றி மணிமேகலை வேற்று ருவம் கொள்ளவும், ஆகாய வழியே செல்லவும், பசியின்றி இருக்கவுமான மந்திரங்களை உபதேசித்தது. இதே தீவில் மணிமேகலை புத்தபீடிகையைக் காக்கும் தீவதிலகையைக் கண் டாள். அவள் கோமுகிப் பொய்கைக்கு அழைத்துச் சென்றாள். பொய்கையிலிருந்து அமுதசுரபி என்ற அட்சய பாத்திரம் கிடைத்தது.

6. (அ) தங்கம்மாவும் அவளது ஆறாவது மகனும் வாகை மர நிழலில் ஆஸ்பத்திரி வாசல் திற க்கும் வரை நிலத்திலே காத்திருக்கின்றனர். இருவரும் மிகுந்த பட்டினியுடன் கந்தல் உடுப்புடனும் காத்திருக்கின்றனர். சிறுவன் பசியுடன் தாயை ஏதோ கெஞ்சிக் கேட்டும் ஒன்றும் கிட்டாத நிலையில் பக்கத்திலே சென்ற மனிதரிடமே வலக்கையை நீட்டிப் பிச்சை கேட்கும் நிலை. இவை தங்கம்மாவின் குடும்பத்தின் வறுமையை உணர்த்துகிறது.

மேலும் தையல்களால் நிரம்பிய இழந்த சேலையுடுத்து, மிகுந்த சோகத்துடன், கணவனைப் பார்க்கச் சென்றும், அவனுக்கு எந்த நீராகாரம் தன்னும் கொடுக்க நாதியற்றவளாய், வெறுங் கையாளாய்ப் பிள்ளையுடன், சோகத்துடன் கணவனைப் பார்ப்பதை மட்டுமே அறிந்தவளாய் நின்ற கோலம் அக் குடும்பத்தின் கொடுமையான வறுமையை எடுத்துக் காட்டுகிறது.

(ஆ) தீராத புட்டினியும் சோகமும் நிறைந்த மெலிந்த உடலுடன் ஆறு பிள்ளைகளுக்காக இந்த உயிரைப் பிரிந்திருக்கும் தங்கம்மா காச நோயில் அவதியுறும் கணவனைப் பார்க்க வந் துள்ள நிலையைக் கவிஞர் - தனியனாய் வராது ஆறாவது சிறுவனுடன் வாகை மர நிழலில் ஆஸ்பத்திரி மணிக்காக பசியுடன் இருப்பதாகக் கூறுகிறார். பட்டினியை மகன் மூலம் எடுத்துக காட்டுவது சிறப்பானது. சிணுங்கி, இடித்திடித்து முந்தானையைப் பிடித்து இழுக்கிறான். பலன் இல்லை. கண்ணைக் கசக்கிக் காலை உதறிப் பார்த்தும் பலன் இல்லை. பக்கத்தே சென்ற மனிதனிடமே வலக்கரத்தை நீட்டி விடுகிறான் பசியால். இக் காட்சி மிகவும் வேதனையானது.

இறந்த அச்சும்மா எலும்புருவுடன் பச்சையம் இல்லாத இலை போன்ற மேனியுடன், பற ட்டைத் தலையும், சிரங்கும் கொண்டவளாய்ப் பாடசாலைக்கும் ஒழுங்காகச் செல்லாத வருத்தக் காரியாய் வாழ்ந்து விட்டுச் சென்றவள் என்கிறார் கவிஞர். சொற் சுருக்கத்துடன் பிள்ளையின் நிலையையும் தாயின் அவலத்தையும் கூறி முடித்தார்.

காச நோயாளியான தகப்பன் எலும்புருவாய்க் காட்சியளிக்கிறான். நோயாளியின் உணவு பிள்ளையின் பசியைத் தணிக்கும் நிலை, இயலாத போதும் பிள்ளையை அணைக்கும் நிலை இவை மனதை உருக்குமாறு சித்திரிக்கிறார் கவிஞர்.

தங்கம்மாவின் சேலை இனி ஊசி நூலால் தைக்க இடமே இல்லாத நிலை. அத்தனை கந்தலான துணி தான் அவள் மானம் காப்பது என்றவாறு கவிஞர் சிறப்பாக வறுமையை, மன தை உறுத்துமாறு எடுத்துக் காட்டியுள்ளார்.

7. (அ) சிறுகதை இலக்கியம்

1940 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் மலையக மக்கள் கல்வியறிவு பெற்று தொழிலாளர் இயக்க ரீதியாக ஒன்றுபட்டனர். தமது எழுத்தறிவை வளர்த்ததனால், தம் மக்களின் துன்பியல் வாழ்வை உணர்ந்து, தம் உள்ளக் குமுறலை வெளியிட முனைந்தனர்.

மலையக மக்களின் இன்னல்களைக் களமாகக் கொண்ட சிறுகதைகள் 1950 களின் நடுப்பகுதியில தமிழில் தோன்றலாயின. செ.கணேசலிங்கன், வ.அ.இராசரத்தினம், டாக்டர் நந்தி, கே.டானியல், புலோலியூர் க.சதாசிவம், பெனடிக்ற் பாலன், இ.நாகராஜன் [illegible] மலையகத்தில் பிறக்காதவர்களால் மலையக அவலங்கள் சிறுகதையாகின.

இவர்களை விட மலையகத்திலே பிறந்து, தோட்டத் தொழிலாளரின் வறுமை, அறியாமை, இருப்பிட வசதிக் குறைவு, சுகாதாரக் கஷ்டங்கள், அதிகாரிகளின் தொல்லைகள் முதலியவற்றைச் சிறுகதைகளில் எடுத்துக் கூறினர். வேறும் பல கதைகள் தொழிலாளரிடையே ஒற்றுமை உணர்வையும், வர்க்க உணர்வையும் ஊட்டுவனவாய் இருந்தன.

(ஆ) நாவல் இலக்கியம்

இக் காலத்தில் மலையக வாழ்வைப் பொருளாகக் கொண்டு கோகிலம், சுப்பையாவின் தூரத்துப்பச்சை, டாக்டர் நந்தியின் மலைக் கொழுந்து, யோ. பெனடிக்ற் பாலனின் சொந்தக்காரன், தொ.சிக்கனராஜாவின் தாயகம், தெளிவத்தை ஜோசுப்பின் காலங்கள் சாவதில்லை, கே. ஆர் டேவிட்டின் வரலாறு, அவளைத் தோற்றுவிட்டது என்ற நாவல்கள் வெளியாகின. எல்லா நாவல்களிலும் மலையகத் தொழிலாளரின் துயர வரலாற்றினை அவலச் சுவையுடன் வெளிக் கொணர்ந்தது "தூரத்துப்பச்சை" என்பதாகும்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2001 டிசெம்பர்

தமிழ் மொழியும் இலக்கியமும் I

ஒரு மணித்தியாலம்

- பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. பெரியோர்களின் வாழ்க்கையில் உயர்ந்த **குறிக்கோள** இடம்பெற்றிருக்கும். இங்கு குறிக்கோள என்பதன் கருத்து
(1) விருப்பம் (2) இலட்சியம் (3) அனுபவம் (4) ஆலோசனை

2. "**மாதோ!** மடமயிலோ!" - மாது என்பதன் கருத்து
(1) தெய்வம் (2) மான் (3) கிளி (4) பெண்

3. இன்று 'இன்நெற'(Internet) மூலம் பல தகவல்களையும் பெறக்கூடியதாக உள்ளது. இன்நெற என்பதற்குரிய பொருத்தமான தமிழ்ச்சொல்
(1) இணையம் (2) கணினி (3) மின்னஞ்சல் (4) தொலைநகல்

4. பேச்சு வார்த்தையில் ஈடுபட்ட இரு சாரருக்குமிடையே எவ்வித இணக்கமும ஏற்படவில்லை. இணக்கம என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
(1) சுணக்கம் (2) பிணக்கம் (3) களங்கம் (4) தயக்கம்

5. அப் பெரியார் தம் வாழ்நாளின் முற்பகுதி அவப்பொழுதாகக் கழிந்து விட்டதே எனப் பெரிதும் வருந்தினார். அவப்பொழுது என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
(1) வீண்பொழுது (2) பெரும்பொழுது (3) தவப்பொழுது (4) பிற்பொழுது

- பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

6. நீதிமன்றத்திற்குச் சமூகமளிக்கும்படி நீதிபதி சாட்சிக்கு ..... விடுத்தார்.
(1) அழைப்பு (2) மறுப்பாணை (3) அழைப்பாணை (4) அறிக்கை

7. சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்படுமென அரசியல் யாப்பில் ..... அளிக்கப்பட்டுள்ளது.
(1) உத்தேசம் (2) உத்தரவாதம் (3) பிரசித்தம் (4) நிபந்தனை

8. இவ்வாண்டு சனத்தொகை ..... மேற்கொள்ளப்பட்டது.
(1) வகையீடு (2) அளவீடு (3) ஒப்பீடு (4) கணிப்பீடு

9. தனியார் தாபனங்கள் நட்டத்தில் இயங்குவதைத் தடுப்பதற்காக ஆணைக்குழு செய்த ..... ஏற்றுக்கொள்ளப்பட்டது.
(1) விதப்புரை (2) ஆய்வுரை (3) மதிப்புரை (4) உறுதியுரை

10. இன்று வெகுசனத்தொடர்பு ..... உலகம் சுருங்கி விட்டது.
(1) ஊடகங்களினால் (2) கருவிகளினால் (3) பொறிகளினால் (4) உபகரணங்களினால்

- பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

11. நறவு, தேறல், நறை என்ற சொற்கள் உணர்த்தும் பொருள்
(1) மோர் (2) தேன் (3) பால் (4) நெய்

12. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவற்றின் தொகைப் பெயர்
(1) ஐம்பூதம் (2) ஐம்பொறி (3) ஐம்புலன் (4) ஐம்பூதம்

13. புராணக் கதைகளை சுவைபடப் பிரசங்கம் செய்வோன்
(1) அதிகப் பிரசங்கி (2) வேதாந்தி (3) பௌராணிகன் (4) தேவராளன்

14. விலங்குகள் இயற்கையான சூழ்நிலையில் சுதந்திரமாக வாழும் பாதுகாப்பான இடம்
(1) விலங்ககம் (2) காட்டரண் (3) ஆரணியம் (4) புகலரண்

15. பலா, தோடை என்பவற்றின் உள்ளீடு
(1) சுளை (2) தசை (3) சதை (4) சாறு

● பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

16. 'சாக்குப் போக்குச் சொல்லுதல்' என்னும் பொருள் தரும் மரபுத் தொடர்
(1) இடித்துரைத்தல் (2) பசையடித்தல் (3) தட்டிக்கழித்தல் (4) ஆறப்போடுதல்

17. அவன் எக்காரியத்தையும் நிதானமாக செய்ய முடியாத அவசரக்குடுக்கை. அவசரக்குடுக்கை என்றால்
(1) பயனற்றவன் (2) குறும்புக்காரன் (3) திறனற்றவன் (4) பதற்றக்காரன்

18. இழிவான சூழலில் நல்லார் ஒருவர் தோன்றுதலை விளக்குவதற்குப் பொருத்தமான உவமைத் தொடர்
(1) சுழல் காற்றில் அகப்பட்ட துரும்பு போல (2) சேற்றிலே முளைத்த செந்தாமரை போல
(2) நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல (4) கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல

19. செய்த தவறை மீண்டும் செய்யாதிருக்க ஒரு முறை ஏற்பட்ட அனுபவம் உதவும் என்பதை விளக்கும் பழமொழி
(1) துள்ளின மாடு பொதி சுமக்கும் (2) சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது
(3) நுணலும் தன்வாயாற் கெடும் (4) தொட்டிற் பழக்கம் சுடு காடு மட்டும்

20. 'கூழுக்குமாசை மீசைக்குமாசை' என்ற பழமொழியின் கருத்து
(1) ஒரு பயனை எய்தவிழையும் அதே வேளை இன்னொன்றை இழக்க விரும்பாமை.
(2) இரு காரியங்கள் நிறைவேற வேண்டுமாயின் இரண்டிலும் ஆசை இருத்தல் வேண்டும்.
(3) ஒருவர் உணவு உண்ணும் போது மற்றொருவர் இடைஞ்சலாக இருத்தல்.
(4) எக் காரியத்தை செய்யும் போதும் விருப்பு வெறுப்பற்ற நிலை இருத்தல் வேண்டும்.

● பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

21. தமிழ் இலக்கண மரபுக்கமைய மொழிக்கு முதலில் பயின்று வராத எழுத்துக்கள்
(1) ஒ, ஈ, ஔ (2) ஞா, யோ, யௌ (3) மை, நை, தை (4) வு, னை, யி

22. பகுதி இரட்டித்துக் காலங் காட்டுவன
(1) உண்டான், கண்டான் (2) வாழ்க, வீழ்க
(3) உண்பான், பாடுவான் (4) புக்கான், விட்டான்

23. வினைச் சொல்லாகவும் இடைச் சொல்லாகவும் வரக் கூடியது
(1) வில் (2) கொல் (3) நில் (4) சொல்

24. வேற்றுமை உருபை ஏற்காத சொல்
(1) இனி (2) யாம் (3) கனி (4) நடந்தவன்

25. "இறைவனை வழிபடாத வாணாள் முழுவதும் வீணே!" இங்கு வாணாள் என்பது
(1) இலக்கணப்போலி (2) மரூஉ (3) இடக்கரடக்கல் (4) குழூஉக்குறி

26. கடற்காற்று உடலுக்கு இதமாக இருந்தது. இங்கே கடற்காற்று என்பது
(1) வினைத்தொகை (2) பண்புத் தொகை
(3) வேற்றுமைத்தொகை (4) அன்மொழித்தொகை

27. எள் + நெய் என்பதைப் புணர்த்தினால் வரும் புனர்மொழி வடிவம்
(1) எண்ணெய் (2) எள்நெய் (3) எண்ணெய் (4) எண்நெய்

28. வாக்கியத்தில் எதிர்மறை வினையை அல்லாமல் வேறு வினையை ஏற்காதது
(1) ஒருநாள் (2) ஒவ்வொருநாளும் (3) ஒரேநாள் (4) ஒருநாளும்

29. தரப்பட்ட சொல் வகைக்கு பொருந்தாத ஒரு சொல் இடம்பெறும் வரிசை
(1) பெயர்ச்சொல் - கொழும்பு, பாடசாலை, மாணவன்
(2) வினைச்சொல் - ஓடினான், ஓடும், ஓட்டம்
(3) உரிச்சொல் - சால, உறு, நனி
(4) இடைச்சொல் - ஓ, ஆ, தோறும்

30. பின்வருவனவற்றுள் சரியாகக் குறியீடுகள் இடப்பட்ட வாக்கியம்
(1) "நீயுமா புரூட்டஸ்" என சீசர் வினாவினார்? (2) "நீயுமா? புரூட்டஸ்!" என சீசர் வினாவினார்.
(3) "நீயுமா புரூட்டஸ்?" என சீசர் வினாவினார். (4) "நீயும்மா புரூட்டஸ்"? என சீசர் வினாவினார்.

- பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றினதும் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

31. எனது பிள்ளைகள்
(1) இவர்களல்லர் (2) இதுகளல்ல (3) இவையல்ல (4) இவர்களல்ல

32. நீயோ அவனோ
(1) யார் இதைச் செய்தாய்? (2) யார் இதைச் செய்தான்?
(3) யார் இதைச் செய்தீர்? (4) யார் இதைச் செய்தார்?

33. வழக்கறிஞர் எடுத்துக்காட்டிய நியாயங்கள் ஒவ்வொன்றும்
(1) பொருத்தமானதாக இருந்தது. (2) பொருத்தமானவையாக இருந்தன.
(3) பொருத்தமானதாக இருந்தன. (4) பொருத்தமானவையாக இருந்தது.

34. எப்படித்தான் தடுத்தாலும் தீயோர் தாம் நினைத்ததைச்
(1) செய்யாமல் விடுவார். (2) செய்யாமல் விட்டார்.
(3) செய்யாமல் விடுகிறார். (4) செய்யாமல் விடார்.

35. நாம் நேர்மையாக நடந்து கொள்வோமாயின் எவ்வித துன்பங்களும்
(1) எம்மை அணுகும். (2) எம்மை அணுகாது.
(3) எம்மை அணுகமாட்டாது. (4) எம்மை அணுகா.

- பின்வரும் பாடல்களைப் படித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

வண்டுகள் வண்ணத்துப் பூச்சி - தும்பி
மாடாடு யாவுக்கும் கேடு செய்யாதே
அண்டினரைக் கெடுக்காதே - ஏழை
ஆனோரை வருத்தி அலைவு செய்யாதே

உன்னைப்போல உணவும் உண்ணும் - அவை
உன்னைப் போலே களைவந்தால் உறங்கும்
உன்னைப் போலே இன்பதுன்பம் - யாவும்
உண்டவை மேலருள் கொண்டிடவேண்டும்

உன்னை ஒருவரடித்தால் - கல்லால்
ஒங்கி எறிந்தால் உதைத்தால் மிதித்தால்
என்ன வருத்தமடைவாய் - அதை
எண்ணி உயிர்களுக்கு ஏதும் செய்யாதே

யாருக்கும் தீங்கு செய்யாதே - எளியர்
என்று நீ வாட்டில் இறைபொறுக்காதே
பாருக்குள் ஒற்றுமை வேண்டும் - யாரும்
பயனொடுவாழ நயஞ் செய்ய வேண்டும்.

36. கவிஞர் இப் பாடல்கள் மூலம் வலியுறுத்த விரும்புவது என்ன?
(1) எம்மை அண்டி வந்தவரை உபசரித்தல் வேண்டும்.
(2) பிறரால் நாம் துன்பம் அடைவதுண்டு.
(3) உயிர்கள் மீது இரக்கம் கொள்ளல் வேண்டும்.
(4) எம்மைப் போலவே பிறவுயிர்கள் உண்டு உறங்குவதுண்டு.

37. இங்கு 'நயஞ் செய்ய வேண்டும்' என்ற தொடர் என்ன பொருளில் வந்துள்ளது?
(1) உதவி செய்ய வேண்டும். (2) இலாபம் ஈட்ட உதவ வேண்டும்.
(2) நட்புக் கொள்ள வேண்டும். (4) நன்மை செய்ய வேண்டும்.

38. இப் பாடலில் வரும் 'இன்பதுன்பம்' என்பது எவ்வகைத் தொடர்?
(1) இணைமொழி (2) இரட்டைக்கிளவி
(3) அடுக்குமொழி (4) அடுக்கிடுக்கு மொழி

39. கடைசிப் பாடலில் குறிப்பாக வந்துள்ள பழமொழி
(1) கேடு வரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே
(2) எளியாரை வலியார் கேட்டால் வலியாரைத் தெய்வம் கேட்கும்.
(3) ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்.
(4) அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.

கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

40. (அ) தினசரிப் பத்திரிகைகளிற் கூட ஒரு பகுதி, கவிதை விமர்சனத்திற்கென்றே ஒதுக்கப்படுகின்றது.
(ஆ) விமர்சனம் இதோ பெருகி விடும் : பயம் வேண்டா.
(இ) கவிதைகள் புத்தக வடிவத்திலும் பத்திரிகைகளிலும் நாளுக்கு நாள் பெருகிவருகின்றன: கவிதை விமர்சனங்களும் நடக்கின்றன.
(ஈ) பாவம்! அவர் இனிக் கண்ணீர் வடிக்க வேண்டா.
(உ) மேலைத்தேசத்தில் ஒருவர் ஒன்று செய்தால் அதற்கு நூறு விமர்சனம் வந்து விடுமென்றும் இங்கே அவ்வளவு தூரம் அந்தத்துறை விரியவில்லையென்றும் ஒரு விமர்சகர் அழுகின்றார்.

(1) இ, ஆ, அ, ஈ, உ
(2) உ, இ, ஈ, அ, ஆ
(3) இ, உ, ஈ, அ, ஆ
(4) அ, இ, ஆ, உ, ஈ

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2001 டிசெம்பர்

தமிழ்மொழியும் இலக்கியமும் II

இரண்டு மணித்தியாலம்

1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(அ) ஆதிகால மனிதன் சூழலோடு ஒன்றி வாழ்ந்தான். ஆனால் இன்று சூழலைத் தன் தேவை கட்குப் பயன்படுத்தும் முயற்சியில் மனிதன் அதனைச் சூறையாடி அதன் இயற்கைத் தோற்றத்தை மாற்றியமைத்துள்ளான். இதனால் சூழல் மாசுபடுதல் தவிர்க்க முடியாத ஒன்றாகி விடுகின்றது. சூழல் மாசடைதல் பல நாடுகளிலும் இன்று பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. உலகின் சூழல் ஏன் மேன்மேலும் அதிகமாக மாசடைந்து வருகின்றதென்பதையும், சூழல் மாசடைவது இன்றுள்ள நிலையில் இலங்கைக்கு ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளதா என் பதையும் ஆராய்ந்து ஒரு விளக்கக்கட்டுரை.

(ஆ) உமது பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியின் போது விஞ்ஞானம், கணினித் தொழினுட்பம், சித்திரம், சங்கீதம், நடனம், சமயம், கைப்பணி போன்றவை தொடர்பான பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. அவற்றை பார்வையிட வந்தோர் பலரும் மாணவர் முயற்சியை பாராட்டிச் சென்றனர். அக்கண்காட்சி மாணவரது ஆக்கத்திறன், ஒழுங்கமைக்கும் திறன் போன்ற பல்வேறு ஆற்றல்களை வெளிப்படுத்த வாய்ப்பளித்தது. இக்கருத்துக்களை உள்ளடக்கி கண்காட்சி பற்றிய ஒரு விவரணம்.

(இ) ஒரு காட்டில் பழங்குடிமக்களுடன் நிகழ்ந்த எதிர்பாராத சந்திப்பின் போது நீர் கண்டவை, உமக்கு ஏற்பட்ட அனுபவங்கள் தொடர்பான உமது மனப்பதிவுகளை வாசகரின் உள்ளத்து உணர்வுகளைத் தூண்டும் வகையில் விவரிக்கும் ஒரு கற்பனைச் சித்திரம்.

(ஈ) இன்று வெகுசனத் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியினால் உலகமே சுருங்கி ஒரு கிராமமாகி விட்டது. அச்சு ஊடகங்களை விட இலத்திரனியல் ஊடகங்களின் செல்வாக்கு அதிகரித்து வருகின்றது. இந் நிலையில் இலத்திரனியல் ஊடகங்கள் பயன்மிகுந்த நிகழ்ச்சிகளை மக்களுக்கு வழங்க வேண்டும். அந் நிகழ்ச்சிகள் மக்களின் அறிவுத் தாகத்தை தணித்து, அழகியல் இரசனை உணர்வை மேம்படுத்த உதவ வேண்டும். அது ஒரு தேசிய தேவையும் கூட. இவற்றை அடிப்படையாகக் கொண்ட உமது கருத்து வெளிப்பாடு.

(உ) "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்ற பழமொழியின் பொருளை விளக்கும் வகையில் வாசகரின் உள்ளத்தை ஈர்க்கும் ஒரு கற்பனைச் சிறுகதை.

(30 புள்ளிகள்)

2. கீழே தரப்பட்டுள்ள அ, ஆ, இ, ஈ என்னும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் சுருக்கத்தை 15-20 சொற்களில் அமைக்கக் கூடியவாறு வேறு வேறாக எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

(அ) வெளிச்ச வீடுகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். திண்ணிய நிலத்திலே கட்டப்பட்டவை ஒரு வகை. அலை மோதும் கடற்பாறைகளிற் கட்டப்பட்டவை மறு வகை. நிலத்திலே கட்டுவது சுலபம். அது வீடு கட்டுவது போலிருக்கும். விரைவாகவும் கட்டி முடித்து விடலாம். ஆனாற் கடற்பாறையிலே கடலின் நடுவில் வெளிச்ச வீடு கட்டுவதென்பது சுலபமான காரியமா? கட்டுவோர் எத்துணை இடர்ப்பட வேண்டியிருக்கும்? அப்படி ஒரு வெளிச்ச வீட்டைக் கட்ட பல வருடங்கள் செல்லும். அலைகள், பேரலைகள், நீரோட்டங்கள், சுழிகள், புயல்கள் என்று பல இடர்களை எதிர்கொள்ள வேண்டும். கட்டுபவன் கடல் அலைகளுடன் நெடுங்காலம் போராட வேண்டி வரும்.

(ஆ) கல்வியிலே தேர்ச்சியடைய வேண்டுமாயின் இடைவிடாது கற்றல் வேண்டும். ஒரு நாள் ஊக்கமாகவும் மற்றொரு நாள் சோம்பலாகவும் இராமல், எப்பொழுது தங்கள் சக்திக்கேற்ப கல்வி பயில வேண்டும். சோர்வு அடையாமல் நாடோறும் கிரமமாக றிதாயினும் நன்றாக கற்கின்றவர் எப்படியும் அறிவுள்ளவராவர். தாம் அதிக சமர்த்தர் என்று னைத்து ஒவ்வொரு வேளையில் மாத்திரம் கற்கின்றவர் அதிகமாக தேர்ச்சி அடையமாட்டார். மணற் கேணியைத் தோண்டுந்தோறும் ஊற்று நீர் சுரந்து பெருகிக் கொண்டே வருவது போல கல்வியும் கற்கும் தோறும் அறிவு வளர்ந்து கொண்டே வரும். ஆதலினால் கல்வியைச் சிறிது கற்ற மாத்திரத்தால் அமையாது மேன்மேலும் கற்றல் வேண்டும்.

(இ) உன் நண்பர்களைத் தேர்ந்தெடுத்தலில் நீ விழிப்புடையவனாயிருத்தல் அவசியமாகும். ஏனெனில் உன்னைப் போன்ற சூதுவாதற்ற இளைஞர்களுள் தீயோரின் கூட்டுறவால் கெட்டொழிந்தோர் இவ்வுலகத்தில் பலருளர். நான் நண்பன், நான் நண்பன் என்று கூறிக் கொண்டு அவர்களை அண்டும் ஒவ்வொரு நயவஞ்சகனையும் அவர்கள் தூய நண்பன் என்று மனதார நம்பி நடந்து கொள்வதே அதற்குக் காரணமாகும். இக்குழியில் நீ விழாதிருக்க வேண்டுமானால் நண்பர்க ளென்று உன்னை நாடி வருகின்றவர்களிடம் நீ எச்சரிக்கையாகப் பழகிக் கொள்ள வேண்டும். உன்னைக் கண்டவுடனே தாம் நண்பராகி விட்டதாக யாராவது எதனையும் பசப்பி விட்டால் அதை நம்பி விடாதே. ஏனெனில் உண்மையான நட்பு என்றும் திடுமென உண்டாவதன்று.

(ஈ) மனிதர் பலர் மாதக்கணக்காக இருந்து செய்ய வேண்டிய சிக்கல் நிறைந்த கணித்தல்களை யெல்லாம் கணினிப்பொறி கணப்பொழுதில் செய்து முடித்து விடுகிறது. இத்தகைய விந்தை செய்யும் கணினி தானாகவே சிந்திக்கின்றதா? அது தான் இல்லை. சிந்திக்காமலே சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் திறமை கணனிக்குண்டு. ஆயினும் சரியான தீர்வு காண்பதற்குத் தேவைப்படும் தரவுகள், தகவல்கள், அறிவுறுத்தல்கள் ஆகியவற்றையெல்லாம் மனிதனே சிந்தித்துக் கணினிக்கு வழங்குகின்றான். தனது மூளையாற் செய்ததற்கு அரிய காரியங்களை தான் உருவாக்கிய ஒரு கருவியைக் கொண்டு மனிதன் செய்விக்கின்றான் என்றால், அவனது மதிவலியை மதிப்பிட முடியுமா?

(20 புள்ளிகள்)

3. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

அழகியற் கலைகள் பல. இசை, நாடகம், ஓவியம், சிற்பம், இலக்கியம் முதலியன அழகியற் கலை களாகக் கொள்ளப்படுகின்றன. இவற்றுள்ளும் இசையும் ஓவியமும் இலக்கியமும் ஆற்றல் மிக்கவை. இத்துறைகளைச் சேர்ந்த கலைப்படைப்புக்கள் காலங்காலமாக தமது செல்வாக்கை நிலைநாட்டியுள்ளன. விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் வியப்பினை ஊட்டுவன. குறிப்பிட்ட ஒரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பு குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் மகத்தானதாகக் கருதப்படலாம். ஆனால் பிந்தியதொரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பு முந்தியதன் முதன்மையைக் குறைத்து விடலாம். உதாரணமாக நீயூற்றனின் புகழ்பெற்ற ஈர்ப்புக் கொள்கையானது, ஐன்ஸ்டீனின் சார்புக் கொள்கை உருவான பின்னர் முதன்மை இழந்தது. மிகச் சிறந்த விஞ்ஞானியின் பணிகூட, முடிவில்லாத முன்னேற்றப் பயணத்தின் ஒரு கட்டமேயாகும். பெரும் விஞ்ஞானிகளின் பணிகளே கால ஓட்டத்தில் மதிப்பினை இழந்து விடுமாயின், படைத்தளபதிகள், அரசியல் மேதைகள் ஆகியோருடைய பணிகள் நிலைபேறுடையனவாக இருக்குமென்று எவ்வாறு நம்பமுடியும்? அவர்களுடைய பணிகள் அவ்வக் காலங்களிலே மகிமை பெறுகின்றன. ஆனால் கலைப்படைப்புக்கள், காலப்போக்கில் மக்களின் உள்ளத்தில் மேன்மேலும் கூடிய ஆதிக்கம் பெற்று விளங்கும். இன்னும் ஒன்றை நாம் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். நீராவி எந்திரத்தினை ஜேம்ஸ்வாட் ஆக்குவாக்கினார். அவர் அதை உருவாக்கியிராவிட்டால், அவருக்குப் பின்னால் வந்த விஞ்ஞானியொருவர் அதனை உருவாக்கியிருத்தல் கூடும். கலைப்படைப்புக்களைப் பொறுத்தவரையில் இவ்வாறு கூறமுடி யாது. இளங்கோ சிலப்பதிகாரத்தைச் செய்திராவிட்டால், பின் வந்த புலவர் ஒருவர் அதனை அவ்வாறே செய்திருப்பார் என்று சொல்ல முடியாது. சிலப்பதிகாரம் தோன்றிய காலத்திலும் பார்க்க, இன்று அத னைப் படித்துச் சுவைப்போர் தொகை பன்மடங்காக அதிகரித்துள்ளது.

1. ஆற்றல் மிக்க கலைகளாகக் கருதப்படுபவை எவை?
2. அவ்வாறு அவை கருதப்படுவதற்கான காரணம் யாது?
3. இவ்வுரைப்பகுதியின் ஆசிரியர் ஈர்ப்புக் கொள்கை பற்றியும் சார்புக் கொள்கை பற்றியும் கூறுவதன் நோக்கம் யாது?
4. விஞ்ஞானிகளின் பணிகளுக்கும் படைத்தளபதிகள், அரசியல் மேதைகள் ஆகியோரது பணிகளுக்கு மிடையே காணப்படும் ஒற்றுமை யாது?
5. ஜேம்ஸ்வாட் பற்றியும் இளங்கோ பற்றியும் குறிப்பிடுவதன் மூலம் ஆசிரியர் புலப்படுத்த விரும்பும் உண்மை என்ன?
6. கலைப்படைப்பொன்று காலப்போக்கில் மேன்மேலும் கூடிய ஆதிக்கம் பெற்று விளங்கும் என்பதை விளக்க இங்கு காட்டப்படும் ஆதாரம் என்ன?
7. பின்வரும் சொற்களின் பொருளை எழுதுக.
   (i) மேதை (ii) மகிமை (iii) நிலைபேறு

(15 புள்ளிகள்)

4. சாரதிகள் கண்மூடித்தனமாக வாகனங்களை ஓட்டிச் செல்வதே வீதி விபத்துக்கான காரணம் என்று வாசகர் ஒருவர் செய்தித்தாள் ஒன்றிலே கருத்து வெளியிட்டிருந்தார். அவருடைய கருத்தை ஓரளவுக்கு ஒப்புக் கொண்டும்
   1. வீதிகளின் நிலை
   2. பாதசாரிகளின் போக்கு
   3. மதுபோதையில் வாகனமோட்டுதல்
   4. வீதி விதிகள் கவனிக்கப்படாமை

போன்ற காரணங்களாலும் பல வீதி விபத்துக்கள் நேருகின்றன என்பதை எடுத்துக் காட்டியும் அச் செய்தித்தாளின் ஆசிரியருக்கு 100 சொற்கள் அளவில் ஒரு கடிதம் எழுதுக.

(15 புள்ளிகள்)

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2001 டிசெம்பர்

தமிழ்மொழியும் இலக்கியமும் III

பகுதி I

இரண்டு மணித்தியாலம்

1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கும் விடை தருக.

1. பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) "..... குழப்பமான நம் வழக்கை ஆராய்ந்து இந்தச் சிறுவனா தீர்ப்பு வழங்கப் போகிறான்".
   (i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது? (ii) யாருக்கு கூறப்பட்டது?
   (iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
   (iv) இங்கு குறிப்பிடப்படும் வழக்கு எது தொடர்பானது?

(ஆ) "..... தர உரிய பொருள் எனக்குத் தாராதே நீ
   தனியே இப்பனியிருளில் சவம் கொணர்ந்து
   கரவின் அழல் சுடுவ(து) உனக்(கு) அடைவோ?"
   (i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது? (ii) யாருக்குக் கூறப்பட்டது?
   (iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
   (iv) 'தர உரிய பொருள்' எனக் குறிப்பிடப்படுபவை எவை?

(இ) "இப் பாத்திரம் ஆபுத்திரனிடம் இருந்து இங்கு வந்தது. இது கொண்டு உலகத்தின் பசியைப் போக்கும் தருமத்தை நீ செய்ய வேண்டும்".
   (i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது? (ii) யாருக்கு கூறப்பட்டது?
   (iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது? (iv) இங்கு குறிப்பிடப்படும் பாத்திரம் எது?

(ஈ) "உந்தை என் துணைவன் அன்றே;
   ஒங்(கு) அறம் சான்றும் உண்டால்
   நிந்தனை இதன் மேல் உண்டோ,
   நீ அவன் தூதனானால்"
   (i) இக் கூற்று இடம்பெறும் நூல் எது? (ii) யாருக்கு கூறப்பட்டது?
   (iii) இங்கு "அவன்" எனக் குறிப்பிடப்படுபவன் யார்?
   (iv) 'அறம் சான்றும் உண்டு' - இத் தொடரின் பொருள் யாது?

(உ) "மற்றொன்றுங் காண்கிலேன்
ஏதி லாரும் இனித் தரு வாரில்லை
போதும் வைக்கிற்றுப் போம்இடம் வேறிலை
தீது செய்வினை யேற்கென் செயல்"

(i) இக் கூற்று இடம்பெறும் நூல் எது? (ii) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(iii) யாருக்கு கூறப்பட்டது? (iv) எச் சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

2. பின்வரும் செய்யுள்களின் பொருளை இக்கால உரை நடையில் எழுதி, அவை ஒவவொன்றிலும் தடித்த எழுத்துக்களில உள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.

(அ) ஆயிடைக் கருணைவேந் தாணை மீறிய
தீயரைத் தீச்சிறைப்படுத்தல் திண்ணமென்
றேயுமிச் சுருதிநூ லியம்புகின்றதை
ஆயவித் துயர்க்கட லமிழ்ந்தி னேனரோ.

(ஆ) சுவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டாதவன் நன்மரம்.

(இ) அலை(வு) இலா அரிச் சந்திரற்(கு) அல்லது
தொலைவில் யாவர்க்கும் தோற்றரு மங்கலம்
புலையன் காணவும் போதுவ தோ? என
உலையின்மீது மெழுகொத்(து) உருகினாள.

(ஈ) வானக மறைத்த நீண்ட வன்கொடி குடை மறைத்த
மானவர் பாத நுண்டு சிருடர மறைப்பக் கையி
னூனகு குந்தங் கோணங் கட்கமோ டம்பு பாலந்
தானகு கதிர்க டோற்றத் தளத்தணி சென்ற தன்றே.

(உ) மாலயற் கரிய நாதன் வடிவொரு சோதி யாகச்
சாலவே மயங்கு வார்க்குச் சங்கரன் தான்ம கிழ்ந்தே
ஏலவார் குழலாள் தன்னோ டிடபவா கனனாய்த் தோன்றிச்
சீலமார் பூசை செய்த திருத்தொண்டர் தம்மை நோக்கி

3. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.
(அ) இளையான் குடிமாற நாயனாருடைய மனைவியாரின் விருந்தோம்பற் பண்பு.
(ஆ) நமுறூது மன்னனின் குணவியல்புகள்.
(இ) மூதுரையில் நல்லார் பற்றி ஔவையார் கூறியவை.

4. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினுக்கு விடை தருக.
(அ) "மழைப்பாட்டில் ஆங்காங்கே உவமைச்சுவை ஊடுருவி நிற்கக் காணலாம்". ஆராய்க.
(ஆ) "கண்ணுவ முனிவர் சகுந்தலைமீது வைத்திருந்த பாசம் அளவிடக்கரியது". விரித்துரைக்க.
(இ) "தேவகிருபையை முன்னிட்டு வாழும்" என்ற சிறுகதை மகனுக்காக ஏங்கித் தவிக்கும் ஒரு தாயின் மனநிலையைச் சித்திரிக்கிறது. - விளக்குக.

5. (அ) ஆத்துமவிசாரியின் துன்பத்திற்கான காரணத்தை சுவிசேஷகன் வினவிய பொழுது, ஆத்தும விசாரி கூறிய. பதிலை எழுதுக.
(ஆ) அப்பதிலில் இருந்து ஆத்துமவிசாரியினது குணாதிசயங்கள் பற்றி நீங்கள் கருதுபவற்றைத் தெளிவுபடுத்துக.

6. 'முடியாத கதைகள் பல' என்ற சிறுகதையை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
(அ) 'பொன்னம்மா' என்னும் கதாபாதத்திரம் சித்திரிக்கப்பட்டிருக்கும் முறையினை விளக்குக.
(ஆ) இப் பாத்திரப் படைப்பின் ஊடாக மலையக மக்கள் வாழ்க்கைப் பிரச்சினைகள் எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றன?

7. வள்ளுவரும் பாரதியாரும் என்னும் கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு பின்வருவன தொடர்பாக வள்ளுவர் கூறிய கருத்துக்களை பாரதியார் அடியொற்றிச் செல்லுமாற்றை விளக்குக.
(அ) பொருளிலார் (2) சினம் (3) அறம்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2001 டிசெம்பர்

தமிழ் மொழியும் இலக்கியமும் I

விடைகள்

01.	2	11.	2	21.	4	31.	1
02.	4	12.	3	22.	4	32.	3 அல்லது 4
03.	1	13.	3	23.	2	33.	1
04.	2	14.	4	24.	1	34.	4
05.	3	15.	1	25.	2	35.	4
06.	3	16.	3	26.	3	36.	3
07.	2	17.	4	27.	1	37.	4
08.	4	18.	2	28.	4	38.	1
09.	1	19.	2	29.	2	39.	2
10.	1	20.	1	30.	3	40.	3

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2001 டிசெம்பர்

தமிழ் மொழியும் இலக்கியமும் II

விடைகள்

1. (அ) சூழல் மாசடைதல்

ஆதிகால மனிதன் சூழலோடு ஒன்றி வாழ்ந்தான். அவன் தனது வாழிடங்களாகக் குகை, மரப்பொந்து போன்றவற்றைப் பயன்படுத்தினான். வேட்டையாடியும், காய்கறி, கிழங்கு வகைகளை உணவாகவும் உட்கொண்டான். இலை, விலங்குகளின் தோல், மரவுரி போன்றவற்றைத் தனது உடைகளாகத் தெரிவு செய்தான். பின் பயிர்ச்செய்கைக்குத் தேவையான நீரைப் பெறுவதற்காக ஆற்றங்கரைகளில் குடியேறினான். விவசாயத்தை நிரந்தரத் தொழிலாகக் கொண்டான். நாடோடி வாழ்க்கை நிரந்தர வாழ்க்கையாக மாற்றமடைந்தது. ஒய்வும், ஆறுதலும் கிடைத்தன. தனிமையிலிருந்து சிந்தித்தான். கலைகள், ஆபரணங்கள், உபகரணங்களைக் கண்டுபிடித்தான்.

ஆனால் இன்று சூழலைத் தன் தேவைகளுக்குப் பயன்படுத்தும் முயற்சியில் மனிதன் அதனைச் சூறையாடி அதன் இயற்கைத் தோற்றத்தை மாற்றியமைத்துள்ளான். இதனால் சூழல் மாசுபடுதல் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடுகின்றது. சூழல் மாசடைதல் பல நாடுகளிலும் இன்றும் பெரும்பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. "சுத்தம் சுகம் தரும்", "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்", மக்களின் நோயற்ற நல் வாழ்வுக்குச் சுற்றுப்புற சூழலை மாசடையாமல் பாதுகாக்க வேண்டியது அவசியம். ஆயினும் தற்காலத்தில் சூழல் மாசுபடுதல் காரணமாகப் பெருந்தொகையான மக்கள் பல்வேறு நோய்களுக்கு ஆட்பட்டு அவதியுறுகின்றனர். நிலம், நீர், வளி என்பன பல வழிகளில் அசுத்தமடைகின்றது.

தொழிற்சாலைக்கழிவுகள், இரசாயன உரப்பசளைகள், பூச்சிக்கொல்லி, கிருமிநாசினிகள் மற்றும் அழுகிய நிலையிலுள்ள சேதனப்பொருட்கள் போன்றவை நிலத்தில் படிவதால் நிலம் மாசடையும். உக்காத தன்மையுள்ள பிளாஸ்டிக் பொருட்களும் பொலித்தீன் உறைகளும் நிலத்தினுட் புதைந்து அதனைப் பாதிக்கின்றன. "அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல" பூமாதேவி அனைத்தையும் பொறுத்துக் கொண்டிருக்கிறாள். மனிதர்களின் பொறுப்பற்ற நடவடிக்கைகளால் நிலம் பழுதுபடுகின்றது. நாம் உட்கொள்ளும் நீரும் மாசடைகின்றது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் ஆறுகளிலும், குளங்கள், வாவிகளிலும் கலப்பதால் நீர் மாசுறுகிறது. வளி பல வழிகளில் மாசடைகின்றது. தொழிற்சாலைகள், வாகனங்களிலிருந்து வெளியேறும் புகை, தூசு, சாம்பல், கதிர்வீச்சு முதலியன காற்றில் கலந்து அதைப் பாழாக்குகின்றன.

இலங்கையில் சூழல் அபிவிருத்தி அதிகாரசபை சூழலை பாதுகாக்க பல திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. சூழலை பாதுகாப்பது நம் கைகளிலே உள்ளது. பொறுப்போடு செயற்பட்டால் சூழலை பாதுகாக்க முடியும். சூழல் மாசடைவதற்கு எதிராக மக்களிடம் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். சூழல் மாசடையாமல் தடுக்க பல சட்டங்கள் ஆக்கப்பட்டுள்ளன. அவை செவ்வனே அமுல்படுத்தப்பட வேண்டும். எங்கும் தூய்மை, எதிலும் தூய்மை என்பதை உறுதியாக கடைப்பிடித்து ஒழுகுவதன் மூலம் சூழலை காப்போம்.

(ஆ) பாடசாலையில் நடைபெற்ற கல்விக்கண்காட்சி

நான் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி பயில்கின்றேன். எங்கள் பாடசாலையில் கடந்த மாசி மாதம் 12ந் திகதி (12-02-01) கல்விக்கண்காட்சி ஒன்று நடைபெற்றது. முதலாம் வகுப்பு மாணவர்கள் முதல் க.பொ.த உயர்தர மாணவர்கள் வரை உருவாக்கிய பல்வேறு பொருட்களும், ஆசிரியர்கள் தயாரித்த கற்பித்தல் உபகரணங்களும் இக் கல்விக் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன.

முதலாம் வகுப்பு மாணவர்கள் பல்வேறு கழிவுப் பொருள்களை பயன்படுத்தி ஆக்கிய மாலைகள், பொம்மைகள், அலங்காரப்பொருட்கள் ஆகியனவும், அவர்கள் வரைந்த சித்திரங்களும் இக் கல்விக்கண்காட்சியில் என் கவனத்தை ஈர்த்தன.

நான்காம் வகுப்பு மாணவர்கள் தாங்கள் விரும்பிப் பாடும் பாடல்களைத் தொகுத்து "பாலர் புத்தகம்" என்ற பெயரில் கண்காட்சிக்கு வைத்திருந்தனர். இவர்கள் தென்னங் குறும்பை, ஈர்க்கு முதலியவற்றைப் பயன்படுத்தி அழகிய தேர்களையும் ஆக்கியிருந்தனர். "தேர் வருகுது, தேர் வருகுது" என்ற தலைப்பில் இத் தேர்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தமை பார்வையாளரை பெரிதும் கவர்ந்தன. ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் தேங்காய்ச்சிரட்டை, தென்னை ஈர்க்கு போன்றவற்றை வர்ணத்தால் நிறந் தீட்டப்பட்ட ஒரு நடன மாதையும், வாத்தியக் [illegible]வயும் சித்திரிக்கும் வகையில் கைப்பணி வேலைகளை உருவாக்கியிருந்தனர். தம்புரா, [illegible]ணை, மென்டலின் போன்ற கீழைத்தேய வாத்தியங்களை கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி ஆக்கியிருந்தனர்.

ஆறாம் வகுப்பு மாணவர்கள் இலங்கையின் வடிவமைப்பை களிமண்ணால் செய்து அழகிய நிறந்தீட்டியிருந்தனர். இதில் மகாவலி கங்கை, பேதுருதாலகால மலை உட்பட்ட மத்திய மலைநாட்டுப்பிரதேசம், யாழ்ப்பாணக்குடாநாடு போன்றவற்றையும் குறிப்பிட்டு காட்டியிருந்தனர். எங்கள் வகுப்பு மாணவர்கள் மீனவர்களின் தொழிலை சித்திரிக்கும் வகையில் கடலில் மீன்பிடித் தொழில் நடைபெறும் முறையை பல்வேறு உருவங்கள் மூலம் அழகுற அமைத்திருந்தனர். தற்போதைய சூழ்நிலைக்கமைய இது அமைந்தமை குறிப்பிடத்தக்கது. எங்கள் பாடசாலை மாணவியர்கள் தயாரித்த மனையியற் பொருட்களும், கைப்பணிப்பொருள்களும் இப் பொருட் காட்சியில் முக்கிய இடம்பெற்றிருந்தன. க.பொ.உயர்தர விஞ்ஞான பிரிவு மாணவர்கள் தமது உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர்ந்திருந்தனர். கணனி, இன்போரெல், பக்ஸ் இயந்திரங்களின் செயற்பாடுகள் பற்றி பார்வையாளர்களுக்கு அழகான முறையில் விளக்கினர். இவற்றை நாமும் பார்த்து மகிழ்ந்தோம். கோட்டக்கல்வி அதிகாரிகள், வலயக்கல்வி அதிகாரிகள், மாகாணக் கல்வி பணிப்பாளர்கள் கண்காட்சிக்கு வருகை தந்தனர். தமது திறன்களை சிறந்த முறையில் வெளிப்படுத்திய மாணவர்களுக்கு பாராட்டுக்களையும், பரிசில்களையும் வழங்கினர்.

(இ) காட்டில் பழங்குடி மக்களுடன் ஒரு சந்திப்பு

நானும் எனது நண்பர்களும் கொழும்பிலிருந்து மஹியங்கனைக்காட்டிற்கு கடந்த மாதம் பஸ்சில் பிரயாணம் செய்தோம். காட்டிற்கு சென்று வேடுவ இனத்தவர் பற்றிய தகவல்களை அறிய ஆவலாக இருந்தோம். எமது நாட்டின் ஆதிக்குடிகள் இயக்கர், நாகர் எனப்படுவோர் ஆவர். விஜயன் குவேனி என்ற இயக்கியையே முதலில் மணம் புரிந்தான். நாம் மஹியங்கனைக் காட்டில் கண்ட வேடர்கள் மிகவும் புதுமையானவர்கள்.

இவர்களின் தலைவன் திஸ்ஸ அப்புகாமி. அவர் தற்போது உயிருடன் இல்லை. அவருடைய மகனே வேடர்களின் தலைவனாகக் கருதப்படுகின்றார். வேடர்கள் தமது பாரம்பரியங்கள், சம்பிரதாயங்கள் அழிந்து போவதை விரும்பவில்லை. தமது இனம் தொடர்ந்தும் பெருக வேண்டும் என்னும் அவா அவர்களிடம் காணப்பட்டது. வேடுவர் காலம் கற்காலத்திற்கு முந்திய காலமென வரலாற்று ஆய்வாளர்கள் கூறுவர். வேடர்கள் ஆரம்பத்தில் மாமிசத்தை பச்சையாக உண்ணப் பழகியிருந்தனர். ஆனால் இன்று நெருப்பில் வாட்டி இறைச்சியை உண்ணும் வழக்கமும் உள்ளது. இலை குழைகளையும் உணவாகக் கொண்டனர். இவர்கள் இலை குழைகள், மரப்பட்டைகள், வேட்டையாடிய விலங்குகளின் தோல்களை ஆரம்பத்தில் உடையாகப் பயன்படுத்தினர். இன்று நெசவினாலான ஆடைகளையும் பயன்படுத்துகின்றனர். கற்குகைகளே ஆரம்ப காலத்தில் இவர்களது வசிப்பிடங்களாக விளங்கின. இன்று காட்டுத்தடிகள், மண்ணைப் பயன்படுத்தி சிறு இல்லங்களில் வாழ்கின்றனர்.

வேடுவர்கள் பல்வேறு குடும்பங்கள் ஒன்று சேர்ந்து கோத்திரம் என்னும் குழுக்களாக வாழ்கின்றனர். செப்பமற்ற ஆயுதங்களால் வேட்டையாடுவதற்கும் எதிரிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் கூட்டு வாழ்க்கை முறை அவர்களுக்கு உதவியாகவிருந்தது. கற்களையும், மரங்களையும், இறந்தவர்களையும் வணங்கினர். ஆரம்பத்தில் வேட்டையாடி உணவு கிடைக்காத போதும் வனவிலங்குகளின் சஞ்சாரத்திற்கு ஏற்ப இடத்துக்கிடம் இடம்பெயர்ந்து செல்ல நேரிட்டது.

இவர்களின் தோளில் எப்போதும் இரும்பாலான கோடரி ஒன்று இருக்கும். இவர்களுக்கு காலஞ்சென்ற சனாதிபதி ஆர். பிரேமதாசா அவர்கள் மாதிரிவீடமைப்புத்திட்டம் மூலம் வீடுகள் கட்டிக் கொடுத்துளளார். இதை இவர்கள் இன்றும் பெருமையுடன் நினைவு கூர்வர். இன்று

சிங்கள மொழியில் பேசுகின்றனர். எம்மை அவர்கள் நன்றாக உபசரித்தனர். அவித்த கிழங்கு வகைகள், மான் இறைச்சி, தேன் என்பவற்றையளித்து பெரும் உபசாரம் செய்தனர். இறந்த தலைவர் திஸ்ஸ அப்புஹாமியை அவர்கள் தமது தெய்வமாகவே இன்னும் கருதுகின்றனர். தேர்தலில் வாக்களிக்கும் உரிமையையும் பயன்படுத்துகின்றனர். வேடர்களின் கரிய மேனி, கரிய நிறம் என்பவற்றைப் பார்த்து அவர்களைக் காட்டுமிராண்டிகளாகக் கருதுவோரும் உண்டு. ஆனால் அவர்களும் மனிதர்களே.

(ஈ) வெகுசனத் தொடர்பு சாதனங்களின் பணி

இன்று வெகுசனத்தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சியினால் உலகமே சுருங்கி ஒரு கிராமமாகி விட்டது. அச்சு ஊடகங்களை விட இலத்திரனியல் ஊடகங்களின் செல்வாக்கு அதிகரித்து வருகின்றது. கணனி முதல் ரோபோ வரை வளர்ந்துள்ளது. இன்று கையடக்கக் கணிப்பொறிகளும் சந்தைக்கு வந்துள்ளன. கணனி ஆசான் தூங்க வைத்து விட்டுக் குழப்பமற்ற மனநிலையில் கற்பிக்கிறார். இன்று நாம் வான வெளி யுகத்தில் வாழ்கிறோம். பல்வேறு கோள்களுக்கும் மனிதன் செல்லக்கூடிய நிலை ஏற்பட்டு வருகின்றது. இவற்றால் உடனடியான பயன்கள் ஏற்பட்டாமற் போகலாம். ஆனால் போக்குவரத்து, செய்திப்பரிமாற்றம், காலநிலை ஆய்வு முதலியவை பற்றிய ஆய்வுக்குக் கோளிடைச்செலவு முயற்சிகள் பெரிதும் உதவி வருகின்றன.

எமது உடலைப் "பொல்லாப் புழுமலி நோய்ப்புன் குரம்பை" என்று ஒருவர் பாடினார். எம்மை அறியாமலே பல நோய்க்கிருமிகள் எமமுடலுட் புகுந்து தொல்லை புரிகின்றன. உடல் இழையங்கள் திடீரென வேலை நிறுத்தம் செய்கின்றன. சகலகலாவல்லவரான மருத்துவருடைய கண் முன்னாலேயே இவை மனித உயிரைக் குடித்து விடுகின்றன. "அறுவை மருத்துவம்" வெற்றி ஆனால் நோயாளி இறந்து விட்டார் என மருத்துவர் விளக்கமளிக்கிறார். இக் குறைபாடு களையெல்லாம் வெல்ல இலத்திரனியல் வழிகாட்டுகிறது. லேசர் எனப்படும் ஒரு வகைக்கதிர் "கத்தியின்றி இரத்தமின்றி" அறுவைச் சிகிச்சை செய்து முடித்துவிடுகிறது. ஒரே கணத்தில் உடலின் குறைபாடுகளை உடனுக்குடன் உடனறிந்து அறிவித்த மருத்துவக் கட்டளைகளை வழங்கி உயிரைக் காக்கும் அமுதமாக இலத்திரனியல் வளர்ந்து வருகிறது.

வெகுசனத் தொடர்பு சாதனங்கள் கட்புலனுக்கு மட்டுமன்றிச் செவிப்புலனுக்கும் விருத்தாக அமையும். படித்தவர்க்கு மட்டுமன்றிப் பாமரருக்கும் பயன்படுகின்றது. பார்ப்போரின் எண்ணக்கரு, சிந்தனை, கற்பனை என்பன விரிவடைகின்றன. நாடு, இன, மத, கோளார்த்த வேறுபாடுகளைக் கடந்து ஊடகங்கள் செயற்படுகின்றன. பல்வேறு தகவல்களை அறியவும், பொது அறிவை விருத்தி செய்யவும், அழகியல் இரசாயனத்தை விருத்தி செய்யவும், பல்வேறு கலைகளை வளர்க்கவும், பேணவும், நவீன தொழினுட்ப உத்திகளைக் கையாளவும் இலத்திரனியல் பயன்படு கின்றன. இவற்றால் தீமைகளும் ஏற்படுகின்றன. மாணவர், இளைஞர் முதலியோர் அளவுக் கதிகமாக பொழுதுபோக்கில் ஈடுபட இலத்திரனியல் சாதனங்களைப் பயன்படுத்துகின்றனர்.மேடை நாடகம், திரைப்படம் போன்ற கலைகள் நலிவடைகின்றன. அறிவுத்தாகம் தணிக்கப்படுகின்றன. போலிப்பகட்டு உணர்வு மேலோங்குகின்றது. பண்பாடு, பாரம்பரியங்கள் முதலியன சிதைவடை கின்றன.

இலத்திரனியல் ஊடகங்கள் தீமைகளையும், சமுதாயப் பாதிப்புக்களையும் தவிர்க்கும் வகையில் நாட்டு மக்களுக்கும், இளஞ் சந்ததியினருக்கும் பயனளிக்கத்தக்க நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பது அவசியம். இன்பப் பொழுதுபோக்கு உணர்வை வளர்ப்பதை மட்டும் நோக்கமாகக் கொண்ட நிகழ்ச்சிகளைக் குறைத்து அறிவு, கலைகள், பண்பாடு, பாரம்பரியங்கள் என்பவற்றை வளர்க்கும் வகையில் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைக்க வேண்டும். இலத்திரனியல் சாதனங்கள் மாணவர்களின் எண்ணக்கரு கற்பனை, சிந்தனை என்பன நன்கு விருத்தி பெற உதவும் பொருட்டுக் கல்விசார் நிகழ்ச்சிகள் பலவற்றை இணைத்துக் கொள்ள வேண்டும்.

(உ) "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"

அத்திப்பட்டி ஒரு சிற்றூர். அங்கே முதியவர் ஒருவர் இருந்தார். அவர் மனைவி காலத் தோடே கண் மூடி விட்டார். முதியவருக்கு ஆண்மகன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் பகீரதன். தந்தையார் தம்மிடமிருந்த பொருள் முழுவதையும் செலவு செய்து அவனைக் கல்வி கற்க வைத்தார். பகீரதனுக்கு கல்வி வேப்பங்காய் ஆகிவிட்டது. படிப்பை நிறுத்திக் கொண்டான். அவனின் தந்தையோ எவர் எவரின் காலைக்கையைப் பிடித்து ஓர் உத்தியோகம் பெற்றுக் கொடுத்தார்.

அவனது கிராமத்தவர்கள் நான் முந்தி நீ முந்தி என்று பகீரதனுக்குப் பெண் கொடுக்க முன்வந்தனர். ஒருவாறு அவனின் திருமணம் இனிது நடந்தேறியது. காலச்சக்கரம் சுழலத் தொடங்கியது. சிறிது சிறிதாக சேமித்த பணத்தைப் பகீரதன் ஊதாரித்தனமாக செலவு செய்யத் தொடங்கினான். அவனுக்கு அரச உயர் அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. வாழ்க்கையை குடியும் கூத்துமாக அனுபவித்தான்.

முதுமையான தந்தையைப் புறக்கணிக்கத் தொடங்கினான். தந்தையின் அவலட்சமாண

தோற்றம் மகன் மனதை வாட்டியது; தனது ஆடம்பர வாழ்க்கைக்காகத் தந்தையை ஒதுக்குப் புறமான தனி இடத்தில் வைத்துப் பூட்டினான். அதற்குள் தந்தையை வெளியில் வராது முடங்கிக் கிடக்கச் செய்தான். தந்தை உணவு உண்பதற்காக உடைந்து போன கோப்பை ஒன்றை அவ்வறையில் வைத்தான். கிழவருக்கு அந்த உடைந்த கோப்பையில் உணவு வழங்கப்பட்டது.

பகீரதன் தந்தையார் உயிரோடு இருப்பது தனக்கு அவமானம் என்று நினைத்தான். எப்போது இறந்து விடுவார் என எதிர்பார்த்தான். தந்தையைப் பராமரிக்க வேண்டும் என்ற அக்கறை அவனுக்கு எள்ளலவேனும் இல்லை. நண்பர்களுடன் மேலைநாட்டு மதுபான வகைகளை ருசி பார்ப்பதிலும், ஆடல், பாடல், கூத்து, கேளிக்கை எனத் தொடர்ந்தும் வாழ்க்கை நடாத்தினான். அவனது தந்தை தன்னை மகன் இழிவாக நடத்துகிறான் என்ற கவலையில் நித்திரையில் இறந்துவிட்டார்.

பகீரதனும் காலவோட்டத்தினுள் அறுபது வயதைக் கடந்து விட்டான். பகீரதனின் மகனும் திருமணம் செய்து விட்டான். பகீரதனுக்கு நீரழிவு வியாதி. அவ் வியாதி அவனை கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்லத் தொடங்கி விட்டது. வியாதியால் பகீரதனும் மெலிந்த கேவலமான தோற்றத்தையடைந்தான். பகீரதனை மகன் ஓர் ஒதுக்குப்புறம்பான அ ாயில் வைத்துப் பூட்டி விட்டான். உடைந்து போன கோப்பை ஒன்றை கொடுத்தான். வேளா வளைக்கு உணவும் கொடுக்கவில்லை. தன்னை வைத்தியரிடம் அழைத்துச் செல்லுமாறு மக ன பகீரதன் கெஞ்சினான். அவன் அதற்குச் சம்மதிக்கவில்லை. அப்பொழுது தான் பகீரதன் தான் செய்த தவறை உணர்ந்து கொண்டான். தன்னைப்போற்றி வளர்த்த தந்தையை தான் உதாசீனம் செய்ததை தீன் மகன் அவதானித்துள்ளான். அதற்கான பதிலே இப்பொழுது தனக்குக் கிடைத்துள்ளது என்பதை உணர்ந்தான்.

2. (அ) வெளிச்ச வீடுகள் நிலத்திலும், கடற்பாறைகளிலும் கட்டப்படும். நிலத்திற் கட்டுவது இலகுவானது. விரைவாகவும் கட்டி முடிக்கலாம். கடற்பாறையில் கட்டுவது கடினம். பல இடர்பாடுகளைக் கொண்டது. நீண்டகாலம் எடுக்கும்.

(ஆ) கல்வியிற் தேர்ச்சி பெற இடைவிடாது கற்க வேண்டும். நாடோறும் கற்பவர் அறிவு பெறுவர். தொடர்ந்து கற்பதால் அறிவு வளரும். ஆதலால் கல்வியை இடையில் நிறுத்தாமல் தொடர்ந்து கற்க வேண்டியது அவசியம்.

(இ) நண்பர்களை அவதானமாக தெரிவு செய்ய வேண்டும். தீய நண்பர்களால் பலர் கெட்டு போயுள்ளனர். எனவே நண்பர்கள் என வருபவரிடம் வார்த்தையை நம்பி அவர்களை நண்பர்களெனத் தீடிரெனத் தீர்மானிக்கக்கூடாது.

(ஈ) சிக்கலான கணித்தல்களைக் கணனி செய்கின்றது. கணனிக்கு சிந்திக்கும் திறனில்லை. கணனி தீர்வு காண மனிதன் உதவுகிறான். கணனியை உருவாக்கியமை மனிதனின் உயர் மதி வலிமையைக் காட்டுகிறது.

3. (1) இசை, ஓவியம், இலக்கியம் என்பன ஆற்றல் மிக்க கலைகளாகும்.

(2) அக் கலைகள் காலாகாலமாகத் தமது செல்வாக்கை நிலை நாட்டின.

(3) ஒரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பு பின்னால் வரும் கண்டுபிடிப்பினால் முதன்மை இழந்து விடும் என்பதைப் புலப்படுத்துவதே ஆசிரியரின் நோக்கம்.

(4) குறிப்பிட்ட காலப்பகுதியில் மட்டும் மூவரது பணிகளும் மகிமை பெறுகின்றது.

(5) ஒரு விஞ்ஞானக்கண்டு பிடிப்பை ஒருவர் கண்டுபிடிக்காவிட்டால் இன்னொருவர் அதைக் கண்டு பிடிக்க வாய்ப்புண்டு. ஆனால் கலைப்படைப்பைப் பொறுத்தவரை இது பெருந்தாது. ஒருவரது கலைப்படைப்பைப் போல இன்னொருவர் படைக்க முடியாது.

(6) சிலப்பதிகாரம் தோன்றிய காலத்திலும் பார்க்க இன்று அது கூடிய ஆதிக்கம் பெற்று விளங்குகிறது.

(7) மேதை - அறிஞர், அறிவாளி, மேதாவி, நிபுணன்.
மகிமை - சிறப்பு, மேன்மை, கீர்த்தி, புகழ், மாண்பு
நிலைபேறு - நிலைத்திருத்தல், உறுதி, நிச்சயம், நிரந்தரமானது.

4.

மகா வித்தியாலய வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.
01.12.2001

ஆசிரியர்,
"தினத்தந்தி"
யாழ்ப்பாணம்.

வீதி விபத்து

ஐயா,

இன்று வீதி விபத்துக்கள் பெருகி வருகின்றன. இவற்றிற்கான காரணங்கள் பலவாகும். வீதிகளின் நிலை, பாதசாரிகளின் போக்கு, மது போதையில் வாகனம் ஓட்டுதல், வீதி விதிகள் கவனிக்கப்படாமை என்பன இக் காரணங்களுள் குறிப்பிடத்தக்கதாகும். நீண்டகாலமாக வீதிகள் அவை சிறிய ஒழுங்கைகளாயினும் சரி, பெரிய வீதிகளாயினும் சரி திருத்தப்படாதிருக்கின்றன. கற்களையோ, தார்ப்பூச்சுக்களையோ காணாத வீதிகளே பெரும்பான்மை. பள்ளம் மேடுகளில் சில குறுணிக்கற்களை இட்டு மண்ணால் மூடி தாரால் மெழுகிவிடும் திருத்தங்களை நாம் திருத்தமெனக் கொள்ளவில்லை. நிரந்தரமான உறுதியான திருத்தங்களையே குறிப்பிடுகின்றோம். எனவே ஆட்சியாளர் வீதித்திருத்தங்களுக்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற் கொள்ளல் அவசியம். மினிபஸ் சாரதிகள் பிரயாணிகளை முதலில் ஏற்றுவதற்கு போட்டி போட்டு ஓடுகின்றனர். இதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால் வீதிகளோ அகலமாக்கப்படவில்லை. சாரதிகள் மதுபோதையில் வாகனமோட்டுகின்றனர். அனுபவமற்றவர்களும் லைசென்ஸ் உரிமைப்பத்திரம் பெறாதவர்களும் வாகன மோட்டுகின்றனர். பாதசாரிகள் வீதி ஒழுங்குகளை அறியாமல் நடைபாதைகளை விடுத்து நடு வீதியாற் செல்லல், குறுக்காக வீதியைக் கடத்தல் ஆகிய செயல்களில் ஈடுபடுவது தடை செய்யப்பட வேண்டும். வீதிப்போக்குவரத்துப் பொலிசார் இதற்கு உடன் நடவடிக்கை எடுப்பது அவசியம்.

இங்ஙனம்,
சி. சங்கீர்த்தனன்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2001 டிசெம்பர்

தமிழ் மொழியும் இலக்கியமும் III

விடைகள்

1. (அ) (i) பூங்குன்றனால் (ii) இளநகருக்கு அல்லது இளநாகனுக்கு
(iii) புதையல் குடத்துடன் இளநாகனும் பூங்குன்றனும் அரசவையில் நுழைந்த போது, அங்கு அரியணையில் சிறுவன் அமர்ந்திருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்த வேளை
(iv) புதையல் குடம் தொடர்பானது.

(ஆ) (i) அரிச்சந்திரனால் (ii) சந்திரமதிக்கு
(iii) சந்திரமதி இறந்த மகனின் உடலைச் சுடுகாட்டில் தகனம் செய்ய ஆயுத்தமான வேளை
(iv) உடலைத் தகனம் செய்வதற்காகக் கொடுக்கப்படும் பொருள்கள் ஒரு முழத்துண்டு, வாய்க் கரிசி, காற்பணம்

(இ) (i) தீவதிலகையால் (ii) மணிமேகலைக்கு
(iii) வைசாக பூர்ணிமை தினத்தில் கோமுகிப் பொய்கையிலிருந்து அமுதசுரபி என்ற அட்சய பாத்திரம் மணிமேகலையின் கையை அடைந்த வேளை
(iv) அமுத சுரபி (அட்சய பாத்திரம்)

(ஈ) (i) இராவணனால் (ii) அங்கதனுக்கு (iii) இராமன்
(iv) "அறக்கடவுள் சாட்சி உண்டு" அல்லது "உறுதியான சாட்சி உண்டு" அல்லது "தகுந்த சாட்சியுண்டு"

(உ) (i) பெரிய புராணம் (திருத்தொண்டர் புராணம்) (ii) மனைவியால்
(iii) இளையான்குடிமாறநாயனருக்கு
(iv) நள்ளிரவில் வந்த விருத்தினருக்கு திருவமுது எவ்வாறு சமைப்பது என்று மாறனார் கேட்ட வேளை.

2. (அ) அந்த இடத்தில் கருணைக்கு அரசனான இறைவனின் கட்டளையை மீறிய கொடியவர்களை அக்கினி நரகத்துள் தள்ளுதல் நிச்சயமென்று பொருத்தமுடைய இம் மறைநூல் கூறுவதை ஆராய இந்தத் துன்பக் கடலுள் அமிழ்ந்தினேன்.
துயர் கடல் அமிழ்தினேனாரோ - துயர்கடல் - உருவகம் - துயரமாகிய கடல் என விரிக்கலாம். "துயர் கடலில் அமிழ்ந்தினேன்" என்பது பெருந்துன்பத்திற்குள்ளாகியதை உணர்த்துகிறது.
'ஆரோ" - அசைச்சொல் - பொருளின்றி வந்துள்ளது.

(ஆ) அறிஞர் கூடியுள்ள சபையிலே தனக்கு நீட்டப்பட்ட ஓர் ஓலையை வாசிக்க முடியாமலும் குறிப்பறிந்து நடவாமலும் நிற்பவர், காட்டிலே கிளை கொம்புகளுடன் வளர்ந்து நிற்கும் மரங்களை விட நல்ல மரமாவர் (என இகழ்ந்து கூறியுள்ளார்).

குறிப்பறிய மாட்டாதவன் நன்மரம் 'குறிப்பறிய மாட்டாதவன்' என்பது ஓலையில் குறிக்கப்பட்டதை அறியாதவன் என்ற கருத்தையும், சபையிலுள்ளோரின் மனக்குறிப்பை அறிந்து நடக்க முடியாதவன் என்ற கருத்தையும் உணர்த்துகிறது. உணர்வு பகிர்வு செய்ய முடியாத காரணத்தினால் சாதாரணமரம் அல்லது நல்லமரம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது உருவக அணி.

(இ) அழிவில்லாத அரிச்சந்திரனுக்கு மட்டுமே இல்லாமல், தொலைதல் இல்லாத தேவர்க்கும் தென்படாத எனது தாலி, இந்தப் புலையன் காணும்படியான நிலைமையை அடைந்து விட்டதோ என நினைந்துச் சந்திரமதி உலைக்களத்தில் வைத்த மெழுகைப் போல உருகி வருந்தினாள்.

உலையின் மீது மெழுகொத்து உருகினாள்

இத் தொடரில் உவமையணி உள்ளது. தீயில் இடப்பட்ட மெழுகு போல உருகினாள். உவமானம் - உலை மீது மெழுகு, உவமேயம் - சந்திரமதி, பொதுத்தன்மை - நிலைகுலைதல் (உருகுதல்)

(ஈ) ஆகாயத்தை மறைத்து நின்ற நீண்ட வலிமையான கொடிகளைக் குடைகள் மறைத்தன. படைவீரர்கள் விரைவாகச் சென்றமையால் எழுந்த நுண்மையான தூசு இருள் தரும் வகையில் உலகத்தை மறைத்தன. இறைச்சியை உண்ண விரும்பும் பேராயுதங்களான குந்தம், கோணம், கட்கம், அம்பு, பாலம் என்பன ஒளி வீசும் வண்ணம் படைவீரர்களின் கைகளில் ஏந்தியவாறு போர்க்களத்திலே படைகள் அணிவகுத்துச் சென்றன.

வானக மறைத்த நீண்டவன் கொடி குடை மறைத்த

இயற்கையாக வளர்ந்து உயர்ந்து வானத்தை மறைத்து நின்ற வலிமையான கொடிகளை குடைகள் மறைத்தன. இது உயர்வு நவிற்சியணியாகும்.

(உ) திருமாலும் பிரமனும் காண முடியாத தலைவராகிய சிவபெருமானின் திருவடிவம் சோதியாகக் காட்சியளிக்க அதைக் கண்ட நாயனாரும் மனைவியாரும் மிகுந்த மயக்கமடைவதைக் கண்ட ஆன்மாக்களுக்குச் சுகத்தை செய்யும் சங்கரன் ஆகிய சிவபெருமான் மகிழ்ச்சியடைந்து உமாதேவியோடு இடப வாகனத்தில் எழுந்தருளிக் காட்சி கொடுத்து நல்ல குணங்கள் கொண்டவரும், பூசைகள் புரிந்தவருமான இளையான்குடிமாறநாயனாரைப் பார்த்துப் பின்வருமாறு கூறத் தொடங்கினார்.

மாலற் கரிய நாதன் - திருமாலும் பிரமனும் அடிமுடி தேடியும் காண முடியாத மிக்க பெருமையுடைய மூலமூர்த்தி நடராசப் பெருமான் ஆவார்.

3. (அ) இளையான்குடிமாறநாயனாருடைய விருந்தோம்பும் பண்பு சிறப்புப் பெற அவருடைய மனைவியாரே ஆதார சுருதியாக விளங்கினார். இரவு வேளை வந்த சிவனடியாரை உபசரிக்க முடியாத கையறு நிலையை அதாவது இயலாத நிலையைத் தான் முன் செய்த பாவமென வருந்துகிறார். "இனித் தருவாரும் இல்லை. காலமும் கழிந்து நள்ளிரவாயிற்று. மற்றும் சென்று தேடக் கூடிய பிற இடங்களும் இல்லை. தீவினையேன் ஆன எனக்குச் செய்வதற்கு என்ன உள்ளது?" என மேலும் வருந்துகிறார். பின் நாயனாரைப் பார்த்து "இன்று பகலில் வயலில் விதைத்த நீர் முளை நெல்லைத் தாங்கள் வாரிக் கொண்டு வந்து கொடுப்பீர்களானால் என்னால் அமுது படைக்க முடியும்" என்கிறார். "நெல்லைப் பக்குவப்படுத்துவதற்கு அடுப்பில் வைத்து எரிக்க விறகு இல்லை" என்கிறார். நாயனார் கூரையை விறகின் பொருட்டு அறுத்துத்தள்ளினார். நாயனார் வெட்டி விழ்த்திய வரிச்சுக்களை முறித்து அடுப்பிலே நெருப்பு மூட்டி அதில் நெல் முளைகளைப் பதமாக வறுத்தார். அதை அரிசியாய்க் குற்றி எடுத்துச் சுத்தம் செய்தார். உலையில் இட்டு இனிய சோறாக்கினார். "கறிக்கினி என் செய்வோம்" என்று கணவரை இறைஞ்சினார். கணவன் மகிழ்ச்சியுடன் தந்த கீரைகளை இலை வேறு தண்டு வேறாக நன்கு ஆய்ந்து எடுத்தார். நீரில் கழுவினார். பின் பலவகைக்கறிகளாகச் சமைத்தார். பின் கணவரிடம் "ஒப்பில்லாதவரை நாம் இப்போதே விரைந்து திருவமுது உண்ணச் செய்வோம்" என்று கூறினார். வறுமையுற்ற நிலைமையிலும் செம்மையாக விருந்தோம்பும் பண்புடையவராக இளையான் குடிமாறநாயனாரின் பத்தினியார் விளங்குகிறார்.

(ஆ) நமுறாது மன்னன் மிகவும் கொடியவன். அவன் தந்தையாகிய "கன்ஆனைக்" கொன்று ஆட்சியைக் கைப்பற்றினான். தானே உலகின் அதிபதி. தலைவன் என எண்ணுபவன் தன்னாலே தான் உலகம் இயங்குகிறது. உலக மக்கள் அனைவரும் தன்னையே வணங்க வேண்டும் என்ற கொள்கையுடன் வாழ்ந்தவன். இறைவன் அருட்திறனை உணராத அகம்பாவம் கொண்டவன் இறைவனது விருப்பத்திற்கு விரோதமாகச் செயற்பட்டவன். நமுறாது சூழ்ச்சியில் வல்லவன். அவன் தனது வலிமையாலும், சூழ்ச்சியாலும் பல நாடுகளையும் வென்று தனது ஆட்சியை விஸ்தரித்தான். இதனால் பெரும் செருக்குக் கொண்டான். தானே உலகின் அதிபதி என கூறத் தலைப்பட்டான். இறைவனுக்கு இயற்கையாகவோ செயற்கையாகவோ உருவமில்லை என்பதை அறியாதவன். தனது சொந்தக் குணத்தைக் கூட அறியக்கூடிய அறிவு அவனிடம்

இல்லை. புத்தி தெளிவற்றவன் இப்ராஹிம் நபி அவர்களைக் கொல்லச் சூழ்ச்சி செய்தான். செய்யத்தகாத செயல்களைச் செய்து மேன்மை பெறவேண்டுமென நமுறூது விரும்பினான்.

(இ) நல்ல குணம் உள்ளவருக்குச் செய்த உதவி கல்லில் செதுக்கிய எழுத்துப்போல நிலைத்திருக்கும். நற்குணமில்லாத தீயவருக்குச் செய்த உதவி நீர் மேலே எழுதிய எழுத்தைப்போல் மறைந்து விடும். பயனில்லாது போகும்.

நல்ல குணமுடையவர்களைக் காண்பது நல்லது. அவர்கள் கூறும் நல்ல மொழிகளைக் கேட்பதும் நல்லது. அவர்கள் தம் குணங்களைப் பிறருக்கு எடுத்துரைப்பதும் நல்லது. அவரோடு ஒன்றாக சேர்ந்திருப்பதும் நல்லது.

நெற்பயிருக்கு இறைத்த தண்ணீர் வாய்க்கால் வழியாகச் சென்று புல்லுக்கும் உபயோகப் படுகிறது. பழைமையான இந்த உலகில் நல்லவர் ஒருவர் இருப்பதன் காரணமாகப் பெய்யும் மழையானது மற்ற எல்லோருக்கும் பயன்படுகிறது.

4. (அ) பசித்தவருக்கு உணவைக் காட்டி பறிப்பது போல கறுத்த மேகம் மழைமூட்டம் கொண்டு மழை பெய்யாமல் விடுகிறது. இங்கு உவமானம் - பசித்தோருக்கு உணவைக் காட்டிப்பறித்தல், உவமேயம் - கருமேகம் மழை பெய்யாது கலைதல், பொதுத்தன்மை - ஏமாற்றுதல், பசியால் வாடுபவர்கள் சோறு, கறிகளைக் கண்டதும் வாயூறி உண்ணுவதற்கு ஆவலுடன் காத்திருப்பர். ஆனால் அவர்கள் முன் சோறு, கறிகளைக் காட்டி ஏமாற்றும் போது அளவற்ற வேதனையடைவர். அது போல மழை பெய்தமையால் வாட்டமுற்றிருக்கும் மக்கள் மேகம் கறுத்ததும் மழை பொழியப் போகின்றதென ஆவலுடன் காத்திருப்பர். ஆனால் சாப்பிட்ட மேகம் வெளுத்துக் கலங்கியதும் அவர்கள் பெரும் ஏமாற்றத்திற்கு உள்ளாவர். கறுத்த மேகம் இங்ஙனம் வெளுத்துக் கலங்குவதானது பசியால் வாடுவோர் முன் சோறு, கறிகளை காட்டி ஏமாற்றுவது போலாகும். மூசாப்புப் போட்ட மேகம் வெளுத்துக் கலங்கும் நிலையினை அருமையான உவமை மூலம் புலப்படுத்துகின்றது.

வள்ளல் ஒருவரை வாழ்த்தி இன் சொல் கூறித் தன் வறுமையைத் தீர்க்கக் கோருபவருக்கு வள்ளல் பொருள் கொடாமல் பக்கத்தில் இருப்போர் தடுப்பது போல மழை பொழிய வந்த மேகக்கூட்டத்தை மதி கெட்ட வாடைக்காற்று தடுத்து விடுகிறது. இங்கு உவமானம் - வறியோருக்கு பொருள் கொடுப்பதை தடுப்பது, உவமேயம் - மழை மேகத்தை வாடைக்காற்று தடுத்தல். பொதுத்தன்மை - தகாத செயல்.

(ஆ) சகுந்தலை கருவுற்றமையறிந்து கண்ணுவ முனிவர் மகிழ்ச்சியடைந்தார். சகுந்தலையைக் கணவனிடம் அனுப்ப முடிவு செய்தார். கண்ணுவர் சகுந்தலையை நோக்கி "சகுந்தலா! சர்மிஷ்டை முன்னர் யயாதியால் எவ்வாறு மதிக்கப்பட்டாளோ அவ்வாறு நீயும் நின் கணவனின் மதிப்பைப் பெற வாழத்துகிறேன். பூருவைப் போன்ற சகல சிறப்புக்களையும் பெற்ற மன்னர் மன்னான மகனை நீ அடைவாயாக!" என்று ஆசீர்வதித்தார்.

சகுந்தலைக்கு மங்கலப் பொருட்களைக் கொடுக்குமாறு வனதேவதைகளுக்கு கட்டளை யிட்டார். சகுந்தலை தன்னைப் பிரியவிருப்பது பற்றிப் பலவாறு கூறி வருந்தினார். அவளுக்கு வாழ்த்து கூறினார். சகுந்தலையைக் கணவனிடம் அழைத்துச் செல்லுமாறு சங்கரவர்னனைப் பணித்தார். சகுந்தலையின் பயணம் மகிழ்ச்சியைத் தர வாழ்த்தினார். "சகுந்தலை நீ செல்லும் வழியெல்லாம் நல்ல வழியாகவே இருக்கட்டும். பார்க்கும் இடம் எல்லாம் மலர்களும் பசுஞ் செடிகளும் அழகு காட்டட்டும். நன்னீர்த்தடாகங்கள் தண்ணளியை வழங்கட்டும். நறுந்தருக்கள் வழி நெடுகிலும் நிழல் தரட்டும். மந்த மாருதம் வீசட்டும். வன விலங்குகள் வழி விட்டு நிற்கட்டும். எங்கும் மங்கலம் தங்கட்டும். மகளே வன தேவதையை வணங்கி விடை பெற்றுக் கொள்" இவையெல்லாம் நிகழட்டும் என்றார் கண்ணுவர்.

தன் சார்பில் சார்ங்கரவன் ஊடாகக் கண்ணுவ முனிவர் துஷ்யந்தனுக்குச் செய்தி அனுப்புகிறார். "நாம் தவத்தால் செல்வந்தர்கள். நீரோ இந்த நாட்டை ஆள்வதால் செல்வந்தர். இவள் சகுந்தலையோ நும்பால் மிகுந்த அன்புடையவள். அவளை மனைவியாக ஏற்பீர்" என்று கூறி அனுப்புகிறார். சகுந்தலைக்கு புகுந்த வீட்டில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று அறிவுரை கூறுகிறார்.

"குழந்தாய்! சகுந்தலை, நீ எப்பொழுதும் முத்தோருக்கு பணிவிடை செய். கணவன் கோபித்தாலும் சாந்தமாக நடந்து கொள். கர்வம் கொள்ளாதே, புகுந்த இடத்தின் பெருமையையும், பிறந்த இடத்தின் சிறப்பையும் எப்பொழுதும் காத்துக்கொள்" என்று சகுந்தலைக்கு கண்ணுவ முனிவர் அறிவுரை வழங்கினார். முனிவர் சகுந்தலைக்கு துணையாகக் கௌதமியை உடன் அனுப்புகிறார்.

(இ) அந்தோக்கிழவி பல வருடங்களுக்கு பின் திடீரென வீடு வந்த தன் மகனை அன்புடன் உபசரித்து மகிழ்கிறாள். ஆனால் அந்தப் பாவிப்பையன் சொல்லிக் கொள்ளாமலே வீட்டை விட்டு சென்று விடுகிறான். "புட்டு அவிச்சாச்சடா மோனே" போய் முஞ்சியைக் கழுவிற்று வா" என்று மகனை அழைப்பதன் மூலம் அவளது தாயன்பை வெளிக் காட்டுகிறாள். மகனும் சொல்லாமலே போய்விட்டமையை அறிந்ததும் "அப்பனும் இப்படித்தான்" என்று ஆதங்கப்படுகிறாள்.

தபாற்காரச் சங்கரப்பிள்ளை கிழவியைச் சந்தித்த போது "அவசரமாக தந்தி வந்து

போறதாக உன்ர மகன் உன்னட்டச் சொல்லச் சொன்னான். ஆச்சி போய்க் காயிதம் போடுவாராம்" என்று சொன்னார். அவர் சொன்னதைக் கிழவியும் நம்பிவிட்டது. மகனிடமிருந்து காயிதம் வருமென்று கிழவி எதிர்பார்த்திருந்தாள். காயிதம் எதுவுமே வரவில்லை. கடிதம் வரும் வருமென்று தினமும் எதிர்பார்த்திருந்த கிழவி கடைசிக்காலத்திலும் அதே நினைவிலேயே இருந்தாள். மகனின் கடிதம் வரும் வருமென்று எதிர்பார்த்த வண்ணம் அவள் தன் காலத்தைக் கடத்துகிறாள். வேப்பமரம் கிழவிக்குத் தஞ்சமாகிறது.

தன் மகளின் காகிதத்தை காண வேண்டுமென்பதே அந்தோக்கிழவியின் இறுதி ஆசை. அதனாலே அவள் இழுத்துக் கொண்டு கிடந்த போதும் "எடிபுள்ள, காயிதக்காரன் போவான் பாரடி" என்று அடிக்குரலில் சொல்லிக் கொண்டிருந்தாள். அவளின் இறுதி ஆசையை அறிந்த தபாற்காரன் "மகன்ர காகிதம் ஆச்சி" என்று கடிதத்தை அவள் கைக்குள் வைக்கிறான். அப்பொழுது கிழவியின் கைகால்கள் பதறின. கண்கள் நீரைச் சொறிந்தன. முகம் ஆனந்தத்தால் பிரகாசித்தது. கடிதத்தை கண்ணில் ஒற்றிக் கொண்டதும் உயிர் பிரிந்தமை கிழவியின் இறுதி ஆசை எதுவெனவும் மகன் மீது கொண்ட பேரன்பும் புலப்படுகின்றன.

5. (அ) நான் நாச தேசத்தில் இருக்கின்றவன். கொடியவருள் கொடியவன். இறைவனுடைய கோபாக்கினியால் அவிந்த பிறகு பரலோகராஜனால் நியாயத் தீர்ப்பு கிடைக்கும். தமது ஆணையை மீறிய தீயவர்களை இறைவன் நரகத்துள் தள்ளுதல் நிச்சயம். சுருதி நூல் கூறுபவற்றை ஆராய்தலினால் இந்தத் துயரக்கடலுள் அமிழ்ந்தினேன்.

நான் நன்றி கொன்றவன். இறைவனை மறந்து இழிந்த காரியங்களைச் செய்து வீண் பொழுது போக்கிய கொடிய புலையன். தண்டனைக்கு எதிர் நின்று இன்றைக்கு மனஸ்தாபப்படுகின்றது என்ன காரணம் பற்றியோ? சாகவும் மனமில்லை. தண்டனையை எதிர்நோக்கி போகவும் துணிவில்லை. இதற்கு ஈடு செய்யப் பலமும் இல்லை. எனவே நான் பதைக்கிறேன். இதுவே ஆத்துமவிசாரியின் துன்பத்துக்கான காரணத்தை வினாவிய பொழுது ஆத்துமவிசாரி கூறிய பதிலாகும்.

(ஆ) ஆத்துமவிசாரி ஆத்மவிசாரம் கொண்டு அலைபவன். தான் இதுவரை செய்த தவறுகளுக்காக வருந்துகிறான். அதாவது கழிந்ததற்கு வருந்துபவன். இவ்வாறு பாசவெவ்வினையின் மிக்க பாவத்தால் அழுந்தும் நீசனாகித் தன்நிலையினை உணர்ந்து தவிக்கிறான். பரலோகராஜனின் நியாயத்தீர்ப்பின் போது தனக்கு என்ன நேருமோ? என்று கலங்குகிறான். இறைவனது தீர்ப்பையும் தண்டனையையும் எதிர்பார்க்கிறான். தெய்வ நாயகன் திருநகர் செல்லும் வழியறியாது திகைத்து நிக்கிறான். "ஆதியான் திருநகர் அடுக்கும் ஜீவ நற்பாதையை நீ அறிவாயானால் எனக்குக் காட்டு" என்று சுவிசேஷகனை மன்றாடுகிறான். ஆத்துமவிசாரி மரணத்துக்கு அஞ்சுபவன். சாகவும் முடியாது எதிர்நோக்கிப் போகவும் முடியாது தடுமாறும் இயல்புடையவன்.

6. (அ) பொன்னம்மா இந்தியாவிலிருந்து கணவனின் விருப்பப்படி தன் தகப்பன் சகோதரங்கள் தடுத்த போதும் அவற்றைப் புறந்தள்ளி இலங்கைக்குப் புறப்பட்டு வந்தாள். பிழைப்புத் தேடி கணவனுடன் கடைசித்தம்பி வேலாயுதத்துடன் வந்தாள். மலைநாட்டில் தேயிலைத்தோட்டங்களில் வேலை செய்து பாராட்டு வாங்கினாள். பொன்னம்மா தன் மூத்த மகள் பாக்கியத்தை தம்பி வேலாயுதத்துக்கு திருமணம் செய்து வைத்தாள். மற்ற மகள் இடையில் இறந்து போனாள். தம்பிக்கு பிள்ளை இல்லையே என்று கவலைப்படுகிறாள். காலப்போக்கில் ஊரிலிருந்து மரணச்செய்திகளும் சுப செய்திகளும் வருகின்றன. ஆனால் அவளுக்கு அங்கு செல்ல முடியவில்லையே என்ற ஏக்கம் மனதை வாட்டுகின்றது.

ஒரு நாள் தம்பியுடன் கோபித்துக் கொண்டு வேறொரு தோட்டத்துக்குப் போய் வேலையிற் சேர்ந்து கொண்டாள். இறுதிக் காலத்தில் எழுந்து நடக்க முடியாத நோயாளி ஆகிறாள். இருமல் வாட்டுகின்றது. பின் தம்பியையும் மகளையும் தான் வேலை செய்யும் தோட்டத்துக்கு அழைத்து வருகிறாள். தம்பியையும் மகளையும் பிரிந்து வாழ்ந்த போது தன்னை அநாதை எனக் கூறி பிரஜாவுரிமை பெறுகிறாள். அதன் பின் வீளைவுகளையும் யோசிக்காதவள். இப்பொழுது தம்பிக்கும், மகளுக்கும் பிரஜாவுரிமை எடுக்க முடியவில்லை. கடைசிக்காலத்தில் இந்தியாவிலுள்ள தனது ஊருக்குச் செல்ல வேண்டும் என்று பொன்னம்மா பெரிதும் ஆசைப்பட்டாள். கண்டியிலுள்ள இந்திய ஹைகமிசனர் அலுவலகத்துக்குச் செல்லுமாறு தம்பியை நச்சரிக்கிறாள். ஹைகமிசனர் அலுவலகத்துக்குச் சென்று வோலாயுதம் திரும்பும் போது அக்காவின் கதை முடிந்துவிட்டதை அறிகிறான். "அக்கா நீ கேட்ட எதுவும் முடியவில்லையே!" என்று கூறுவதிலிருந்து தனது இறுதிக்கால எண்ணங்கள் நிறைவேறாது பொன்னம்மா இறக்கிறாள்.

(ஆ) வறுமை மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் ஒன்றாகும். அதன் காரணமாக குடும்பப்பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். வேலாயுதம் தனது மனைவியின் காதுக்கொப்புக்களை அக்காவின் ஆசையை நிறைவேற்றுவதற்காக அடைவு வைக்கிறான். தட்டுமுட்டுச் சாமான்களைக் கூட விற்கிறான்.

பிரசாவுரிமை பெறுவதில் பல்வேறு பிரச்சினைகளைத் தோட்டத்தொழிலாளர்கள் எதிர்நோக்குகின்றனர். தோட்டத்தில் தான் யாருமற்ற அநாதை என்று பதிவு செய்ததால் பொன்னம்மா இந்தியாவிற்கு போக முடியவில்லை. அவளுக்கு இலங்கைப் பிரசாவுரிமை கிடைத்து விடுகின்றது.

தேயிலைத்தோட்டத்தில் கடின உழைப்பு எதிர்பார்க்கப்படுகின்றது. தோட்டங்களில் வேலையின்மை, உரிய சம்பளம் வழங்கப்படாமை, வசிப்பதற்கு நல்ல வசதியுள்ள வீடு இல்லாமை, போக்குவரத்து வசதிக்குறைவு, போதிய வைத்திய வசதியின்மை போன்ற பிரச்சினைகள் மலையக மக்கள் எதிர்நோக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகள் ஆகும். பொன்னம்மா விரும்பிய போது தாய்நாடான இந்தியா சென்று உறவினரின் இன்பதுன்பங்களில் பங்கு கொள்ள முடியாத அவல நிலையை எதிர்நோக்குவ பொன்னம்மா என்ற பாத்திரம் மூலம் மலையகத் தோட்ட லயத்து வாழ்க்கை யினையும், மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் கஷ்ட நிலைமைகளையும் ஆசிரியர் எடு த்துக் காட்டுகிறார்.

7. (அ) பொருளிலார் - இவ்வுலக வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாதது என்கிறார் வள்ளுவர். 'பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை' என்று தெள்ளத் தெளிய உரைத்த பெருமை வள்ளுவ ரையே சாரும்.

பொருளிலாருக்கு உற்றார் இல்லை. உறவினர் இல்லை. எந்நாளும் அவர்களுக்கு ஓயாத தொல்லை ஆதலால் பொருள் செய்தல் முதற்கடன் என்று வற்புறுத்துகின்றார் பாரதியார்.

"பொருளிலார்க்கில்லை இவ்வுல கென்றநம்
புலவர் தம்மொழி பொய்யாமொழி அகன்று காண்
பொருளிலார்க்கு இன்பமில்லை துணையில்லை
பொழுதெலாம் இடர்வெள்ளம் வந்தெற்றுமால்
பொருளிலார் பொருள் செய்தல் முதற்கடன்"

என்னும் செய்யுளில் வள்ளுவரின் வாக்கைத் தழுவி உரைக்கின்றார். பொருளிலார்க்கு இன்பமில்லை. துணையில்லை. எப்பொழுதும் துன்பமாகிய வெள்ளம் அலைக்கழிக்கும். பொரு ளிலார் பொருள் செய்தல் பிரதான கடமையாகும்.

(ஆ) சினம் - செம்மையை அழிப்பது சினம். சேர்ந்தோரைக் கொல்லி என்பது நெருப்பின் பெயர்களுள் ஒன்று. தான் சேர்ந்த இடத்தை அழிக்கும் தொழில் உடையதாதலால் நெருப்பைச் சேர்ந்தாரைக் கொல்லி எனவழைப்பர். வள்ளுவர் சினம் என்னும் நெருப்பு சேர்ந்தாரைக் கொல்லும் என்கிறார்.

"கோபத்தை வென்றிடலே பிறவற்றை தான் கொல்லுவதற்கு வழியென நான் குறித்தி ட்டேனே" என்பது பாரதியார் பாட்டு.

"சினம் என்னும் சேர்ந்தோரைக் கொல்லி இனம் என்னும் ஏமப்புணையச் சுடும்"

என்ற குறட்பாவின் கருத்து இப்பாடலில் அடங்கியுள்ளது. பாரத நாட்டு விஞ்ஞான வித்தகர் ஜகதீசசந்திரபோஸ் என்பவர்.

"கோனாகிச் சாத்திரத்தை ஆளும் மாண்பார்
ஜகதீச சந்த்ரவசு கூறுகிறான்
ஞானானுபவத்தில் இது முடிவாம் கண்டீர்
நாடியில் அதிர்ச்சியினால் மரணம் என்றான்" எனக் குறிப்பிடுகிறார். மேலைநாட்டு முறையில் 'வசு' என்னும் விஞ்ஞானப்புலவர் கண்டமுடிபும், இந்நாட்டு மெய்ஞ்ஞான மேதையர் கொண்ட கொள்கையும் ஒத்திருத்தலைப் பாரதியின் பாடலகளில் எடுத்துரைக்கப்படுகின்றது.

(இ) அறம் - வள்ளுவர் அறத்தான் வருவதே இன்பம். மற்றயவை புறத்தன. புகழும் அற்றவை இன்பம் பெறுவதற்குரிய வழி என்ன? பல வழிகள் உண்டென்பர். வள்ளுவர்"அறத்தால் வருவதே இன்பம்" என்று அறுதியிட்டுரைக்கின்றார்.

"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல"

என்ற வள்ளுவரின் பொய்யாமொழி பாரதியார் மனதை பெரிதும் ஈர்த்தது. வள்ளுவர் உலகனை த்துக்கும் பயன்படும் வகையில் கூறிய விடயத்தைப் பாரதியார் இனிய முறையில் உரைக்கின்றார்.

"அறம் ஒன்றே தரும் மெய்யின்பம் என்ற நல்
அறிஞர் தம்மை அணுதினம் போற்றுவேன்!
பிற விரும்பி உலகினில் யான்பட்ட
பீழை எத்தனை கோடி! நினைக்கவும்
திறன் அழிந்து என் மனம் உடை வெய்துமால்!
தேசத்துள் இளைஞர் அறமினோ!
அறம் ஒன்றே தரும் மெய்யின்பம், ஆதலின்
அதனையே துணை என்று கொண்டுய்திராய்"

என்ற வள்ளுவர் வாய்மொழியை வாயார வாழ்த்துகிறார் பாரதியார். அறம் ஒன்றே உண்மையான இன்பம் தரும் என்ற அறிஞர் தம்மை அணுதினமும் போற்றுவேன் என்றுரைப்பதன் மூலம் வள்ளுவர் வாய்மொழியைப் பாரதியார் பொன்னே போற் போற்றுகின்றார்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2000 டிசெம்பர்

தமிழ் மொழியும் இலக்கியமும் I

45 நிமிடங்கள்

● பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. "கைகேயி என்ற பெயரில் ஒரு மறலி தசரதனுக்கு வந்து வாய்த்தாள்." இங்கு மறலி என்பதன் ஒத்த கருத்துச் சொல்
(1) மனைவி (2) கொடியவள் (3) மகன் (4) இயமன்

2. "அறப்பயனும் தான் சிறிதாயினுந் தக்கார் கைப்பட்டக்கால் வான் சிறிதாகப் போர்த்துவிடும்." - இங்கு தக்கார் என்பதன் ஒத்த கருத்துச் சொல்
(1) பெரியோர் (2) இளையோர் (3) சிறியோர் (4) மூத்தோர்

3. "வைகலும் வைகல் வரக்கண்டும்....." என்பதில் வைகல என்னுஞ் சொல் இரு வேறு பொருள்களில் வந்துள்ளது. அவை முறையே
(1) நாள்தோறும் ; பார்த்தல் (2) நாள்தோறும் ; வாழ்நாள்
(3) நாள்தோறும் ; வாழ்நாள் கழிதல் (4) நாள்தோறும் ; இறத்தல்

4. வெயிலில் நின்றவனுக்குத் தான் நிழலின் அருமை தெரியும் என்பார்கள். அருமை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
(1) பெருமை (2) சிறுமை (3) எளிமை (4) இனிமை

5. அகந்தை கொண்டவர் அழிவது உறுதி. அகந்தை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
(1) செருக்கு (2) பணிவு (3) செல்வம் (4) கீழ்மை

● பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

6. அவன்..... வாங்கிய கடனை இன்னுந் திருப்பித்தரவில்லை.
(1) கைமாறாக (2) கைமாத்தாக (3) கைமாற்றாக (4) கைம்மாற்றாக

7. நோயாளிக்குச் ..... நல்லதொரு பானமாகும்.
(1) செவ்விளனி (2) செவ்விளநீர் (3) செவ்விளனீர் (4) செவ் இளனி

8. கைது செய்யப்பட்ட மகனைப் பற்றிய விபரம் எதுவும் தெரியாத காரணத்தால் தந்தை நீதிமன்றத்தில் ..... சமர்ப்பித்தார்.
(1) வழக்கு (2) முறைப்பாடு (3) விண்ணப்பம் (4) கொண்ணவு மனு

9. அட்சரம் என்பது வடசொல்லானால் ..... என்பது அதற்கு நிகரான தமிழ்ச்சொல்.
(1) அக்கரம் (2) எழுத்து (3) சொல் (4) வாக்கியம்

10. எவரும் வெளியே போகக் கூடாது எனத் தடை விதித்தபோதிலும், அந்த மேலதிகாரி இருவருக்கு ..... அளித்தார்.
(1) விதிவிலக்கு (2) உறுதிமொழி (3) உத்தரவு (4) தண்டனை

● பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

11. குறித்த ஒரு நாட்டினது பொருள்களுக்கும் சேவைகளுக்கும் வெளிநாட்டிலுள்ள பெறுமானம்
(1) பணவீக்கம் (2) பண்டமாற்று (3) நாணயமாற்று (4) செலாவணி

12. தமிழ்மொழி எழுத்துகள் ஒழுங்குமுறையில் அமைந்த அட்டவணை
(1) அகராதி (2) அரிச்சுவடி (3) பாலர் பாடம் (4) தமிழெழுத்து மட்டை

13. பகையுமின்றி நட்புமின்றி நடுநிலையில் நிற்போர்
(1) தரகர் (2) முனிவர் (3) நொதுமலாளர் (4) தவிசாளர்

14. மலையும் மலை சார்ந்த இடமும்
(1) குறிஞ்சி (2) மருதம் (3) முல்லை (4) நெய்தல்

15. ஒரு நூலுக்கு நூலாசிரியர் அல்லாத பிறர் வழங்கும் புகழுரை
(1) முகவுரை (2) சிறப்புரை (3) அணிந்துரை (4) முன்னுரை

● **பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16. "ஆனைக்கும் அடி சறுக்கும்" என்ற பழமொழியின் கருத்து
(1) செல்வரும் வறியவர் ஆவர். (2) ஆண்டியும் அரசன் ஆவான்.
(3) எல்லா மிருகங்களுக்கும் அடி வழுக்கும். (4) வல்லமை மிக்காரும் தவறுவர்.

17. கேடு விளைந்த பின்னர் அதனைத் தடுக்க முயல்வது பயனற்றது என்னும் பொருள் தரும் பழமொழி
(1) கண் கெட்டதன் பின்னரா சூரிய வணக்கம்?
(2) அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
(3) ஊர் வாயை மூட உலை மூடி இல்லை.
(4) வெள்ளம் வருமுன்னே அணை கட்டவேண்டும்.

18. 'தவிடு பொடியாதல்' என்ற மரபுத் தொடரின் பொருள்
(1) விரைந்தோடிப் போதல் (2) முழுவதும் நிலை குலைதல்
(3) வீணாகிப் போதல் (4) தன்வயப்படுதல்

19. பணிந்து போதல் என்ற பொருளைத் தரும் மரபுத்தொடர்
(1) வாலைக் கீழே போடல் (2) வால் கட்டுதல்
(3) வால் முறுக்குதல் (4) வாலாட்டுதல்

20. ஒன்றிலும் ஈடுபடாது இருத்தலை விளக்குவதற்குப் பொருத்தமான உவமைத் தொடர்
(1) குடத்துள் விளக்குப் போல (2) கிணற்றுத் தவளை போல
(3) ஓடும் புளியம்பழமும் போல (4) இலை மறை காய்போல

● **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. பெயராகவும் வினையாகவும் அமையும் ஒரு சொல்
(1) உண் (2) கல் (3) அழகு (4) அறிவு

22. "வண்டின் கால்" என்ற தொடரில் வண்டின் என்பதில் வந்த 'இன்'
(1) வேற்றுமையுருபு (2) சாரியை (3) விகுதி (4) இடைநிலை

23. "மன்னன் கோன்முறை அரசு செய்க." இவ்வாக்கியத்திலே உள்ள செய்க என்பது
(1) வினையெச்சம் (2) பெயரெச்சம்
(3) வினையாலணையும் பெயர் (4) வியங்கோள் வினைமுற்று

24. வினைச்சொல்லிலே காலங்காட்டாத ஓர் உறுப்பு
(1) பகுதி (2) விகுதி (3) சாரியை (4) இடைநிலை

25. பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் தொடர்ந்து நிற்கும் தொடர்மொழி
(1) பாற் சோறு (2) நிலம் பிளந்தது (3) கார் கூந்தல் (4) மற்றொன்று

26. கூவு, கூவிற்று என்பது போல இறந்த காலத்திலே அமையக்கூடிய பிறிதோர் வினை
(1) அறி (2) கொடு (3) நட (4) ஓடு

27. "பாண்டவர்க்குத் தூது நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே" - இங்கே நடந்தான் என்பது
(1) வினையாலணையும் பெயர் (2) இறந்த கால வினைமுற்று
(3) குறிப்பு வினைமுற்று (4) காலங்காட்டுந் தொழிற் பெயர்

28. பின்வருவனவற்றுள் வாக்கியமாக அமைவது
(1) சும்மா (2) போ (3) பறவை (4) நனி

29. பின்வருவனவற்றுள் எழுவாயும் செய்யப்படுபொருளும் தொக்கு நிற்கும் வாக்கியம்
(1) வேகமாய் ஓடு (2) உண்மை பேசு (3) கடைக்குப் போ (4) நன்றாய்ப படி

30. "வானக் கடலில் வெள்ளியோடம் ஒன்று கண்டேன்." இங்கு வானக் கடல் என்பதில் உள்ள அணி
(1) உவமை (2) உருவகம் (3) தன்மை நவிற்சி (4) உயர்வு நவிற்சி

● பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றினதும் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

31. எமது முன்னோர்
(1) மூட நம்பிக்கையும் பழைய கொள்கை உடையவர்களாகவும் வாழ்ந்தனர்.
(2) மூட நம்பிக்கையும் பழைய கொள்ளையும் உடையவர்களாய் வாழ்ந்தனர்.
(3) மூட நம்பிக்கையும் பழைய கொள்கை உடையவர்களாகவும் வாழ்ந்தனர்.
(4) மூட நம்பிக்கையும் பழைய கொள்கையும் உடையவர்களாகவும் வாழ்ந்தனர்.

32. அந்த மரத்திலே காணப்படுகின்ற
(1) ஒவ்வொரு பழங்களும் இனிமையானவை.
(2) ஒவ்வொரு பழங்களும் இனிமையானது.
(3) ஒவ்வொரு பழமும் இனிமையானவை.
(4) ஒவ்வொரு பழமும் இனிமையானது.

33. நீ கவனமாகப் படித்தாலன்றி,
(1) பரீட்சையில் சித்தியடைவாய். (2) பரீட்சையிற் சித்தியடைகிறாய்.
(3) பரீட்சையிற் சித்தியடைய மாட்டாய் (4) பரீட்சையிற் சித்தியடையவில்லை.

34. பஸ் வண்டியிலுள்ள ஆசனங்களை அசுத்தப்படுத்துவதோ
(1) கீறிக் கிழிப்பதோ பொதுச் சொத்தைப் பாழாக்குஞ் செயலாகும்.
(2) அல்லது கீறிக் கிழிப்பதோ பொதுச் சொத்தைப் பாழாக்குஞ் செயலாகும்.
(3) கீறிக் கிழிப்பதோ பொதுச் சொத்தைப் பாழாக்குஞ் செயல்களாகும்.
(4) அல்லது கீறிக் கிழிப்பதோ பொதுச் சொத்தைப் பாழாக்குஞ் செயல்களாகும்.

35. மகாத்மா காந்திக்குச் சத்தியமும் அகிம்சையுமே
(1) வாழ்க்கையின் குறிக்கோளாய் இருந்தது.
(2) வாழ்க்கையின் குறிக்கோளாய் இருந்தன.
(3) வாழ்க்கையின் குறிக்கோள்களாய் இருந்தது.
(4) வாழ்க்கையின் குறிக்கோள்களாய் இருந்தன.

● பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

விலங்குகளுக்குப் பேசுந் திறன் இல்லை. அவைகளுக்குச் சொல்லோ மொழியோ இல்லை. பறவைகளுக்கும் அவ்வாறான நிலைமையே உள்ளது. சிற்சில பறவைகள் நாம் பழக்கிக் கொடுத்தால், நம்மைப்போல் இரண்டொரு சொற்களை மழலையாகப் பேசுகின்றன - கிளியைப் போல. ஆனால், அவை பொருள் தெரிந்து, சொல்லை அறிந்து பேசுவதில்லை. அவற்றுக்கெல்லாம் குரல் இருக்கிறது. வாய் திறந்து சில ஒலிகளை அவை வெளியிடுகின்றன. அவற்றின் கோபக் குரல், அன்புக் குரல் முதலியவற்றை நாம் ஓரளவு சிறிதோ பெரிதோ நம்முடைய அனுப்வத்திற்கு ஏற்பத் தெரிந்துகொள்ள முடிகிறது. உதாரணமாக, நாய் கோபத்தோடு உறுமுவதையும், அன்போடு கொஞ்சிக் குரைப்பதையும் நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. பூனை 'மியாவ்' என்று கத்திக் கொண்டு நம் அண்டை வந்து, அன்போடு நமது காலால் தனது உடலைத் தேய்த்து உரசி, உணவு வேண்டும் என்று இரப்பதையும், மற்றொரு பூனையைக் கண்டால், சீறி உடல் சிலிர்ப்பதையும் நாம் கண்டுகொள்ள முடிகிறது.

36. இப்பந்தியின் பிரதான கருத்து யாது?
(1) விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் சொல்லோ மொழியோ இல்லை.
(2) சிற்சில பறவைகள் நாம் பழக்கிக் கொடுத்தால் நம்மைப் போலச் சொற்களை மழலையாகப் பேசும்.
(3) பறவைகள் பொருள் தெரிந்து சொல்லை அறிந்து பேசுவதில்லை.
(4) பிராணிகள் வேறுபட்ட குரல் ஒலிகள் மூலம் வெளிப்படுத்தும் உணர்வுகளை, அனுபவத்தின் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

37. பந்தியின் பிரதான கருத்து எவ்வாறு எடுத்துக் கூறப்படுகின்றது?
(1) இயற்கை விதிகளை எடுத்துக் காட்டி விளக்கப்பட்டுள்ளது.
(2) உதாரணங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளது.
(3) ஒருமைப் பாட்டைக் காட்டுவதன் மூலம் விளக்கப்பட்டுள்ளது.
(4) தெளிவற்ற முறையில் விளக்கப்பட்டுள்ளது.

38. இப்பந்தியின் இறுதியிலே பூனையைப் பற்றிய கூற்று
(1) பிரதான கருத்தோடு பொருத்தமற்றது.
(2) பிராணிகளின் மீது பாச உணர்வை ஊட்டுவது.
(3) பிரதான கருத்தை மேலும் விளக்குகிறது.
(4) மிகைப்படுத்திக் கூறுவதாய் உள்ளது.

39. இப்பந்தியிலே தெரிவிக்கப்படாத கருத்து
(1) விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் பேசுந்திறன் அதிகம் உண்டு.
(2) கிளி முதலியவற்றிற்குப் பேசப் பழக்கினால், அவை பேசும்.
(3) சில பிராணிகள் கோபம், அன்பு முதலியவற்றை வெளிக்காட்டுகின்றன.
(4) சில பறவைகள் வாய்திறந்து சில ஒலிகளை வெளியிடுகின்றன.

● கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

40. (அ) அவ்வப்போது சஞ்சலங் கொண்டாலும், தான் திக்விஜயஞ் செய்த இடங்களிலே கிடைத்த அபூர்வ பொருள்களை மகா அலெக்சாண்டர் தாய்க்கு அனுப்பத் தவறுவ தில்லை.
(ஆ) தனது அதிகாரப் பிரியங் காரணமாக, ஒலிம்பியாஸ் அரசியல் விடயங்களிலே தலையிட்டு மகனுக்குச் சஞ்சலத்தைக் கொடுத்த வண்ணம் இருந்தார்.
(இ) மகா அலெக்சாண்டர் என்னும் பேரரசரின் தாயார் ஒலிம்பியாஸ் ஆவார்.
(ஈ) தாய் மீது அலெக்சாண்டருக்குப் பாசம் இருந்தாலும், தாயாரோ அதிகாரஞ் செலுத்துவதில் அதிக பிரியம் உடையவராய் இருந்தார்.
(உ) ஆயினும், தாயாரின் அத்து மீறிய செயல்களைப் பொறுக்க முடியாத அலெக்சாண்டர், அரசியலிற் பிரவேசிக்க வேண்டாம் எனத் தாயாருக்குக் கடிதம் எழுதினார்.

(1) உ, ஆ, இ, அ, ஈ
(2) இ, ஈ, ஆ, அ, உ
(3) இ, ஈ, உ, ஆ, அ
(4) இ, ஈ, அ, உ, ஆ

கல்விப் பொதுத்தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2000 டிசெம்பர்

தமிழ் மொழியும் இலக்கியமும் I

விடைகள்

01.	4	11.	4	21.	2	31.	2
02.	1	12.	2	22.	2	32.	4
03.	3	13.	3	23.	4	33.	3
04.	3	14.	1	24.	3	34.	1
05.	2	15.	3	25.	2	35.	4
06.	3	16.	4	26.	4	36.	4
07.	2	17.	1	27.	1	37.	2
08.	4	18.	2	28.	2	38.	3
09.	2	19.	1	29.	4	39.	1
10.	1	20.	3	30.	2	40.	2

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2000 டிசெம்பர்

தமிழ் மொழியும் இலக்கியமும் II

இரண்டு மணித்தியாலங்கள்

1. பின்வருவனவற்றுள் ஒன்றைத தெரிவு செய்து ஏறத்தாழ 300 சொற்களில் அமையுமா விடை எழுதுக.

(அ) "வீதியோரத்தில் சனக் கூட்டத்தின் மத்தியில் நின்று சோதிடம் பார்க்கும் ஒரு விசித்திரமான பேர்வழி" என்ற தலைப்பில் ஒரு விவரணக கட்டுரை.

(ஆ) "திருவள்ளுவர் மீண்டும் இவ்வுலகிற்கு வந்தால்....." என்ற தலைப்பில் ஒரு கற்பனைக கட்டுரை.

(இ) "மருத்துவத் துறை கண்ட மகத்தான சாதனைகள்" என்னும தலைப்பில் உமது கருத்து வெளிப்பாடு.

(ஈ) 'இன்றைய இளைஞர்கள் எமது சமுதாயத்தைச் சீரழிக்கிறார்கள்' என்ற கருத்தினை ஆதரிக்கும் ஒருவருக்கும், அக்கருத்தை எதிர்க்கும் மற்றொருவருக்கும் இடையே இடம்பெறும் உரையாடல்.

(உ) இறக்குமதிக் கட்டுப்பாடே இந்நாட்டு உற்பத்திப் பெருக்கத்தை ஊக்குவிக்க வல்லது" - இது பற்றிய உமது விமர்சனம்.

(ஊ) "நண்பனைக் கண்டதும் என் நெஞ்சு துணுக்குற்றது. எப்போது அவன் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தான் என எண்ணிக்கொண்டேன். அவன் முன்னர் ஊரில் இருந்தபோது செய்த குறும்புகள் ஒன்றன் பின் ஒன்றாக எனது மனத்திரையில் விரிந்தன." என்று தொடங்கி, " இன்றோ ஊருக்கு உழைக்கும் உத்தமனாகத் திகழ்ந்து எல்லோராலும் பாராட்டப்படுகின்றான்." என நிறைவுறுமாறு "மனமாற்றம்" என்னுந் தலைப்பிலே ஒரு கற்பனைச் சிறுகதை.

2. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 100 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக.

(கடிதமாயின் அதன் உடலே, அதாவது செய்தியே சொற்களை எண்ணுமிடத்துக் கவனத்திற் கொள்ளப்படும்.)

(அ) நிறுவனமொன்றின் ஆய்வு கூடத்திற் பணியாற்றுவதற்கு 'ஆய்வுகூட உதவியாளர் தேவை' என்ற பத்திரிகை விளம்பரத்தைக் கண்டவிடத்து, உமது தகைமைகள், அனுபவம் முதலியவற்றைக் குறிப்பிட்டு எழுதும் விண்ணப்பக் கடிதம்.

(ஆ) சர்வதேச கிறிக்கட் விளையாட்டுப் போட்டிகளில் இடம்பெற்றுவரும் ஊழல்கள் பற்றி நீர் உமது தம்பிக்கு அளிக்கும் விளக்கம்.

(இ) பாடசாலை மாணவர் மன்றச் செயலாளர் என உம்மைக் கருதி, உமது பாடசாலை நூலகத்தை எவ்வாறு சீரமைப்புச் செய்யலாம் என்பது பற்றிப் பாடசாலை அதிபருக்கு ஒரு அறிக்கை.

(ஈ) இலங்கை விவசாய நாடாக இருந்தபோதிலும், இன்றைய இளைஞர்கள் விவசாயத் துறையை வெறுப்பதால், விவசாய உற்பத்திகள் வீழ்ச்சியடைகின்றன. அந்த நிலைமை யைத் தடுத்து, எதிர் காலத்தில் எமது நாட்டு இளைஞர்கள் விவசாயத்துறையில் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டியதன் அவசியத்தை விளக்கி ஒரு துண்டுப் பிரசுரம்.

3. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து, அதன் சாராம்சத்தைச் சுமார் 100 சொற்களில் எழுதுக. அதற்கேற்ப ஒரு தலையங்கமும் இடுக.

காவியங்கள் கதை போலச் சுவையான கற்பனையுடன் அமைய வேண்டும் எனினும், வரலாறு போல மதிக்கத்தக்கனவாக விளங்க வேண்டும். அதனாலேதான், பல நாடுகளிலும் அத்தகைய காவியங்களை இயற்றுவதற்குத் தெய்வந்துணை புரிந்தது அல்லது தூண்டியது என்பர். அதை நம்பாதவர் தீமைக்கு இரையாவர் என்பர். தெய்வம் அடியெடுத்துத் தந்தது என்றும், இயற்றியது என்றும், காவியத்தை நம்பாதவர் நரகத்திற்குச் செல்வர் என்றுங் குறிப்பிடுதல் எல்லா நாடுகளிலும் வழக்கம் ஆயிற்று. உண்மையாகவே, பெரிய காவியம் எழுதி முடித்த பின் அதன் ஆசிரியர் தம்மால் இது ஆக்கத் தக்கதா என்று வியந்திருப்பார். ஏதோ ஒரு பெரிய சக்தியே தம்மைத் தூண்டி எழுதச் செய்தது என்றும், இல்லையேல் தம் சிற்றறிவால் அது முடிந்திருக்காது என்றும் அவர் உணர்ந்த உணர்வே அத்தகைய

தெய்வாம்சக் குறிப்புக்குக் காரணம் எனலாம். வியாசர் கூற விநாயகரே எழுதித் தந்தார் என்றும் காளிதாசருக்குக் கலைமகள் கலைவளம் நல்கினாள் என்றும், கம்பரின் நாவிலே கலைமகள் எழுதினாள் என்றும் வழங்கும் கதைகள் இதனை நன்கு விளக்குகின்றன.

பழங்காலத்திலே காவியங்கள் பல தோன்றுவதற்கு ஏற்ற சூழ்நிலை இருந்தது. தற்காலத்தில் உலகம் ஒரு குடும்பம் போற் சுருங்கியுள்ளது. எந்த மூலை முடுக்கிலும் நடக்கின்ற நிகழ்ச்சியாயினும் உலகம் முழுவதும் அறியத் தக்கவாறு விரைவிலே பரவிவிடுகிறது. பற்பல நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளைச் செய்தித்தாள்கள் விரைவாகப் பரப்பிய வண்ணம் உள்ளன. மக்கள் பல நிகழ்ச்சிகளை அடுத்தடுத்து அறிய வேண்டி நேர்தலால் அவை உடனுக்குடன் பழையனவாகிச் சிறப்பிழந்துவிடுகின்றன. அச் செய்திகள் மக்களின் உள்ளத்தில் நின்று ஆழப் பதிவதில்லை. ஆயின், பழங்காலத்திலோ சிறு சிறு நாட்டு நிகழ்ச்சிகளே மக்களுக்குத் தெரியும். அவைகளும் உடனே மக்களுக்கு எட்டாமல் காலங்கடந்து எட்டும். அதற்குள் அந்த நிகழ்ச்சிகள் திரிந்து கற்பனை மெருகேறி வெவ்வேறு வடிவம் பெற்றுவிடும். கேட்ட மக்களின் உள்ளத்தில் அவை சுவையான கதைகளாய் நிலைத்து நிற்கும். ஆகையால் அக்காலத்திலே காவியங்கள் பல எழுந்தன.

காவியங்கள் இக்காலத்திலே தோன்ற முடியாமைக்கு இன்னொரு காரணம், பழங்காலத்தில் மக்கள் உள்ளத்திலே குடிகொண்டிருந்தவர்கள் போன்ற தன்னிகர் இல்லாத தலைமக்களை - தலைவர்களை - இக்காலத்திலே படைக்க முடியாமை ஆகும். மக்களிடையே சமத்துவ உணர்ச்சி வளர்ந்து விட்டமையால், எத்தகைய தலைசிறந்த பண்புகள் உள்ளவர்களையும் தம் போன்றவர்களாகவே ஒவ்வொருவரும் மதிக்கும் மனப்பான்மை வளர்ந்து வருகின்றது. ஆகையால், காவியத் தலைவர்களாக விளங்கக் கூடிய சிறப்பு யாருக்கும் இல்லாமற் போகின்றது.

மற்றொரு காரணம், அரிய பெரிய செயல்களைப் பழங்காலத்திலே போற்றியது போல, இக்காலத்திலே போற்றும் நிலைமை இல்லாமை ஆகும். மாறாக, மனப்பான்மைகளையும், பண்புகளையும் கண்டறிந்து போற்றும் ஆவலே உள்ளது. அவற்றை விளக்குவதற்குத் தனிப் பாட்டுக்களும் உரைநடையில் அமையும் நூல்களுமே போதும். ஆகவே காவியத்திற்கு இடமில்லாமற் போகிறது. மேலும், போக்குவரத்துக் கருவிகளும் சமுதாயக் கடமைகளும் பெருகப் பெருக வாழ்க்கை வேகமுடையதாகிறது. இதனால், பெரிய காவியங்களைப் படித்து இன்புறும் ஓய்வு இக்காலத்தில் இல்லை. விரைவிற் படிப்பதற்கு ஏற்ற வகையில் உரைநடை நூல்கள் பலகிப் பெருகிக் காணப்படுகின்றன. பற்பல தொடர்கதைகளும் சிறுகதைகளும் வெளிவந்த வண்ணம் உள்ளன. ஆகையால், புதிய காவியங்கள் இன்று தேவையாக இல்லை.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2000 டிசெம்பர்

தமிழ் மொழியும் இலக்கியமும் III

இரண்டு மணித்தியாலங்கள்

1. பின்வரும் பகுதிகள் ஒவ்வொன்றும்
   (1) யாரால்
   (2) யாருக்கு
   (3) எச்சந்தர்ப்பத்திற்
   கூறப்பட்டவை என்பதை விளக்குக.

   (அ) "உன்னிலும் பார்க்க உன் சிறிய தாயின் மகன் தான் நிறை குணத்தவன்; நின்னிலும் நல்லன்; குறைவிலன்; அவன் அரசு புரிவது நாட்டுக்கு நலன்"

   (ஆ) "கருத்தி னுண்மகிழ்ந் தெவ்வையு
   மலங்கரித்திடுமின்
   வருத்த மென்றிலா முகம்மதை
   யாமினா வயிற்றில்
   இருத்தினேனே....."

(இ) "வருந்தித்தாங் கற்றகல்வி மாய்ந்துமறைந் திடுமோ
மறுமையிலு முதவுமோ வான்மதியே"

(ஈ) "வந்தவிப் பழியை மாற்றும் வகையினை மறைநூல் வாய்மை
அந்தணர் விதித்த ஆற்றால் ஆற்றுவ தறமே யாகில்
எந்தையீ தறியா முன்னம் இயற்றுவன்."

(உ) "நீங்கள் அனைவரும் அரசிக்கு எதிரான சாட்சியங்கள். அப்படித்தானே! எல்லாம் புதிராகத்தான் இருக்கிறது. என்றாலும் நீதி வழங்கத் தயங்கமாட்டேன்."

2. பின்வரும் செய்யுள்களின் பொருளை இக்கால உரை நடையில் எழுதி, அவை ஒவ்வொன்றிலும் காணப்படும் தொனிப்பொருளை அல்லது குறிப்புப் பொருளை விளக்குக.

(அ) "சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் றனிக்காத்தான் - மாத
ரருகூட்டும் பைங்கிளியு மாடற் பருந்து
மொருகூட்டில் வாழ வுலகு."

(ஆ) "செய்னம்பு நாச்சி செங்காட்டுப் புலி,
வாயில் லாமலே வங்காளம் போவாள்,
நோயில் லாமலே நூறு நாள் படுப்பாள்,
சீட்டுப் பிடித்துச் சேர்த்த பணத்தைக்
கூட்டுப் பெட்டிக்குள் குவித்து வைப்பாள்.'

(இ) கொற்ற ஆழி குவலயஞ் சூழ்ந்திடச்
சுற்று மன்னர் திறைகடை சூழ்ந்திடச்
செற்றம் நீக்கிய செம்மையின் மெய்மனுப்
பெற்ற நீதியுந் தன்பெயர் ஆக்கினான்.

(ஈ) "இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற்
றம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றா
லெம்மை யுலகத்தும்யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து"

(உ) "மேற்றிசைவான் ஈமத்தீ போற்சிவக்கப் பகலோன்
மெலிந்துமறைந் திடல்கண்டேன் நலிந்தவருள் ளம்போற்
காற்றுயிர்த்துப் பனித்திவலை தூற்றுதலைக் கண்டேன்
காரிருளின் கணமிரிய வானவெளிப் பரப்பில்."

● 03 முதல் 06 வரையுள்ள வினாக்களுக்கு இரண்டிற்கு மட்டும் விடை தருக.

3. 'கர்ணனும் கும்பகர்ணனும்' என்னும் பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) I. நன்றியினையும் உய்வினையுந் தொடர்புபடுத்தி வள்ளுவர் கூறுவது யாது?
II. அக்கருத்தைக் கம்பர் எவ்வாறு விரித்துரைக்கின்றார்?

(ஆ) கர்ணன் - குந்தி என்போர் உரையாடல் வாயிலாகக் கர்ணன் நன்றி மறவாதவன் என்பது எவ்வாறு உணர்த்தப்படுகிறது?

(இ) கும்பகர்ணன் - விபீஷணன் என்போர் உரையாடல் மூலம் கும்பகர்ணனின் செய்ந்நன்றி மறவாமை எவ்வாறு உணர்த்தப்படுகிறது?

4. 'சிரிக்கத் தெரிந்த பாரசீகர்' என்னும் பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) பாரசீகர் இருவர் உரையாடும்போது நகைச்சுவை எவ்வாறு ததும்புகிறது என்பதை இரு உதாரணங்கள் தந்து விளக்குக.

(ஆ) பாரசீகப் புலவர்களின் ஆக்கங்களில் நகைச்சுவை எவ்வாறு பரிணமிக்கின்றது?

(இ) பாரசீகக் கவிதைகளில் இடம்பெறும் பறவைகளும் விலங்குகளும் கூடப் படிப்போருக்குச் சிரிப்பூட்டுகின்றன என்பதை மூன்று உதாரணங்கள் தந்து விளக்குக.

5. 'கங்கையில் விடுத்த ஓலை' என்னும் பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) கந்தசாமிப் பெரியோனின் குணப்பண்புகள் பற்றி விபுலாநந்தர் கூறுவனவற்றைத் தொகுத்துக் கூறுக.

(ஆ) விபுலாநந்தருக்கும் சந்திரனுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலை விளக்குக.

6. 'ஆசாரக் கோவை' என்ற பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) நினைக்க வேண்டிய இரண்டும் எவை? மறக்க வேண்டிய இரண்டும் எவை?

(ஆ) ஒருவர் அவசியஞ் செய்ய வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் எவையேனும் ஐந்தினைத் தொகுத்துத் தருக.

(இ) ஆசாரக் கோவையைக் கற்பதனால் விளையும் பயன்களை விளக்கி எழுதுக.

கல்விப் பொதுத்தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2000 டிசெம்பர்

தமிழ் மொழியும் இலக்கியமும் II

விடைகள்

1. (அ) **"வீதியோரத்திலே சனக் கூட்டத்தின் மத்தியில் நின்று சோதிடம் பார்க்கும் ஒரு விசித்திரமான பேர் வழி" என்ற தலைப்பில் ஒரு விவரணக் கட்டுரை.**

ஒரு நாட் காலை ஒன்பது மணியளவில் மட்டக்களப்புப் பிரதான பஸ்நிலையத்தின் முன்னேயுள்ள பெரு வீதி, வாகனப் போக்குவரத்தினாலும் மக்கள் நடமாட்டத்தினாலும் உயிர் பெற்றுத் துடிக்கத் தொடங்கியது. வீதியின் நடுப்பகுதியில் வண்ண வண்ணப் பலசாதி மோட்டார் வண்டிகள் அணி அணியாக நிறுத்தப்பட்டிருந்தன. வெயில் வேளையில் மலைவேப்பமரங்கள் வள்ளல்களைப் போன்று தண்ணிழல் தந்து வீதி முழுவதற்கும் குளிர்மையூட்டிக் கொண்டிருந்தன. அம்மரத்தடியின் கீழ் மக்களின் எதிர்கால நம்பிக்கை யை மூலதனமாகக் கொண்டு வியாபாரம் செய்யும் ஒருவனும் காத்திருந்தான். அவனே தெருக்கரைச் சோதிடன். அவன் உயரமான ஒரு பலகையின் மீது சலனமற்ற முகத்தினனாய் ஓடுமீனோட உறுமீன் வருமளவும் வாடியிருக்குங் கொக்கைப் போல் அமைதியோடு இருந்தான்.

அவனது தலைமயிர் பன்னெடும் நாட்களாக எண்ணெய்ப் பசுமை காணாமற் பரட்டை பற்றியிருந்தது. சில சில இடங்களில் தலைமயிர் திரண்டு உருண்டு புளியங்காய் போலத் தோற்றமளித்தது. அவன் அதை உச்சியிலே சேர்த்துக் கட்டிக் குடுமி ஆக்கியி ருந்தான். அதைச் சில மலர்கள் அலங்கரித்துக் கொண்டிருந்தன. நெற்றியிலே பளிச் சென்று தெரியும் திருநீற்றுப் பூச்சு, அதன் நடுவே பெரிய ஒரு சந்தனப் பொட்டு. அவனது காதுகளிலே இரண்டு கடுக்கன்கள் ஊசலாடின. தோய்த்து நீர்க்காவியேறிய ஆடையை அவன் உடுத்திருந்தான். கள்ளமற்ற உள்ளத்தோடு பார்ப்பவர்களுக்கு அவன் சிவப்பழமாகத் தோற்றமளித்தான். அவன் தொழிலுக்கேற்ற சாதனங்கள் அனைத்தும் அவனைச் சூழ்ந்து காணப்பட்டன.

இவ்விடம் "கைரேகை, ஆரூடம், குருவிச் சாத்திரம் சொல்லப்படும்" ஏன்ற விளம்பரப் பலகை அவனுக்கு அருகில் காணப்பட்டது. அப்பலகையில் கை இரேகைகள் தெளிவாகத் தெரியும் முறையில் வரையப்பட்ட வலக்கையின் படம் தொங்கியது. அவனது இடப்புறத்தில் ஒரு குருவிக் கூடு இருந்தது. அதனுள்ளே மூன்று குருவிகள் இருந்தன. ஒன்று வெண்ணிறம். மற்றது பச்சை. மற்றது மேகவர்ணம். அவை மூன்றுங் கூட்டுக்குள்ளேயே அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தன. அக்கூண்டுக்கு முன்னே கடதாசி மட்டைகள் பல அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவன் வீதியால் வருவோரையும் போவோரையுங் கூர்ந்து அவதானித்துக் கொண்டிருந்தான். மக்களின் அகத்தின் அழகை முகத்திலே காணக் கூடிய கலைஞன் அவன்.

அவனது கூரிய பார்வை என்னும் வலையிலே ஒரு வாலிபன் சிக்கி விட்டான். அவன் முகம் வாடி வதங்கிக் காணப்பட்டது. என்ன நிகழுமோ, ஏதாகுமோ என்ற மனக் கலக்கமே அந்த வாட்டத்துக்குக் காரணம் என்பதை அச் சோதிடன் கண்டு

கொண்டு அவனை அழைத்தான். அவன் அச்சோதிடன் முன்னிலையில் இருந்து இருபது ரூபாய்த் தாள் ஒன்றை எடுத்து வைத்து விட்டுத் தன் கையை நீட்டினான். "தம்பி நீ கலங்குவதற்குக் காரணம் எதுவும் இல்லை. இது வெகு அபூர்வமான கை. ஆனால் இப்போது புத்தி ரேகையிலே தான்...." அவன் வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்தினான். ஐயா என் மகனுக்கு ஏதாவது நேர்ந்து விடுமோ? அதற்கு ஏதாவது சாந்தி செய்ய முடியுமா? என்று வாலிபன் புலம்பினான். "சீச்சீ அப்படி ஒன்றும் நேர்ந்து விடாது. இப்போது உம்முடைய வியாழ சுகமில்லை. நவக்கிரக பூசை செய்து விட்டால் பதினைந்து நாளில் எல்லாம் சரியாகி விடும்." என்று கூறினான். தன்னைச் சுற்றிவரச் சிறு கூட்டம் சேர்ந்து விட்டதைச் சோதிடன் அவதானித்தான். பின்பு நடுத்தர வயதுடைய பெண்ணொருத்தி இருபது ரூபாயைக் குருவிக் கூட்டின் அருகில் வைத்தாள். சோதிடன் குருவிக்கூட்டின் கதவை மேலே உயர்த்தினான். பச்சை நிறக் குருவி வாயிலில் நின்று எட்டிப் பார்த்தது. "வாடா இராசா வா, இந்த அம்மாளுக்காக நல்ல சேதியை எடுத்துத் தா." என்று கூறினான். அடுத்த கணம் பழக்கப்பட்டிருந்த அந்தக் குருவி வெளியே வந்தது. முன்னும் பின்னும் நட... ஒரு கடதாசி மட்டையைச் சொண்டால் இழுத்து விட்டது. இவ்வாறு அங்கு கூடி நின்றவர்கள் அத்தனை பேருக்கும் அவரவர் மனப் போக்கையும் முகக் குறிப்பையும் துணைக் கொண்டு அவர்கள் மனங்குளிரும்படி சோதிடஞ் சொன்னான். அவர்கள் எல்லோரும் அவனது தோற்றப் பொலிவிலும், வாய்ச் சாதுரியத்திலும் மயங்கி அவனை வாழ்த்திக் கொண்டு போயினர். சோதிடன் கையிலும் பணம்சேர்ந்து கொண்டு இருந்தது. மாலைப் பொழுது வந்து அடைந்ததும் சன நடமாட்டங் குறையத் தொடங்கிற்று. தனது தொழில் உபகரணங்களை அடுக்கிக் கொண்டு அவன் வீடு நோக்கி நடந்தான்.

(ஆ) "திருவள்ளுவர் மீண்டும் இவ்வுலகிற்கு வந்தால்" என்ற தலைப்பில் ஒரு கற்பனைக் கட்டுரை.

திருவள்ளுவர் உலகின் வழிகாட்டி. தமிழகத்தில் பிறந்தவர். ஈடு இணையற்ற இலக்கியம் தந்தவர். சம நோக்குடைய சமரச ஞானி. தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல உலகிற்கே நீதியை வழங்கிய நல்லவர். இவருடைய திறமையைப் புகழாத புலவர்கள் இல்லை. உலகிற்கு சூரியன் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் திருக்குறள். திருக்குறள் அறத்துப் பால், பொருட்பால், காமத்துப் பால் என முப்பெரும் பிரிவுகளை யுடையது. 133 அதிகாரங்களையுடையது. ஒவ்வொரு அதிகாரத்திலும் 10 குறள்கள் வீதம் 1330 குறள்களையுடையது.

இத்தகைய ஒப்பற்ற திருக்குறளைத் தந்த திருவள்ளுவர் ஒரு நாள் திடீரென்று பூவுலகிற்கு விஜயம் செய்கிறார். திருவள்ளுவர். என்ற பெயருடன் பல விளம்பரப் பலகைகள், அறிவிப்புப் பலகைகளைக் காண்கின்றார். வள்ளுவர் நகரம், வள்ளுவர் அங்காடி, வள்ளுவர் தெரு, வள்ளுவர் கல்வி நிலையம், வள்ளுவர் போக்குவரத்து வண்டி, வள்ளுவர் அச்சகம், வள்ளுவர் புத்தகநிலையம், வள்ளுவர் கணனி நிலையம் போன்ற விளம்பரப் பலகைகளை வள்ளுவர் கண்ணுற்றார். தன் பெயரைச் சொல்லி எத்தனைபேர் வயிற்றுப் பிழைப்பு நடாத்துகின்றார்கள் எனத் தன் மனதுக்குள் சொல்லிச் சிரிக்கிறார்.

வள்ளுவர் இரவில் ஒவ்வொரு நாளும் பி.பி.சி. தமிழ்ச் செய்திகளைக் கேட்கிறார். பி.பி.சி. வானொலியில் நிகழ்ச்சி தொடங்குமுன் ஒரு குறளும் அதற்கான பொழிப்புரையும் கூறப்படுவதையும் கேட்கிறார். தேமதுரத் தமிழோசை வானொலி மூலம் பர்வுவதற்குத் தான் ஆக்கிய திருக்குறள் அறிவுரையாகக் கூறப்படுவதைக் கேட்டுப் புள்காங்கிதம் அடைகிறார். தமது மனைவியார் வாசுகியும், தன்னையும் போல வாழ்வு வாழவேண்டும் எனப் பலர் வாழ்த்துவதையும் கேட்கிறார். இயக்குநர் பாலசந்தர் தனது கவிதாலயா நிறுவன சினிமாவுக்கு வள்ளுவர் இலச்சினையைத் தேர்ந்தெடுத்துத் தொலைக்காட்சி யிலும், பெரிய திரையிலும் காண்பிப்பதைக் கண்டு மகிழ்கிறார். முதலாம் வகுப்புத் தொடக்கம் பல்கலைக் கழகக் கல்விவரை தமிழ் மொழிப் பாடத் திட்டத்தில் திருக்குறள் இணைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறார்.

"தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத் தோன்றுந்
துன்னற்க தீவினைப்பால்"

ஒருவன் தன்னிலே தான் பற்றுள்ளவனாயிருக்க வேண்டும். அதாவது சுயநலம் உள்ளவனாக இருக்க வேண்டும். இதையே இன்றுள்ள மனிதர்கள் கடைப்பிடிப்பதைக் கண்டு வள்ளுவர் மனம் கவலைப்படுகிறார். எத்துணைச் சிறிய ஒரு தீமையையும் பிறருக்குச் செய்யக் கூடாது என்பதை மனிதர் கடைப்பிடிக்காததைக் கண்டும்

கவலைப்படுகிறார்.

பாரதியார் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்ற கருத்துச் செறிவோடு பாடியதைக் கேட்டுப் புளகாங்கிதம் அடைகிறார். "ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லிற்குறுதி." இங்கு இரண்டு என்பது ஈரடியாய் அமைந்த திருக்குறளைக் குறிக்கின்றதைக் கேட்டு மனமகிழ்கிறார். தனது நூலுக்குப் பலர் உரை எழுதியபோதும் பரிமேலழகர் உரை சிறந்ததாக இன்றும் போற்றப்படுவதைக் கண்ணுறுகிறார்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்"
"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

ஆகிய குறள்கள் இன்று மதிப்புப் பெறுவதைக் காண்கிறார்.

திருக்குறட் பொருட்பகுதியில் அரசர் அமைச்சர், படைத்தலைவர் முதலியோரின் இலக்கணங்களாகக் கூறப்பட்டனவும் பிறவும் யாண்டும் காண்டற்கரியனவாம். ஒற்றும் நீதி நூலும் ஆகிய இரண்டும் அரசர்க்கு இரு கண்களாகும் என்று கூறப்பட்டுள்ளது. நாட்டின் இலக்கணங் கூறுங்கால் ஒரு நாட்டில் வாழ்வார் தேடி வருந்தாமல் வேண்டுவன எல்லாம் அங்கே பெறத்தக்கதாக இருத்தல் வேண்டும் என்னும் கருத்தமைய "நாடென்ப நாடாவளத்தன" என்கிறார். பிணியின்மையும், நிரம்பிய செல்வமும், விளைவும், இன்பமும், காவலும் ஆகிய இவ்வைந்தும் நாட்டுக்கு அழகு செய்வனவும் கூறப்பட்டுள்ளன. இதனால் அரசன் தன் நாட்டை இத் தகுதிகளுக்கு உரியதாக அமைத்துக் கொள்ள வேண்டும். திருவள்ளுவரது இக்கூற்றுக்கள் இன்று அவமதிப்புப் பெறுவது கண்டு கவலைப்படுகிறார்.

பன்னாட்டு மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதைக் காண்கிறார். குறள் பலராலும் மேற்கோள்களாக எடுத்தாளப்பட்டுப் போற்றப்படுவதைக் காண்கிறார். தன் குறட் பாக்களுக்குப் புதுப்பாக்கள் புனையப்பட்டுள்ளமை கண்டு வள்ளுவர் மனம் கவல்கிறார். தான் கூறிய சமூக, பொருளாதா, அரசியற் கருத்துக்களுக்கு இன்றைய சமூகம் அளிக்கின்ற அவமதிப்புக் கண்டு மனம் கவல்கின்றார். சுவாமி விபுலாநந்தர் தான் இயற்றிய "கங்கையில் விடுத்த ஓலை" என்ற நூற்பகுதியில் சந்திரனுடன் உரையாடுகிறார். ஒருவன் ஒரு பிறவியில் கற்ற கல்வி அவனுடன் மாய்ந்து மறைந்து விடுமோ என்று சுவாமி சந்திரனை வினாவுகிறார். அதற்குச் சந்திரன் குறளை மேற்கோள் காட்டுகிறான்.

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி
எழுமைக்கும் ஏமாப்புடைத்து"

என்ற திருக்குறளை உதாரணம் காட்டுகிறான்.
இவற்றையெல்லாம் கேட்டுத் திருவள்ளுவர் புளகாங்கிதம் அடைகிறார்.

(இ) "மருத்துவத் துறை கண்ட மகத்தான சாதனைகள்."

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது பெரியோர் அனுபவத்தாற் கண்டு கூறிய முதுமொழி. பேய் அடித்து விட்டது என்று பிதற்றித் திரிந்த மனிதனுக்கு, நோய் அடித்து விட்டது என்று நுவன்றது மருத்துவ அறிவியல். அறுக்காமலேயே அறுவைச் சிகிச்சை, துண்டித்த விரலையும் ஒட்ட வைக்கும் சாதனம், மூளையை அறுத்துத் தைத்திடும் தந்திரம், செயற்கை இதயம், பயன்படாதிருந்த மனித உறுப்புகளைப் பயன்பட வைத்தது மருத்துவ அறிவியல். மாற்றுச் சிறுநீரகம் மனித வாழ்வை மலரவைத்தது: கொலராவின் காலை ஒடித்ததும், அம்மை நோயை விரட்டியடித்ததும், மலேரியாவை மங்கவைத்ததும், புற்றுநோயைப் புழதியில் புதைத்ததும் மருத்துவ அறிவியல் என்றால் அதிசயம் இல்லை.

மருத்துவத் துறையில் விஞ்ஞானஞ் செய்த புதுமைகள் அநந்தம். அவை யாவற்றிற் கெல்லாம் மனித குலம் நன்றிக் கடன் பட்டிருக்கின்றது. விஞ்ஞானம் தந்துதவிய மருந்துகள், மனித குலக் கொடும் பிணிகளை மாற்றும் அமிர்த சஞ்சீவிகளாய் விளங்குகின்றன. சமுதாயத்தை அழிக்கும் தொற்றுநோய்கள் மாற்று மருந்துகள் மூலம் தடுக்கப்படுகின்றன. மனிதனின் உள்ளுறுப்புக்கள் படமாக்கப்பட்டுப் பழுதுள்ள இடங்கள் அறுவை வைத்தியத்தால் குணமாக்கப்படுகின்றன. பரிசோதனைக் குழாய் மூலம் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்து குழந்தைகள் பெறச் செய்யும் முறையை மருத்துவர்கள் செய்துள்ளனர். இறப்பைத் தடுக்க முடியாவிடினும் ஊசி மருந்துகளாலும் உயிர்ச்சத்துக் குளிகைகளாலும் அறுவைச்சிகிச்சை முறையாலும் நோய்த் துன்பத்தைப்

பெருமளவு குறைக்க விஞ்ஞான மருத்துவம் உதவுகின்றது.

"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" இதற்கு அணுக்கதிர் வீச்சும் விதி விலக்கல்ல. அளவு படுத்தப்பட்ட கதிர் வீச்சு உயிர் காக்கும் அமிர்த சஞ்சீவி ஆகும். பல்வேறு நோய்களைக் குணப்படுத்த அணுக்கதிர் பயன்படுகின்றது. ஆறாத புண்களை ஆற்றுதல், கிருமிகளை அழித்தல், உடல் உறுப்புக்களின் இயக்கத்தைச் சீராக்கல் முதலிய பல்வேறு மருத்துவப் பணிகளுக்கு அணுக்கதிர் வீசல் பயன்படுகின்றது. ரஷ்யாவின் "உயிரி" மருத்துவப் பிரச்சினைகள் பயிற்றகத்தின் கையடக்கமான "ஏகே" எனும் உபகரண உபயத்தினால் மிர் விண்வெளி ஆய்வு கூடத்தினுள் காற்றிலும், ஆய்வுக் கருவிகள் மீது படியும் தூசி தும்புகளைச் சேகரித்து அவற்றில் ஏதேனும் நுண்கிருமிகள் உள்ளதை ஆராயும் பரிசோதனைகள் காணப்படுகின்றன.

மனித இரத்தம், சிறுநீர் என்பன பூமிக்குப் புரோகரஸ் சரக்கு வண்டியில் அனுப்பி வைத்ததும் உடலியல் ஆய்வுகள் தொடர்கின்றன. விண் பயணத்தின்போது மனித எடையைப் பதிவாக்கும் கருவியும், இரத்த நாளங்கள், நரம்பு மண்டலங்கள் அனைத்தின தும் செயற்பாடுகளை முறையாகக் கண்காணிக்கும் நவின உபகரணங்களுமாக மிர் நிலையத்தில் போதிய வசதிகள் உள்ளன. இவ்வாறு மனித உடற்கூறு பற்றி "மிர்" விண் கூடத்தில் ஆய்வு செய்யப்படுகின்றன.

இவ்வாறு மருத்துவத் துறை கண்ட மகத்தான சாதனைகள் பல நன்மைகளைத் தோற்றுவித்துள்ளன. பிறந்த குழந்தைக்கு நான்கு வயது வரை பல்வேறு தடுப்பு மருந்துகள் வழங்கப்படுகின்றது. மரணவீதம் குறைகின்றது. மனிதனின் ஆயுட் காலம் நீடிக்கின்றது. இறப்பு வீதம், பிறப்பு வீதம் ஒரு நாட்டின் சனத்தொகையை நிர்ணயிக்கும் காரணிகள் ஆகும். சிசு மரண வீதம் போன்றவை பௌதிக வாழ்க்கைத் தரப் பண்புச் சுட்டெண்ணை நிர்ணயிக்கும். இது ஒரு நாட்டின் அபிவிருத்தியுடன் தொடர்புடையது. பிறக்கும் குழந்தை ஆணா? பெண்ணா? எனக் கண்டறியும் கருவிகளும் உள்ளன. இவையே மருத்துவத் துறை கண்ட மகத்தான சாதனைகளாகும்.

(ஈ) "இன்றைய இளைஞர்கள் சமுதாயத்தைச் சீரழிக்கிறார்கள்"

ஆதரிப்பவர்: இன்றைய இளைஞர்களுக்கு முதியோரை மதிக்கும் பண்பில்லை. C90, C70 என முதியோரைக் கிண்டல் செய்கிறார்கள்.

எதிர்ப்பவர் : அப்படிக் கூற முடியாது. ஒரு சில இளைஞர்கள் செய்யும் தவறை வைத்துக்கொண்டு முழுப்பேரையும் அப்படித் தப்புக் கணக்குப் போட முடியாது. இளைஞர்கள் வருங்கால சமுதாயச் சிற்பிகள்.

ஆதரிப்பவா: இன்றைய இளைஞர்கள் போதை வஸ்துக்கு அடிமையாகின்றார்கள். இதனால் அவர்களது உடல், உள ஆரோக்கியம் கெடுகின்றது. நரம்புத் தளர்ச்சி, மனோ வியாதி போன்ற நோய்களுக்கு ஆளாகின்றனர். இதனால் சமுதாயச் சீர்கேடும் உருவாகின்றது.

எதிர்ப்பவர் : போதைவஸ்துப் பழக்கம் உல்லாசப் பிரயாணிகளின் வருகையாலேயே பரவியது. எனவே உல்லாசப் பிரயாணிகளின் வருகையைக் கட்டுப் படுத்த வேண்டும். இன்றைய இளைஞர்கள் முற்போக்குச் சிந்தனை மிகுந்தவர்கள்.

ஆதரிப்பவர்: திரைப்படங்கள், தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் போன்றவற்றாலும் இளை ஞர்கள் சமுதாயம் சீரழிகின்றது.

எதிர்ப்பவர் : அரசாங்கம் தொலைக் காட்சியில் பாலியல், வன்செயல்களைத் தூண்டும் நிகழ்ச்சிகளைத் தடை செய்ய வேண்டும். இளைஞரிடையே நற் சிந்தனை யைத் தூண்டும் நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பவேண்டும். ஏனெனில் இளைஞர்கள் தீவிர செயலூக்கம் மிக்கவர்கள். இவர்களுக்கு நல்ல வழியைப் பெரியோர்களே காட்ட வேண்டும்.

ஆதரிப்பவர்: இன்றைய இளைஞர்கள் ஆடம்பர வாழ்வின் மீது மோகங் கொண்டுள்ளார் கள். சகபாடிகளின் சேர்க்கையால் கெட்டுப் போய்விட்டார்கள். சமூக பண்பாட்டு விழுமியங்களில் ஈடுபாடின்றி உள்ளார்கள்.

எதிர்ப்பவர் : இன்றைய இளைஞர்கள் நவீன தொழினுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப இசைவாக் கம் பெறுவதில் முன்னணியில் நிற்கிறார்கள். அவர்களுக்கும் சமூக வளர்ச்சியில் ஈடுபாடுள்ளது.

ஆதரிப்பவர்: இளைஞர்கள் அரசியல், சமூக, பொருளாதாரக் காரணிகளால் விரக்தி மனோபாவம் அடைந்துள்ளார்கள். இன்றைய வாழ்க்கைப் பாங்கு காரணமாக இளைஞர்களிடையே பொறுப்புணர்ச்சியற்ற தன்மை வளர்ந்து வருகின்றது.

எதிர்ப்பவர்: அப்படிக் கூற முடியாது. ஏனெனில் இன்றைய இளைஞர்கள் நவீன உலகின் சவால்களுக்கு முகங்கொடுப்பவர்கள். சமூகத்துக்குப் புத்தொளியும், புத்தூக்கமும் பாய்ச்சுபவர்கள். அவர்களால் சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

(உ) **"இறக்குமதிக் கட்டுப்பாடே இந்நாட்டு உற்பத்திப் பெருக்கத்தை ஊக்குவிக்க வல்லது" - விமர்சனம்.**

இன்றயை திறந்த பொருளாதாரக் கொள்கையின் காரணமாகத் தாராளமாகப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் கூட இறக்குமதி செய்யப்படுகின்றன. எனவே இறக்குமதிக் கட்டுப்பாடே இந்நாட்டு உற்பத்திப் பெருக்கத்தை ஊக்குவிக்க வல்லது. எமது நாட்டு, விவசாயப் பொருள்களான வெங்காயம், மிளகாய், அரிசி, உருளைக் கிழங்கு என்பவை இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனால் நமது நாட்டு விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை நல்ல விலைக்கு விற்கமுடியாதுள்ளது. இதனால் சில விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர். உதாரணமாகப் பொலநறுவை விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலைகோரி உண்ணாவிரதம் இருந்ததாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் விவசாயிகள் உற்பத்தி செய்வதில் நாட்டமின்றி உள்ளனர். உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சி அடைகின்றது.

இறக்குமதிக் கட்டுப்பாட்டை மேற்கொண்டால் மூலப் பொருள்கள், ஏனைய வளங்கள் என்பவற்றில் உச்சப்பயன்பாடு ஏற்படும். நமது மூலப்பொருள்களைப் பயன்படுத்தி உற்பத்தியை மேற்கொண்டால் உற்பத்தியால் உச்சப்பயன்பாடு ஏற்படும். உள்நாட்டு உற்பத்திப் பெருக்கம் ஏற்படும். தேசிய வருமானம் அதிகரிக்கும். இறக்குமதிக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளாவிடில் மூலவளப் பயன்பாடு குறையும். எமது மூலவளம் வீணாகிப் போய்விடும். யப்பான் நாட்டில் மூலவளப் பற்றாக்குறை காணப்பட்ட போதும், மூலவளங்கள் இறக்குமதி செய்யப்பட்டு பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இன்று யப்பான் அபிவிருத்தி அடைந்த தொழினுட்ப வளர்ச்சியடைந்த நாடாகத் திகழ்கின்றது.

இறக்குமதிக் கட்டுப்பாட்டை மேற்கொண்டால் தொழில் வாய்ப்பு அதிகரிக்கும். இறக்குமதிப் பிரதியீட்டுக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் இறக்குமதிப் பொருள்களுக்கு மாற்றீடான பொருள்கள் நமது நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் நமது நாட்டவர்கள் தொழில் வாய்ப்பைப் பெறுவர். வேலை இல்லாத் திண்டாட்டம் குறையும். இறக்குமதிக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளாவிடின் தொழில் வாய்ப்பு அதிகரிக்காது. வேலையில்லாப் பிரச்சினை அதிகரிக்கும்.

இறக்குமதிக் கட்டுப்பாட்டை மேற்கொண்டால் உள்நாட்டில் முதலீடு அதிகரிக்கும். சேமிப்பு அதிகரிக்கும். வாழ்க்கைத் தரம் முன்னேறும். இறக்குமதியாகும் பொருள்களைக் கட்டுப்படுத்தினால் இறக்குமதிச் செலவீனம் குறையும். அன்னியச் செலாவணி மீதமாகும். நமது நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும். வெளிநாட்டுப் பொருள்களுக்கு இணையான பொருள்களை நமது நாட்டில் உற்பத்தி செய்தால் எமது தொழிலும் வளரும். தொழினுட்பம் மேலோங்கும். நமது நாடும் அபிவிருத்தியை நோக்கி வீறு நடை போடும்.

இறக்குமதிக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளாவிடின் உள்நாட்டுப் பொருள்களுக்குச் சந்தை வாய்ப்புக் குறையும். வெளிநாட்டுப் பொருள்களை நுகர்வதால் எமது உள்நாட்டுப் பொருள்களின் உற்பத்தியே பாதிப்பை எதிர்கொள்ளும். வெளிநாட்டுப் பொருள்களை இறக்குமதி செய்வதால் எமது அன்னியச் செலாவணி விரயமாகும். அன்னியச் செலாவணிப் பற்றாக்குறை ஏற்படும். மூலதன வீழ்ச்சியால் சேமிப்பும் உயராது. வெளிநாட்டுக் கடன்களை எதிர்பார்க்க வேண்டி நேரிடும்.

(ஊ) கற்பனைச் சிறுகதை :-

நண்பனைக் கண்டதும் என் நெஞ்சு துணுக்குற்றது. எப்போது அவன் வெளி நாட்டிலிருந்து திரும்பி வந்தான் என எண்ணிக்கொண்டேன். அவன் முன்னர் ஊரில் இருந்தபோது செய்த குறும்புகள் ஒன்றன் பின் ஒன்றாக எனது மனத் திரையில் விரிந்தன. நானும் அவனும் முதலாம் வகுப்பிலிருந்து க.பொ.த. உயர்தரம் வரை ஒன்றாகவே படித்தோம். சிறு வயதிலேயே அவன் நன்றாகக் குழப்படி செய்வான். ஒரு நாள் றபர் பாம்பு ஒன்றை ஒருவருக்கும் தெரியாமல் ஆசிரியரின் கதிரைக்குக் கீழே வைத்து விட்டான். ஆசிரியர் உண்மைப் பாம்பு என நினைத்து வகுப்பை விட்டு "பாம்பு, பாம்பு" என அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடிவிட்டார். பெரிய வகுப்பில் படிக்கும் அண்ணாமார்கள் பெரிய தடிகளுடன் வகுப்பிற்குள் நுழைந்தார்கள். பாம்போ அசையாமல் கிடந்தது. பின்பு தான் உண்மை தெரிய வந்தது. ஆசிரியர் அவனுக்கு நல்ல பிரம்படி கொடுத்தார்.

நான் அவன் செய்த பல குறும்புகளை நினைத்துப் பார்க்கிறேன். ஆனால் அச்சம்பவம் மட்டும் எனது மனதை விட்டு அகலவில்லை. எங்கள் இருவருக்கும் அவிநாஷ் என்ற ஒரு நண்பன் இருந்தான். அவன் இவனைக் குறும்பு செய்வதும் இவன் அவனைக் குறும்பு செய்வதும் வழக்கமாகிவிட்டது. ஆனால் விளையாட்டு ஒரு நாள் வினையா யிற்று. அவிநாஷ் பின்பு கனடா சென்று விட்டான். இவன் அவிநாஷ் கனடாவில் இறந்து விட்டான் என்று தொலைபேசியில் குரலை மாற்றி அவிநாஷ்சின் பெற்றோருக்கு அறிவித்து விட்டான். அவிநாஷ்சின் தாயோ ஒரு இருதய நோயாளி. அவர் இதை உண்மையென்று நினைத்தார். அதிர்ச்சியினால் இறந்துவிட்டார்.

இந்த உண்மையை அவன் எனக்கு மட்டுமே கூறினான். பின்பு அவனும் கனடா சென்று விட்டான். கனடாவில் 10 வருடங்களாக உழைத்து நிறையப் பணம் சம்பாதித்து ஊருக்கே திரும்பி வந்து விட்டான். எமது நண்பனின் தாயின் நினைவாக நாங்கள் படித்த பாடசாலையில் ஒரு கட்டடம் ஒன்று கட்டிக் கொடுத்தான் . நண்பனின் தாயின் நினைவு நாளன்று 100 ஏழை மாணவர்களுக்கு உணவு, உடைகள் வழங்கினான். தனது காணி ஒன்று அநாதை கள மடம் ஒன்றை எழுப்ப அன்பளிப்பாக வழங்கினான். இன்றோ அவன் ஊருக்கு உழைத்த உத்தமனாகத் திகழ்ந்து எல்லோராலும் பாராட்டப் படுகின்றான்.

2. (அ) **விண்ணப்பக் கடிதம்**

செல்வி.ந.தர்மினி
இல.37, ஆருத்துசா ஒழுங்கை,
வெள்ளவத்தை.

பிரதம ஆசிரியர்,
"தினகரன்" பத்திரிகை,
கொழும்பு.

"ஆய்வுகூட உதவியாளர்"

1. விண்ணப்பிக்கும் பதவி : ஆய்வு கூட உதவியாளர்.
2. விளம்பரம் வெளியான பத்திரிகை, வர்த்தமானி, திகதி : அரச வர்த்தமானி, தினகரன் பத்திரிகை 05/01/01
3. விண்ணப்பிப்பவர் பற்றிய விபரங்கள் :
   - பெயர் : செல்வி. நகுலேஸ்வரன் தர்மினி
   - வயது : 23
   - பால் : பெண்
   - பிரஜை : இலங்கைப் பிரஜை
   - திருமாணமானவரா : இல்லை
4. கல்வித் தகுதிகள் : விஞ்ஞானமாணிப் பட்டதாரி. (விசேடம் சிறப்புச் சித்தி) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
5. முன்னனுபவங்கள் : மகாராஜா நிறுவனத்தில் ஆய்வுகூட உதவியாளராக இரு வருடங்கள் சேவை ஆற்றியமை.

6. உறவினரல்லாத இருவரது பெயர் முகவரி :

1. திருமதி.இ.தம்பையா,
பிரதி முகாமையாளர்,
இலங்கை வங்கி,
தலைமை அலுவலகம்,
கொழும்பு 01.

2. திரு.இ.வேலும்மயிலும்,
கல்விப் பணிப்பாளர்,
கொழும்பு கல்வி வலயம்,
கொழும்பு 02.

7. விண்ணப்பதாரியின் விசேட தகுதிகள் : இலங்கை மருந்தகவியலாளர் பரீட்சையிற் சித்தி.

எனவே இவ்வேலை வெற்றிடத்திற்கு எனது தகுதிகள் பொருத்தமாகவிருப்பதால் எனக்கு இவ்வேலையைப் பெற்றுத் தருமாறு தங்களைப் பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
உண்மையுள்ள,
ந.தர்மினி.

(ஆ) சர்வதேச கிறிக்கெட் விளையாட்டுப் போட்டிகளில் இன்று பல்வேறு நாடுகள் பங்குபற்றி வருகின்றன. இதற்கு அந்த நாட்டு அரசாங்கங்கள் ஊக்கமும், ஆதரவும், அளித்துள்ளன. கிரிக்கெட் ஆட்டங்கள் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இலங்கை வில்ஸ் கிரிக்கெட் சர்வதேச ஒருநாள் விளையாட்டுப் போட்டியில் சாம்பியன் பட்டத்தைப் பெற்றபின்னரே எமது நாட்டின் பெயர் சர்வதேச ரீதியல் பிரபல்யம் அடைந்தது. ஆனால் இன்றோ, கிரிக்கெட் ஆட்டம் சூதாட்டமாக மாறியுள்ளது. பணம் கொழித்த சில தரகர்கள் ஒருவருடன் ஒருவர் பந்தயம் பிடிப்பர்.இன்ன விளையாட்டில் இன்ன நாடுதான் வெற்றிபெறுமென பந்தயம் பிடிப்பர். அந்தநாட்டு வீரர்களுக்குப்பணத்தைக் கோடி கோடியாக அள்ளி வழங்குவர். வாங்கிய பணத்துக்காக வீரர்கள் வேண்டும் என்றே தோற்றுப்போவர். தமது அணிவீரர் வெற்றி பெறுவர் என நினைத்து ரசிகர்கள் தற்கொலை செய்வர். வன்செயல்களில் ஈடுபடுவர். முன்னாள் இந்திய, தென்னாபிரிக்க அணியின் தலைவர்கள் கையும் களவுமாகப் பிடிபட்டு ஊழல் குற்றச் சாட்டில் குற்றம் புரிந்தவர்களாகக் கணிக்கப்படுகின்றனர். இதனால் பலர் கிரிக்கட்டை வெறுக்கும் நிலையும் உள்ளது.

(இ) அறிக்கை.
அதிபருக்கு!

இன்று வாசிப்புப் பழக்கம் அருகி விட்டது. இதனால் வாசிப்புப் பழக்கத்தை அதி கரிப்பதற்காக எமது பாடசாலை நூலகத்தைப் புனரமைப்புச் செய்ய வேண்டியுள்ளது. வகுப்பறை நூலகங்களை ஆக்கலாம். இதற்காக மாணவரிடமிருந்தும் பெற்றோரிட மிருந்தும் நலன் விரும்பிகளிடம் இருந்தும் நூல்களை அன்பளிப்பாகப் பெறலாம். அடுத்த மாதம் அளவில் முதலாம் வாரம் நூலக வாரம் ஒன்றை ஒழுங்கு செய்யலாம். வெளிநாட்டுத் தூதரகங்கள், தேசிய நூலகம் ஆகியவற்றிலிருந்து நூல்களைப் பெறலாம். நூலகப் பயிற்சி பெற்ற நூலகர் ஒருவரை நூலகத்துக்குப் பொறுப்பாக நியமிக்க வேண்டும். நூல்களை முறையாகப் பட்டியல் ஆக்கம் செய்து இலக்கமிடல் வேண்டும். நேரசூசியில் நூலகப் பயன்பாட்டுக்கு ஒரு வாரத்தில் ஒரு பாட வேளையாவது ஒதுக்க வேண்டும். பல்வேறு சஞ்சிகைகள், பத்திரிகைகள் பெற்று மாணவர்கள் அனைவருக்கும் வாசிக்கச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

ஜெரூசா தம்பையா,
மாணவர் மன்றச் செயலாளர்.

(ஈ) துண்டுப் பிரசுரம்.

"விவசாயமே பெருஞ் செல்வம்."

இன்றைய இளைஞர்களே! விழித்தெழுங்கள். நாளைய உலகத்தை உருவாக்கும் சிற்பிகளே! விரைந்து வாருங்கள். நீங்கள் சோம்பியிருந்தால் நாளைய உணவுக்குத் திண்டாட வேண்டிவரும். விவசாயத் தொழில் செய்வது கேவலம் என்று நினைக்காதீர்கள். எமது வயிற்றுக்கு உணவு போடுவது விவசாயமே.

உழவன் சேற்றில் கால் வைக்காவிட்டால் நாம் சோற்றில் கையை வைக்க முடி யாது. நாம் உணவுப் பொருள் இறக்குமதிக்காக நமது அன்னியச் செலாவணியை விரயஞ்செய்கிறோம். இளைஞர்களே உங்கள் மனப்பாங்கை மாற்றுங்கள். விவசாயக் கைத்தொழிலை நாடுங்கள்.

3. காவியங்கள் அன்றும் இன்றும்

காவியங்கள்	சுவையான	கற்பனையுடன்	அமைய
வேண்டும்.	பிறர்	மதிக்கத்தக்கதாக	அமைய
வேண்டும்.	காவியங்களில்	தெய்வாம்சக்	கருத்துகள்
காணப்பட்டன.	பல்வேறு	காவியங்கள்	எழுத்
தெய்வமே	வழிகாட்டியது.	இவ்வாறு	தெய்வத்தின்
துணையுடன்	காவியங்கள்	எழுந்தன.	வியாசர்
கூறப்	பாரதத்தை	விநாயகரே	எழுதினார்.
பழங்	காலத்தில்	காவியங்கள்	எழுத்தக்க
சூழ்நிலை	காணப்பட்டது.	இக்காலத்தில்	எத்தகைய
நிகழ்ச்சியும்	விரைவில்	பரவிவிடும்.	நாளுக்கு
நாள்	செய்திகள்	வெளிவந்த	வண்ணம்
உள்ளன.	இதனால்	புதிய	செய்திகள்
பழையன	ஆகின்றன.	அக்காலத்தில்	இத்தகைய
வசதிகள்	இல்லை.	சிறிய	நாட்டில்
நடக்கும்	நிகழ்ச்சிகள்	மருவி	மனதில்
நிலைத்து	நிற்கக்	கூடிய	கதைகளாக
வடிவம்	பெறுகின்றன.	அன்றைய	காவியங்கள்
மக்கள்	மனதில்	நிலை	பெற்றன.
இன்று	காவியங்கள்	தோன்றாமைக்குப்	பல
காரணங்கள்	உள்ளன.	தன்னிகரற்ற	தலைவர்கள்
இல்லை.	சமத்துவ	உணர்ச்சிகள்	வளர்ந்து
விட்டன.	பழங்	காலத்தைப்	போல
அரிய	செயல்கள்	போற்றப்படுவது	இல்லை.
வாழ்க்கை	வேகமாகப்	போகும்	தன்மை
உடையது.	காவியங்களைப்	படித்து	இன்புற
ஓய்வு	கிடைப்பது	இல்லை.	விரைந்து
படிக்கக்	கூடிய	உரைநூல்கள்	தோற்றம்
பெற்றுவிட்டன.			

கல்விப் பொதுத்தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2000 டிசெம்பர்

தமிழ் மொழியும் இலக்கியமும் III

விடைகள்

1. (அ) யாரால் : கோசலையால்
யாருக்கு : இராமனுக்கு
சந்தர்ப்பம் : இராமன் தான் நாடாளும் உரிமையைப் பரதனுக்குக் கொடுத்துவிட்டுக் காட்டுக்குச் செல்லப் போவதாகத் தன் தாயாகிய கோசலையிடம் கூறியதற்குப் பதிலாகக் கோசலையாற் கூறப்பட்டது.

(ஆ) யாரால் : இறைவனாகிய அல்லாஹ்வால்
யாருக்கு : வானவர்களுக்கு அல்லது தேவர்களுக்கு
சந்தர்ப்பம் : ஆமினா கருத்தரித்த வேளையில்

(இ) யாரால் : விபுலானந்தரால்
யாருக்கு : சந்திரனுக்கு
சந்தர்ப்பம் : நல்வினையால் சுவர்க்கமும், தீவினையால் நரகமும் கிடைக்கும் என்று அறிந்த பின்னர், தனது உண்மை நண்பனை நினைத்துச் சந்திரனிடம் கூறியது.

(ஈ) யாரால் : அநபாயச் சோழன் மகன் வீதி விடங்கனால்
யாருக்கு : தனக்குத் தானே
சந்தர்ப்பம் : பசுக்கன்று தன் தேர்க்காலிற் சிக்கி இறந்த போது தனக்கு வந்துற்ற பழியைத் தீர்க்க எண்ணிய வேளையில்.

(உ) யாரால் : ஜஹாங்கீர் மன்னனால்
யாருக்கு : குடிமக்களுக்கு
சந்தர்ப்பம் : கொலையுண்ட ஒருவனுக்காக நியாயம் கோரி வந்த மக்களில் ஒரு முதியவர் "அரசியே தான், இங்கு குழுமியிருக்கும் அனைவரும் சாட்சி கூறுவர்." என்று கூறியவேளையில் மன்னனால் கூறப்பட்டது.

2. (அ) மகரந்தப் பொடிகள் சிந்துகின்ற பூமாலையை அணிந்தவன், குளிர்ச்சி பொருந்திய சந்திரவட்டக் குடையின் கீழ், செவ்விதாகிய தர்மம் விளங்கும் வண்ணம் பெண்கள் பக்கத்தில் வைத்து உணவூட்டுகின்ற பசுமையான கிளியும், வேட்டையாடும் பருந்தும் ஒரேகூட்டில் ஒற்றுமையாக வாழும்படி உலகத்தைத் தனக்கே உரியதாக்கி ஆட்சி செய்தான்.
தொனிப் பொருள் / குறிப்புப்பொருள் :-
பகைமையற்ற ஒற்றுமை மேலோங்கிய நளனின் ஆட்சிச் சிறப்பு.

(ஆ) செய்னம்பு நாச்சி என்பவள் கொடிய காட்டுப் புலியை ஒத்தவள். அவள் வாய் பேசா மலே வங்காள தேசம் வரை போகக் கூடியவள். எவ்வித நோயும், இல்லாமல் நூறு நாள் படுப்பாள். சீட்டுக் கட்டிச் சேர்த்த பணத்தைச் சேமிப்புப் பெட்டிக்குள் நிறைத்து வைப்பாள்.
தொனிப்பொருள் :-
செய்னம்பு நாச்சியாரின் குணஇயல்புகள்.

(இ) ஈவற்றி பொருந்திய ஆணைச் சக்கரம் உலகம் முழுவதும் சூழ்ந்து வரத் தன் ஆட்சி க்குட்பட்டுச் சுற்றியிருக்கும் மன்னர்கள் செலுத்துகின்ற திறைப் பொருள் அரண்மனை வாயிலில் நிறைந்திட பகைமை நீக்கிய நடுவுநிலைமையுடைய பண்டை மனுவின் வழிநின்று ஆட்சி புரிந்து மனுநீதிச் சோழன் என்ற பெயரைத் தனது பெயராக்கிக் கொண்டான்.
தொனிப்பொருள :- மனுநீதிச் சோழ மன்னனின் வீரம், செல்வம், நீதி என்பன.

(ஈ) கல்வி இப்பிறவியிலேயே நன்மைகளைத் தரும். பிறருக்குக் கொடுப்பதாற் குறையாது. அக் கல்வியை உடையாரைப் புகழால் விளங்கச் செய்யும். தாம் உயிருடன் வாழும் வரை தீமை உண்டாதலும் இல்லை. ஆதலால், கல்வியைப் போல அறியாமையால் உண்டாகும் நோயைப் போக்கும் மருந்தினை எவ்வுலகத்திலும் நாம் காணமாட்டோம்.
தொனிப்பொருள் :- கல்வியின் சிறப்புக்கள்.

(உ) மேற்குத் திசை வானம் சுடுகாட்டுத் தீபோல சிவந்து காணப்பட, சூரியன் மெது மெது வாகத் தேய்ந்து மறைவதைக் கண்டேன். வருந்துபவர்களின் உள்ளத்தில் எழும் பெருமூச்சுப் போலக் காற்று வீசி, நீர்த்துளிகள் சிதறுவதைக் கண்டேன். அவ்வேளையில் ஆகாய வெளியில் கருமையான இருட்கூட்டம் நீங்கியது.
தொனிப்பொருள் :- மாலை நேரக் காட்சியும், நண்பரைப் பிரிந்த விபுலாநந்தரது மனநிலையும்.

3. (அ) வள்ளுவர் கூற்று :
"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"
கம்பர் கூற்று :
குற்றமற்ற அன்புத் தாயை, தந்தையை, குருவை, தெய்வப் பதவி அந்தணரைப், பசு வைப், பாலரைப், பெண்களைக் கொன்றவர்க்கும் பிராயச் சித்தம் உண்டு. செய்ந்நன்றி மறந்தவர்களுக்கு ஒருபோதும் பிராயச் சித்தம் இல்லை.

(ஆ) தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை என நன்கு அறிந்திருந்தும் செய்ந்நன்றி மறவாமைக்காகத் தன் தாயின் வேண்டுதலுக்குக் கர்ணன் உடன்படவில்லை. செஞ் சோற்றுக் கடன் கழிப்பது தான் தனது கருமமும், தருமமும், புகழுமெனக் குறிப்பிடுகிறான். பாண்டவர்கள் தனது சொந்தத் தம்பியர் என்று நன்கு தெரிந்த பின்னரும் செய்ந்நன்றி மறவாமையே செம்மை சான்ற அறமெனத் துணிகிறான். பாண்டவர் ஐவரும் ஏவல் செய்யும் நிலையில் குருகுலாதிபர்க்கும் குரிசீலராய் வாழும் வாழ்வையும் கர்ணன் துறக்கத் துணிகின்றான்.

(இ) இராமன் பக்கம் கும்பகர்ணனைச் சேர்த்துக் கொள்வதற்காக விபீடணன் "ஐயனே! எனக்கு இன்னருள் சுரந்த இராமபிரான் உனக்கும் அபயமளிப்பான். மாயப்பிறவி நோய்க்கும் மருந்தாக அமைவான். எனக்கு அவன் தந்த இலங்கை அரசும், செல்வமும் உனக்கு யான் தருவேன். தீவினை புரியும் தமையனைத் துறந்து அற நெறியாகிய இராமனைச் சேர்தலே அறிவுடைமை" எனக்கூறிய சந்தர்ப்பத்தில் மறுத்துக் கூறுகிறான். "நிலையற்றதாகிய இவ்வுலக வாழ்வை விரும்பி இராவணன் செய்த பெரு நன்றியை மறந்து இராமன் பக்கம் சேரமாட்டேன்." எனப்பதில் கூறுகிறான். "நீ சொல்லிய நீதி முறை அனைத்தும் உனக்குத் தக்கதே. எனக்குப் பொருந்தாது" என்கிறான். "தன்னை வளர்த்தெடுத்துப் போர்க்கோலம் செய்து விட்ட அண்ணனுக்காக உயிரைக் கொடுத்து அங்கு செல்ல மாட்டேன்." எனக் கும்பகர்ணன் கூறுகிறான்.

4. (அ) முதுமையால் கூன் விழுந்த முதியவர் ஒருவருக்கும் துடுக்குத் தனம் மிகுந்த இளைஞர் ஒருவருக்கும் இடையிலான உரையாடல் :-
"தவறிவிட்ட ஏதோ ஒன்றைத் தாங்கள் தேடுகிறீர்கள்"
"பாட்டா இந்த அழகான வில்லை எவ்வளவு பணங் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்."

சமதிக்கும் இளைஞனுக்குமான உரையாடல் :-
"நீ சிறுவனாக இருந்தபோது எவ்வளவு அழகாய் இருந்தாய்"
"ஆம் என் முகம் கறுப்புடையணிந்து கவலைப்படுகின்றது."

கலீபாவுக்கும் தன்னைக் கடவுள் எனக் கூறியவனுக்குமான உரையாடல் :-
"சென்ற ஆண்டு தான் ஒருவன் தீர்க்கதரிசி எனக் கூறிக் கொண்டு வந்தான்."
"ஆம்! நீ நன்றே செய்தாய். ஏனெனில் நாம் அவனைத் தீர்க்கதரிசியாக அனுப்பியதே இல்லை."

(ஆ) பாரசீகப் புலவர்களது ஆக்கங்களில் நகைச் சுவை, காதலன் வர்ணனை :-
எண்ணம் எனும் தராசுக்கு இரண்டு தட்டுகள். ஒரு தட்டில் சந்திரன். மற்றொரு தட்டிலே தலைவியின் எழில். தலைவியின் தட்டுத் தாழ்வுண்டது. அவள் மண்ணுலகில் நடமாடுகிறாள். தண்மதி விண்ணுலகில் சிக்கிக் கொள்கிறது.

வீரர் தைமூருக்கும் தெளலத்துக்குமான உரையாடல் :-
"தொளலத் குருடாகவா இருக்கும்"
"தெளலத் குருடாக இல்லாமல் இருந்தால் முடவனிடம் வந்திருக்காது."

(இ) 1. ஆந்தைகளின் உரையாடல் :-
"என் புதல்வி உன் புதல்வனை மணக்க 200 பாழடைந்த பட்டணங்கள் சீதனமாகத் தரல் வேண்டும்."
"வாழ்க எங்கள் வேந்தன். ஆயிரம் வேண்டுமானாலும் தருகிறேன்."

2. பாரசீக நாட்டு வீரரின் குதிரையின் வேகம் பற்றி நண்பர்களுக்கிடையிலான உரையாடல் :-
"வெள்ளிக் கிழமை ஜும்மாவுக்குப் போகிறேன்."

3. கவிஞர் மன்னரது குதிரையைப் பாடுதல் :-
"இரவில் அது புறப்பட்டால் முன் சென்று பகலைப் பிடிதது விடும்."

5. (அ) கந்தசாமிப் பெரியோனின் குணவியல்புகள் :-
எழுத்தறிந்து கலை பயின்றோன். பணிந்த மொழிப் பெரும் புலவன். சொல்வகை, சொற்றொகை, சொல்நடை உணர்ந்தோன். சொற்சோரத் தூய நெறியாளன். மொழித் திறத்தின் முட்டறுத்தவன். மூதுரையைக் கற்றவன். அறநெறியில் பயின்றவன். அகத்திணை, புறத்திணை ஒழுக்கங்களைக் கற்றவன். மாதர் நலம் தீதென விட்டு அகன்றவன். துறவு வாழ்க்கை வாழ்ந்தவன். ஆசையற்றவன்.

(ஆ) விபுலாநந்தர் : மக்களுக்கு வாழ்வும் தாழ்வும் எதனால் வருகின்றன?

சந்திரன் : பிறந்தவர் இறத்தல், பிறத்தல், தேய்தல், வளர்தல் என்ற உண்மையை யாவரும் அறிவதற்காகவே நான் தேய்ந்தும் மறைந்தும் உதித்தும் நின்று வளர்கின்றேன். இனிய நித்திரை போன்றது இறப்பு. நித்திரை விட்டு விழிப்பது போன்றது பிறப்பு என்று தமிழ்ப் புலவர் கூறியதை நன்கு உணர்ந்து கொள்வாய்.

விபுலாநந்தர் : நரக, சுவர்க்க வாழ்க்கையை நாம் அடைவது ஏன்?

சந்திரன் : நல்வினையால் சுவர்க்கமும், தீவினையால் நரகமும் விளைகின்றன. என்பதை அறிவாய்.

விபுலாநந்தர் : வான்மதியே, நாம்வருந்திக் கற்ற கல்வி அழிந்து மறைந்து விடுமோ, மறுமையிலும் பயன்படுமோ?

சந்திரன் : ஒரு பிறப்பில் கற்ற கல்வி ஏழ பிறப்பிலும் பயன்படும் என்ற செம்மொழியை உணர்வாயாக.

6. (அ) நினைக்க வேண்டியவை: 1. இறைவனை நினைக்க வேண்டும்.
2. மரணத்தை நினைக்க வேண்டும்.

மறக்க வேண்டியவை. 1. தான் பிறருக்குச் செய்த நன்றி.
2. பிறர் தனக்குச் செய்த நன்றி இல்லாத செயல்.

(ஆ) அவசியம் செய்யவேண்டியவை:-

1. சமய ஒழுங்குகளை அறிதல் வேண்டும்.
2. தீய குணங்களை அகற்றல் வேண்டும்.
3. பிடிவாத குணத்தை அடக்க வேண்டும்.
4. கற்றறிந்தவரிடம் கற்று, கேட்டு அறிய வேண்டும்.
5. கல்லாதவருக்குக் கற்பித்தல் வேண்டும்.

(இ) ஆசாரக் கோவையைக் கற்பதால் விளையும் பயன்கள்:-

ஒருவர் தனது வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டிய நல்லொழுக்கங்களைக் கூறுகிறது.

1. நினைக்க வேண்டியவை.
2. செய்யவேண்டியவை.
3. செய்யக் கூடாதவை.
4. கல்விக்கு உறுதுணையானவை.
5. கல்வியில் நிறைந்தவர், குறைந்தவர் வேறுபாடு.
6. புகழத்தக்கவர், இகழத்தக்கவர் இயல்புகள்.
7. அழிப்பனவும், அழிவனவும்.
8. நேர்மையாளர் இயல்பு.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும் I

புதிய பாடத்திட்டம் - மாதிரி வினாத்தாள் - 1

ஒரு மணித்தியாலம்

- பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. கெழுதகை நண்பனின் பிரிவை என்னாற் தாங்க முடியவில்லை. **கெழுதகை** என்பதன் ஒத்த கருத்துச் சொல்
(1) சிறந்தகை (2) பேரன்பு (3) நற்குணம் (4) பெருநிதி

02. அரிச்சந்திரன் கான்முளையைக் காலால் வீசி எறிந்தான். இங்கு **கான்முளை** என்பதன் ஒத்த கருத்துச் சொல்
(1) மகவு (2) செவிலி (3) களை (4) களிறு

03. அகந்தை கொண்டவர் அழிவது உறுதி. **அகந்தை** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
(1) பணிவு (2) தருக்கு (3) செருக்கு (4) மமதை

04. வெகுசனத் தொடர்பு ஊடகங்கள் சுயாதீனமாக இயங்க வேண்டும். **சுயாதீனம்** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
(1) அன்னியம் (2) நிராதாரம் (3) சுதந்திரம் (4) பராதீனம்

05. பாரதியார் சுதேசி இயக்கத்திற்குப் புத்துயிர் ஊட்டினார். **சுதேசி** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
(1) பரதேசி (2) உபதேசி (3) விதேசி (4) அதேசி

- பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வான்றிலும் புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

06. வியாபார நிறுவனங்களின் முடிவான இலாப நட்டக் கணக்கு ..... எனப்படும்.
(1) பேரேடு (2) ஐந்தொகை (3) வருமானம் (4) உபரித்தொகை

07. எவருக்கும் போகக்கூடாது எனத் தடை விதித்த போதிலும் அதிபர் மூவருக்கு ..... அளித்தார்.
(1) விதிவிலக்கு (2) தண்டனை (3) உத்தரவு (4) உறுதிமொழி

08. பரீட்சையில் சிந்தியடைந்த மாணவன் ..... அடைந்தான்.
(1) தடுமாற்றம் (2) மருட்சி (3) அங்கலாய்ப்பு (4) புளகாங்கிதம்

09. அரசு மேற்கொள்ளும் தேசிய அபிவிருத்தி திட்டங்களுக்கு நாட்டு மக்கள் ..... நல்குதல் அவசியமாகும்.
(1) கூட்டுறவு (2) நல்லிணக்கம் (3) ஒத்துழைப்பு (4) நன்மதிப்பு

10. பொருள்களை ஏற்றுமதி செய்வதால் நமது நாட்டிற்கு அந்நிய ..... கிடைக்கின்றது.
(1) மூலதனம் (2) செலாவணி (3) சென்மதி நிலுவை (4) நன்கொடை

11. இழந்த பொருள்களைக் கண்டுபிடித்ததற்குக் கொடுக்கப்படும் வெகுமதி
(1) இழப்பீடு (2) சன்மானம் (3) வெகுமானம் (4) கண்கூலி

12. நிலம், நீர், தீ, வளி, வான் என்னும் ஐந்து முதற் பொருள்கள்
(1) ஐம்பூதம் (2) ஐம்புலன் (3) ஐம்பொறி (4) ஐந்திணை

13. கத்தரிவித்தை விதை என வழங்குவது போல, ஆமணக்கின் வித்து
(1) முத்து (2) கொட்டை (3) மணி (4) சோறு

14. தென்னையின் இளங்காய் குரும்பை என்பது போல பனையின் இளங்காய்
(1) கச்சல் (2) நுங்கு (3) வடு (4) மூசு

15. தென்னை, பனை என்பவற்றின் இலை ஓலை என்பது போல, நெல்லின் இலை
(1) இலை (2) கற்றை (3) கதிர் (4) தாள்

● பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

16. ஆபத்து நேரத்தில் மிக விரைந்து உதவி செய்தல் என்னும் பொருளுக்கேற்ற உவமை
1. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல 2. ஊருணி நீர் நிறைந்தாற் போல
3. உடுக்கை இழந்தவன் கை போல 4 கண்ணை இமை காப்பது போல

17. "முகம் பார்த்தல்" என்ற மரபுத் தொடரின் கருத்து
(1) முகத்தை கண்ணாடியில் பார்த்தல் (2) ஒருவரை ஒருவர் உற்று நோக்குதல்.
(2) கோபங் கொள்ளுதல். (4) கருணை காட்டுதல்.

18. "மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா"?
(1) முன் யோசனையோடு செய்யும் முயற்சி வீண் போகாது.
(2) தைரியம் உண்டானால் மண் குதிரையிலும் ஆற்றைக் கடக்கலாம்.
(3) போலிப் பொருள்களைக் கொண்டு காரியம் சாதிக்கத் துணிதல்.
(4) முயற்சி ஒன்றில் ஈடுபட முன் அதனால் வரும் நன்மை தீமைகளை அறிந்திருத்தல்.

19. "உதவாக்கரை" என்ற மரபுத் தொடரின் கருத்து
(1) ஆற்றங்கரை (2) பயனற்றவன் (3) ஊதாக்கரைசல் (4) உதவி கேட்பவன்

20. "கழுத்துக் கொடுத்தல்" என்ற மரபுத் தொடரின் கருத்து
(1) துன்புறுகையில் உதவி செய்தல் (2) திருமணஞ் செய்தல்
(3) பாரத்தைத் தாங்குதல் (4) கொலை செயதல்.

● பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

21. பன்மையில் வழங்காத ஒரு சொல்
(1) மழை (2) பயன் (3) நாள் (4) காலம்

22. இகரம் என்பது
(1) மெல்லெழுத்து (2) சுட்டெழுத்து (3) நெட்டெழுத்து (4) வல்லெழுத்து

23. அறம் பொருள் இன்பம் என்பது
(1) உவமைத்தொகை (2) பண்புத்தொகை (3) வினையெச்சம் (4) உம்மைத்தொகை

24. மாந்தர் அகத்திருள் போக்க எழுந்தது அறிவெனும் இரவி. இங்கு "அறிவெனும் இரவி" என்பது என்ன அணி ?
(1) உவமை (2) உயர்வுநவிற்சி (3) உருவகம் (4) தற்குறிப்பேற்றம்

25. இடைச்சொல் வகையுள் அடங்காதது
(1) பகுதி (2) விகுதி (3) இடைநிலை (4) சாரியை

26. முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது
(1) எதுகை (2) மோனை (3) மடக்கு (4) சிலேடை

27. கடிநகர் அடைந்தான். இங்கே கடி என்பதன் கருத்து
(1) காவல் (2) வாசனை (3) புதுமை (4) கூர்மை

28. பொங்கல் படைத்தான். இங்கே பொங்கல் எனபது
(1) சொல்லாகுபெயர் (2) தொழிலாகுபெயர் (3) கருவியாகுபெயர் (4) பொருளாகுபெயர்

29. மகேசன் என்பதைப் பிரித்து எழுதினால்
(1) மகே + ஈசன் (2) மகா + வீசன் (3) மகே + சன் (4) மகா + ஈசன்

30. இவ்வெழுத்து இல்லாத எழுத்துக்கள்
(1) நெடிலெழுத்துக்கள் (2) வல்லெழுத்துக்கள்
(3) மெல்லெழுத்துக்கள் (4) குறிலெழுத்துக்கள்

● பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றினதும் முற்பகுதிக்குப் மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

31. நீர் கூப்பிட்டிராவிட்டால் அவர்
(1) போய்க்கொண்டிருக்கிறார். (2) போய்விட்டிருந்தார்.
(3) போய்விட்டிருப்பார். (4) போய்விட்டார்.

32. காலத்துக்குக்குக் காலம் எழுதப்பட்ட கதைகள் இப்பொழுது தொகுத்து
(1) வெளியிடப்படுகிறது. (2) வெளிவருகின்றன.
(3) வெளியிடப்படுகின்றன. (4) வெளியாயின.

33. செடியின் இலைகள் ஒவ்வொன்றாய்
(1) வாடியது. (2) வாடப்பட்டன. (3) வாடப்பட்டது. (4) வாடின

34. அவன் இங்கு வந்தாலன்றி நான் பணம்
(1) கொடுத்தேன் (2) கொடேன்.
(3) கொடுக்கவில்லை. (4) கொடுப்பதில்லை.

35. தக்க காரணங் காட்டினாலன்றி நீர் வேலையினின்றும்
(1) நீக்கப்படமாட்டீர். (2) நீக்கப்படுவீர்.
(3) நீக்கப்படீர். (4) நீக்கப்படுகிறீர்.

● பின்வரும் பாடல்களைப் படித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

சிறு நண்டு மணல் மீது படமொன்று கீறும்
சில வேளை இதை வந்து கடல் கொண்டு போகும்
கறி சோறு பொதியோடு தருகின்ற போதும்
கடல் மீது இவள் கொண்ட பயம் ஒன்று காணும்.

36. இப் பாடலில் குறிப்பிடப்படும் தொழில்
(1) மீன்பிடி (2) முத்துக்குளித்தல் (3) உப்புத்தொழில் (4) மரவேலை

37. இப் பாடலைப் பாடியவர்
(1) முருகையன் (2) நு.மான் (3) மஹாகவி (4) நீலவானன்

38. இங்கு பொதி எனக் குறிப்பிடப்படுவது
(1) பொறி (2) கட்டுச்சோறு (3) பாரம் (4) பொரி

39. இங்கே இவள் எனக் குறிப்பிடப்படுபவள்
(1) இலக்குமி (2) பூமாதேவி (3) கடல்அன்னை (4) மீனவனின் இல்லாள்.

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் கிடக்கின்றன. அவற்றை ஒழுங்குற வைத்தாற் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.
(அ) அவனுக்கு பிற உயிர்களுக்கு இல்லாத பகுத்தறிவு இருக்கிறது.
(ஆ) பஞ்ச பூதங்களும் அவன் வசப்பட்டு அவனுக்கு ஊழியஞ் செய்து கொண்டு நிற்கின்றன.
(இ) உயிரினங்களுள்ளே ஆறறிவு படைத்த மனிதனே சிறப்பு மிகுந்தவனாக விளங்குகிறான்.
(ஈ) மனிதன் தன் பகுத்தறிவைத் துணையாக கொண்டு அரிய பல காரியங்களை நிறைவேற்றி வருகின்றான்.
(உ) மிகச் சிறிய அணுவுக்குள்ளும் அவனுடைய கண் ஊடுருவிச் சென்று விட்டது.
பந்தியில் வாக்கியங்களின் சரியான வைப்புமுறை.
(1) ஆ, இ, அ, உ, ஈ (2) இ, அ, ஈ,ஆ, உ
(3) ஈ, ஆ, இ, அ, உ (4) உ, ஆ, இ, அ, ஈ

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும் II

மாதிரி வினாத்தாள் - 1

இரண்டு மணித்தியாலம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக.

   (i) "அவர் ஓர் அதிசயமான மனிதர் என்ற வாக்கியத்தோடு தொடங்கி இத்தனை ஆண்டுகளுக்கு பிறகும் எங்கள் பழைய தலைமை ஆசிரியர் தம் மாணவர்கள் ஒவ்வொருவரையுமே நினைவில் வைத்திருக்கிறார்." என்ற வாக்கியத்தில் முடியுமாறு "எங்கள் பழைய தலைமை ஆசிரியர்" என்ற தலைப்பில் அமையும் ஒரு உரைச்சித்திரம்.

   (ii) பாழடைந்த வீட்டு முற்றத்தில் படர்ந்திருந்த அறுகம் புல் கூறிய சுயசரிதை.

   (iii) இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் ஆங்கிலக் கல்வியின் அவசியம் பற்றி ஓர் விளக்கக் கட்டுரை.

   (iv) மலை மீதொருநாள் என்ற தலைப்பில் ஓர் வருணனைக் கட்டுரை.

2. கீழே தரப்பட்டுள்ள அ, ஆ என்னும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் சுருக்கத்தை 15-20 சொற்களில் அமையக் கூடியவாறு வேறு வேறாக எழுதுக.

   (அ) பழைய பழக்கவழக்கங்கள் என்று சமுதாய உறவுக்காகச் சிலவற்றை வைத்துக் கொண்டிருக்கலாம். அவற்றுள் சில பொருள் அற்றவைகளாகவும் இருக்கலாம். ஆயினும் மக்கட் சமுதாயமாகச் சேர்ந்து வாழ்வதற்கு அவை துணையாக இருப்பதால் அவற்றை விடாமல் மேற் கொள்ளலாம். மூடநம்பிக்கைகள் அப்பிடிப்பட்டவையல்ல. அவை அறியாமையை அடிப்படையாகக் கொண்டமைந்தவை. உள்ளத்தில் அச்சம் ஊட்டி மக்களை ஆட்டி வைக்கும். அறிவின் ஒளி பெற்று மனிதன் முன்னேறுவதற்குத் தடையாக இருக்கும். அவை நல்லவையல்ல. பழைய பழக்கவழக்கங்கள் சிலவற்றை விடாதவர்களும் மூடநம்பிக்கைகளை அறவே வெறுக்கின்றார்கள். விருந்தினருக்கு உணவிடும் போது முதலில் இனிப்பு வைத்தலும், அவர் கை அலம்பும் போது இரு கைகளாலும் நீர் மொண்டு தருதலும் முதலானவை பழைய பழக்கவழக்கங்கள். பூனை எதிரே வரக்கண்டு மனங் கலங்குதலும், அணைந்த விளக்கைக் கண்டு என்ன வருமோ என அஞ்சுதலும் முதலானவை மூடநம்பிக்கைகள். முன்னவை நல்லவை சமுதாய வளர்ச்சிக்கு வேண்டியவை. பின்னவை அறியாமை உடையவை. தனி மனித வளர்ச்சிக்கும் தீமை பயப்பவை. ஆகையால் வெறுக்கத்தக்கவை.

   (ஆ) நாடகம் இலக்கிய வகைகளுள் முக்கியமானது. இது பாவாலும் அமையலாம். உரைநடையாலும் அமையலாம். இன்றைய சனநாயக உலகில் நாடகங்கள் பொதுமக்களுக்கு இலகுவாக விளங்கும் உரைநடையிலே பெரும்பாலும் ஆக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் சில படிப்பதற்கு மட்டுமே உரியன. வேறு சில மேடையனுபவம் ஒன்று மட்டுமே கொண்டு இலக்கியப் பயிற்சி இல்லாதாரால் எழுதப்படுகின்றன. இன்னும் சில நாடகங்கள் நடிப்பதற்கும் படிப்பதற்கும் ஒருங்கே உரியன. இவ்வகை நாடகங்களே கலைச்சிறப்புடையன. அவை பார்வையாளரது உணர்ச்சியைத் தூண்டி உள்ளத்திற் புதைந்து கிடக்கும் வேட்கைகளுக்கு விடுதலை அளித்து அன்பையும் அனுதாபத்தையும் வெளிப்படுத்தி மக்களைப் பண்படுத்தும் மகத்தான பணியைச் செய்யவல்லன.

3. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

   சிலப்பதிகாரம் என்னும் சிறந்த காப்பியத்தைச் செய்தவர் இளங்கோவடிகள். இவர் சேரர் குலத்தைச் சேர்ந்தவர். சேரன் செங்குட்டுவனுக்கு தம்பி ஆதலினால் இளங்கோ என்றும், துறவொழுக்கம் பூண்டமையால் அடிகள் என்றும் அழைக்கப்பட்டார். அவருக்கு பிற்காலத்தில் இருந்தவர் கம்பர். இவர் கவிச்சக்கரவர்த்தி எனவும் பாராட்டப்பட்டவர். இவராற் செய்யப்பட்டது இராமன் கதையை தெரிவிக்கும் இராமாவதாரம் என்னும் காப்பியம். அக் காப்பியத்துட் சிற்சில இடங்களுள் சிலப்பதிகார வைப்பினை ஒத்த வைப்புக்கள் காணப்படுதலின் கம்பர் சிலப்பதிகாரம் என்னும் நூலினும் பெரிதும் பயிற்சி உடையவர் என்பது புலப்படுகின்றது.

   1. இராமாயணமா? சிலப்பதிகாரமா? முதலில் எழுந்த நூல் எது?
   2. அதற்கான காரணத்தை தெளிவுறுத்துக.
   3. சிலப்பதிகாரம் என்ற சொல்லை பிரித்தெழுதுக.
   4. பின்வரும் சொற்களின் பொருளை எழுதுக.
      1. காப்பியம் 2. நூல் 3. சிறந்த

4. பத்திரிகையொன்றில் வெளிவந்துள்ள மருத்துவ பீட ஆய்வுகூட உதவியாளர் பதவிக்கு விண்ணப்பக் கடிதம் ஒன்று எழுதுக.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும் III

மாதிரி வினாத்தாள் - 1 பகுதி I

இரண்டு மணித்தியாலம்

1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கும் விடை தருக.

1. பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) "சிங்கக்குருளைக்கு இடுதீம் சுவை ஊனை, நாயின் வெங்கண் சிறு குட்டனைஊட்ட விரும்பினாளே!"
(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்கு கூறப்பட்டது?
(iii) எச் சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?
(iv) சிங்கக்குருளைக்கு ஒப்பிடப்படுபவன் யார்?

(ஆ) "அன்பனே! அன்பர் பூசை அளித்த நீ அணங்கினோடும்
என்பெரும் உலகை எய்தி இரு நிதிக்கிழவர் தானே
முன்பெரும் நிதியம் ஏந்தி மொழிவழி ஏவல் கேட்ப
இன்ப மார்ந்திருக்க ....."
(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்கு கூறப்பட்டது?
(iii) எச் சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?
(iv) இருநிதிக் கிழவர் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

(இ) "நின்றன் தற்செறி யிறைவன் ஆவி தாவியென் சரமேயுண்டதிற் செறிந்துற்றேன் பின்னர் சரதம் ஈதென்று சொற்றான்"
(i) இப் பாடலை இயற்றிவர் யார்?
(ii) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(iii) யாருக்கு கூறப்பட்டது?
(iv) எச் சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?

(ஈ) "ஐயகோ! இது என்ன அபத்தம். என் கையிற் கிடந்த கணையாழியைக் காணவில்லையே"
(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்கு கூறப்பட்டது?
(iii) எச்சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?
(iv) கணையாழி எங்கே தொலைந்தது?

(உ) "தூதுவன் ஒருவன் தன்னைஇவ்வழி விரைவில் தூண்டி
"மாதினை விடுதியோ?" என்று உணர்த்தவே, மறுக்குமாகில்
காதுதல் கடன் என்று உள்ளங் கருதியது அறனும் அ.்தே
நீதியும் அ.்தே ....."
(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்கு கூறப்பட்டது?
(iii) எச் சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?
(iv) இங்கு மாது எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

2. பின்வரும் செய்யுள்களின் பொருளை இக் கால உரைநடையில் எழுதி அவை ஒவ்வொன்றிலும் கீறிட்ட சொற்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.

(அ) வழி வரும் இளைப்பினோடும் வருந்திய பசியினாலே
அழிவுறும் ஐயன் என்னும் அன்பினிற் பொலிந்து சென்று
குழி நிரம்பாத புன் செய் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க.

(ஆ) வெறுவான வெளிமீது மழை வந்து சீறும்
வெறி கொண்ட புயல் நின்று கரகங்கள் ஆடும்
நெறி மாறுபட நூறு சுழி வந்து சூழும்
நிலையான தரைநீரில் இலை போல் ஈடாடும்.

(இ) தாதையைக் கொன்றோன் பின்னே தலை சுமந்து இரு கை நாற்றிப்
பேதையன் என்ன வாழ்ந்தாய் என்பதோர் பிழையும் தீர்ந்தாய்
சீதையைப் பெற்றேன். உன்னைச் சிறுவனும் ஆகப் பெற்றேன்.
ஏது எனக்கு அரியது என்றான் இறுதியில் எல்லை கண்டான்.

(ஈ) துஞ்சிய மைந்தனை எடுத்துச் சுமந்து போந்து
சுடுவார் அற்று இடுகாட்டில் தோள் மேல் ஏற்றிப்
பஞ்சு படும் பாடுபடும் பாவியேற்குப்
பணம் எது? கொள்ளி முறிப் பாதி ஏது?
நெஞ்சு தளர்ந்து அருவினையேன் வருந்தக் கண்டும்
நீ இரங்காய்! என் இரங்கி நிறகும் காலை
வஞ்சி திருமணமிடற்றில் வயங்கா நின்ற
மங்கல நாண் கண்டு இறைவன் மரித்தும் சொல்வான்.

(உ) சொற் செவியுணர்ந்து புந்திதெளிவிலன் படுபாடுன்னா
தற்செவி மனதிற் கொண்ட வயிரத்தால றையு நின்றான்
தற்செறியிறைவனாவித் தாவியென் சரமேயுண்ட
திற்செறிந்துற்றேன் பின்னர் சரதமீதென்று சொற்றான்.

3. பின்வருவனவற்றுள் இரண்டினை விளக்குக.
(அ) வசிட்டமுனிவர் கூறும் அரிச்சந்திரனின் சிறப்பியல்புகள்.
(ஆ) பிஜித்தீவின் கரும்புத் தோட்டத்தில் பெண்கள் படும் அவலங்கள்.
(இ) நல்வழியில் பசி பற்றி ஔவையார் கூறியவை.

4. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.
(அ) "தள்ளாத வயதிலும் சகீனா தலை நிமிர்ந்து நடக்க முடிந்தது" ஆராய்க.
(ஆ) "சீறாப் புராணத்தில் குறிப்பிடப்படும் கதீஜா நாயகியாரின் சிறப்பியல்புகள்" - விரித்துரைக்குக.
(இ) "ஆத்தும விசாரி முன் தோன்றிய நற்செய்தியாளனை கவிஞர் வர்ணிக்கும் திறன்" - விளக்குக.

● 5, 6 , 7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.

5. "உவமை நயம் என்ற பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
(அ) உவமைக்கு தரப்படும் விளக்கம்.
(ஆ) சேக்கிழார் குறிப்பிடும் தாழ்ந்த உவமை.
(இ) கம்பர் குறிப்பிடும் தாழ்ந்த உவமை.

6. "தங்கம்மா" என்ற பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
(அ) அச்சும்மாவின் தோற்றத்தைக் கவிஞர் சித்திரிக்கும் விதம்.
(ஆ) தங்கம்மாவின் ஏழ்மை நிலையை கவிஞர் எடுத்துக் காட்டும் திறன்.
(இ) காசநோய் வாட்டில் இருக்கும் தங்கம்மாவின் கணவனின் பரிதாப நி[illegible].

7. (அ) நமுறூதின் படைகள் போருக்கெழுந்து திரண்டமையைப் புலவர் எவ்வாறு வர்ணிக்கின்றார்?
(ஆ) எழுபது தோழரோடும் நபியவர்கள் போருக்குப் புறப்பட்டமையைப் புலவர் எங்ஙனம் எடுத்துக் காட்டுகிறார்?

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும் I

மாதிரி வினாத்தாள் - 1 **விடைகள்**

01.	2	09.	3	17.	4	25.	1	33.	4
02.	1	10.	2	18.	3	26.	1	34.	2
03.	1	11.	4	19.	2	27.	1	35.	2
04.	4	12.	1	20.	1	28.	2	36.	1
05.	3	13.	1	21.	1	29.	4	37.	3
06.	2	14.	2	22.	2	30.	1	38.	2
07.	1	15.	4	23.	4	31.	3	39.	4
08.	4	16.	3	24.	3	32.	3	40.	2

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும் II

மாதிரி வினாத்தாள் - 1 **விடைகள்**

1. அவர் ஓர் அதியமான மனிதர்

அவர் ஓர் அதிசயமான மனிதர். வயது அறுபத்தைந்தைக் கடந்து விட்ட போதிலும் இரு பது வயது இளைஞரைப் போலவே எங்கள் பழைய தலைமை ஆசிரியர் இன்றும் காட்சியளி க்கின்றார். மெலிந்த உடல் தான், ஆனால் இரும்பு போன்ற தசைகளும், எ.கு போன்ற நரம்புகளும் எதனாலும் தடுக்கவியலாத ஆற்றலும் பொருந்தியவர். அச்சம் என்பதே அவருக்கு இன்னது என்று தெரியாது. நீதிக்காக எவருடனும் எச்சமயத்திலும் போராடத் தயங்கியதில்லை.

அவர் பெயர் கிருஷ்ணபிள்ளை. அவரின் மக்கள் இருவரும் வளர்ந்து பெரியவர்களாகித் தொழில் பார்க்கிறார்கள். அவரின் மனைவி இறந்து விட்டார். அவர் தன் பிள்ளைகளோடு வாழாமல் தனியே வாழ்கிறார். அதில் தான் அவரது தனித்தன்மையும் அதியசமான போக்கும் தங்கியுள்ளது. ஊரிலே படிக்க வசதியற்ற ஏழைப் பிள்ளைகளுக்கு அவரின் வீடு அன்னசத்திரம், ஆதுலர்சாலை, உடை, உணவு, பாடப்புத்தகங்கள் இலவசக்கல்வி என்று இத்தனையும் கிருஷ்ணபிள்ளை வழங்க என்றைக்கும் தவறுவதே இல்லை. தம்மைப் பற்றி கவலைப்படாமல் வித்தியாதானம், வஸ்திரதானம், அன்னதானம் என்று அர்ப்பணிப்பு செய்து வந்தார்.

ஊரிலே வாசிகசாலைகள், சனசமூக நிலையங்கள் முதலாகவுள்ள பொதுப்பணி நிறுவனங்க ளுக்கு எல்லாம் தமது சக்திக்கு மேலாக வழங்குவது இவரின் வழக்கம். மக்களும் உறவினரும் இந்தப் போக்கிற்காக இவரைக் கண்டிப்பதும் உண்டு. இடித்து அறிவுரை கூறுவதும் உண்டு. ஆனால் கிருஷ்ணபிள்ளை இவற்றுக்குச் செவி சாய்ப்பதே இல்லை. இவரைத் திருத்த முடியாது என்று கண்டு அவர்கள் இப்பொழுது இவரின் வழிக்கே செல்வதில்லை. அதைப் பற்றி அவர் கவலைப்படுவதும் இல்லை. நான்கு முழ வேட்டி, நஷனல் சட்டை என்ற இரண்டுந்தான் அவரின் உடைகள். காலில் செருப்பு கூட அணிவதில்லை. தமது வேலைகளைத் தாமே செய்வார். எப் பொழுதும் எவரையும் தமது வேலையைச் செய்யுமாறு எதிர்பார்ப்பது அவரின் சுபாவமன்று. ஆனால் தாமே வலிந்து சென்று எவருக்கும் எத்தகைய உதவியும் செய்ய அவர் தயங்குவதில்லை. தொழிலில் இது உயர்ந்தது இது தாழ்ந்தது என்ற வேறுபாட்டு உணர்வும் அவர் அறியாதது.

எப்பொழுதும் மலர்ந்த முகம். எவருக்கும் இனிய சொல். மாணவர்களாகிய இளைஞர்களில் அளவிலா அன்பு. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற வாழ்வுக்குறிக்கோள். இவற்றின் மொத்த வடிவம் தான் கிருஷ்ணபிள்ளை. எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் எங்கள் பழைய தலைமை ஆசிரியர் தம் மாணவர் ஒவ்வொருவரையும் நினைவில் வைத்திருக்கிறார். இவர் ஓர் அதிசயமான மனிதர்.

2. அறுகம் புல்லின் சுயசரிதை

என் பெயர் அறுகம்புல். நான் இவ்வீட்டு முன்றலில் வாயிற்படியோரமாகத் தழைத்துச் செழித்து வளர்ந்திருக்கின்றேன். என்னை இலகுவில் அழித்துவிட முடியாதபடி நிலமென்னும் நல்லாள் எனக்குப் புகலிடம் அளித்துள்ளாள். இந்த வீட்டு வாயிற்படி அருகே மண்ணுட் புதைந்த கிடந்த என் குலக்கொடியின் ஒரு கணுவிலிருந்து நான் தோன்றினேன். நிலமெனும் நித்தியகன்னி தந்த அமிர்தமயமான உணவை உண்டு வெண்பச்சை இலைகளை நாற்புறமும் பரப்பி நீண்டு, நிமிர்ந்து வளர்ந்தேன். என் அடிக்கணுவிலிருந்து என் முதற்குழந்தை பிறந்தது. என் பிள்ளைகளின்

எண்ணிகையே எனக்குத் தெரியாது. பேரன் பேர்த்திகளின் எண்ணிக்கையோ, கொள்ளுப்பேரன், பேர்த்திகளின் எண்ணிக்கை எப்படித் தெரியும். என்னைத் தலைவனாகக் கொண்ட மிகப் பெரிய ஒரு குடும்பம் என் வாயிற்படியருகே வாழ்ந்து வந்தது.

எனது வளமான வாழ்க்கையைக் கண்ட இந்த வீட்டு மனிதருக்குப் பொறுக்கவில்லை. என் மீது பொறாமை கொண்ட இவ் வீட்டார் எனக்கு இழைத்த துன்பங்கள் சொல்லில் அடங்கா- என்னை அழித்து விடுவதற்காகச் செய்த கொடுமைகளை எண்ணும் போது என் மனம் வேதனையால் வருந்துகின்றது. பச்சைப் பசேலெனத் தழைத்து நின்ற என் தலையிற் சிறதேனும் ஈவிரக்கமின்றி மிதித்தனர். அவர்கள் கால்களுக்குள் அகப்படாது தப்பித்தவறி நின்ற என் தலையை அரிவாள் கொண்டு அரிந்தெடுத்தனர். கோபங் கொண்டு என் மீது ஆட்டையும் மாட்டையும் விரட்டியடித்து மேய்த்தனர். இத்தனை துன்பங்களைச் செய்த போதும் சூரபன்மனின் தலை வெட்ட வெட்ட தலைப்பது போல நானும் பசுமையோடும் மீண்டும் தழைக்கத் தொடங்கினேன்.

மறுநாள் மண்வெட்டியுடன் ஒருவன் வந்தான். நான் ஆக்கிரமித்திருந்த இடம் முழுவதையும் கொத்தத் தொடங்கினான். அவனது முயற்சியால் பெருங் குடும்பாமாய் வாழ்ந்த நானும் என்னைச் சார்ந்தவர்களும் சின்னாபின்னப்பட்டோம். கடவுள் கருணாகரன் என்பதைப் அன்றுதான் நான் பூரணமாக உணர முடிந்தது. நான் ஒரு சிறு கணுவாய் மண்ணுள் மறைந்து கிடந்தேன். உயிர் போகும் நிலையில் "தண்ணீர் தண்ணீர்" என்று தவித்தேன். மழைத்தோழன் அமுத நீர்த்தாரையை என் மீது சொரிந்தான். ஆசை தீர அந்நீரை உண்டு சோர்வு நீங்கி நிமிர்ந்தேன். நான் மீண்டும் அம்மண்ணில் பல்கிப் பெருகிப் பல கிளை விட்டு வளரத் தொடங்கினேன். என்னை மிதிப்ப தற்கோ அழிப்பதற்கோ எவ்ருமில்லை. முன்னர் இருந்ததிலும் பார்க்க வனப்புடையவனாய் இப் போது வளர்ந்து நிற்கிறேன். எனக்கு கொடுமை விளைவித்த வீட்டார் நாட்டுப்பிரச்சினையால் வீட்டைவிட்டு வெளியேறி விட்டனர். வீடோ பாழடைந்து கிடக்கின்றது. நானோ தலை நிமிர்ந்து நின்று அரசோச்சுகிறேன்.

3. ஆங்கிலக்கல்வியின் அவசியம்

ஆங்கிலம் இன்றைய நிலையில் உலகப்பொதுமொழி என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ள ப்பட்ட உண்மை. ஒரு நாட்டிலுள்ள பலமொழி பேசும் இணங்களுடன் கருத்துப் பரிமாற்றத்திற்குரிய ஊடகமாக ஆங்கிலமே விளங்குகின்றது. நாம் ஆங்கிலக் கல்வியை அலட்சியப்படுத்தல் தற்கொலை க்கு ஒப்பானதாகும். இன்று அறிவுத்துறை பலபல விழுதுகள் விட்டு படர்ந்து நிழல் பரப்பும் ஆல மரம் போல காணப்படுகின்றது. விஞ்ஞானமும் கணிதமுமாகிய அறிவுத்துறை உலகினை ஆட்டிப் படைக்கிறது. சந்திரனிலே தனது அடிச்சுவட்டைப் பதித்து அப்பாலுள்ள கோள்களையும் ஆராயும் நிலைக்கு வளர்ந்துள்ளது. இந்த அறிவுத்துறை வளர்ச்சிகளைப் புறக்கணித்து நாம் கிணற்றுத் தவளைகளாக வாழ்வது சாத்தியமற்றது.

இந்த அறிவுத்துறை சார்ந்த நூல்கள் அனைத்தும் ஆங்கில மொழியிலேயே உள்ளன. அன்றியும் நவநவமான ஆய்வுகள் எல்லாம் உடனுக்குடன் ஆங்கில மொழிச்சஞ்சிகைகளில் வெளிவருகின்றன. எனவே பரந்துபட்ட அறிவுத்துறை என்னும் சாகரத்தைக் கடப்பதற்கு நல்லதொரு புணையாக ஆங்கிலம் அமைகிறது. இப் புணையைப் புறக்கணித்தால் நாம் இவ்வுலகில் வாழத் தகுதியற்றவர்களாவோம்.

கழிந்த எக்காலத்தையும் விட, இன்றைக் காலத்திலே தான் ஆங்கிலக் கல்வியின் இன்றியமையாமை மிகமிக ஆழமாக உணரப்படுகின்றது. எல்லா நாடுகளின் பாடத்திட்டத்திலும் ஆங்கிலம் ஏற்புடையதொரு அமைப்பில் இடம்பெறுகிறது. சில நாடுகளில் ஆங்கிலம் போதனா மொழியாக அமைய, வேறு சில நாடுகளில் இரண்டாம் மொழியாகவோ, மூன்றாம் மொழியாகவோ அமைகிறது. அன்றியும் ஆங்கிலக் கல்வியை அலட்சியம் செய்வதை ஆழ்ந்த புலமையுள்ள எந்தக் கல்விமானும் ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை. பயன்பாட்டின் பரப்பினை அளவுகோலாக கொண்டே எந்த ஒரு பொருளின் சிறப்புத்தன்மையும் கணிக்கப்படுகிறது.

இந்த இருபத்தோராம் நூற்றாண்டின் முதற் கட்டத்தில் வாழும் சாதாரண மனிதன் ஒருவன் வாழ்வாங்கு வாழ வேண்டுமானால் பரந்த பொது அறிவு இருத்தல் இன்றி அமையாதது. இந்த பொது அறிவு தாய்மொழியில் மட்டுமன்றி ஆங்கில மொழியிலும் வளர வேண்டும். பொது அறிவு சிறப்பாக வளர ஆங்கிலப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் பேருதவி புரியவல்லன. அதனால் சாதாரண மனிதன் கூட நல்வாழ்வு வாழ ஆங்கிலப்பயிற்சி அவசியமானதாகும். எக் கோணத்தில் நோக்கினாலும் ஆங்கிலத்தை அலட்சியப்படுத்துவது பயனில்லை. ஆங்கிலத்தைப் புறக்கணிப்பது யானை தன் தலையில் தானே மண் போட்டுக் கொள்வதைக் குறிக்கும்.

4. மலை மீதொருநாள்

சென்ற மாசி மாதம் பெருஞ்சிறப்பு வாய்ந்த அம் மலைச்சிகரத்தைத் தரிசிப்பதற்கு ஏற்ற அருந்தருணம் எனக்குக் கிடைத்தது. இரவு ஒன்பது மணியளவில் நான் மலை மீது ஏறத் தொட ங்கினேன். வழியெங்கும் யாத்திரிகர்கள் கூட்டம் எங்கெங்கும் பக்திப்பாடல்களின் இன்னிசை. அதிகாலை நாலரை மணியளவில் மலையுச்சியை அடைந்தேன். அங்கே உடலில் உள்ள ஒவ்வோர் அணுவையும் ஊசியாற் குத்தித் துளைப்பது போல குளிர் துன்புறுத்தியது. மலையுச்சியிற் காணப்பட்ட பிரமாண்டமான திருவடியை மலர் தூவிக் காணிக்கை செலுத்திப் பணிந்த பின்னர் சூரியோதயத்தைக் காணும் ஆசையுடன் தக்கதோர் இடத்தில் நின்றேன்.

கீழ்த்திசை மெல்ல மெல்ல வெழுக்கத் தொடங்கிற்று. அந்த மங்கல் ஒளியிலே தூரத்தே காணப்பட்ட மலைகள் பெரியனவாயும் சிறியனவுமான கரும்பூதங்கள் போற் காணப்படுகின்றன. கீழ்வான விளிம்பிலே கண்ணைப் பறிக்கும் செந்நிறம் தகதகக்கின்றது. அதைச் சூழவர மஞ்சளும் சிவப்பும் குழம்பித் தோன்றுகின்றன. ஒட்டிக்கிடந்த பஞ்சுபோன்ற மேகத்திரள்கள் எல்லாம் சரிகை விளிம்பு கட்டப்பட்டன போன்று காட்சியளிக்கின்றன. செவ்வண்ணமான அந்தக் கீழ் வானத்து எல்லையிலே உருக்கி விட்ட தங்கக் குழம்பு ஏழு நிறங்களின் ஒளியிலே துடிதுடிப்பது போன்று தோன்றுகிறது. அ.தாவது கண்கவர் எழிலுடன் பாலசூரியன் உதயமாகிறான்.

பனித்துளி தூங்கும் புல்வெளிகள், எல்லையறியாப் பெருங்கடல் போன்ற தேயிலைத் தோட்டங்கள், அவற்றிற்கு வரம்பிட்டது போல நிமிர்ந்து நிற்கும் மலைக்காடுகள் முதலியன எல்லாம் பசுமை பொதிந்த அழகுக் கொள்ளையாக மனதை மயக்குகின்றன. தேயிலைத் தோட்டங்களில் ஆங்காங்கு சிதறிக்கிடக்குந் தொழிற்சாலைகளும் குடியிருப்புக்களும் அந்தப் பசுமையிலே தூவி விட்ட செந்நிற மலர்கள் போல மிளிர்கின்றன. மலையினின்றும் இழிந்து செல்லும் அருவிகளும் சிற்றாறுகளும் நீண்டு நெளிந்து செல்லும் மலைப்பாம்புகளைப் போலவும் மலைமங்கை அணிந்துள்ள முத்தாரங்கள் போலவும் விளங்குகின்றன.

மாலையாயிற்று. கதிரவன் மேலான விளிம்பையடைந்து விடுகிறான். மலைகளின் நிழல்கள் கீழ்த் திசை நோக்கி நீளுகின்றன. சூரியக் கோளம் அடிவானத்தில் மறைகிறது.அது அளப்பரிய வேகத்தோடு சுழல்கிறது. பத்துக் கோடி மின்னல்களை உருக்கி ஒரு வட்டஞ் செய்து இயற்கைத் தேவி சுழல விட்டது போல அது காணப்படுகிறது. ஆதவன் மறைய இருள் படர்கிறது. சிறிது நேரத்தில் முழுமதி கீழ் வானில் உதயமாகிறது. தன்னழகு முழுவதையும் காட்டினால் உலகம் அழகு மயக்கத்தால் செத்து விடும் என்று எண்ணிப் போலும் அது நிலவென்று சொல்லித் தன் முகத்தை மாத்திரம் காட்டுகிறது. நிலவொளியின் உதவியுடன் மோகனக் காட்சிகளை அனுபவித்துக் கொண்டு கீழிறங்கினேன். ஒரு நாள் மலை மீது கழித்த களிப்புடன் அம் மலையைப் பிரிய மனமின்றிப் பிரிந்து வந்தேன்.

2. (அ) பழைய பழக்கவழக்கங்களில் சில பொருளற்றவை. சில பொருளுடையவை. விருந்தினருக்கு உணவளிக்கையில் கையாளப்படுவன பொருளுடையாயும் பூனை எதிர்வரக் கண்டு கலங்குதல் போன்றவை பொருளற்றவையாயும் உள்ளன. முன்னையவற்றை உபசார முறைகள் என்று அங்கீகரிப்பது போலப் பின்னையவற்றை மூடப்பழக்கவழக்கங்கள் என்று தள்ளிவிடலே சிறப்பாகும்.

(ஆ) நாடகம் பாவாலும் உரைநடையாலும் அமையும். இன்று பெரும்பாலும் உரைநடையால் நாடகம் ஆக்கப்படுகின்றது. இவை படிக்கவும் நடிக்கவும் உதவும். இவை மக்களைப் பண்படுத்தும் பணியைப் புரிகின்றன.

3. 1. சிலப்பதிகாரம்.
2. இராமாயணத்தில் சிலப்பதிகார வைப்பினை ஒத்தவைப்புக்கள் காணப்படுகின்றன.
3. சிலம்பு + அதிகாரம்.
4. காப்பியம் - பேரிலக்கியம், நூல் - பனுவல், சிறந்த - உன்னதமான.

4.

"தமிழ் இல்லம்",
வியாபாரி மூலை,
பருத்தித்துறை.
10-10-2001

உப வேந்தர்,
யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
ஐயா,

மருத்துவபீட ஆய்வுகூட உதவியாளர் விண்ணப்பம்

12.09.2001 ஆம் நாள் வெளியான "உதயன்" நாளிதழில் மருத்துவபீட ஆய்வுகூட உதவியாளர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. நான் அப்பதவிக்கு எனது விண்ணப்பத்தை சமர்ப்பிக்கிறேன்.

விபரங்கள்

1. முழுப்பெயர் : நாகநாதன் பகீரதன்

2. பிறந்த திகதி : 1976.06.23

3. முகவரி : திரு.நா.பகீரதன்
தமிழ் இல்லம், வியாபாரி மூலை, பருத்தித்துறை.

4. கல்வித்தகைமை : கல்விப் பொதுத்தராதர(உயர்தர)ப் பரீட்சை, 1995
சுட்டிலக்கம்-571046

5. பெறுபேறு : பௌதிகம் B இரசாயனம் C விலங்கியல் C தாவரவியல் S

6. அனுபவம் : பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இரண்டு ஆண்டுகளும், கொழும்பு வேத்தியற் கல்லூரியில் இரண்டு ஆண்டுகளும் முறையே ஆய்வுகூடப் பொறுப்பாளனாகவும் பணியாற்றியுள்ளேன். இதற்குச் சான்றாக அவ்விரு கல்லூரி அதிபர்களின் விதப்புரைகளையும் இணைத்துள்ளேன். அன்றியும் தாங்கள் கேட்டுக்கொண்டபடி பிறப்புச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் பிரதிகளும், நற்சான்றிதழ் பிரதிகள் இரண்டும் இணைத்துள்ளேன். இப்பதவி எனக்குக் கிடைத்தால் தங்கள் ஒழுங்கு முறைக்கமைய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றைப் போற்றிப் பணி புரிவேன் என உறுதியளிக்கின்றேன்.

உண்மையுள்ள,
நா. பகீரதன்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ் மொழியும் இலக்கியமும் III

மாதிரி வினாத்தாள் - 1 விடைகள்

1. (அ) (i) இலக்குவனால்
(ii) தனக்குத்தானே
(iii) கைகேயியின் செயல் கண்டு பொறுக்காது இலக்குவன் ஆத்திரம் கொண்டு உரைப்பதாகக் கவிஞர் கூறுகின்றார்.
(iv) இராமன்

(ஆ) (i) விருந்தினராக எழுந்தருளியிருந்த நடராசப் பெருமானால்
(ii) இளையான் குடிமாறனாருக்கு.
(iii) இறைவன் சோதியாகக் காட்சியளிக்கக் கண்டு மாறனாரும் மனைவியும் மயக்கமடைவதைக் கண்டதும், இறைவன் சிவகாமவல்லியோடு இட வாகனத்தில் காட்சியளித்து, மாறனாரைப் பார்த்து திருவாய் மலர்ந்தருளிய போது கூறியது.
(iv) குபேரன்.

(இ) (i) சேகுனாப்புலவர்.
(ii) நமுதூறுவினால்
(iii) இப்றாஹீம் நபி அவர்கள்.
(iv) நபி அவர்கள் நீ தோல்வி கண்டாய் எனக் கூறிய போது நமுதூறு அதற்குப் பதிலளிக்கும் வகையில் கூறப்பட்டது.

(ஈ) (i) சகுந்தலையால்
(ii) துஷ்யந்தன், கௌதமி ஆகியோருக்கு
(iii) எங்கே தன் கணையாழியைக் காட்டும்படி துஷ்யந்தன் கேட்டபோது கணையாழியைக் காணாமல் கூறப்பட்டது.
(iv) சசி தீர்த்தத்தில் நீராடிய போது கணையாழி தொலைந்தது.

(உ) (i) இராமனால்
(ii) வீபீடணனுக்கு
(iii) இராமன், இராவணனிடம் தூதுவன் ஒருவனை அனுப்புவோமா? என வினாவிய வேளையில் கூறியது.
(iv) சீதை.

2. (அ) வழியில் நடந்து வந்ததால் ஏற்பட்ட களைப்புடன் அதன் முன் வருந்திய பசியால் சிவனடியார் வருந்துவார் என அன்புடன் சென்று, தம் கொல்லையில் முளைக்க வைத்த குழிகளினின்றும் மேலே எழும் பருவமடையாத சிறிய கீரைப் பயிர்களை கையால் தடவிப் பாசப்பழிமுதலை அடியோடு பறிப்பவர் போல அவற்றை வேருடன் பிடுங்கி வந்து தம் பத்தினியாரிடம் கறிக்காக நாயனார் கொடுத்தார்.

பாசப்பழிமுதல் பறிப்பார் போல - நாயனார் பறித்தவை குறும்பயிர் அன்று. அவை அவரது பாசத்தின் பழி முதல் பறித்தலே போலாகின்றன என்றார். ஆணவமாகிய சகல மலத்திற்கும் வேராகி நிற்கும் மூலமலம் என்பர்.

(ஆ) வெறுமையான வானவெளி மீது மழை கடுங்கோபங் கொண்டு பொழியும். சூறாவளிக் காற்று வெறி கொண்டு கரகங்கள் ஆடுதல் போன்று சுழன்றடிக்கும். வழி மாறுபடுமாறு நீர்ச்சுழிகள் நூறு வந்து சுற்றும். படகு கடல்நீரில் இலை போலத் தத்தளிக்கும்.

வெறி கொண்ட புயல் நின்று கரகங்கள் ஆடும் - வெறி கொண்ட சூறாவளிக்காற்று சுழன்று அடிப்பது கரகாட்டம் போலிருப்பதாகக் கவிஞர் கூறுகிறார். கரகாட்டக்காரர் சுற்றிச்சுற்றி ஆடுவது போல புயற்காற்றும் சுழன்று சுழன்று வீசுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ) தன் வாழ்நாளில் முடிவைக் காணப்போகின்றவனான இராவணன் சங்கதனை நோக்கி "நான் சொல்கிறபடி நடப்பாயானால் தன் தந்தையைக் கொன்றவன் பின்னே இரு கையைத் தலைமேல் வைத்துக் கொண்டும், முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டும், கண்டோர் இவன் அறிவிலி என்று சொல்லுமாறு வாழ்ந்தான் என்று உலகத்தவரால் ஏளனமாகச் சொல்லப்படுவதாகிய பழிச்சொல்லையும் நீங்கப் பெறுவாய், நானும் அப்போது சீதையை அடைந்தவனாவேன். நீயும் எனக்கு மகனாய் அமையைப் பெற்றவனாவேன். இனி எனக்கு அருமையானது யாது இருக்கின்றது" என்றான்.

இறுதியின் எல்லை கண்டான் - கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது என்று அறிஞர் கூறியவாறு தன் முடிவு காலம் நெருங்குவதை உணராமல் இராவணன் பிதற்றுகிறான். சமாதானத்திற்காக வந்த தூதுவனிடத்தில் இந்த மாதிரி பேசினால் வேறு என்ன முடிவு வரும். ஒழிய வேண்டியது தானே இராவணன் என்பதைக் கம்பர் காட்டுகிறார்.

(ஈ) இறந்த மைந்தனை எடுத்துச் சென்று, சுடுகின்றவர் இல்லாமல் மயானத்தில் தோல் மேல் சுமந்து கொண்டு பஞ்சு படுவது போன்று துன்பப்பட்டு வருந்தும் பாவியாகிய எனக்கு பணம் ஏது? கொள்ளித்துணிந்துண்டேது? மனம் சோர்ந்து கொடும்பாவியாகிய நான் துன்புறுவ தைப் பார்த்தும், நீ இரங்கேன் என்கின்றாய் என இரந்து கேட்டு நின்ற போது வஞ்சிக் கொடி போன்ற சந்திரமதியின் கழுத்தில் விளங்கிய தாலியைக் கண்டு அரிச்சந்திரன் மேலும் கூறத் தொடங்கினான்.

பஞ்சு படும் பாடுபடும் பாவி - பஞ்சு ஆலையில் படும்பாடு போல் தான் மனமுருகி வருந்துவதாக அதைப் பார்த்திருந்தும் இரங்கமாட்டேன் என்கிறாயே எனச் சந்திரமதி கூறுவது அவளது ஆற்றாமையை வெளிப்படுத்துகிறது.

(உ) இப்ராஹிம் நபி வினாவிய வினா நமுறூதினின் காதில் இடியோசை போல் புகுந்தது. அவன் புத்தி தெளிவற்றவன். தான் படும்பாட்டை எண்ணவில்லை. தனது மனதில் கொண்டுள்ள ஆணவத்தால் வைராக்கியம் கொண்டான். உனது மனதில் நிறைந்துள்ள இறைவனது உயிரை எனது அம்பு பாய்ந்து சென்று குடித்ததால் நான் வீழ்ந்து விட்டேன். இதுவே உண்மை என்று நமுதூறு சொன்னான்.

புத்தி தெளிவிலன் - புத்தி தெளிவற்றவன் எதையும் பேசவான். அவனது நிலை பரிதாபக ரமானது என்பதை உணர்த்தும் உகையில் படுபாடுன்னா என்கிறார் கவிஞர் தான் படும் அவஸ்தைகளை உணராது இறைவனது உயிரைப் பலி கொண்டு விட்டேன் என நமுறூது பேசுகிறான்.

3. (அ) சத்தியம் முதலியன குணங்களில் சிறந்த பூலோக அரசன். அதற்குத் தகுதியாவன். உலகில் ஒரே ஒரு மனைவியை உடையவன். சகோதர வாஞ்சை உடையவன். வீரமிகு போர் முறை, நேர்மை, மநுநூல் நெறி, பொறுமை, உண்மை என்பவற்றிற்கு உரித்துடையவன் அரிச்சந்திரன் என அவனது சிறப்பியல்புகளை வசிட்டமுனிவர் எடுத்துரைக்கிறார்.

(ஆ) பிஜித்தீவிலே கரும்புத் தோட்டத்திலே பாரத நாட்டுப் பெண்கள் கடும் பணி புரிந்து கண்ணீர் வடிக்கக் கண்ட பாரதியார் நெஞ்சம் துடிக்கிறார். நீண்ட கடலின் நடுவேயுள்ள தீவில் கல் நெஞ்சங்களுக்குரிய கரும்புத் தோட்டத்திலே அவர்கள் படும் துயரம் அவர் உள்ளத்தை உருக்கியது. அங்கே மாதர்கள் கால்களும் கைகளும் சோர்ந்து விழுந்து வருந்துகின்றனர். மனம் கொதித்துக்கொதித்து மேனி சுருங்குகின்றனர். அவர்கள் கதறி வடிக்கும் கண்ணீர் மண்ணிற் கலந்து மறைந்திடுமோ? என்று தெய்வத்தை நோக்கி முறையிடுகிறார். ஏழைகள் அழுத கண்ணீர் செல்வர் செருக்கறுக்கும் படையாகும். ஏழை மாதரின் கண்ணீர் காற்றில் கலந்து கரையாத பெரும்படையாய் நின்று ஆதிக்கம் செலுத்துவோரை அழித்தே தீரும். ஏழை மாதர் சிந்திய கண்ணீர் நிச்சயம் ஆதிக்க வெறியர்களை அழித்தே தீரும் எனப் பாரதியார் உறுதிபட உரைக்கிறார்.

(இ) பசிப்பிணி ஒருவரைப் பற்றிக் கொண்டால் மானம், உயர்குடிப்பிறப்பு, கற்றகல்வி, வாய்மை, அறிவுடைமை, கொடை, தவம், மேன்மை, முயற்சி, தேன் போல் இனிக்கும் இன்சொல் பேசும் மங்கையர் மேல் விருப்பம் கொள்ளுதல் ஆகிய பத்துத் தன்மைகளும் பறந்து போய் விடும்.

4. (அ) அவளது தன்னம்பிக்கை, மனதிற் கொண்டிருந்த பெருமிதம், அறுபது வருடங்கள் இந்த உலகில் வாழ்ந்து விட்ட நம்பிக்கையால் ஏற்பட்ட பெருமிதம், அவள் மகன் ரஸாக் இருக்கின் றான் என்ற தைரியம். இதனால் வாழ்கையில் அவளுக்குப் பிடிப்பிருந்தது. "எனக்கென்னடி கொறைச்சல்? அறுபது வருசம் இந்த ஒலகத்துல சீவிச்சிட்டன். கடைசி காலத்துக்கு ஒரு மகன் இருக்கான். வேலையப்பாரு" என்று அவள் பல தடவைகள் கூறுகிறாள்.

(ஆ) காப்பியத் தலைவியாகக் கதீஜாவை உமறுப்புலவர் அறிமுகம் செய்கிறார். வணக்கம், அறிவு, பொறுமை, நல்லோர் இணக்கம், வறியோருக்கு ஈயும் இரக்கம், நிறைந்த கற்பு ஆகிய பண்புகளைக் குணநலன்களாகக் கொண்டவர் கதீஜா. அவருக்கு நிகரான வேறொரு பெண்ணை காணவியலாது. பிடிநடையாள், பெண் அன்னத்தை ஒத்தவள், நற்குலத்தில் பிற ந்த அழகான மயில் போன்றவள் கதீஜா. கதீஜாநாயகியின் உறுப்பு அழகுகளை வானவரும் மண்ணவரும் உவமிக்க இயலாது. வெயிலால் வாடும் பயிருக்கு மழை போன்று உதவும் தன்மையுடையவள் கதீஜா. நபிகள் நாயகத்துடன் 25 ஆண்டுகள் உயிரும் உடலும் ஒன்றிய இல்லற வாழ்வை நடாத்தினார். அன்னையர் திலகம் போன்றவர் கதீஜா. செல்வத்தைப் பெருக்கும் முறைகளையும், வாணிப நுணுக்கங்களையும் அறிந்த மேதை. வாணிபம் மூலம் சம்பாதித்த பணத்தை இறை பணிக்காகவும், அறச் செயல்களுக்காகவும் செலவு செய்தவர் கதீஜா நாயகி என ஆசிரியர் சித்திரிக்கிறார்.

(இ) நற் செய்தியாளராகிய சுவிஷேசகன் குளிர்ச்சி பொருந்திய கிருபையுடைய முகத்தை உடை யவர். தாமரை மலர் போன்ற இரு கண்களை உடையவர். கருணை பொருந்தியவர். அவரின் உள்ளத்தில் அன்பானது பொங்கி வழிந்தது. அழகிய மொழிச் சுவையாகிய அமிர்தம் வடிந்து சொரிந்தது. எண்ணுதற்கரிய துயரங்களுக்கு அழிவைச் செய்யக்கூடியவர். புண்ணிய உருவம் எடுத்து வந்தவர். அழகிய வடிவமுடையவர். புண்ணியமே ஓர் உருவெ டுத்து வந்துள்ளதோ என்று வியக்கும்படியாக அவரது தோற்றம் அமைந்துள்ளது.

5. (அ) "அறிந்ததைக் கொண்டு அறியாததை விளக்கல்" என்பது உவமைக்குச் சொல்லப்படும் இலக்கணம். அறிந்தவற்றை விளக்கி கூற உவமை பயன்படும். கண்டும் காணாத பொருட்களை விளக்க உதவும். அடிக்கடி காணும் பொருட்களின் தனிச்சிறப்பை விளங்கிக் கொள்ளவும் உவமை பயன்படும். மொழி ஆற்றலுக்கு ஏற்ப, அறிவு விரிவதற்கேற்ப உவமையைக் கையாளும் திறனும் வளர்ச்சியடையும். அறிவுத் திறத்தையும், அனுபவத்தின் ஆழத்தையும் வெளியிடும் கருவியாக உவமை அமைந்துள்ளது. வினை, பயன், மெய், உரு என்ற நான்கும் பற்றி உவமை தோன்றும் எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

(ஆ) "உயர்ந்ததன் மேற்றே உள்ளும் காலை" என்கிறார் தொல்காப்பியர். ஒப்புமை சொல்ல வேண்டிய காலத்தில் உயர்ந்த பொருள்களோடு ஒன்றை உவமிக்க வேண்டுமே தவிரத் தாழ்ந்த பொருள்களோடு உவமித்தல் கூடாது. பெரிய புராணத்தில் திண்ணனார் காளத்தி மலையில் உள்ள குடுமித்தேவரை அணைத்துப்பிடித்துக் கொண்டு நெடும்பொழுது தங்கியுள் ளார். இதை நாணன் கூற்றாகச் சேக்கிழார் கூறுகிறார். "வங்கினைப் பற்றிப் போதா வல் லுடும்பு என்ன நீங்கான்" நாணன் என்ற வேடன் கல்வி வாசனையற்றவன். இம் மாதிரியான இடங்களில் பாத்திரத்தின் பண்பை விளக்கும் உவமையாக அமைய வேண்டும். உயர்ந்ததாக மட்டுமிருந்தால் பொருத்தமாகாது. கல்வியறிவில்லாத வேடன் தான் அன்றாடம் காணும் உடும்பை உவமைப் பொருளாக கூறுவதே பொருத்தம். வேறு எத்தகைய உயர்ந்த உவ மையையும் கையாளுதல் தகாது. எனவே சேக்கிழார் கையாண்ட இவ்வுவமை பொருத்த மானதும் சிறந்ததுமாகும்.

(இ) இதே போன்று கம்பரும் இராமாயணத்தில் உயர்ந்த பாத்திரமாக போற்றப்படுகின்ற இலக்கு வனன் கூற்றில் தாழ்ந்த உவமையைக் கையாளுகின்றார். இலக்குவன் கல்வி கேள்விகளிற் சிறந்தவன். அறத்தின் அணி, ஆயிரம் இராமர்கட்கும் மேம்பட்டவன் என்று போற்றபட்டவன். தனது தமையன் இராமனுக்கு கிடைக்க வேண்டிய முடியை கைகேயி ஏமாற்றிப் பறித்துவிட்டாள் என்று இலக்குவன் உள்ளம் குமுறுகிறான். "மூட்டாத காலக்கடைத்தீ" என அவனது கோபம் மூண்டெழுகிறது. அவனது கூற்றும் தாழ்ந்த நிலைக்குச் சென்று விடுகிறது. "சிங்கக் குருளைக்கு இடும் தீம்சுவை ஊனை நாயின் வெங்கண் சிறுகுட்டனை ஊட்ட விரும்பினாளே" என்று கூறுகிறான் இலக்குவன். இராமனுக்கு கிடைக்க வேண்டிய முடியைக் கைகேயி பர தனுக்கு பெற்றுக் கொடுக்க முற்பட்டாள். இது சிங்கக் குட்டிக்கெனத் தயாரித்து வைத்த புலாலை அற்பத்தனம் பொருந்திய சொரி நாய்க்குட்டிக்கிடுவது போலாகும். இது அப்போதைய சூழ்நிலையில் இலக்குவனனின் மனோநிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இலக்குவன்

குமுறும் மனோ நிலையுடையவனாயுள்ளான். சீற்றத்துடன் நிற்கிறான். பண்பிழந்த மனோ நிலையில் இவ்வுமையைக் கையாளுகின்றான். இந் நிலையில் உயர்ந்த உவமையை எதிர்பார்க்க முடியாது. இதனாலேயே கம்பர் இலக்குவனது தாழ்ந்துவிட்ட மனநிலையை விளக்க இந்த உவமையைக் கையாளுகிறார்.

6. (அ) அச்சும்மா தடிக்குச்சிகளாற் செய்யப்பட்ட இரு கைகள், தசையற்ற சூம்பிய இரு கால்கள், பச்சையம் இல்லாத பழுப்பேறிய இலை போன்ற உடல், போர் வாள் ஒன்றுக்குக் குறுக்காக மற்றது நிற்பது போன்ற காறை எலும்புகள், கதை கூறும் கண்கள், எண்ணெய் காணாத பரட்டைத் தலை, அதில் பழைய சீலைத்துண்டினால் தலைமயிரை வாரிக்கட்டிய முடிச்சு, விரக்தியுடன் கூடிய புன்சிரிப்பு, முட்டி போன்ற சிறிய வயிறுமாய்ப் பாலர் வகுப்பில் அமாந்திருந்தாள். காலில் இருந்த சிறிய சிரங்குப் புண்ணைக் கைவிரல்களால் அச்சும்மா சொறிந்து கொண்டிருந்தாள். அச்சும்மாவின் எலும்பும் தோலுமான தோற்றத்தைக் கவிஞர் படம் பிடித்துக் காட்டுகிறார்.

(ஆ) தங்கம்மாவின் வாழ்வு ஏழ்மை கலந்தது. சோகம் நிறைந்தது. வறுமையின் கோரப்பிடியில் சிக்கியவள் தங்கம்மா. வறுமையால் பட்டுப்போனது அவளது வாழ்கை. கறையான் அரித்த வாழ்க்கையையுடையவள். நெல்லுப்பாய் உழைப்பாலும் நீங்காத பட்டினி உடையவள். அவள் அணிந்திருக்கும் சேலையில் பல இடங்களில் ஊசி நூல் கொண்டு தையல் இடப்பட்டுள்ளது. முந்தானைச் சேலையில் கூடக் கிழியல் உள்ளது. இவ்வாறான ஏழ்மை நிலையில் உள்ளாள். தன் கணவன் காச நோயால் பிடிக்கப்பட்டு ஆஸ்பத்திரி வாட்டில் தங்கியுள்ள போது அவனைப் பார்க்க வெறுங்கையோடு செல்கிறாள். அவளது மகன் பீங்கான் தட்டிலுள்ள பாணை எடுத்து உண்கிறான். இதன் மூலம் தங்கம்மாவின் வறுமை நிலை புலப்படுத்தப்படுகின்றது.

(இ) தங்கம்மாவின் கணவன் காசநோய் வாட்டில் படுத்திருக்கிறான். அவன் கால்களில் தசையில்லை. கால்கள் சூம்பித் தடி போலாகிவிட்டது காச நோய்க்கிருமிகள் அவனது இரத்தத்தை உறிஞ்சி விட்டன. வெறும் தடி போல காணப்படுகிறான். காச நோய்க்கிருமிகள் கொடுக்கும் துன்பத்தைத் தாங்கிக் கொண்டு படுத்திருக்கிறான். விலா எலும்புக் கூட்டுடன் காட்சியளிக்கிறான். தனது மனைவியைக் கண்டதும் அவனது மனத்துயர் பெருகுகிறது. கண்கள் கலங்குகின்றன. விழிகள் கண்ணீரைப் பெருக்குகின்றன. பரிதாபகரமாக மனைவியைப் பார்த்துக் கொள்கிறான். கவிஞர் காச நோயால் அவதியுறும் தங்கம்மாவின் கணவனின் பரிதாப நிலையை அழகாக சித்தரித்துள்ளார்.

7. (அ) நமுறூதின் படை வீரர்கள் போர் பறையைக் கேட்டதும் துன்பந் தரும் படைக்கலங்களுடன் ஆரவாரிக்கும் கடலைப் போலத் திரண்டு வந்தனர். குதிரைகள், யானைகள், பொன்னாலான தேர்கள், முத்துப் பல்லக்குகள், குடைகள், அம்புகள், ஏராளமாகப் படைவீரர்களிடம் காண ப்பட்டது. வீரர்கள் பெருஞ் சினத்தையுடையவர்கள். போர்க் கலை அறிவுமிக்கவர்கள், சோதிடர்கள், பயிற்சி மிக்க வல்லமையுடையவர்கள், நெருங்கிய நண்பர்கள். பகைவர்களால் புகழப்படும் ஊர்களைச் சூழ்ந்து கொண்டனர். பேரி, சின்னம், பீலி, முழவு போன்ற போர்க் கருவிகள் சமுத்திரம் முழங்குவது போல முழங்கின. படைவீரர்களின் பாதங்களில் இருந்து எழுந்த தூசுகள் இருளை ஏற்படுத்தின. நெருப்பைக் கக்கும் வாய், வஞ்சகமனம், வாயிலே சபதமொழி, தழல் போன்ற கண்கள், மலை போன்ற தோள்கள், அகங்காரமுடைய முக ங்களை உடையவர்களாக நமுறூதினின் படை வீரர்கள் காணப்பட்டனர்.

படையிலுள்ள பெண்கள் அம்பை ஒத்த கண்களையும், கூர்மையான பற்க ளையும், ஒழுங்கான கூந்தலையையும், மலை போன்ற மார்பகங்களையும் உடையவர்களாகப் போருக்கு எழுந்தனர்.

(ஆ) இப்ராஹிம் நபியவர்கள் நல்ல நேரிய வழியைக் கடைப்பிடிப்பவர். வாய்மை பொருந்தியவர் இவர் எழுபது தோழர்களுடன் போருக்கு எழுந்தார். நபி அவர்கள் தீய ஒழுக்க நெறியில் நீங்கியவர். நபி பேரிகை முழக்கத்துடன் போருக்கு புறப்பட்டார். மேலெழுந்து பொழிகின்ற சூரியனைப் போன்றவர் நபி. நபியவர்கள் தலைப்பாகையை குடையாகவும், கையில் உள்ள தஸ்பீஹசமணியை வேலாகவும் கொண்டவர். உடலில் பொருந்தக் கூடிய பாதுகாப்புக் கவசத்துடன் மதம் சிந்தி வரும் யானை முன்னே செல்ல, கலிமா எனனும் குதிரையுடன் மலக்குகள் கொடிக் கூட்டங்களைக் கொண்டு செல்ல இறைவனது அணியைத தமதாக்கிக் கொண்டு நபியவர்கள் தவத்தின் வழியில் ஒழுகும் 70 தோழர்களுடன் பேரிகை முழங்கப் போருக்குப் புறப்பட்டார்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

புதிய பாடத்திட்டம் - மாதிரி வினாத்தாள் - 2

தமிழ்மொழியும் இலக்கியமும் I

ஒரு மணித்தியாலம்

- பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. "நன்னெறி வழியினின்று நாவலங் கொண்டு மிக்கிற்" நாவலம் என்பதன் கருத்து
1. வாய்மை 2. பொய்மை 3. இனமை 4. நாரின்மை

02. "அந் நரர் இன்று நாளை அழிவதற்கு ஐயம் இல்லை" நரர் என்பதன் கருத்து
1. நரகவாசிகள் 2. இயக்கர் 3. அரக்கர் 4. மானிடர்

03. மோட்டார் வாகனம் ஓடுவதற்கு லைசன்ஸ் எடுக்க வேண்டும். இங்கு லைசென்ஸ (Licence) என்பதைக் குறிக்கும் தமிழ்ச் சொல்
1. உத்தரவுப் பத்திரம் 2. உரிமம் 3. அனுமதி 4. கட்டளை

04. மருள் கொண்ட மனத்தினர் அமைதி காணார். மருள என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1. இருள் 2. அருள் 3. தெருள் 4. தருள்

05. ஆடவன் ஒருவன் அங்கு வந்தான். ஆடவன் என்பதன் எதிர்ப்பாறச் சொல்
1. பெண்டு 2. பெண் 3. ஆடலி 4. மங்கை

- பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லை தெரிவு செய்க.

06. காவலர் தமக்குக் கிடைத்த .....படி காட்டின் நடுவிலே திருடரைக் கண்டுபிடித்தனர்.
1. தாகீது 2. தகவல் 3. எச்சரிக்கை 4. சவால்

07. ஒரு சிலர் தமது பெருமைகளை விளக்குவதற்கு எப்பொழுதும் பழைய ..... வாசித்துக் காட்டுவர்.
1. மனுவை 2. மகசரை 3. தோம்பை 4. மசோதாவை

08. நாட்டில் நடைபெற்ற ஊழல்களை விசாரிப்பதற்குச் ஜனாதிபதியால் ..... நியமிக்கப்பட்டது.
1. ஆய்வுக்குழு 2. ஆணைக்குழு 3. அமைப்புக்குழு 4. செயற்குழு

09. அமைதிக்குப் பங்கம் ஏற்படாமல் இருத்தற் பொருட்டுப் பத்திரிகைச் செய்தி தகுதி வாய்ந்த அதிகாரியால் ..... செய்யப்படுகின்றது.
1. தணிக்கை 2. இருட்டடிப்பு 3. திறனாய்வு 4. பகிரங்கப்படுத்துதல்

10. சிறுவன் ..... பிரியத்துடன் தனக்குக் கிடைத்த பெட்டியைத் திறந்து பார்த்தான்
1. கறார் 2. அம்பாரம் 3. பூரா 4. அலாதி

- பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

11. குளம், யானை, அகழி என்ற சொற்கள் உணர்த்தும் பொருள்
1. வயம் 2. முறம் 3. பயம் 4. கயம்.

12. கத்தரி வித்தை விதை என வழங்குவது போல ஆமணக்கின் வித்து
1. பருப்பு 2. முத்து 3. மணி 4. காழ்

13. கடும் வெயிற் காலத்தே வெளிகளில் நீர் ஓடுவது போலத் தெரியும் ஒருவகைத் தோற்றம்.
1. மாயை 2. கண்கட்டி 3. இந்திரசாலம் 4. பேய்த்தேர்

14. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை என்பவற்றைக் குறிக்கும் தொகைப்பெயர்
1. நானிலம் 2. ஐந்திலக்கணம் 3. ஐந்திணை 4. ஐவகை ஒழுக்கம்

15. ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர் வழங்கும் புகழுரை
1. அணிந்துரை 2. முன்னுரை 3. புனைந்துரை 4. பதிப்புரை

● பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

16. சீவனத்தைக் கெடுத்தல் என்ற பொருள் தரும மரபுத்தொடர்
1. வயிற்றிலடித்தல் 2. வயிறு வளர்த்தல் 3. வயிறெரிதல் 4. வயிறு வாய்த்தல்

17. கடுமையாகக் கண்டித்தல் என்ற பொருள் தரும் மரபுத்தொடர்
1. நெருப்பெடுத்தல் 2. புறந்தருதல் 3. படியளத்தல் 4. மட்டந்தட்டுதல்

18. தன் குடும்பத்தை சீர் பெற நடத்தத் தெரியாதவன் பொதுத்தொண்டில் ஈடுபடுதல் என்னும் பொருளுக்கு பொருத்தமான உவமைத் தொடர்
1. இக் கரை மாட்டுக்கு அக்கரை பச்சை போல
2. உட்சுவர் இருக்கப் புறச்சுவர் தீற்றுதல் போல்
3. மயிலைக் கண்டு வான்கோழி ஆடினாற் போல
4. விளக்குமாற்றுக்கு பட்டுக்குஞ்சம் கட்டியது போல

19. நடந்து முடிந்ததொன்றைப் பற்றி சிந்திப்பதிற் பயனில்லை என்னும் பொருள் தரும் பழமொழி
1. ஆங்காலம் ஆகும். போங்காலம் போகும்.
2. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
3. அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
4. கண்கெட்ட பிறகு சூரிய வணக்கமா?

20. குந்தியிருந்து தின்றால் குன்றும் மாளும் என்ற பழமொழியின் கருத்து
1. சொகுசு வாழ்க்கைக் குன்றினைப் போல உயர்ந்தது.
2. சோம்பேறியின் வாழ்க்கை எந்நாளும் சிறப்படையாது.
3. முயற்சியற்றவனின் பெருஞ் செல்வம் விரைவில் அழியும்.
4. முயற்சி திருவினை ஆக்கும்.

● பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

21. பின்வருவனவற்றுள் இலக்கணப் போலியாய் அமைந்த தொடர்
1. நுனிப்புல் 2. இன்சொல் 3. நடுகல் 4. கார்முகில்

22. அருளுடையார் எல்லாம் உடையார், அருளிலார் எண்ணுடையேரேனும் இலர் - இதில் வந்த பொருளணி
1. எடுத்துக்காட்டுவமை 2. வேற்றுப்பொருள் வைப்பு
3. உயர்வு நவிற்சி 4. வேற்றுமை

23. "அஞ்சாத நெஞ்சத்து ஆடவருக்கு ஒரு மரணம்" அதில் மறைந்து வந்த வாக்கிய உறுப்பு
1. எழுவாய் 2. பயனிலை 3. செயற்படுபொருள் 4. இவை மூன்றும்

24. "அறத்தால் வருவதே இன்பம்" அதில் ஏகார இடைச்சொல் தந்த பொருள்
1. தேற்றம் 2. வினா 3. எதிர்மறை 4. அசைநிலை

25. பங்கயம் என்னும் வட சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்
1. கமலம் 2. தாமரை 3. அம்புயம் 4. முளரி

26. பின்வருவனவற்றுள் பெண்பாலை மாத்திரம் உணர்த்துவது
1. புத்திசாலி 2. பரிகாரி 3. செவிலி 4. தொழிலாளி

27. தேன் + மொழி என்பதைப் புணர்த்தி எழுதினால்
1. தெம்மொழி 2. தேமொழி 3. தேன்மொழி 4. தேயுமொழி

28. பின்வருவனவற்றுள் உடனிலை மெய்மயக்கம் அல்லாதது
1. அப்பம் 2. சத்தம் 3. பட்டம் 4. சங்கு

29. மொழிக்கு முதலில் வரக்கூடிய உயிர் மெய் எழுத்துக்கள்
1. க, ச, த, டி 2. ச, த, ப, ங 3. ச, ப, ம, ன 4. க, ச, த, ந

30. பல பொருள் குறிக்கும் உரிச்சொல்
1. கடி 2. சால 3. உறு 4. தவ

- பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றினதும் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

31. பெற்றோர் எப்படி இருப்பாரோ பிள்ளைகளும்
1. அவ்வண்ணமே இருப்பர். 2. அங்ஙனமே இருப்பார்.
3. அவ்விதமே இருப்பர். 4. அப்படியே இருப்பர்.

32. அரசன் எவ் வழிச் செல்கின்றானோ, குடிகளும்
1. எங்ஙனமே செல்வர். 2. எவ்வழியே செல்வர்
3. அவ்வழியே செல்வர். 4. அவ்வண்ணமே செல்வர்.

33. மங்கையோ, மயிலோ
1. அங்கே உலாவுவது? 2. அங்கே உலாவும் உரு?
3. அங்கே உலாவுபவள் 4. அங்கே உலாவுபவர்?

34. இன்னும் பல பாடசாலைகளில் நிரந்தர அதிபர்கள்
1. கிடையாது. 2. கிடையா 3. கிடையார். 4. இல்லை.

35. நீர் இங்கே இருந்தீரென நான் அறிந்திருந்தால்,
1. உடனே வந்திருப்பேன் 2. உடனே வந்திருந்தேன்.
3. உடனே வருகின்றேன். 4. உடனே வருவேன்.

- பின்வரும் பாடல்களைப் படித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

ஆதவனும் கீழ்த்திசையில் தோன்றி விட்டான்
ஆகா! இவ்வுலகம் எலாம் அழகின் சோதி
சீதமிகும் சோலையினில் தென்றல் வீசும்
செம்மலர்கள் முகந்திறந்தே தேனைச் சிந்தும்
மோதி விழும் வண்டுகளும் முழங்கும் பண்ணை
மூக்கினிலே மகரந்த வாசம் வீசும்
கீதமெல்லாம் குயிலுக்கே கிளிகள் பேசும்
கிளையிடையே தாவுகின்ற கதிரைக் கண்டே

36. இப் பாடலில் பொதிந்துள்ள அணி
1. உருவகம் 2. தன்மை நவிற்சி 3. உவமை 4. சொல்பின்வ

37. இப் பாடலுக்குப் பொருத்தமான இடம்
1. கடல் 2. வானம் 3. பாதாளம் 4. சோலை

38. 'முகந் திறந்தே" என்ற தொடரால் குறிப்பிடப்படும் மலர்
1. அல்லி 2. குவளை 3 தாமரை 4. றோசா

39. இப் பாடலுக்குப் பொருத்தமான வேளை
1. மாலை 2. மதியம் 3. காலை 4. இரவு

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கிற்றிக் கிடக்கின்றன. இவற்றை ஒழுங்குற வைத்தாற் கட்டுக் கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

(அ) ஆனால் பூனையோ தான் வசித்துப் பழகிய வீட்டிலேயே தங்கியிருந்து விடும்.
(ஆ) எனவே நாய் தன் எசமானிடம் காட்டுவது போன்ற ஒரு நேயத்தை வளர்த்துக் கொள்ளும் ஆற்றல் பூனைக்கு இல்லையென்றே கூறலாம்.
(இ) "நாய் ஆளோடே, பூனை வீட்டோட" என்ற பழமொழியில் ஓரளவு உண்மை உண்டு.
(ஈ) அந்த வீடு கை மாறிப் போனாலும், புதிதாகக் குடி வருவோர் தன்னை அன்பாகப் பேணி வரும் வரையும் பூனை அங்கேயே தங்கிவிடும்.
(உ) ஏனெனில், நாய் தன்னை வளர்க்கும் எசமான் எங்கே சென்றாலும் அவனைப் பின் தொடர்ந்து செல்லும்.

பந்தியில் வாக்கியங்களின் சரியான வைப்பு முறை
1. இ, உ, அ, ஈ, ஆ 2. அ, இ, ஆ, உ, ஈ
3. ஈ, ஆ, உ, அ, இ 4. இ, ஆ, அ, ஈ, உ

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும் II

புதிய பாடத்திட்டம் - மாதிரி வினாத்தாள் - 2

இரண்டு மணித்தியாலம்

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் எழுதுக.

   (அ) "விலங்குகளும் மனிதரைப் போற் பேசமுடியுமானால் ....." என்ற தலைப்பில் ஒரு கற்பனைக் கட்டுரை.
   (ஆ) "புயலுக்குப் பின்" என்ற தலைப்பில், நீர் கண்டு அனுபவித்த காட்சி ஒன்றின் வருணனை.
   (இ) "காடு செழித்தால் நாடு செழிக்கும்" என்ற தலைப்பில் விளக்கக் கட்டுரை.
   (ஈ) "வாய்ச் சொல்லில் வீரரடி" என்ற தலைப்பில் ஒரு சிறுகதை.

2. கீழே தரப்பட்டுள்ள அ, ஆ என்னும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் சுருக்கத்தை 15-20 சொற்களில் அமையக் கூடியவாறு வேறுவேறாக எழுதுக.

   (அ) ஒரு நாடகக் கதைக்கு இருக்குமாறே, சிறு கதைக்கும் தொடக்கம், நடு, முடிவு ஆகிய மூன்று பிரதான கட்டங்கள் அமையும். தொடக்கத்திலே காலம், இடம் பற்றிய குறிப்புக்கள் அமைவதோடு பிரதான கதாபாத்திரங்களும் அறிமுகம் செய்து வைக்கப்படும். நடு என்பது வளர்ச்சிக் கட்டமாகும். இதிலே கதை நிகழ்ச்சி உச்சக்கட்டத்தை நோக்கி விறுவிறுப்பாக ஏறிச்செல்லும். சிக்கலான கதையிலே இந்த நடுக்கட்டம் இரு கட்டங்களாக அமைவதுண்டு.

   (ஆ) "இலக்கியமாவது யாது? இலக்கியமாவது, பாரதமும் இராமாயணமும் போல்வன" என்று நச்சினார்க்கினியர் கூறுவர். பாரத இராமாயணம் முதலியவற்றிலே அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் பொருள்களும் நாட்டு வருணை, நகர வருணனை முதலிய நானாவித வருணைகளோடு கூறப்பட்டிருக்கின்றன. ஆதலின் நால்வகைப் பொருள்களையும், அவ்வாறான வருணனைகளோடு கூறும் பெருங்காப்பியமே இலக்கியம் என்பதாயிற்று. கந்தபுராணம், பெரியபுராணம் முதலியவைகளும் பெருங்காப்பிய இலக்கணம் பெற்று வருவதால் இலக்கியம் என்று கொள்ளப்படும். சிவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலியவைகளை ஆருகதர் இலக்கியம் எனக்கொண்டு பஞ்ச இலக்கியம் என்பர்." இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்" என்பர்.

3. பின்வரும் உரைநடைப்பகுதியை வாசித்து அதன் கீழ்த்தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

   வீரக் கற்பு வாய்ந்த கண்ணகியின் கதையால் ஓர் அரசியல் உண்மையும் விளங்குகின்றது. நெறி தவறிய அரசனை அறமே ஒறுக்கும் என்னும் உண்மையைப் பாண்டியன் வரலாறு காட்டு கின்றது. அரண்மனைச் சிலம்பைக் களவாடிய கள்வன் அகப்பட்டான் என்று பொற் கொல்லன் சொல்லிய சொல்லை ஆராய்ந்து பாராது, உண்மையை விசாரித்து அறியாது " அக் கள்வனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வருக" என்று பணித்தான் பாண்டியன். அரசன் ஆணையால் தன் கணவன் இறந்தான் என்றறிந்த கண்ணகி சீறி விழுந்தாள். "தீ வேந்தன் தன்னைக் கண்டு இத்திறம் கேட்பேன்" என்று புறப்பட்டாள். கருங்கூந்தல் விரிந்துகிடக்க, கண்கள் கண்ணீர் வடிக்க, கையில் ஒற்றைச் சிலம்பேந்திக் காவலன் முன்னே தோன்றினாள். கோவலனிடமிருந்த சிலம்பு அரண்மனைச்சிலம்பன்று. தன் சிலம்பே எனப் பாண்டியன் திடுக்கிடப் பேசினாள். அந் நிலையில் மன்னவன் கை சோர்ந்து, மெய் சோர்ந்தான்.

   1. கண்ணகியின் கதை விளக்கும் அரசியல் உண்மை யாது?
   2. கண்ணகியின் சீற்றத்திற்குரிய காரணம் என்ன?
   3. பாண்டியனிடம் சென்ற கண்ணகியின் கோலத்தை விபரிக்க.
   4. பாண்டிய மன்னன் கை சோர்ந்து மெய் சோர்ந்தமைக்குரிய காரணம் என்ன?

4. பிரசித்தி பெற்ற பூச்சிக் கொல்லி மருந்து வகைகளை விற்பனை செய்யத்திட்டம் இட்டிருக்கின்ற நீர், அவற்றைப் பயன்படுத்துவோரைக் கவரும் வகையிற் செய்திந்தாளுக்கு எழுதும் ஒரு விளம்பரம்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ் மொழியும் இலக்கியமும் III

புதிய பாடத்திட்டம் - மாதிரி வினாத்தாள் - 2

பகுதி I

இரண்டு மணித்தியாலம்

- 1, 2, 3 , 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6,7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கும் விடை தருக.

1. பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள் வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) "காயிதமா போடுவாராம். அவன்ர ஆளப் பேருக்குப் போடச் சொல்லு புழுக்கைப் பயலுக்கு வந்து சொல்லிற்றுப் போக நேரமில்லை"
(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்கு கூறப்பட்டது?
(iii) எச் சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?
(iv) புழுக்கைப்பயல் என்பது எதைக் குறிக்கும்?

(ஆ) "..... இம்மையில் எஞ்சுறா வேதனை இயைதல் கண்டும் ஏன் அஞ்சுதி சாவதற்கு அமைதி கூறு ....."
(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்கு கூறப்பட்டது?
(iii) எச் சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?
(iv) இம்மை என்பதன் எதிர்க்கருத்துச் சொல் யாது?3

(இ) "மணிமேகலை இனி தவநெறியில் செல்வாள் அவளை நீ விரும்பாதே
(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்கு கூறப்பட்டது?
(iii) எச் சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?
(iv) மணிமேகலை பின்பற்றிய சமய நெறி யாது?

(ஈ) "அதெல்லாம் ஒண்ணும் வேணாப்பா! நீ எந்த மகாராசன் காலுல விழுந்தாவது இந்தப் பிரசாவுரிமைச் சங்கதியை முடிச்சுட்டு வந்துரு. அது தான் சனியன் புடிச்ச கரைச்சலா இருக்கு"
(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்கு கூறப்பட்டது?
(iii) எச் சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?
(iv) பிரசாவுரிமை அலுவலகம் அமைந்துள்ள இடம் யாது?

(உ) "பிள்ளைக்குச் சுகமில்லை பெரிய ஆஸ்பத்திரியில் சொல்ல வந்தேன்"
(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்கு கூறப்பட்டது?
(iii) எச் சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?
(iv) இங்கு குறிப்பிடப்படும் பிள்ளையின் பெயர் யாது?

2. பின்வரும் செய்யுள்களின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி, அவை ஒவ்வொன்றிலும் அடிக்கோடிட்ட எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்குக.

(அ) நல்லை, நல்லை : அறச் சமாத்தி நீயே கண்டேன்
நன்னுதலார் அனைவரிலும் இந்திரசாலம்
வல்லை, வல்லை : விறகுகளும் களவே : செம்பொன்
மங்கல நாண் உன் கழுத்தில் இருக்க, ஏதும்
இல்லை எனச் சொல்லுவது சற்றும் ஏலாது
இதனை எனக்கு ஈவாய் என்றியம்ப, வேடர்
பல்லம் உயிர் நிலை வாயில் பட்ட மான் போல்,
பதை பதைத்துப் பைந்தொடியாள் பதறி வீழ்ந்தாள்.

(ஆ) எத்தனை இடங்களை
ஊசி நூல் கொண்டு
வைத்திருக்கிறாய்! சேலைத்
தலைப்பு மட்டும் தெரியலையா....?
இத்தனைக்குள்ளும் உனக்
குள்ளே ஒளிந்திருக்கும்
மெத்தச் சோகம் கலந்த
மிருதும் முக வெட்டும்
வைத்திருக்கிறாய்! அந்த
வழிப்போக்கன் உன்முகத்தை
எத்தனை முறைகள் திரும்பி
எதைப் பார்த்துச் செல்கின்றான்?

(இ) அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஒடு மீன் ஓட உறுமீன் வரும் அளவும்
வாடியிருக்குமாம் கொக்கு

(ஈ) கூவி இன்று என்னை, நீ போய் தன் குலம் முழுதும் கொல்லும்
பாவியை அமருக்கு அஞ்சி அரண் புக்குப் பதுங்கினானை
தேவியை விடுக அன்றேல் செருக்களத்து எதிர்ந்துதன் கண்
ஆவியை விடுக என்றான் அருள் தினம் விடுகிலாதான்

(உ) காலினால் தடவிச் சென்று கைகளால்
சாலி வெண்முளை நீர்வழிச் சார்ந்தன
கோலி வாரி இடா நிறையைக் கொண்டு
மேலெடுத்துச் சுமந் தொல்லை மீண்டனர்.

3. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.
(அ) பாண்டியமன்னன் தமிழ்ச்சுவை பருகுதலில் ஆர்வம் மிக்கவன்.
(ஆ) புத்த பீடிகையை மணிமேகலை தொழுத போது அவள் உணர்ந்து கொண்டவை.
(இ) முதுமை உருவில் வந்த அறிவுடைநம்பியின் தோற்றம்.

4. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினுக்கு விடை தருக.
(அ) "காலம் எப்படி மாறிவிட்டபோதிலும் மனிதன் வாழ்ந்த வாழ்க்கைத் தழும்புகள் இலேசில் மறைந்து போவதில்லை" - இக் கூற்றை கார்த்திகேசுவின் வாழ்கையோடு தொடர்புபடுத்தி ஆராய்க.
(ஆ) மீனவ மக்களின் வாழக்கை "கடலை நம்பி" எனும் பாடத்தில் பிரதிபலிக்கப்படுமாற்றை விரித்துரைக்க.
(இ) "கொசுப்படையின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது நமுறூதின் படைகள் ஓடின" - வர்ணிக்குக.

● 5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.

5. (அ) கவிதை உள்ளம் எவ்வெற்றினோடு கலந்து உறவாட உதவுமெனக் கவிஞர் கூறுகிறார்?
(ஆ) நெஞ்சம் மகிழல், தெய்வ மேன்மையுணர்தல், தூய்மை அடைதல், முறுவலைக்காணல் என்பவற்றுக்கு ஆதாரமாக கவிஞர் எவற்றை குறிப்பிட்டுள்ளார்?

6. (அ) இளையான் குடிமாறநாயனார் மேற் கொண்ட அறத்தின் சிறப்பை விளக்குக.
(ஆ) மாறனார் வீட்டுக்கு வந்த சிவனடியாரை உபசரித்த முறையை விபரிக்குக.

7. (அ) மலையக இலக்கிய வளர்ச்சியில் 1940 வரை காணப்பட்ட நிலைமையினை எடுத்துக் காட்டுக.
(ஆ) கே. கணேஷ் அவர்கள் மலையகத் தமிழ் இலக்கியத்துக்கு ஆற்றிய பங்களிப்பை விளக்குக.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும் I

மாதிரி வினாத்தாள் - 2 **விடைகள்**

01.	1	11.	4	21.	1	31.	4
02.	4	12.	2	22.	4	32.	3
03.	2	13.	4	23.	2	33.	2
04.	3	14.	3	24.	1	34.	2
05.	1	15.	1	25.	3	35.	1
06.	2	16.	1	26.	3	36.	2
07.	3	17.	1	27.	2	37.	4
08.	2	18.	2	28.	4	38.	3
09.	1	19.	3	29.	4	39.	3
10.	4	20.	3	30.	1	40.	1

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும் II

விடைகள்

1. (அ) விலங்குகளும் மக்களைப் போலப் பேச முடியுமானால்

மனிதர்களே! உயிரினத்தில் உன்னதமான படைப்புகள் எனப் பெருமை கொள்ளும் உத்தமர்களே! உங்களுக்கு விலங்குகளாகிய எங்கள் தாழ்மையான வணக்கங்கள். ஒரு காலத்தில் உங்களில் ஒரு சாரரை மறுசாரர் அடிமைப்படுத்தி வதைத்தீர்கள். ஒரு தாய் பிள்ளைகளாக வாழ வேண்டியவர்களான நீங்கள் ஒரு பகுதியாரைத் தாழ்ந்த சாதியர் என்று ஒதுக்கி இழிவுபடுத்தினீர்கள். மனிதரே மனிதரின் உரிமைகளைப் பறித்து எப்பொழுதும் நசிப்போர், நசிக்கப்படுவோர் என்ற இரு நிலைபட்ட சமூக அமைப்புகளுக்கு வழி வகுத்தீர்கள்.

அது போகட்டும். மனிதராகிய உங்களின் சொந்த விடயம் என்று அதைக் கருதி நாங்கள் மறந்த விடலாம். ஆனால் உங்களின் ஆதிக்கக் கரங்கள் அப்பாவிகளான எங்கள் மீதும் படரும் போது தான் எங்களால் அதைத் தாங்க முடியவில்லை. எங்களில் ஒரு பகுதியாரை அடிமைகளாக்கி இன்றும் அவர்கள் மீது ஏறிச் சவாரி விடுகிறீர்கள். அது ஏன்? உங்கள் மூளைத்திறத்தால் வாயுவேகம், மனோவேகத்தில் செல்லும் வாகனங்களைக் கண்டுபிடித்த பின்னரும் குதிரை ஏறிச் சவாரி விடும் ஆசை எதற்கு, என்று தான் உங்களைக் கேட்கிறோம்.

ஆடு, மாடு என்று எங்கள் உடன் பிறப்புக்களைக் கட்டி வைத்து வளர்க்கிறீர்கள். அவர்களின் குழந்தைகள் அருந்த வேண்டிய பாலுணவை வஞ்சகமாகக் கவர்ந்து கொள்கிறீர்கள்.? அவர்களைக் கதறக் கதற கொலை செய்து உங்கள் வயிறுகளை நிரப்புவதும் தவறென்பது புரிகின்றதா? இது எந்த நியாயத்தைச் சேர்ந்தது என்று தான் கேட்கிறோம்.

நாய்களைத் தட்டி கொடுத்துத் தாஜா பண்ணி நன்றி உள்ளவை என்று பட்டம் சூட்டி அவர்களைக் கோமாளிகள் ஆக்கி அடிமைத்தனத்தின் சின்னங்கள் ஆக்கி விட்டீர்கள். பூனைகளை வளர்த்து அவர்களைக் கொண்டு வேறோர் விலங்கினமாகிய எலியைக் கொல்ல வைக்கிறீர்களே?

அழுக்குகளைத் தின்பவர்கள் என்று அருவருத்து நீங்கள் தள்ளும் பன்றிகளை விட்டு வைக்கிறீர்களே. உங்களுக்கு எவ்விதத் தீமையும் செய்யாது "சிவனே" என்று காட்டில் புல் மேயந்து திரியும் மான் மரையினங்களைக் கூட வேட்டையாடி உங்கள் வயிற்றினைச் சமாதிக் குழி ஆக்குகிறீர்களே? இது அடுக்குமா? இப்படியெல்லாம் அக்கிரமங்களை அடுக்கடுக்காகச் செய்து எம்மையெல்லாம் உலகத்தில் இல்லாது ஒழிக்கின்றீர்கள். இவ்வளவும் செய்து விட்டு நாகரீகம், பண்பாடு, அகிம்சை, அன்பு, அருள் என்ற சொற்களை அநாயாசமாகக் கையாள உங்களுக்கு வெட்கம் இல்லையா? சீ! மனிதர்களே! உங்கள் மனிதத்தன்மை ஒழிந்தாலே எமக்கு நிம்மதி.

(ஆ) புயலுக்குப் பின்

நடுச் சாமத்தில் வீசத் தொடங்கிய புயல் தொடர்ந்து இரு மணித்தியாலங்கள் உக்கிர தாண்டவம் ஆடிவிட்டு ஒய்ந்து போயிற்று. ஒருவாறு பொழுதும் புலர்ந்தது. மஞ்சற்

காமாலையாலே பீடிக்கப்பட்டவனது முகம் போலக் கதிரவனது முகமும் ஒளி குறைந்து சிறிது மங்கலாகவே தோன்றியது. மெல்லிய மழைத்துளிகள் அப்போதும் தூறிய வண்ணமே இருந்தன.

நான் வீட்டிலிருந்து வெளிப்போந்தேன். எனது வீட்டு முற்றத்திலே நின்ற மாமரம் பாறி விழுந்து பரிதாபக் கோலம் அளித்தது. பூவும் பிஞ்சும் காய்களும் இலைகளுமாக அது அகால மரணத்தைத் தழுவிக் கிடந்த காட்சி மனதிற்கு வேதனையை அளித்தது. வீட்டைச் சுற்று அடைக்கப்பட்டிருந்த வேலியும் சாய்ந்து கிடக்கக் கண்டேன்.

புயலுக்கு பின்பு எங்கள் ஊர் எப்படி இருக்கிறது என்று அறிய விரும்பி வீட்டிலிருந்து புறப்பட்டேன். மரங்கள் சரிந்தும், கிடுகுக் கூரை வீடுகள் பாறி விழுந்தும், வேலிகள் சாய்ந்தும் அவலக் காட்சியளித்தன. மக்கள் தம்வீட்டு முற்றங்களில் சூழ்ந்து நின்று கவலையோடு தங்கள் இழப்புகள் பற்றி உரையாடிக் கொண்டிருந்தார்கள். சிலர் வேலிகளை நிமிர்த்திச் சரி செய்தனர்" மற்றும் சிலர் முறிந்து விழுந்த மரங்களையும், கிளைகளையும் அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டனர்.

வீதிகளில் மின்சாரக் கம்பிகள் அறுந்து செல்வோரைப் பயமுறுத்திக் கொண்டிருந்தன. சில மின்சாரக் கம்பங்கள் சாய்ந்து கிடந்தன. வீதிகளுக்கு குறுக்காக மரங்களும் மரக்கிளைகளும் வழியை அடைத்துக் கிடந்தன. வாகனப்போக்குவரத்து இதனால் தடைப்பட்டது. மனித சஞ்சாரமே குறைந்து வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. இளைஞர்கள் சிலரே புதினம் பார்க்கும் நோக்கில் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தனர். துவிச்சக்கர வண்டிகளைச் கூடச் செலுத்திச் செல்ல முடியாத அளவுகளுக்கு வீதிகளில் தடைகளாக மரமும் கிளையும் தடிதண்டுகளும் இலை குழைகளுமாய் நிறைந்து கிடந்தன.

எனது நண்பனின் மண்வீடும் புயலினால் சரிந்து விழுந்து விட்டது. ஆனால் அவனும் குடும்பத்தவர்களும் உயிர் தப்பி விட்டார்கள். பல வறியவர்களுக்கும் இதே கதி தான் அவர்களின் குடிசைகளும் பொருள்களும் புயலுக்கு இரையாகிவிட்டன. நாங்கள் எல்லோரும் "தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்" என்று ஆறுதல் அடைந்து எமது வீட்டுக்கு அருகிலுள்ள பாடசாலையில் தஞ்சமடைந்தோம். பின்பு கிராமசேவகர் அரசாங்க உதவியுடன் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி வழங்கினார்.

(இ) "காடு செழித்தால் நாடு செழிக்கும்"

ஒரு காலத்திலே எமது நாடெங்கணும் காடுகள் செறிந்து காணப்பட்டன. அவற்றுட் சில வானுறவோங்கி வளர்ந்து பசுங்குடை பிடித்து விளங்கின. சில மனிதனின் அடிக்சுவடு படாத கன்னிக் காடுகளாய் விளங்கின. கருங்காலி, முதிரை, தேக்கு, பாலை, சமண்டலை போன்ற உயர் சாதித் தருக்கள் மிகுந்து விளங்கின. அன்றியும் குடியிருப்புப பகுதிகளும் பயன்தரு மரங்கள் நிறைந்த காடுகளின் தோற்றங் கொண்டிருந்தன. இயற்கையோடொட்டி வாழ்ந்த அக்கால மக்கள் மரங்களை அரிய செல்வமெனக் கருதினர். மரங்களை வளர்ப்பதை தேசிய பணியெனக் கருதினர். வீதிகளின் இரு புறமும் நிழல்தரு மரங்களை நாட்டினர். இவற்றால் அக்கால இலங்கை பசுமை தவழுந் தீவாக "மகரந்தத் துவீபம்" எனப் பாராட்டப்பட்டது.

ஆனால் இன்றுள்ள நிலையில் அச் சிறப்புப் பெயருக்குக் காரணமாகவமைந்த காடுகள் வெகுவேகமாக அழிக்கப்படுகின்றன. ஆயினும் அவை அழிவுறுதல், அவசியமானதாகவும் தடுத்து நிறுத்த முடியாததாகவும் அமைகிறது. இந் நிலைக்குச் சனத்தொகைப் பெருக்கமே காரணம் என்றால் மிகையாகாது. பிரதான எரிபொருளாக விளங்கும் விறகும் மரமே. குடியிருக்கும் வீடுகளின் நிலை, கதவு, யன்னல், தீராந்தி முதலியனவும் மரமே. வீட்டுத்தளபாடங்களாக உருப்பெறுவதும் மரமே. இதனால் காட்டு மரங்கள் வெட்டி வீழ்த்தப்படுகின்றன. காடுகளை அழித்துப் பயிர் நிலங்களை உண்டாக்குகின்றனர். குடியேற்றத்திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. புதிய புதிய நகரங்கள் தோன்றுகின்றன. வீதிகள், கட்டடங்கள் உருவாகின்றன. இவை அருமந்த காடுகளைப் பலி கொண்டே எழுகின்றன.

தீர்க்க தரிசனமின்றி நாட்டின் உயிர்நாடியாக விளங்கும் காடுகள் அழிவடைவதால் உண்டாகும் விளைவுகள் பயங்கரமானவை. நாம் அடிக்கடி அனுபவித்து கொண்டிருக்கும் மின்வெட்டுக்குக் காரணம் காடுகளின் அழிவே. காடுகளின் அழிவால் மழை வளம் குன்றுகின்றது. நீர்த் தேக்கங்கள் வற்றி வறழ்வதால் மின்வெட்டு நிகழ்கின்றது. காடுகள் அழிவதால் மழைவீழ்ச்சி பாதிக்கப்படுகின்றது. விவசாய உற்பத்தியும் குறைகின்றது. சூழல் மாசடைகின்றது.

அரச வனபரிபாலனத்திணைக்களம் புதிய புதிய காடுகளை உருவாக்குவதில் கவனம் செலுத்தி வருகின்றது. கள்ள மரம் வெட்டுபவருகுத் தண்டனை வழங்குகின்றது. பொது மக்களுக்கு இப்பில், வேம்பு, பலா போன்ற மரகன்றுகளை வழங்கி வருகின்றது. மரநடுகையின் முக்கியம் பற்றி தொடர்பு சாதனங்கள் விளம்பரம் செய்து வருகின்றன. "தவிர்க்க முடியாத நிலையில் ஒரு மரம் வெட்ட வேண்டிய நிலை வந்தால் குறைந்தது இரு மரங்களை உண்டாக்கிய பின்னரே வெட்டுவோம்" என்று நாம் சபதம் பூண வேண்டும். மூல வளமான காடுகள் செழித்தால் நாடு செழிக்கும் என்பதில் ஐயமில்லை.

(ஈ) "வாய்ச்சொல்லில் வீரரடி"

பேராசிரியர் பாலமுருகனார் நாடறிந்த பேச்சாளர். அவர் மேடையில் பேச எழுந்து விட்டால் தமிழ் அவர் நாவிலே கொஞ்சிக் குதித்து விளையாடும். மேடைகளில் புதிய புதிய கருத்துக்களைப் புகுத்துவார். அரசியல், நிருவாகத்துறையில் பொது வாழ்வில் நிகழும் தில்லுமுல்லுகளையும், ஊழல்களையும் மேடையில் அக்குவேறு ஆணிவேறாகக் காட்டும் போது கேட்போர் மூக்கிலே விரலை வைப்பர்.

அகில இலங்கை மாதர் சங்கக் கூட்டம் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது. பிரதம விருந்தினராக பேராசிரியர் பாலமுருகனார் அழைக்கப் பட்டார். "பெண்களும் சீதனக் கொடுமையும்" என்ற பொருளில் சீதனக் கொடுமையால் பெண்கள் படும் அவலங்கள் பற்றி ஒரு மணித்தியாலம் எடுத்துரைத்தார். இளைஞர்களின் கண்களிலே கண்ணீர் பனித்தது. பெண்களின் மனதிலே மகிழ்வு துளிர்த்தது. அவர் தம் பேச்சின் இறுதியில் கூறிய சொற்கள் கேட்போர் உள்ளங்களை மெய்சிலிர்க்கச் செய்தது. "அன்பர்களே! கேளுங்கள். இது என் உறுதியுரை "எனக்கு மூன்று புதல்வர்கள் உள்ளனர். அதில் மூத்த புதல்வன் வைத்தியராக தொழில் புரிகின்றான். அவனுக்கு வயது முப்பது. நான் அவனுக்கு ஒரு சல்லிக் காசும் சீதனம் வாங்காமல் திருமணம் செய்து வைக்கப் போகிறேன்" அவர் சொற்பொழிவு நிறைவுற்றதும், அங்கு எழுந்த கரகோஷமும் மகிழ்ச்சி ஆரவாரமும் அடங்கச் சிலநிமிடங்கள் சென்றன.

"ஐயா வணக்கம்"

"யார் நீங்கள்"

"என் பெயர் பரந்தாமன். எனக்குத் திருமண வயதில் ஒரு பெண் இருக்கிறாள். அவள் பெயர் தர்மினி. அன்று மாதர் சங்கக் கூட்டத்திலே நீங்கள் ஆற்றிய சொற்பொழிவு அதை இப்பொழுது நினைத்தாலும் மெய் சிலிர்க்கிறது. அந்தப் பேச்சின் இறுதிப்பகுதி இருக்கிறதே அது தான்" அது தான் பரந்தாமன் வார்த்தைகளை முடிக்கவில்லை. பேராசிரியர் குறுக்கிடு கிறார். "ஏன்? அதிலே உங்களுக்கு சந்தேகமா? உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்கின்றான் பாரதி. அவன் கொள்கை தான். என் கொள்கையும். "ஓ! இந்தக் காலத்திலே உங்களைப் போன்ற உத்தமர்களை காண்பது அரிது எனது மகள் குடியும் குடித்தனமுமாய் வாழ வேண்டும்." "ஏன் கவலைப்படுகிறீர்?. "எனது மகளுக்கு திருமணம் செய்து வைக்க விரும்புகிறேன். எல்லோரும் சீதனம், இனாம் என்று பெண் கேட்டு வருகிறார்கள். அதனால் தான் உயர்ந்த கொள்கையுள்ள உங்களிடம்....."அவர் வார்த்தைகளை முடிக்கவில்லை. "மாப்பிள்ளை கேட்டு வந்தீராக்கும்?" பேராசிரியர் கோபமாகக் கேட்கிறார். பின்னர் சிறிது தணிந்து "ஆனால் என் மனைவி இரு க்கிறாளே. அவளையும் அனுசரித்துப் போக வேண்டும்" என்று இழுத்தடித்தார். "மகன்மாரு க்குச் சீதனம் வாங்கிக் கலியாணம் செய்ய வேண்டியது தான்" "ஊருக்குத் தான் உபதேசம். உனக்கில்லை கண்ணே" என்ற பழமொழி தான் பரந்தாமனின் நினைவுக்கு வந்தது.

2. (அ) நாடகத்திற்கு இருத்தல் போல சிறுகதைக்கும் தொடக்கம், நடு, முடிவென மூன்று கட்டங்கள் உள்ளன. இவை பாத்திரங்கள் அறிமுகமாகவும், உச்சக் கட்டமாகவும் விரைவில் முடிவதா கவும் அமைவன,

(ஆ) இலக்கியம் புருடார்த்தங்களையும், வருணனைகளையும் கூறும் இலக்கணத்தாற் காரியப்படும். பெருங்காப்பியம், சிறு காப்பியம் என இரு வகைகள் உண்டு. இலக்கிய நூல்களின் அமைப்புக்களை ஒழுங்குபடுத்திக் கூறுவது இலக்கணம்.

3. 1. நெறி தவறிய அரசனை அறமே ஒறுக்கும்.
2. அநியாயமாக தனது கணவன் கொலை செய்யப்பட்டமை.
3. கருங்கூந்தல் விரிந்து கிடக்க, கண்கள் கண்ணீர் வடிக்க, கையில் ஒற்றைச் சிலம்பேந்திச் சென்றாள்.
4. கோவலனிடம் இருந்த சிலம்பு அரண்மனைச் சிலம்பன்று, அவனது மனைவியின் சிலம்பு என்பதை அறிந்த போது
5. "தீ வேந்தன் தன்னைக் கண்டு இத்திறம் கேட்பேன்" என்று புறப்படடுப் பாண்டியனிடம் நீதி உரைத்தமை.

4 பூச்சிக் கொல்லி விளம்பரம்

* விவசாயிகளே! கவலையை விடுங்கள். களிப்படையுங்கள் உங்கள் உற்ற நண்பன் றக்கோ A - 40.
* உங்கள் பயிர்களை நுண்ணங்கிகள் தாக்குகின்றனவா? புழுக்கள் அரிக்கின்றனவா? பூச்சிகள் வெட்டுகின்றனவா? அச்சம் வேண்டாம். இருக்கவே இருக்கிறது றக்கோ A - 40.

* எந்த நோயின் அறிகுறி தோன்றினாலும் சரி றக்கோ A -40 இல் 2 மில்லிலீற்றரை ஒரு கலன் தண்ணீரில் கலந்து தெளியுங்கள். 24 மணிநேரத்தில் எல்லா நோய்களும் காற்றாய் பறந்து விடும்.
* உங்கள் நெற் பயிருக்குச் செந்தாளா? இலைச்சுருட்டலா? சந்துகுத்தியா? ஒவ்வொரு நோய்க்கும் ஒவ்வொரு பூச்சிக் கொல்லியைத் தேடித் திரிந்து சிரமப்படாதீர்! றக்கோ A-40 அத்தனை நோய்களையும் அழிக்கும் சகல ரோக நிவாரணி!
* இரசாயன விஞ்ஞானிகளின் பலவருடப் பரிசோதனையின் பின் கண்டுபிடிக்கப்பட்ட நவீன பூச்சிக் கொல்லி மருந்து - றக்கோ A -40
மறவாதீர்கள் றக்கோ A - 40

கங்கெம் கெமிக்கல் நிறுவனம்
நீர்கொழும்பு.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும III

மாதிரி வினாத்தாள் - 2 விடைகள்

1. (அ) (i) அந்தோக்கிழவியால்
(ii) தபாற்காரச் சங்கரப்பிள்ளைக்கு
(iii) சங்கரப்பிள்ளை கூறியதைக் கேட்டு கிழவி ஆத்திரத்துடன் வேப்பமர நிழலில் இருந்து ஏசிய வேளையில்
(iv) புழுக்கை என்பதன் திருந்திய வடிவம் பிழுக்கை. இது ஆட்டு மலத்தைக் குறிக்கும். புழுக்கைப் பயல் என்பது கிழவியின் மகனைக் குறித்தது.

(ஆ) (i) சுவிசேஷகனால்
(ii) ஆத்துமவிசாரிக்கு
(iii) தனது ஆத்தும துயரத்தை எடுத்துரைத்த ஆத்துமவிசாரியிடம் சுவிசேஷகன் சாவதற்கு ஏன் பயப்படுகிறாய் என வினாவிய வேளையில்
(iv) மறுமை

(இ) (i) மணிமேகலைத் தெய்வத்தால
(ii) உதயகுமாரனுக்கு
(iii) மணிமேகலையை மணிபல்லவம் என்னும் தீவில் வைத்த பின் அரண்மனையிலிருந்த உதயகுமாரன் முன்னே சென்று சொல்லியது.
(iv) பௌத்த சமயநெறி

(ஈ) (i) பொன்னம்மாவால்
(ii) வேலாயுதத்துக்கு
(iii) வாய்க்கு ருசியா ஏதாச்சும் வேணுமா? பாத்து வாங்கியாறன் என்று தம்பி வேலாயுதம் கேட்ட போது பொன்னம்மாவால் கூறப்பட்டது.
(iv) கண்டி (ஹைகமிசனர் அலுவலகம்)

(உ) (i) தங்கம்மாவினால்
(ii) பள்ளி ஆசிரியருக்கு
(iii) மகள் சுகவீனமாக இருக்கும் வேளையில் தாய் தங்கம்மா பள்ளிக்குச் சென்று கூறியது.
(iv) அச்சும்மா

2. (அ) நீ மிகவும் நல்லவள். வல்லவள். இந்திர சாலத்தில் வல்லவள். நீ இங்கு கொண்டு வந்த விறகுகளும் களவாகும். செம்பொன்னாற் செய்யப்பட்ட தாலி உன் கழுத்தில் இருக்கும் போது எப்பொருளும் இல்லை என்னச் சொல்வது சிறிதும் பொருந்தாது. இதை எனக்குக் கொடுப்பாயாக! என்று சொன்ன போது, வேடரின் அம்பு உயிர் நிலையிலே பட்ட மான் துடிப்பது போல பசுமையான வளையலை அணிந்த பெண்ணாகிய சந்திரமதி பதைபதைத்து நடுங்கிப் பதறிக் கீழே விழுந்தாள்.
பல்லம் உயிர் நிலை - அரிச்சந்திரன் கூறிய சொற்கள் சந்திரமதியை அம்பு போலத் தைத்தது. அவள் மான் போல் விழுந்தாள். மான் - உவமானம், சந்திரமதி - உவமேயம்.

(ஆ) உன் சேலையில் எத்தனை இடங்களை ஊசிநூல் கொண்டு தைத்திருக்கிறாய். சேலையின் முகப்பு மட்டும் தெரியவில்லையா? இத்தனைக்குள்ளும் உனக்குள்ளே மறைந்திருக்கும் சோகம் கலந்த மென்மையும் முகவெட்டும் வைத்திருக்கிறாயே. அந்த வழிப்போக்கன் எத்தனை முறைகள் உனது முகத்தைப் திருப்பி திருப்பிப் பார்த்த வண்ணம் செல்கின்றானே! எதைப் பார்த்துச் செல்கின்றான்.

எத்தனை இடங்களை - அவளது சேலையில் அனேக இடங்களில் தையல் இடப்பட்டிருப்பது புலனாகின்றது. அணிவதற்கு நல்ல சேலையின்றிக் கிழிந்த பல இடங்களில் தையலிடப்பட்ட சேலையை அணிந்திருப்பது தெரிகிறது.

(இ) ஓடையின் கரையிலே கொக்கு மிகவும் வாடிப்போய் நின்று, பெரிய மீனாக வரும் பொழுது கொத்திப் பிடிக்குமாம். அதைப் போல அறிவாளிகள் அடக்க ஒடுக்கமாக இருப்பார்கள். அதனால் அவர்கள் அறிவில்லாதவர்கள் என்று எண்ணி விடவேண்டாம். மடைத்தலையில் - கொக்கு சின்ன மீனை விட்டுவிட்டு பெரிய மீனைக் கொத்திப் பிடிக்கும். அத்தகைய கொக்கை ஒத்தவர்கள் அறிவாளிகள்.

(ஈ) கருணை நீங்காத அந்த இராமபிரான் இன்று என்னை அழைத்து நீ சென்று தன் குலத்தை எல்லாம் அழியச் செய்து பாவியும், போரிடுவதற்கு அச்சங் கொண்டு கோட்டைக்குள் பதுங்கிக் கொண்டிருப்பனுமான இராவணனை அணுகி, "சீதாதேவியை விட்டு விடுக. அவ்வாறு செய்ய விருப்பம் இல்லையானால், போர்க்களத்திலே எதிர்ப்பட்டு நின்று, அங்கு போரிட்டு உயிரை விட்டுவிடுக" என்று கூறி வா என அனுப்பினான் என்று அங்கதன் உரைத்தான்.

அருள் இனம் விடுகிலாதான் - இராமனுக்கு நீ தீங்கு இழைத்த போதும், இறுதியாக நீ உயிர் பிழைப்பதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் அவன் என்னை உன்னிடம் தூது அனுப்பியுள்ளான் என்ற கருத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ) மாறனார் கால்களினாலே வழியைத் தடவி அறிந்து போய், வயிலுனுள்ளே மழை நீரில் மிதந்து ஒரு வழிச்சார்ந்த நெல் வெண் முளையைக் கைகளால் சேர்த்து வாரி எடுத்து கூடை நிறையைக் கொண்டு, கூடையை மேலே தூக்கி எடுத்து தலையிற் சுமந்து கொண்டவராய் விரைவிலே தம் மனைக்குத் திரும்பி வந்தார்.

சாலி வெண் முளை - அன்று பகலில் விளைந்த நெல் ஆதலின் ஊறி முளைக்கத் தொடங்கின. கிளம்பும் போது வெண்நிறமுடையன.

3. (அ) பாண்டிய மன்னன் அமுதத் தமிழ்ச்சுவையைச் செவியாரப் பருகுதலில் ஆராத ஆர்வம் கொண்டவன். அதைத் தனது பொழுது போக்காகக் கொண்டு வாழ்ந்தவன். கவியரங்கம் அமைப்பான். அடிக்கடி தமிழ்ப்புலவர்களை அழைப்பான். அவர்களது கவிநயம், கற்பனைத் திறன், பொருளாழம், யாப்பமைதி, சொல்லடுக்கு, இசையின்பம் என்பவற்றைச் செவிமடுப்பான். மகிழ்ச்சிக் கடலில் திளைப்பான். கவியரங்கத்தில் பொது நிகழ்ச்சி, சிறப்பு நிகழ்ச்சி என இருவகை நிகழ்ச்சிகளை நடாத்துவான். புலவர்களது கருத்துக்களையும், திறமைகளையும் கண்டறிய வழி செய்வான். புலவர்களுக்குப் பரிசில் வழங்கி மகிழ்வான். தெய்வத்தன்மை பொருந்திய புலவர்கள் தெய்வத்தைப் போன்று கவிதைகளை ஆக்கவும், அழிக்கவும், காக்கவும் வல்ல ஆற்றல் படைத்த புலவர்களை நன்குணர்ந்தவன். இதற்காக அவன் முத்துப்பந்தர் அமைத்து அதில் நான்கு பொற்கிளிகளை தொங்க விட்டுப் புலவாகளிடையே போட்டி நடாத்தினான்.

(ஆ) அவள் தான் முற்பிறப்பில் இரவிவர்மன் மகளாக இலக்குமி என்ற பெயரோடு பிறந்தாள். இராகுலனை மணந்தாள். திட்டிவிடம் என்ற பாம்பு கடித்து இராகுலன் இறந்தான். பின் இருவரும் தீயிற் புகுந்தனர். இராகுலனே உதயகுமாரனாக இப் பிறப்பில் பிறந்துள்ளான். "நீ சமய வாதிகளின் கொள்கைகளை அறிய வேண்டும். உன் இளமைக் கோலம் இருந்தால் பிறர் உனக்குச் சமய உண்மைகளைச் சொல்லார்" என மணிமேகலா தெய்வம் மணிமேகலைக்குக் கூறியது. பின் மணிமேகலா தெய்வம் ஆகாய வழியிலே செல்வதற்கும், நினைத்த வேறு உருவை எடுப்பதற்கும், பசியின்றி இருப்பதற்குமான மந்திரங்களை அவளுக்குக் கூறியது.

(இ) நீண்ட வெண்தாடி, மீசை, முகத்தில் சுருக்கம், முதுமைத் தோற்றம் கொண்டவர் அறிவுடை நம்பி. மெல்லமெல்ல நடப்பார். நூறு வயது நிரப்பியவர் போலக் காட்சியளித்தார். நீதி நூல்களை கறை கண்டவர் போலவும் தோற்றமளித்தார். அறிவுடை நம்பியின் முதுமைத் தோற்றம் அவையினரைப் பெரிதும் கவர்ந்தது.

4. (அ) கார்த்திகேசு கூலி வண்டி வைத்துப் பிழைப்பவன். மோட்டார் கார் வராத காலத்தில் மாட்டு வண்டி மூலம் மக்கள் பயணம் செய்தனர். அதனால் மாட்டுவண்டிக்காரர்களுக்கு நல்ல வருமானம் கிடைத்தது. மோட்டார் கார் அறிமுகமானதும் மாட்டுவண்டிக்காரர்களின் பிழைப்பு பட்டுவிட்டது. கார்த்திகேசுவுக்கும் இதே நிலை தான். தனது வண்டியில் பயணம் செய்யும் பயணிக்கு தனது கதையைக் கூறுகிறான்.

"உலகம் கீழ் மேலாகப் புரண்டு கொண்டு வருகிறது. அதில் எல்லாம் எனக்குக் கவலையில்லை. மரம் வளர்வதற்கு காவோலைகள் விழுந்து புதிதாக வரும் குருத்தோலைக ளுக்கு இடம் விட்டுக் கொடுக்க வேண்டியது தான்" காவோலைகள் விழுந்த பிற்பாடும் அவை இருந்த அடையாளமாக மரத்தில் வரைகள் இருக்கும். அது போலக் காலம் மாறிவிட்ட போதும் மனிதனின் வாழ்க்கைத் தழும்புகள் இலேசில் மறைந்து போவதில்லை.

கார் அறிமுகமாகாத காலகட்டத்தில் மாட்டுவண்டியே பயன்பட்டது. கார் வந்ததும் மாட்டு வண்டியைத் தேடுவார் இல்லை, என்றாலும் அதன் அடையாளம் மறைவதில்லை. "உனது பெரியம்மா கையிலே பிசைந்து தந்த சோற்று உருண்டை இதோ வயிற்றில் ஒரு பக்கத்தில் இன்றைக்கும் இருக்கிறது தம்பி" என்று கார்த்திகேசு கூறுகிறான். இது மறைந்து போகாத வாழ்க்கைத் தளும்புக்கு நன்றியுணர்வுக்கு அடையாளமாக விளங்குகின்றது.

(ஆ) கடலை நம்பி என்னும் பாடத்தில் கடற்றொழில் செய்யும் மீனவர்களின் வாழ்க்கை பிரதிபலிக் கப்படுகின்றது. வேனிற்கால வெயில் மிகவும் கொடுமையானது. அந்த வெயிலுக்கும், கடும் பனிக்கும், மழைக்கும் குளிருக்கும் அஞ்சாது மீனவர் கடலுக்குச் சென்று தொழில் செய்கின்றனர். மீனவர்களின் வாழ்க்கை கஷ்டமானது. கடலுக்குப் புறப்படும் மீனவனுக்கு மனைவி கட்டுச்சோறு கொடுத்து அனுப்புகிறாள். பின் அவன் எப்பொழுது பத்திரமாகத் திரும்பி வருவான் என ஏங்குகிறாள். மீனவன் மழைக்கும், புயற்காற்றுக்கும் ஈடு கொடுக்கின் றான். அவனது படகு நீர்ச்சுழிகளில் அகப்பட்டுத் தத்தளிக்கின்றது. ஆழ்கடல் சென்று வலை போட்டு மீன் பிடிக்கின்றான். விடிவெள்ளி காரிக்க வலைகளை மீட்டெடுக்கின்றான். இவ்வாறு மீனவர்களின் நிலைமையை கவிஞர் சிறப்பாகப் படம் பிடிக்கின்றார்.

(இ) பகைவர்களின் மேனி முழுவதும் கொசுக்கள் மொய்த்தன. தமது கூர்மையான ஊறிஞ்சல் களால் இரத்தத்தைக் குடித்தன. பகைவர்கள் ஆண்மையாகிய வீரத்தை இழந்தனர். கதி கலங்கி ஓடினர். கரு மேகத்தினின்றும் வரும் கொசுப்படையின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாது பலர் மாண்டனர். எங்கே போவது என்று தெரியாது அலைந்தனர். சிலர் வீடு திரும்பினர். சிலர் நெருப்பை விரும்பி நாடினர். நெருப்பை வளர்த்தனர். புகை எரிந்தது. கொசுக்கள் நெருப்பின் உள்ளும் புகுந்து பகைவரைத் தாக்கியது. நிலை குலைந்த பகை வர்கள் அலை போல் நடுங்கினர்.

5. (அ) வெண்மையான முகிற் கூட்டத்தோடு நாமும் சேர்ந்து வானவெளியில் மிதந்து செல்லலாம். தென்றற் காற்றுடனும், இலைத்தளிர்களின் மென்மையுடனும், இசை மீட்கும் பைங்கிளிக ளுடனும் குயில்களுடனும் நீருடன் நீர் கலப்பது போல் இரண்டறக் கலந்து உறவாட உதவும் இயற்கை நிகழ்வுகள் அனைத்திலும் இன்பம் தூய்க்கலாம்.

(ஆ) மல்லிகை மலர்களின் மணமும், அழகும் நெஞ்சத்தில் மகிழ்வை ஏற்படுத்தும். மல்லிகை மலர்களின் இதழ் செறிவில் அவற்றைப் படைத்த தெய்வத்தின் மேன்மையை உணரலாம். செவ்வல்லியின் அழகு, நிறம், அமைப்பு என்பவற்றில் தூய்மையை அடையலாம். காதற் பெண்ணின் புன்முறுவலை முல்லை மலரில் காணலாம். புன் சிரிப்பு என்பது காதற் பெண் ணின் கைவந்த கலை. இதனாலேயே கவிஞர் காதற் பெண்ணின் முறுவலை முல்லையிற் காணலாம் என்றார்.

6. (அ) இளையான் குடிமாறநாயனார் நடராசப் பெருமானின் திருப்பாதங்களை எப்போதும் தலையிற் சூடிக் கொள்பவர். சிவனடியார்களுக்கு திருவமுது செய்யும் பணியைக் கடமையாகக் கொண்டவர். செல்வமுள்ள போதும், வறுமையுற்ற போதும் அப் பணியைத் திறம்படப்புரிந்தவர். அறங்களில் சிறந்தது அன்னதானம். மாறனாரின் விருந்தோம்பற் பண்பைப் பரிசோதிக்க இறைவனே நேரடியாக வந்தார். இவ்வாறான பாக்கியத்தைப் பெற்றவர் செல்வம் சுருங்கிய போதும் மனம் தளரவில்லை. கடன் வாங்கினார். தொடர்ந்தும் அமுது செய்யும் பணியை மேற்கொண் டார். தில்லைக் கூத்தினின் பேற்றினைப் பெற்றவர். இறைவனால் முத்தியடையும் பேற்றைப் பெற்றவர்.

(ஆ) பிரமாவும் திருமாலும் அடிமுடி தேடியும் காணாத இயல்பையுடையவர் நடராசப்பெருமான். இடபவாகனமின்றியும், உமையம்மையின்றியும் நாயனார் இல்லத்துக்கு வருகை தந்தார். துறவி வேடம் பூண்டு தன்னந்தனியராய் வந்தார். மழைக்காலத்தில் நள்ளிரவு வேளையில் வந்தார். நாயனார் அகமும் முகமும் மலர அன்பான இன்சொற்களைக் கூறி பண்புடன் வரவேற்றார். அவரை இல்லத்தினுள் அழைத்துச் சென்றார். அவரது மேனி மழையில் நனைந்திருந்தது. ஈரத்தைத் துடைத்தார். பின் அவரைத் தக்கதோர் ஆசனத்தில் அமர்த்தினார் பின் அவரின் உள்ளம் மகிழுமாறு உண்பிக்க ஆசை கொண்டார். விருந்தோம்பலுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் மாறனார்.

7. (அ) 1940 காலப்பகுதி வரை மலையகத்தில் வெகுசிலரே படிப்பறிவு பெற்றிருந்தனர். பெரும்பாலானோருக்கு அவ்வசதி கிடைக்கவில்லை. இலங்கையில் தமிழ்பத்திரிகைத்துறையும் வளர்ச்சி பெறவில்லை. சில வசதியுள்ள குடும்பங்களுக்கே இந்தியப் பத்திரிகைகள் கிடைத்தன. ஏனையோருக்கு அவ்வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆர். இராமையா, சி. சுப்பிரமணியம் போன்றோர் இந்திய சஞ்சிகைகளுக்கு ஆத்மீக சம்பந்தமான கட்டுரை, கவிதைகளை எழுதினர். இவரது படைப்புக்களில் மலையக மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள் சுட்டிக் காட்டப்படவில்லை. மாரியம்மன் தாலாட்டு யாத்திரைப்பாடல்கள், காமன் கூத்து போன்றவை புகழ்பெற்று விளங்கின. இந்தியாவிலிருந்து நாடகக் குழுக்கள், புலவர்கள் மலையகத்துக்கு வந்து சேர்ந்தனர். அல்லி அர்ச்சுனா, பவளக்கொடி, வள்ளி திருமணம் போன்ற நாடகங்கள் மலையகத்தில் ஆங்காங்கே நடைபெற்றன. நாதன், கந்தசாமிக் கணக்கப்பிள்ளை போன்றோர் ஆக்கங்கள் சாதாரண மக்கள் மத்தியில் படிக்கப்பட்டு வந்தன. மலையக மக்களின் பிரச்சினைகள் 1940 வரை வெளிக்கொணரப்படவில்லை.

(ஆ) மலையக வாழ்வின் பிரச்சினைகளைக் கொண்ட குவாஜா அகமது அபாஸின் குங்குமப்பூ, அஜந்தா ஆகிய நாவல்களை கணேஷ் மொழி பெயர்த்து வெளியிட்டார். தீண்டாதான் என்ற நாவலையும் மொழி பெயர்த்தார். இவரது மொழி பெயர்ப்பு ஆங்கிலக் கவிதை ஒன்றுக்கு யப்பானிய அரச மாளிகையிலிருந்து பாராட்டுக் கிடைத்தது. ஹோசிமின் சிறைக் குறிப்புகளைக் கவிதை வடிவில் மொழி பெயர்த்து வெளியிட்டார். சோவியத் ஒன்றியத்தைச் சேர்ந்த அசர் பைஜானிக் குடியரசு எழுத்தாளர் அல்தாய் முகமத்தோல் எழுதிய அந்தகானம் என்ற கதையும் அழகாக மொழி பெயர்த்து வெளியிட்டார்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும் I

புதிய பாடத்திட்டம் - மாதிரி வினாத்தாள் - 3

45 நிமிடங்கள்

- பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. "வங்கினைப் பற்றிப் போகா வல்லுடும்பு என்ன"
இங்கு வங்கு என்பதன் ஒத்தகருத்துச் சொல்
(1) மரக்கிளை (2) மரப்பொந்து (3) மரவிலை (4) மரவேர்

2. "மசகமுற்ற பன்னுளிப் படைக்குழாங்கள்" இங்கு மசகம் என்பதன் ஒத்த கருத்துச்சொ
(1) எறும்பு (2) தேள் (3) சிலந்தி (4) கொசு

3. சந்தையில் பொருள்களின் விலை ஒறுப்பாக இருந்தது. இங்கு ஒறுப்பு என்பதன் எதிர்க்கருத்துச்சொல்
(1) மலிவு (2) மிகை (3) அதிகம் (4) கூட

4. பாலர் பாடசாலையில் விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. பாலர் என்பதன் எதிர்க்கருத்துச்சொல்
(1) விருத்தர் (2) சிறுவர் (3) இளைஞர் (4) வறியோர்

5. பொன்னம்பலம் தன்னைத் தமிழன் என்று கூறுவதில் பெருமையடைந்தார். இவ்வாக்கியத்திலுள்ள தமிழன் என்பதன் எதிர்ப்பாற்சொல்
(1) தமிழச்சி (2) தமிழி (3) தமிழிச்சி (4) தமிழை

- பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

6. ஆசிரியர் ..... காரணமாகப் பாடசாலைக்குச் சமுகமளிக்கவில்லை.
(1) சுகயீனம் (2) சுகவீனம் (3) சுகயினம் (4) சுகவினம்

7. கடலும் கடல் சார்ந்த நிலமும் ..... எனப்படும்.
(1) குறிஞ்சி (2) முலலை (3) மருதம் (4) நெய்தல்

8. மன்னர்களால் செய்யப்படும் சிறப்பு ..... எனப்படும்.
(1) மாராயம் (2) மானியம் (3) நிந்தகம் (4) முடிசூடல்

9. பிணங்களை அடக்கஞ் செய்யும் இடம் ..... எனப்படும்.
(1) சுடுகாடு (2) இடுகாடு (3) மண்மேடு (4) சவச்சாலை

10. வீதியில் விழுந்த சிறுவன் ..... இன்றிக் கிடந்தான்.
(1) வாடிவதங்கி (2) மூச்சுப்பேச்சு (3) கேள்விமுறை (4) தப்பித்தவறி

- பின்வரும் ஒவ்வொன்றுக்கும் பொருததமான சொல்லைத் தெரிவு செய்க.

11. சிவபதமடைந்த ஒருவரின் பெருமைகளைக் குறித்துப் பாடப்படும் பாடல்
(1) ஒப்பாரி (2) கல்வெட்டு (3) மரணசாசனம் (4) சரமகவி

12. அரண்மனைகளில் பெண்கள் வசிக்கும் பிரத்தியேகப்பகுதி
(1) பலகனி (2) உப்பரிகை (3) மாடம் (4) உவளகம்

13. ஒரே சமயத்தில் பதினாறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன்
(1) அட்டவதானி (2) தசாவதானி (3) சதாவதானி (4) சோடாசாவதானி

14. சொத்தை அனுபவிக்கும் உரிமையுடன் கூடிய அடைமானம்
(1) ஈடு (2) அடைகு (3) ஒற்றி (4) குத்தகை

15. மாடுகள் கட்டுமிடம் தொழுவம் என்பது போல யானைகள் கட்டுமிடம்
(1) பந்தி (2) பட்டி (3) லாயம் (4) குடில்

- பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

16. அவர் வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டிய இன்பம் அனைத்தையும் அனுபவித்து விலகி விட்டார் என்னும் பொருளை புலப்படுத்தும் மரபுத்தொடர்
(1) கண்டுகழித்தல் (2) கண்சாடை செய்தல் (3) கண்வளர்த்தல் (4) கண்ணோடுதல்

17. எதனையும் முறையின்றி ஒழுங்கின்றிச் செய்தல் என்னும் பொருளைப் புலப்படுத்தும் மரபுத்தொடர்
(1) குத்துக்கரணம் (2) தப்புத்தாளம் (3) பொய்புரட்டு (4) கோணல்மாணல்

18. நாம் நினைத்தபடி கருமங்கள் நடைபெறுவதில்லை என்பதை விளக்கும் பழமொழி
(1) அவனின்றி எதுவும் அசையாது.
(2) திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை.
(3) நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்.
(4) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

19. உயர்ந்தவர் தாழ்வதும் தாழ்ந்தவர் உயர்வதும் இயற்கை எனும் கருத்தமைந்த பழமொழி
(1) கோலம் மாறினாலும் குணம் மாறாது.
(2) துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்.
(3) ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்.
(4) இளங்கன்று பயமறியாது.

20. மிகுந்த கவனத்தோடு பாதுகாத்தல் என்னும் பொருள் தரும் உவமைத்தொடர்
(1) ஓடும் புளியம் பழமும் போல (2) கண்ணை இமை காப்பது போல
(3) குடத்துள் விளக்குப் போல (4) கிணற்றுத்தவளை போல

- பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

21. முகிலைக்கிழித்து மதியினை முட்டும் மாடங்களையுடைய வீதியில் வீதிவிடங்கன் சென்றான். இதில் வந்துள்ள அணி
(1) உவமை (2) உயர்வுநவிற்சி (3) உருவகம் (4) தற்குறிப்பேற்றம்

22. வன்தொடர்க் குற்றியலுகரத்திற்கு ஓர் உதாரணம்
(1) கொக்கு (2) வண்டு (3) சால்பு (4) நாகு

23. பின்வருவனவற்றுள் தமிழில் கலந்து வந்த ஒல்லாந்து மொழிச்சொல்
(1) குசினி (2) சலவை (3) கப்பி (4) சாக்கு

24. மகனை இழந்த சந்திரமதி கண்ணீருங் கம்பலையுமாகக் காணப்பட்டாள். இதில் வரும் கண்ணீருங் கம்பலையும் என்பது
(1) உவமைத்தொடர் (2) மரபுத்தொடர் (3) இரட்டைக்கிழவி (4) இணைமொழி

25. பின்வருவனவற்றுள் அன்மொழித்தொகை அல்லாதது
(1) பொற்றொடி (2) குடிநீர் (3) பொற்றாலி (4) பூங்குழல்

26. சிவகாந்தன் பாடசாலையில் இருந்து விலகினான் என்னும் தொடரில் வரும் "இல்" உருபு உணர்த்தும் பொருள்
(1) நீங்கல் (2) ஒப்பு (3) எல்லை (4) ஏது

27. திரிதல் விகாரப் புணர்ச்சிக்கு உதாரணமாகக் கொள்ளத்தக்கது
(1) பாடசாலை + கீதம் (2) நீலம் + மலர் (3) மண் + சட்டி (4) பலா + பழம்

28. பின்வருவனவற்றுள் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக இக்காலத்தில் வழங்கி வரும் சொல்
(1) சனாதிபதி (2) தையல் (3) மகடூஉ (4) அரிவை

29. பின்வருவனவற்றுள் அகச்சுட்டு அல்லாதது
(1) அவன் (2) அம்மனிதன் (3) இவர் (4) உது

30. மிகுந்த கவனத்தோடு பாதுகாத்தல் என்னும் பொருள் தரும் உவமைத்தொடர்
(1) ஒடும் புளியம்பழமும் போல (2) கண்ணை இமை காப்பது போல
(3) குடத்துள் விளக்குப் போல (4) கிணற்றுத்தவளை போல

- பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

31. பக்தர்கள் அனைவரும் இன்று கோயிலுக்கு வந்தாலும்
(1) வருவார்கள் (2) வருகிறார்கள் (3) வந்தார்கள் (4) வரவில்லை

32. நீ கவனமாகப் படித்தாலன்றி தேர்விலே
(1) தேறுவாய் (2) தேற்றுவாய் (3) தேற்றவில்லை (4) தேறாய்

33. நீங்கள் எதைக் கூறினாலும் நாங்கள் அதைக்
(1) கேட்போமல்ல (2) கேட்போமல்லோம் (3) கேட்டோமன்று (4) கேட்போரல்லர்

34. பொய் சொல்வதும் களவெடுப்பதும் நல்ல
(1) பழக்கமல்ல (2) பழக்கமன்று (3) பழக்கங்களன்று (4) பழக்கங்களல்ல

35. தம்பியோ தங்கையோ அங்கே
(1) வருபவன் (2) வருபவள் (3) வருபவர் (4) வருவது

- பின்வரும் செய்யுளை வாசித்துக் கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

பூசுரர் தங்கை மலரும் பூங்குமுதம் குவியக்
காசினியும் தாமரையும் கண் விழிப்ப - வாசம்
அலர்ந்த தேங்கோதையாள் ஆழ்துயரத்தோடும்
புலர்ந்ததே அற்றைப் பொழுது

36. இப்பாடலில் குறிப்பிடப்படும் பொழுது
(1) காலை (2) மாலை (3) நள்ளிரவு (4) மதியம்

37. காலையில் கூம்பும் பூ யாது?
(1) தாமரை (2) அல்லி (3) குமுதம் (4) பங்கயம்

38. காசினி எனக் குறிப்பிடப்படுவது
(1) குற்றம் (2) குவலயம் (3) மாசு (4) பூசினி

39. சூரியன் உதிக்க மலரும் பூ யாது?
(1) அல்லி (2) குமுதம் (3) செவ்வந்தி (4) தாமரை

40. இப்பாடலில் குறிப்பிடப்படும் உரிச்சொல்
(1) ஆழ் (2) அலர்ந்த (3) காசினி (4) பொழுது

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும் II

மாதிரி வினாத்தாள் - 3

மூன்று மணித்தியாலம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக.
   (அ) கடற்கரையில் ஓர் உதயப்பொழுதைச் சித்திரிக்கும் வருணனைக் கட்டுரை
   (ஆ) இருபதாம் நூற்றாண்டில் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த பெரியார் ஒருவரின் வாழ்க்கைக் குறிப்புகளைச் சுருக்கமாகவும் அவரது தமிழ்ப்பணிகளை விரிவாகவும் விளக்கி ஒரு வரலாற்றுக் கட்டுரை
   (இ) இருப்த்தோராம் நூற்றாண்டில் உலகம் எவ்வாறிருக்கும் எனக் கற்பனைச்சித்திரம்
   (ஈ) இலத்திரனியல் யுகத்தில் மனிதன் அடைந்துள்ள வளர்ச்சி பற்றி விளக்கக் கட்டுரை

2. கீழே தரப்பட்டுள்ள அ, ஆ என்னும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் சுருக்கத்தை 15-20 சொற்களில் அமையக் கூடியவாறு வேறுவேறாக எழுதுக.

   (அ) "காணிச் சீர்திருத்தச் சட்டத்தினால் நிலம் மக்கள் உடைமையாகும். இந் நிலத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கிலே தான் எல்லாக் கிராமங்களிலும் விவசாய மத்திய நிலையங்களை திறந்து வருகிறோம். இதே போன்று வங்கிகளும் திறந்து விவசாயக் கடன் வசதிகளையும் பெருக்கவுள்ளது. இந்த நன்மைகளைப் பெற்று நாடு சுபீட்சமடைய உதவுங்கள். இது உங்கள் நாடு அந்நிய நாட்டாரிடம் கையேந்தி உணவுப்பொருள்களை வாங்கும் நிலையை அகற்ற அரசுக்கு ஆதரவு தாருங்கள்" இவ்வாறு காணி விவசாய அமைச்சர் அண்மையில் நடைபெற்ற விழாவொன்றிற் கூறினார்.

   (ஆ) தமிழ் மொழியிலே உரைநடையும் உரை நடை இலக்கியமும் வளம் பெற்று விளங்குங் காலம் இருபதாம் நூற்றாண்டு எனக் கூறுதல் மிகையாகாது. தமிழ் நாட்டில் ஆங்கிலக்கல்வி விருத்தியடைந்ததன் பயனாகத் தமிழ்மொழி அடைந்த சிறப்புக்களுள் உரைநடை வளர்ச்சியை முக்கியமாகக் கூறலாம். இந் நூற்றாண்டுக்கு முன் வழங்கி வந்த பல்வகைப்பட்ட நடைகளோடு இப்பொழுது வழங்கி வரும் உரைநடையை ஒப்பு நோக்கிப் பார்க்குமிடத்திலே தான் இக்காலத்திலே உரைநடை மிக விரைவாக வளர்ச்சி பெற்று வருதலை நாம் தெளிவாகக் காணலாம்.

3. பின்வரும் உரைநடைப்பகுதியை வாசித்து, அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

   நினைவுக்கு எட்டாத காலமுதற் கொண்டே தமிழர்கள் அரேபியர்களுடன் வர்த்தக கலாச்சார உறவு கொண்டிருந்தனர். கிரேக்கர்கள், ரோமர்கள், சீனர்கள், எகிப்தியர்கள் ஆகியோர் தமிழகத்தில் தங்கள் வர்த்தக நிலையங்களை நிறுவியிருந்தனர். ஏற்றுமதி இறக்குமதி மிகப் பெருமளவில் நடைபெற்று நறுமணம் கமழும் புற்கள், வண்ண வண்ணக்கைத்திறன் மிக்க புடைவைகள், முத்துக்கள், பவளங்கள் மற்றும் பற்பல பொருள்கள் செங்கடல் துறைகளுக்கும் அங்கிருந்து அலெக்சாந்திரியா, கெய்ரோ மற்றும் ஐரோப்பிய துறைமுகப் பட்டினங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டன. ரோமபுரிச் சீமாட்டிகள் தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட "மஸ்லின்" துணியையே வழக்கமாக அணிந்து வந்தனர். பட்டினப்பாலை, பத்துப்பாட்டு ஆகிய நூல்களில் இது பற்றிய தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கி.மு 1000 ஆவது ஆண்டில் சாலமன் மன்னனுக்குத் தமிழ் வேந்தன் மயில், குரங்கு, சந்தனக்கட்டை ஆகியவைகளை அனுப்பி வைத்துள்ளான். மாமன்னன் அகஸ்தஸ் காலத்தில் தமிழகத்துக்கும் ரோமுக்குமிடையில் ராஜரிக உறவுகள் இருந்து வந்துள்ளன. கிரேக்கர்களையும் ரோமர்களையும் தமிழர்கள் யவனர்கள் என அழைத்தனர்.

   1. தமிழகத்தில் வர்த்தக நிலையங்களை நிறுவியிருந்த வெளிநாட்டவர்கள் யாவர்?
   2. தமிழ்நாட்டிலிருந்து மேலைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள் யாவை?
   3. ரோமாபுரிச் சீமாட்டிகளைக் கவர்ந்த தமிழ் நாட்டுப் பண்டம் எது?
   4. பட்டினப்பாலை, பத்துப்பாட்டு என்பன யாவை? அவைகள் கூறும் தகவல்கள் யாவை?
   5. யவனர்கள் என்போர் யாவர்?

4. நூல் வெளியீடு ஒன்றுக்கான அழைப்பிதழ் தயாரிக்குக. கீழே தரப்பட்டுள்ள விடயங்களை மையமாக வைத்து அழைப்பிதழ் தயாரிக்குக.
   1. பிரதம விருந்தினர்
   2. நூல் அறிமுகவுரை
   3. முதற் பிரதி பெறுபவர்
   4. நூல் ஆய்வுரை

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரணதர)ப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும் III

மாதிரி வினாத்தாள் - 3 - பகுதி 1

- 1, 2 , 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.

1. பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) "இல்லை இல்லை, இப் பெண்ணைக் கண்டதுமில்லை. மணந்த ஞாபகமுமில்லை. இவளை நான் எப்படி ஏற்பேன்?"

(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்குக் கூறப்பட்டது?
(iii) எச் சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?
(iv) இங்கு குறிப்பிடப்படும் பெண் யார்?

(ஆ) "சாந்து எனப் புதல்வன் தன்னைத் தரையிடத் தேய்த்துத் - தன்னூர்
காந்து எரிமடுத்துத் தானும் காணவே கடலைத் தாவிப்
போந்த பின் வந்திலாதான் இனிப் பொரும் போருமுண்டோ?"

(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்குக் கூறப்பட்டது?
(iii) எச்சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?
(iv) இங்கு குறிப்பிடப்படும் புதல்வனின் பெயர் யாது?

(இ) "நீதி வழுவாத நம் சோழ அரசரிடம் செல்லுங்கள் உங்கள் வழக்கிற்கு அங்கே நல்ல தீர்ப்பு கிடைக்கும்"

(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருகுக்குக் கூறப்பட்டது?
(iii) எச்சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?
(iv) இங்கு குறிப்பிடப்படும் சோழ அரசர் யார்?

(ஈ) "ஏன் பாக்கியம்? இதை முப்பது ரூபாவுக்கு வச்சாப் பததாதா? நாப்பது எதற்கு...?"

(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்குக் கூறப்பட்டது?
(iii) எச் சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?
(iv) பாக்கியத்தின் தாயின் பெயர் யாது?

(உ) "உலகில் ஒரே ஒரு மனைவியை உடையவன், சகோதர வாஞ்சையுடையவன், வீரமிகு போர் முறைக்கும், வேத முறைக்கும், நேர்மைக்கும், மநு நூல் நெறிக்கும், பொறுமைக்கும், உண்மைக்கும் உரித்துடையவன் அரிச்சந்திரன் என்னும் அரசனே!"

(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்குக் கூறப்பட்டது?
(iii) எச் சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?
(iv) அரிச்சந்திரனின் மனைவியின் பெயர் யாது?

2. பின்வரும் செய்யுள்களின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி, அவை ஒவ்வொன்றிலும் கோடிட்ட பகுதிகளில் உள்ள தொடர்களின் சிறப்புகளை விளக்கி எழுதுக.

(அ) "பாவியேன் மகனே" என்பள் பதைப்பள் மேன்முகத்தில் மோதித்
தாவியே விழுவள். நின்று தயங்கியே மயங்கி வீழ்வள்.
காவியங் கண்ணீர் பாயக் கதறுவள்; பதறி ஏங்கி
ஆவியைத் தேடித் தேடி அலமரும் உடலம் ஒத்தாள்.

(ஆ) பெருகுவானம் பிறங்க மழை பொழிந்
தருகு நாப்பண் அறிவருங் கங்குல் தான்
கருகு மையிருளின் கணம் கட்டுவிட்
டுருகுகின்றது போன்றதுலகெலாம்.

(இ) இயற்கையின் அசைவு தோறும்
இன்பத்தை நுகரலாம். விண்
வயல்களில் உலக வாழ்வின்
மறைபொருள் தெளியலாம். நம்
அயலவர் துயரில் பங்கும்
அடையலாம் எனிலோ, வாழ்வின்
கயமைகள் கழிய நாமோர்
காவியம் பாடலாமே.

(ஈ) மனத்திடையுன்னு முன்னர் வான்றிசை பறக்கும்பாய்மா
விரைத்தென வளவிலாது மள்ளர்களிரைப்புந் திண்ண
வனத்தடக் களிறுஞ் சேனை மறிதிரை முழக்கமச்ச
மனைத்தையும் கொண்ட வெள்ளமணி நகர் படர்ந்தநன்றே.

(உ) மறிப்புண்ட தேவர் காண மணிவரைத் தோளின் வைகும்
நெறிப்புண்டரீக மன்ன முகத்தியர் முன்னே நெல்னல்
பொறிப்புண்டரீகம் போலும் ஒருவனால் புனைந்த மௌலி
பறிப்புண்டும் வந்திலாதான் இனிப்பொரும்பான்மை உண்டோ.

3. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.
(அ) துஷ்யந்த மன்னனின் குணவியல்புகள்.
(ஆ) நமுறூதை வெற்றி கொண்ட இபுறாஹிம் நபி வீடு திரும்பிய காட்சி.
(இ) முடியாத கதைகள் என்ற சிறுகதையில் வரும் பொன்னம்மா என்ற பாத்திர வார்ப்பு.

4. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினுக்கு விடை தருக.
(அ) கதீஜா நாயகியைப் பற்றி நபிகள் நாயகம் உரைத்தவை - விரித்துரைக்குக.
(ஆ) அறிவுடை நம்பி அளித்த தீர்ப்பு - விளக்குக.
(இ) மழைப்பாட்டில் இறைவனைப் புலவர் இறைஞ்சும் முறை - விளக்குக.

● 5, 6, 7 ஆகியவற்றுள் ஏதேனும் ஒரு வினாவுக்கு விடை தருக.

5. (அ) "இராவணன் சிறந்ததோர் இராஜதந்திரி என்பது அவன் அங்கதனை தன்வயமாக்கக் கூறிய கருத்துக்கள் மூலம் வெளிப்படுத்துகின்றது" விளக்குக.
(ஆ) "இராமன் கூறியதாக அங்கதன் இராவணனிடம் கூறிய உரையை" விபரிக்குக.

6. இனியவை நாற்பது என்ற செய்யுட்பகுதியில் பின்வருவன தொடர்பாக ஆசிரியர் பூதஞ்சேந்தனார் குறிப்பிடுவதை விளக்குக.
(அ) இரவாது ஈதல் (ஆ) நல்ல செயல் (இ) செய்ந்நன்றி

7. (அ) பாம்பு தீண்டி இறந்த மகனைக் கண்டதும் சந்திரமதி அடைந்த அவல நிலையை விபரிக்குக.

(ஆ) மைந்தனின் உடலைத் தகனஞ் செய்ய முற்பட்ட சந்திரமதி எதிர்நோக்கிய துன்பநிலையை விளக்குக.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரணதர)ப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும் I

மாதிரி வினாத்தாள் - 3 - விடைகள்

01. 2	11. 4	21. 2	31. 1
02. 4	12. 4	22. 1	32. 4
03. 1	13. 4	23. 4	33. 2
04. 1	14. 3	24. 4	34. 4
05. 3	15. 1	25. 2	35. 3
06. 2	16. 1	26. 1	36. 1
07. 4	17. 2	27. 3	37. 3
08. 1	18. 3	28. 1.	38. 2.
09. 2	19. 3	29. 2	39. 4
10. 2	20. 2	30. 2	40. 1

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும் II

மாதிரி வினாத்தாள் - 3 விடைகள்

i. (அ) கடற்கரையில் ஓர் உதயப் பொழுது

"கூரிருளகன்றது கூவின கோழி
குருவிகளெழுந்தன மறைந்தன விண்மீன்
ஏரியிற்றாமரை இன்மலர்மலரும்
இறையவன் கோவலில் மணியொலி கேட்கும்
ஊரினிற்றொழில் புரி மாந்தர்கள் எழுந்தார்
உயர்மரக் கொம்பு விட்டோடின காக்கை
சேர்கிழக்கெனுந் திசை வெளுத்தது மெல்லச்
செங்கதிரவனுதயஞ் செய்கிறானே"

என அழகாகக் காலைக்காட்சியைச் சோமசுந்தரப்புலவர் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

காலை நேரத்தில் சீதளக் காற்று வீசுகின்றது. நீலக்கடல் நீண்டு கிடந்து அலை மேல் அலையாக மோதி வருகின்றது. இது கண்கொள்ளாக்காட்சியன்றோ! கீழ் வானில் மெல்ல மெல்ல செவ்வொளி படருகின்றது. அதனோடு பல நிறங்கள் கலந்த அழகிய சித்திரக் காட்சி அங்கே தோன்றுகின்றது. அடிவானமும் கடலும் பின்னிப்பிணைகின்றன. கடலின் அடிவயிற்றிலிருந்து முற்றிலும் சிவந்த பந்து ஒன்று வானத்தில் மெல்ல மெல்ல எழுகின்றது. சூரியப் பந்து கடலிலிருந்து முற்றாக விடுபட்டு வானத்தில் பூரண ஒளி காலத் தொடங்குகின்றது. கடல் முழுவதும் சூரிய ஒளி படர்ந்து கரையிலும் அப்பாலும் ஒரே ஒளிமயமாகிவிட்டது. வானத்தில் சுடர் ஒளி விட்டுப் பிரகாசிக்கின்றது.

உயிரினங்கள் தமது பெயருக்கு அமைவாக உயிர்ப்படையத் தொடங்கி விடுகின்றன. கடலின் தொலைவில் சிறுசிறு புள்ளிகளாகத் தோன்றிய படகுகள் இப்பொழுது தமது உண்மை உருவங்களைப் புலப்படுத்திய வண்ணம் விரைந்து கரை நோக்கி வருகின்றன. மீனவர்கள் மீன்பிடித்து முடித்துத் திரும்பி வருகின்றனர். நேற்றிரவு உயிர்ப்புடன் உலாவி வந்த மீன்கள் இப்பொழுது செயலற்றுச் சடமாகியுள்ளன. மீனவர்களின் பாடல் ஒலி கடலைக்கடந்து கரையிலும் அலை பாய்கிறது. சிறிது சிறிதாக அவர்களின் மனைவிமாரும் தங் கணவர்கள் வருவதை எதிர்பார்த்துக் கரையில் மொய்க்கிறார்கள். அவர்களின் இரைச்சலில் மீனவரின் பாடல்கள் அமுங்கி விடுகின்றன. மேலும் மேலும் விற்போரும், கொள்வோரும் கரையை வந்தடைகின்றனர். படகுகள் கரையடைகின்றன. வலைகளும மீன்களும் கரையில் இறக்கப்படுகின்றன.

சூரியன் செம்பஞ்சுக் குழம்பின் சிவப்பு குறைந்து வெண்மைக் கோலத்தில் வானத்தில் தனது பவனியை ஆரம்பிக்கிறது. இளவெயில் மறைந்து உடலை உபாதிக்கும் வெம்மை வாட்டத் தொடங்குகின்றது. ஆதவனின் ஒளியால் மரம் செடிகொடிகளும் நீர் நிலைகளும் பொன்னொளி பட்டுச் சிரிக்கின்றன. சோலைகளிலே பலவகை மலர்கள் மலர்ந்து ஆதவனை வரவேற்கின்றன.

"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" காலை இனியது கதிரவன் இனியவன். "சூரிய பகவானே வருக, வருக, விரைந்து வருக" என்று சேவல்கள் சிறகடித்துக் கூவுகின்றன. கடலன்னை சூரிய ஒளியை உள்வாங்கிக் கொண்டு வெள்ளிப்பாள அலைகளாகக் கரையில் வந்து மோதி மோதிச் செல்கின்றது.

(ஆ) பேராசிரியர் க.கைலாசபதி

கண்ணியம் மிக்க தமிழ்க்குடும்பம் ஒன்றில் கனகசபாபதி என்பவரின் முதன் மைந்தராய் மலேசியாவில் 1933 இல் கைலாசபதி பிறந்தார். பின் யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தம் கல்வியைத் தொடர்ந்து சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையிலே தேர்வு பெற்றார். கொழும்பு றோயல் கல்லூரியில் பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சையை எழுதினார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமது உயர் கல்விப்படிப்பை மேற்கொண்டார். தமிழைச் சிறப்புப் பாடமாகத் தெரிந்தார். கலைமாணிப்பட்டத் தேர்வில் முதல் வகுப்பில் தேறினார். மாணவராய் இருந்த காலத்தில் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதி வந்தார். வானொலிக் கலைஞராய் வானொலி நாடகங்களிலும் பங்கு கொண்டார். பேராதனைப் பல்கலைக்கழகக் கலை அரங்கிலும் நடிகராய்த் தம் திறமையைப் புலப்படுத்தினார்.

1956 தொடக்கம் ஐந்தாண்டுகள் கைலாசபதி தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராய் பணிபுரிந்தார். ஈழத்து எழுத்தாளர்களின் ஆக்கங்கள் தினகரன் வாரமஞ்சரியில் வெளிவந்தன.

முற்போக்கு இலக்கியத்துக்கு உந்து சக்தியாய் விளங்கினார். ஆய்வுக் கட்டுரைகள், திறனாய்வுக கட்டுரைகள் என்பவற்றை எழுதித் தம் அறிவாற்றலை வெளிப்படுத்தினார். 1962 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளரானார். இது தமிழை உயர்கல்விப்பாடமாய்க் கற்ற மாணவர்க்குப் பெரும் பேறாவமைந்தது. அமைதியாக ஆய்வுகள் நடத்தி நூல்கள் எழுதினார். விரிவுரையாளராய்ப் பதவி வகித்துக் கொண்டு முதுகலை மாணிப்பட்டமும் பெற்றார்.

பின்பு இங்கிலாந்து சென்று பேர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் பழந்தமிழ் இலக்கியத்தைக் சிரேக்க மொழியோடு ஒப்பிட்டு ஆய்வு நிகழ்த்தினார். அவரின் ஆய்வு "தமிழ்வீரயுகக் கவிதை" எனும் ஆங்கிலப் பெருநூலாய் அமைந்தது. இதன் பயனாகக் கலாநிதிப்பட்டமும் அவருக்குக் கிடைத்தது. பின்பு இலங்கை திரும்பினார். பேராதனை, கொழும்பு, களனிப் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராய்ப் பணி புரிந்தார். 1974ல் யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம் அமைக்கப்பட்ட போது அதன் முதலாவது உபவேந்தர் ஆனார். யாழ்பல்கலைக்கழக நூலகத்தை இன்றைய நிலைக்கு உயர்த்தியவர் அவரே. மூன்றாண்டுகள் உபவேந்தராகப் பணி புரிந்தார். பின் கலிபோர்ணியாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் ஓராண்டு அதிதி விரிவுரையாளராய் விளங்கினார். பின் குடும்பத்தாருடன் சீனாவுக்கு விஜயம் செய்தார்.

பண்டைத் தமிழரின் வாழ்வும் வழிபாடும், இலக்கியமும் திறனாய்வும், ஒப்பியல் இலக்கியம், இருமகாகவிகள், தமிழ் நாவல் இலக்கியம் போன்ற நூல்களை எழுதினார். இத்தகைய பல் துறை விற்பன்னரான கைலாசபதி அவர்கள் தனது நாற்பத்தொன்பதாவது வயதில் 05-12-1982 அன்று அமரரானார். இது தமிழ் கூறும் நல்லுலகிற்குப் பேரிழப்பாகும். அவரது பூதவுடல் மறைந்தது உண்மையே எனினும் அவர் தமது நூல்களிலும், அறிஞர்கள் அன்பர்கள், மாணவர்கள் ஆகியோரின் உள்ளங்களிலும் என்றும் தம் புகழுடலால் வாழ்ந்து கொண்டிருப்பார்.

(இ) இருபத்தோராம் நூற்றாண்டில் உலகம்

இன்று நாம் இருபத்தோராம் நூற்றாண்டின் முதற் பகுதியில் காலடி எடுத்து வைத்துள்ளோம். இருபத்தோராம் நூற்றாண்டில் உலகம் ஒளிமயமாகத் தோன்றாது என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். குடிதொகை வெடிப்பு, எரிபொருட் பற்றாக்குறை, சூழல் மாசடைதல், உணவுப் பற்றாக்குறை, தொழில்வாய்ப்பு அருகுதல் முதலிய சிக்கல்கள் இந்நூற்றாண்டில் ஏற்படும். இவற்றுக்குத் தீர்வு காண வேண்டும். உலகம் ஒரே கிராமமாக ஒன்றுபட்டாலே இப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும்.

உயிர்ச்சுவட்டு எரிபொருள்களாகிய நிலக்கரி, உயிர்வாயு, பெற்றோலியம் போன்றவை இந் நூற்றாண்டில் வற்றிவிடும். காற்று, கடல் அலை, அணு, சூரியன் ஆகியவை வற்றாத ஆற்றல் வளங்களாக எங்கும் பரந்துள்ளன. உணவுப்பிரச்சினை சனத்தொகை அதிகரிப்பால் மோசமான நிலையையடைந்துள்ளது. பஞ்சம், பசி, பட்டினி போன்றவை தாண்டவமாடும். ஒவ்வொரு நாட்டினதும் பொருளாதாரக் கொள்கை நாட்டுக்குநாடு வேறுபடுகின்றது. அமெரிக்கா போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகள் மிகையுற்பத்தித் தானியமான கோதுமையைக் கடலில் கொட்டுகின்றது. இன்னும் எதியோப்பியா போன்ற போரினால் அவதியுறும் நாடுகள் பட்டினிச் சாவை எதிர்கொள்கின்றன. இந்நிலையைச் சர்வதேச தாபனங்கள் நீக்க வேண்டும்.

கடலில் எண்ணற்ற தாவர வளமுண்டு, நுண்ணங்கியிலிருந்து பேரங்கிகள் வரை கடலிலுள்ள பாசியினங்களைப் பயன்படுத்தி மனித உணவில் தன்னிறைவு காணலாம். ஆண்டு முழுவதும் மாற்றுப் பயிர் வேளாண்மை, அதிக விளைவு தரும் பயிர் உருவாக்கம், கடல்நீரை வேளாண்மைக்குப் பயன்படுத்தல், நீர் மேல் வேளாண்மை முதலிய பல முறைகளால் இருபத் தோராம் நூற்றாண்டில் பசுமைப்புரட்சி ஏற்படும். மனிதன் இன்று பூமியை விட்டு வானத்தில் சஞ்சரிக்கத் தொடங்கி விட்டான். விரைவில் அவன் கோள்களிலும் குடியேறலாம். அவற்றில் வாழலாம். சந்திரனில் மனிதன் குடியேறி வாழ்ந்தும் பார்த்து விட்டான்.

இருபத்தோராம் நூற்றாண்டில் நாம் கவலையில்லாது வாழலாம். வீட்டில் திருடன் வந்தால் அதைக் காட்டிக் கொடுக்கும் காப்புப்பெட்டியுடன் இணைக்கப்பட்ட கணனி வீட்டுக்கு மேடு வந்து விடும். உலகில் இன்று போர் மேகங்கள் எங்கும் சூழ்ந்துள்ளன. போர் ஒவ்வொருவர் வீட்டு வாயிற் படிக்கு வந்து விட்டது. இருபத்தோராம் நூற்றாண்டில் போரால் பாதிக்கப்பட்ட நமது நாட்டில் கூடச் சமாதான வெண்புறா பறக்கும் என எதிபார்க்கலாம். செயற்கை நுண்மதி கொண்ட கணனிகளால் தீமை ஏற்படவும் வழியுண்டு. இவை தீமை புரிவதை விடுத்து நன்மையைத் தோற்றுவிக்கும். எனவே நாம் மனங்களில் நல்ல வண்ணம் வாழ வேணடும். இதுவே இருபத்தோராம் நூற்றாண்டு காண விளையும் புதிய உலகமாகும்.

(ஈ) இலத்திரனியல் யுகத்தில் மனித வளர்ச்சி

பொருள்களில் நிகழும் மின்னோட்டத்தை அல்லது இலத்திரன் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தும் விஞ்ஞானத்துறை இலத்திரனியல் எனப்படும். இன்று எங்கும் எதிலும் இலத்திரனியலின் ஆட்சியே நிலவுகிறது. எனவேதான் இன்றைய காலகட்டத்தை "இலத்திரனியல் யுகம் என்கிறோம்" இன்று மனித வர்க்கம் அடைந்துள்ள வளர்ச்சிக்கு இலத்திரனியலே அடிப்படைக் காரணமாகும். இலத்திரனியல் யுகத்தின் பேறுகளில் ஒன்று "கணனி" மற்றும் "றோபோ"

இன்று கையடக்கமான கணிப்புப் பொறிகள் எல்லோரும் பயன்படுத்தக் கூடியதாகக் கிடைக்கின்றன. கணக்கிடுதல் என்பது மிகவும் சிக்கலான அலுப்புத்தரும் விடயமாகும். கணிப்பு பொறிகள் கணநேரத்தில் கணிக்கும் வேலைகளைச் செய்து முடிக்கின்றன. ஆரம்பத்தில் வால்வுகள், டிரான்ஸ்சிஸ்டர் மூலம் இலத்திரன்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இவற்றுக்கான சுற்றுக்களை ஏற்படுத்துதல், வெப்பக்கட்டுப்பாடு என்பன சிக்கலாக இருந்தன. எனவே வளர்ச்சி துரிதமாக ஏற்படவில்லை. அரைக் கடத்திகளாகிய சிலிக்கன் துண்டங்களைப் பயன்படுத்தி ஒருங்கிணைந்த மின் சுற்றுக்கள் அமைக்கப்பட்டன. இவை கணனிகளின் அளவை மிகவும் சுருக்கி விட்டன. இதனால் நுண் கணனிகள் உருவாகின. இவற்றை எல்லா வகைக் க[illegible]களிலும் எல்லாப் பணிகளுக்கும் பயன்படுத்த வழி பிறந்ததால் மனிதன் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி கண்டான்.

ஆரம்ப காலக் கணனிகள் கணக்கிட்டு விடைகளை அறிவிக்கக் கூடியனவாக இருந்தன. அவை நினைவு வைத்துக் கேட்கும் போது விடை தரக் கூடியனவையாக இருக்கவில்லை. நினைவாற்றற் கணனிகள் உருவான போது இது சாத்தியமானது. அச்சிடும் பொறி இணைக்கப்பட்ட போது அவை தகவல்களை அச்சிட்டு வெளியிட்டன. பேசும் கருவி இணைக்கப்பட்ட போது அவை வினாக்களுக்குப் பதில் கூறின. வரைபடங்களை வரையவும், புகைப்படங்களை வழங்கவும் கணனிகள் பயன்பட்டன. இவ்வாறு கணனியால் மனித வளர்ச்சியின் வேகம் பல மடங்கு அதிகரித்தது.

இன்று இலத்திரனியல் ஆகாய வெளியிலும் செல்வாக்கு செலுத்தி வருகின்றது. போக்கு வரத்து, செய்திப்பரிமாற்றம், காலநிலை ஆய்வு முதலிய ஆய்வுகளுக்குச் செயற்கைக் கோள்கள் பங்களிப்பை நல்கி வருகின்றன. இவை மனித இனத்தின் உடனடி வளர்ச்சிக்கு உதவியாக வுள்ளன.

மருத்துவத் துறையிலும் இலத்திரனியல் செல்வாக்கு செலுத்தியுள்ளது. லேசர் எனப்படும் ஒரு வகைக்கதிர் "கத்தியின்றி இரத்தமின்றி" அறுவைச் சிகிச்சை செய்து முடித்து விடுகின்றது. ஸ்கேனிங் எனப்படும் கருவி மனித உடலில் உள்ளுறுப்புகளிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து உதவுகின்றது. ஒரே கணத்தில் உடலின் குறைகளை உடனுக்குடன் அறிந்து அறிவித்து மருத்துவக் கட்டளைகளை வழங்கி உயிரைக் காக்கும் அமுதமாக இலத்திரனியல் வளர்ந்து வருகின்றது. சங்கடமான சமையல் முதல் சந்திரப்பயணம் வரை இலத்திரனியற் கருவிகளின் ஆட்சி நிலவுவதை மேல் நாடுகளிற் காண்கிறோம். இவ்வாறு இலத்திரனியல் துறை மனித வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்துகிறது.

2. (அ) காணிச் சட்டத்தினால் உடைமையாகும் நிலத்தைச் சீர் திருத்த அரசு, கிராமங்களுக்கு ஆலோசனையும் கடன் வசதிகளும் வழங்குகிறது. உணவுற்பத்தியில் தன்னிறைவு காண அரசுக்கு ஆதரவு தரும்படி காணி அமைச்சர் கூறியுள்ளார்.

(ஆ) தமிழ் மொழியிலே உரைநடை இலக்கியம் வளர்ச்சி பெற்று எளிமையான வகையில் கருத்தைத் தெரிவிக்கும் காலம் இருபதாம் நூற்றாண்டாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே ஆங்கிலக் கல்வி தமிழகமெங்கும் அறிமுகமாயிற்று.

3. (1) கிரேக்கர்கள், ரோமர்கள், சீனர்கள், எகிப்தியர்கள்.
(2) புற்கள், புடைவைகள், முத்துக்கள், பவளங்கள்.
(3) மஸ்லின்
(4) சங்ககாலத்தில் எழுந்த நூல்கள் ஆகும். கி.மு 1000 இல் சாலமன் மன்னனுக்குத் தமிழ்வேந்தன் மயில், குரங்கு, சந்தனக்கட்டைகளை அனுப்பி வைத்தான்.
(5) கிரேக்கர், ரோமர்

4.

"புலம்பெயர் இலக்கியம்"
நூல் வெளியீட்டுவிழா அழைப்பிதழ்

காலம்	:	12.09.2001 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி
இடம்	:	குணரத்தினம் மண்டபம் நெல்லியடி மத்தியமகாவித்தியாலையம்
தலைவர்	:	திரு. நிஷான் மரியநாயகம்
பிரதம விருந்தினர்	:	பேராசிரியர் க. சந்திரலிங்கம் (நுண்கலைப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்.)
நூல் அறிமுகவுரை	:	பண்டிதர் இ. வடிவேலு
முதற்பிரதி பெறுபவர்	:	திரு. லகாரி யோகநாதன் (சுங்க அத்தியட்சகர்)
நூல் ஆய்வுரை	:	வித்துவான் சி. சிவப்பிரகாசம்
சிறப்புரை	:	செல்வி. தர்மினி விஜயரத்தினம் (தமிழ் விரிவுரையாளர். யாழ்பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தமிழ்மன்றம்,
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்,
நெல்லியடி.
02.09..2001

தி. அரவிந்தன்
செயலாளர்.

கல்விப் பொது தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும் III

மாதிரி வினாத்தாள் – 3 – விடைகள்

1. (அ) (i) துஷ்யந்தனால்
(ii) சார்ங்கரவனுக்கு
(iii) அரசே! மௌனமாக இருக்காது இப்பொழுதாவது ஒப்புக் கொள்கிறீர்களா? எனத் துஷ்யந்தனைப் பார்த்து சார்ங்கரவன் கேட்ட போது கூறப்பட்டது.
(iv) சகுந்தலை

(ஆ) (i) அங்கதனால்
(ii) இராவணனுக்கு
(iii) "அனுமன் இராவணனின் புதல்வனைச் சாந்து போல் அரைத்து இலங்காபுரியை எரியூட்டிக் கடலைக்கடந்து சென்றதைப் பார்ததுக் கொண்டிருந்த இராவணன். அதை எதிர்ததுப்போர் செய்யாதவன், இனிமேலும் வருவானோ" என்று இராமன் கூறியதாக அங்கதன் கூறியது.
(iv) அட்ச குமாரன்

(இ) (i) நன்னனால்
(ii) பூங்குன்றன், இளநாகன் இருவருக்கும்
(iii) நன்னன் வழங்கிய தீர்ப்பை இருவரும் ஏற்றுக் கொள்ளாதநிலையில் நன்னன் கூறியது.
(iv) திருமாவளவன்.

(ஈ) (i) வேலாயுதத்தால
(ii) பாக்கியத்துக்கு
(iii) பாக்கியம் தேநீரை மாமாவிடம் நீட்டி வேளையில்
(iv) பொன்னம்மா

(உ) (i) வசிட்டமுனிவரால்
(ii) தேவேந்திரனுக்கு
(iii) இந்திரனது அவையிலிருந்த முனிவர்களை நோக்கி
(iv) சந்திரமதி

2. (அ) பாவியாகிய என் மகனே என்பாள். மனம் துடிப்பாள். தனது மென்மையான முகத்திலே அடித்துக் கொண்டு தாவி விழுவாள். நின்று மனம் தயங்கி மயங்கி விழுவாள். குவளை மலர் போன்ற கண்களிலிருந்து கண்ணீர் சொரியக் கதறி அழுவாள். மனம் பதறி வருந்தினாள். உயிரைத்தேடி வருந்துகின்ற உடல் போலிருந்தாள்.
ஆவியைத்தேடி : சந்திரமதியின் உடலில் உயிர் இல்லை. தன் மகன் கிடக்கின்ற [illegible]த்துக்கே போய் விட்டது. வெற்றுடம்பு தான் அலைந்து, பதைத்து, மயங்கி எழுந்து [illegible]கின்றது. உயிரும் இல்லை உணர்வும் இல்லை.

(ஆ) அப்போது வானவெளியில் பெருமேகங்கள் மிகவும் அதிகமாக மழையைப் பொழிந்தன. அதனால் வழியின் ஓரம், நடு இடம் இது என்று அறிவதற்கு இயலாதபடி இருண்ட நள்ளிரவானது. கருகிய மை போன்ற இருட்கூட்டம் தனது செறிவு விட்டு நீங்கி உலகம் முழுவதும் உருகி ஒடிப்பரவியது போன்று இருள் சூழ்ந்து விளங்கியது.
கருகுமையிருளின: மை போன்ற கருமைச் செறிவுடைய இருட்கூட்டம், நாயனார் நெல் வாரி வருதற்குப் புறப்பட்ட அந்த நேரத்தில் சூழ்ந்த கட்டியான இருள்

(இ) இயற்கையின் நிகழ்வு எல்லாவற்றிலும் மகிழ்ச்சியைத் துய்க்கலாம். ஆகாய வெளியில் உலக வாழ்வில் மறைந்து விளங்கும் தூக்கும நிகழ்வுகளையும் அவற்றின உட்பொருளையும் நன்கு அறிந்து தெளிவு கொள்ளலாம். நமது சுற்றத்தவரின் துயர நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளலாம். இவ்வாறு நாம் நடந்து கொள்ளும் பண்பினைப் பெறவேண்டுமாயின், நமது வாழ்வில் நிலவும் கீழான தன்மைகள் அனைத்தும் நீங்க வேண்டும். அதற்காக நாம் எல்லோரும் ஒன்றுபட்டு இக் கீழ்மைத்தனங்கள் அகல மகிழ்ச்சியுடன் காவியம் பாடுவோம்,
கயமைகள் கழிய: நம்மிடம் காணப்படும் கயமைக்குணங்களை நீக்கினால் தான் வாழ்வில் மகிழ்வு மலரும். வாழ்வில் மகிழ்வு இருந்தாலே காவியம் பாடலாம். இதற்காக நமது வாழ்வில் நிலவும் கயமைத்தனமான செயல்களை ஒழித்து, மகிழ்வுடன் வாழ முற்படுவோம்.

(ஈ) மனதில் நினைத்தவுடன் ஆகாயத்தின் மீது பாய்ந்து பறந்திடும் குதிரைகள் இவ்வளவென்று அளவிட முடியாது. வலிமையான பெரிய அழகிய முகபடாம் அணிந்த யானைகளின் கூட்டமும், படைவீரர்களின் கடல் அலை போன்ற ஓசையும் பயத்தை விளைவிக்கும் வண்ணம் அழகிய நகரைச் சூழ்ந்து கொண்டது.
மனத்திடையுன்னுமுன்னா: மனதில் நினைக்குமுன் வானத்தை நோக்கிக் குதிரைகள் பறக்கும். குதிரைகளின் வேகத்தைக் குறிப்பதற்கு இவ்வாறு குறிப்பிடப்பட்டது.

(உ) "தன்னால் சிறையில் அடைக்கப்பட்ட வானவர் காணவும் திரிகூடமலையின் தாழ்வரையிலே தங்கியுள்ள கட்டுவிட்டு அலரப் பெற்ற தாமரையைப் போன்ற முகத்தையுடையவரான தேவப் பெண்களுக்கு எதிரிலும், உடலில் புள்ளிகளையுடைய புலியைப்போன்ற வலிமையுடைய சுக்கிரீவனால் தான் அணிந்திருந்த முடி பறிக்கப்பட்டும் அந்தச் சுக்கிரீவனைத் கொல்லாமல் விட்ட இராவணன் இனிமேல் போர் செய்யப்போகிறானோ"? என இராமன் சொன்னதாக அங்கதன் இராவணனுக்குக் கூறினான்.
நெறிப்புண்டரீகமன்ன.... கட்டுவிட்டு அலரப் பெற்ற தாமரை மலரைப் போன்ற முகத்தையுடையவர். தேவலோகப் பெண்கள் உவமைத்தொடர், இங்கு உவமானம் - தாமரைமுகம், உவமேயம்- தேவமகளிர்முகம், பொதுத்தன்மை - அழகு, உருபு - அன்ன.

3. (அ) துஷ்யந்த மகாராஜா அத்தினபுரத்து அரசன். இவன் வேட்டையாடச் சென்ற பே து கண்ணுவ முனிவரது ஆச்சிரமத்தில் வளர்ந்த சகுந்தலையைக் காந்தருவ மணஞ் செய்து கொண்டான். அதன் நினைவாகத் தனது நாமம் பொறிக்கப்பெற்ற கணையாழியைச் சகுந்தலையின் கையில் அணிவித்துச் சென்றான். துருவாசமுனிவரின் சாபத்தால் சகுந்தலையை மறந்தான். இவன் பெரியோரை மதிக்கும் பண்புள்ளவன். நீதி தவறாதவன. கண்ணுவமுனிவரின் ஆட்கள் வந்திருக்கின்றார்கள் என்று வாயிற் காவலர்கள் கூறியதும் அவர்களை உடனே அழைத்துப் பேசினான். அதே வேளை சகுந்தலையை ஏற்க மறுக்கிறான். அவன் கிண்டலாகப் பேசிய வார்த்தைகள் அவனது மன மயக்கத்தினாலே ஏற்பட்டது. கணையாழியைக் கண்டதும் பழைய

நினைவுகள் மீண்டும் தோன்றியது. அப்பொழுது அவனடைந்த துன்பம் அளவிடற்கரியது. சகுந்தலை மீது அவன் கொண்ட உண்மையான அன்பும் எல்லையற்றது. காதல், அன்பு, வீரம், ஆண்மை, இரக்கம் ஆகிய பண்புகளை ஒருங்கேயுடையவன் துஷ்யந்தன்.

(ஆ) வானத்திலுள்ள தேவர்கள் எனப்படும் மலக்குகள் வாழ்த்துப் பாடினர். அக்கம் பக்கத்தில் இறைவனைத் தொழுது கொண்டிருந்தவர்கள் வாழ்த்தினர். காட்டிலுள்ள விலங்குகள், பறவைகள், கணக்கற்ற உயிர்கள் வாழ்த்திப் போற்றினர். இப்றாஹிம் நபி வெற்றி வாகை சூடி தீன் என்ற முழக்கத்தோடு தமது வீட்டினுள் புகுந்தார். தேவர்கள், மனித உயிர்களின் வாழ்த்தைப் பெற்றவர் நபி அவர்கள். இறைவனுக்கு விரோதமாக செயற்பட்டவன் நமதுறூ மன்னன். நபி அவர்கள் இறை இருளுடன் இவனைத் தோற்கடித்தார். தீன் என்ற முழக்கத்துடன் வீடு திரும் பினார். நபி அவர்களின வெற்றி எல்லாம் வல்ல இறைவனின் விருப்பப்படியே நிகழ்ந்தது.

(இ) பொன்னம்மா இந்தியாவிலிருந்து கணவனின் விருப்பின் பேரில் இலங்கைக்கு வந்தாள். இரக்க சிந்தனையும், சகோதர பாவமும் மிக்கவள். அவள் மனதில் காணப்பட்ட சில எதிர்பார்ப்புகள், ஆசைகள் அவளை இங்கே வரச் செய்து விட்டன. வரும் போது தனது தம்பி வேலாயுதத்தையும் கூட அழைத்து வந்தாள். இவளுக்கு இரு பிள்ளைகள் மூத்த மகளைத் தன் தம்பி வேலாயுதத்து க்குத் திருமணம் செய்து கொடுத்து விட்டாள். தம்பிக்கு வாரிசு இல்லை என மனம் நோகின்றாள். இந்தியாவிலிருந்து நல்ல கெட்ட நிகழ்ச்சிகளைக் குறிக்கும் செய்திகள் வந்து சேர்கின்றன. தான் இந்தியாவுக்கு மீண்டும் போக முடியவில்லை என்ற ஏக்கம் அவள் மனதை வாட்டுகின்றது. மீதியுள்ள தன் உறவினரைத் தான் இறப்பதற்கு முன் பார்த்து விட வேண்டும் என்ற அவாவில் தவிக்கிறாள். தம்பி வேலாயுதத்தை இந்தியன் ஹைகமிசனர் அலுவலகத்துக்குச் சென்று தான் இந்தியா செல்ல விரும்பும் அலுவலைச் செய்யுமாறு நச்சரிக்கிறாள். அவளது இறுதி ஆசை நிறைவேறாமலே இறந்து போகின்றாள். இவ்வாறு பொன்னம்மா என்ற பாத்திரம் மலை யகத் தோட்டத்தொழிலாளரின் துன்ப நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது.

4. (அ) "கதீஜாவை விடவும் எனக்கு அன்பான உதவியாளர் கிடையாது. நான் ஏழையாயிருந்தேன். அவர் என்னைச் செல்வன் ஆக்கினார். எதிரிகள் என்னைப் பொய்யன் எனத் தூற்றியபோதும் என்னை மிகவும் நம்பினார் உலகத்தவரெல்லாம் என்னை எதிர்தனர். ஆனால் அவர் என்னிடம் உண்மையான நட்புக்கொண்டார்" என்று நபிகள் நாயகம் அவர்கள் கதீஜா நாயகியின் பெருமைகளைப் போற்றிக் கூறியுள்ளார்.

(ஆ) "பூங்குன்றனார் தம் மகளின் திருமணத்துக்காக நிலத்தை விற்றிருக்கிறார். இளநாகனார் தம் மகன் உழைத்துப் பொருளீட்ட வேண்டும் என்பதற்காக நிலத்தை வாங்கியிருக்கிறார். உயர்நத பண்புடைய நீங்கள் இருவரும் உறவினர்கள் ஆவதற்கு உங்கள் மகளுக்கும் இவர் மகனுக்கும் திருமணம் செய்து வையுங்கள். திருமணப்பரிசாக இந்தப் புதையலை அவர்களுக்கு வழங்கி விடுங்கள்." இதுவே அறிவுடை நம்பி வழங்கிய தீர்ப்பாகும்.

(இ) மழைப்பாட்டில் இறைவனின் பெருமையைப் புலவர் விளிக்கின்றார். பூமியிலுள்ளவர்களின் உள்ளங்களில் பதியும் வண்ணம் பாடியுள்ளார். ஆசிரியர் சொர்னகவி நெய்னா முஹம்மது பாவாப்புலவர். ஆதிநாயகன் அருள் வேண்டி மழை வேண்டி குறையிறைஞ்சிப் பாடப்பட்டது. இறைவனை மாசற்ற மாணிக்கமாகவும், நாயகனாகவும் சுட்டுகிறார். இறைவன் உயிர்கள் எல்லாவற்றுக்கும ஒப்பற்ற தலைவன் என நினைவூட்டுகிறார். இறைவன் தீங்கற்ற உருவமாக விளங்குபவன். அனைவருக்கும் நன்மையை செய்பவன் எனக் குறையிறைஞ்சுகிறார். குறை வில்லாத கேடற்றவன் எமது தலைவன் அவன் எப்பொழுதும் அனைவரையும் காப்பவன் குறைவில்லாதவன் என்க் குறையிறைஞ்சுகிறார். பழைமையானவன், ஆதி நாயகன் செஞ்சொல் திருமறையின் பொருளாய் வளரும் செல்வமாய் விளங்குகிறான். இறைவன் உருவமற்றவன், காண்பதற்கு அரியவன் நமது தலைவன் எனக் குறையிறைஞ்சுகிறார். இஸ்லாமியக் கடவுட் கோட்பாட்டைப் பின்பற்றி விளித்து இறைஞ்சுகிறார்.

5. (அ) "உன் தந்தை வாலி எனது நண்பன். வாலியின் மகனாகிய நீ இராமனுக்குத் தூதுவனா என்னிடம் வருகை தந்தமை பழிப்புக்கிடமான செயலல்லவா? நீ என் மகன் போன்றவன். நீ வானரம். நான் அரக்கன். இராமன் மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவன். நீ இராமனின் நட்பை விட்டுவிடு. நான் உன்னை வானரப்படைக்குத் தலைவன் ஆக்குகிறேன். இராமன் உன் தந்தை வாலியைக் கொன்றவன். நீ அவன் பின் செல்லாதே. உன்னை உலகம் தோற்றும் நீ அவன் பின் இருகையைத் தலைமேல் வைத்துக் கொண்டும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டும் செல்லாதே. உன்னை அறிவிலி என்று பிறர் சொல்லுமாறு வாழாதே. அப்பொழுது நானும் சீதையை அடைவேன். உன்னை மகனாக அடைவேன். அந்த மனிதர் இன்று அல்லது நாளைக்கு அழிவர் என்பதில் ஐயமில்லை. உலகம் அழியும் வரை பொன்னாலான அரியாசன த்தில் வானவர்கள் போற்ற ஆட்சி செய்வாயாக. இப்போதே உனக்கு முடிதட்டுவேன்" என

அங்கதனிடம் இராவணன் தெரிவித்தான். அங்கதனைத் தன் வயமாக்க இராவணன் கூறிய கருத்துக்கள் மூலம் இராவணன் சிறந்ததோர் இராஜதந்திரி என்பது புலனாகிறது.

(ஆ) "சீதா தேவியை விட்டு விடு இல்லையேல் போர்க்களத்தில் உயிரைவிட்டு விடுக" என்று இராமன் கூறியதாக அங்கதன் இராவணனிடம் தெரிவித்தான். உன் பாட்டி தாடகை மாமன் சுபாகுவைக் கொன்ற போது நீ போரிட வரவில்லை. உனது தங்கை தூர்ப்பனகையின் காது, மூக்கினை இலக்குமணன் அறுத்த போது வராத நீ இனி மேலும் போர் செய்ய வரப்போகின்றாயா? அனுமன் என்பவன் கரன் முதவிய தம்பியர், சுற்றத்தவர், உன்மகன் அட்சகுமாரன் போன்றோரைக் கொன்ற போதும் நீ திரும்பி வந்து போர் செய்யவில்லை. இராமன் விபீடணனிடம் இலங்கை ஆட்சிப் பொறுப்பை அளித்தான். இராவணனது ஒற்றர்களுக்கு தன் படை வலிமையைக் காட்டினான். அவர்களது உயிரைப் போக்கவில்லை. தேவர்கள் தேவலோகப் பெண்கள் பார்த்திருக்கச் சுக்கிரீவனால் உனது முடி பறிக்கப்படடது. அப்பொழுது போர் புரியவராத நீ இனிமேலும் வரப்போகின்றாயா? ஒன்றில் சீதையை விட்டு விடு இல்லையேல் போர் புரிய வாயிலில் இருந்து புறப்பட்டு வரும்படி அங்கதன் இராவணனிடம் கூறினார்.

6. (அ) இரவாது ஈதல்: கற்றவர்களுக்கு முன் தான் கற்ற கல்வியைக் கூறுதல் மிக இனியது. கல்வியறிவில் மேம்பட்டவர்களைச் சென்று சேர்தல் சிறந்த மாட்சிமையுடைய பேரின்பம். எள்ளளவென்றாலும் பிறரிடம் இரக்காது தன்னிடமிருப்பதைக் கொடுத்தல் அதிகம் போற்றற்குரிய இன்பமாகும்.

(ஆ) நல்லசெயல: தம்மோடு நட்புள்ளோர்க்கு இனிய நல்ல செயல்களைச் செய்தல் இனிமையானது. தம்மோடு சேராதிருக்கும் பகைவருடன் நட்பாயிருத்தல் எல்லாவற்றிலும் மிகவும் இனியது. பற்பல உணவுப் பொருள்கள் உடையதாயும், பலர் காண்பதற்கு ஏற்றதாயும் மெய் காக்கும் வீரரோடு சேர்தலும் இனிமையானது.

(இ) செய்ந்நன்றி : ஒருவர் செய்த நன்றியை நன்குணர்ந்து வாழுதல் மிகவும் இனிமையானது. நீதி மன்றத்தில் பொய்ச்சாட்சி உரையாதிருப்பதும் இனிமையானது. தன்னிடம் அடைக்கலம் வைத்த பொருளை அபகரிக்காமல் இருப்பது செய்ந்நன்றி மிக்க செயல்களாகும்

7. (அ) அரவம் தீண்டி இறந்த மைந்தனைக் கண்ட சந்திரமதி ஓடினாள். மனம் முழுவதும் உருகினாள உடம்பு முழுவதும் கருகி வாடினாள் விறகு வைத்திருந்த ஆலமரத்தின் அருகே வந்தாள். கழுகுகளும், பேய்களும், நரிகளும் நெருங்கக் கூடிய கூட்டத்தின் நடுவே தன் மகனைக் கண்டாள். கதறி விழுந்தாள். தன் மகனின் உடலை மடிமேல் வைத்துக் தேவர்களும் மயங்கி விழும்படி வாய்விட்டு பெருஞ் சத்தமாய் அழுதாள். உன் தந்தை விடுவிக்க வரும் நாளில் எங்கே என் ஆசைமகன்? என்று கேட்டால் நான் என்ன பதில் கூறுவேன்? என்று புலம்பினாள். தன் கணவன் அரிச்சந்திரன் திரும்பி வரும் போது அவர் முகத்தில் நான் எப்படி விழிப்பேன்? நான் இருந்து என்ன பயன்? பேரிடி தாக்கிய மரம் போல வருந்தினாள். தன்னையும் மகனுடன் அழைத்துச் செல்லுமாறு யமனை வேண்டுகிறாள்.

(ஆ) அரிச்சந்திரன் இறந்தது தன் மகன் எனத் தெரியாமல் யாரோ இந்த இரவில் பிணம் சுடுகிறார்கள் என்று ஓடி வந்தான். தனக்குத் தர வேண்டிய கொள்ளித்துண்டும், காற்பணமும் தராது களவாக பிணத்தைச் சுடுகின்றாயே என்று ஏசினான். காலால் பிணத்தை எற்றி வீசினான். இதைக் கண்ட சந்திரமதி ஏக்கங் கொண்டாள். அரிச்சந்திரனின கால்களில் விழுந்தாள். வாய் பிதற்றினாள். தன்னிடம் பணம் இல்லை, எனக்குச் சுற்றமும் இல்லை. நான் பாவி, என் மகனைச் சுடத் தனியே வந்தேன். என்னிடம் வசதி இருந்தால் இந்த இருட்டில் சுடுகாட்டுக்கு வருவேனோ? எரிந்து போன குறைக்கட்டையில் மகனை ஏற்றி வைப்பேனோ? என்று கூறுகிறாள். சந்திரமதியின் கழுத்தில் அரிச்சந்திரன் மங்கல நாணைக் காண்கிறான். தனது தாலி புலையனுக்குத் தெரிந்து விட்டதே? என்று துடி துடித்தாள் என் கற்புக்குப் பங்கம் நேர்ந்து விட்டதோ? என வருந்தினாள். இத்தகைய துன்பங்களைச் சந்திரமதி சுடுகாட்டில் மகனை எரிக்க முற்பட்ட போது எதிர் நோக்கினாள்.

கல்வி பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும் I

புதியபாடத்திட்டம் - மாதிரி வினாத்தாள - 4

ஒரு மணித்தியாலயம்

• பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. "மேன்மைக் குலத்தொடும் பொற்புப்போம்." இங்கு பொற்பு என்பதன் கருத்து
(1) பொறுமை (2) கற்பு (3) அன்பு (4) அழகு

2. "எயில் கடந்து இலங்கை எய்தி ..." இங்கு எயில் என்பதன் கருத்து
(1) வேல் (2) மதில் (3) துயில் (4) பல்

3. சுவாமி விபுலாநந்தர் தமிழ் இலக்கண இலக்கியங்களில் மிகுந்த புலமை மிக்கவர் புலமை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
(1) பேதமை (2) மேன்மை (3) பூட்கை (4) கீழ்மை

4. தலைவனுக்கு தலைவி என்பது போல நிபுணனுக்கு
(1) நிபுணை (2) நிபுணி (3) நிபுணள் (4) நிபுணிச்சி

5. மல்ரி மீடியா (multi media) என்பதற்கான தமிழ்ச் சொல்
(1) ஊடகம் (2) கருவி (3) பல்லூடகம் (4) கீபோட்

• பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

6. உனது பத்துத்தலைகளும் ..... ஆகும்
(1) சின்னபின்னங்கள் (2) சின்னாபின்னங்கள்
(3) சின்ணாபின்னங்கள் (4) சிண்ணாபிண்ணங்கள்

7. விவசாய விரிவாக்க .....விவசாயிகளுக்குப் பல புதிய திட்டங்களை அறிமுகப் படுத்தியுள்ளது.
(1) ஆணைக்குழு (2) வாரியம் (3) செயற்குழு (4) விசாரணைக்குழு

8. தறிக்கப்பட்ட மரம் .....நிலத்தில் விழுந்தது.
(1) கலகலவென (2) பொறுபொறுவென (3) விறுவிறுவென (4) நெறுநெறுவென

9. அவனது கையெழுத்து வாசிக்க முடியாமல் ..... இருந்தது.
(1) தாறுமாறாக (2) பொடிப்பொடியாக
(3) கோணல்மாணலாக (4) அலுவல்நொருவலாக

10. மக்கள் ஆங்காங்கே .....காணப்பட்டனர்.
(1) கற்றைகற்றையாக (2) குவியல்குவியலாக
(3) கும்பல்கும்பலாக (4) கட்டுக்கட்டாக

• பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

11. அன்பு, வண்டு, மது, குளிர்ச்சி, ஆகிய பல பொருள்கள் உணர்த்தும் ஒரு சொல
(1) அளி (2) அற்பு (3) கீதம் (4) களி

12. பற்களின் கூட்டம் வரிசை என்பது போல வைக்கோலின் கூட்டம்
(1) கற்றை (2) கட்டு (3) குவியல் (4) சிப்பம்

13. காக்கையின் இளையது குஞ்சு எனபது போல கீரியின் இளையது
(1) குட்டி (2) குஞ்சு (3) கன்று (4) பிள்ளை

14. மாடுகள் பாதுகாப்பாகக் கட்டி விடப்படும் இடம்
(1) பட்டி (2) தொழுவம் (3) குடிசை (4) பந்தி

15 வாழையின் இளம் பிஞ்சு கச்சல் என்பது போல மாவின் இளம் பிஞ்சு
(1) குரும்பை (2) நுங்கு (3) வடு (4) மூசு

● பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

16. ''அன்பு குறைதல்" என்ற பொருள் தரும் மரபுத் தொடர்
(1) கண்ணழிதல் (2) கண்ணறுதல் (3) கண்ணிற்றல் (4) கண்ணடைதல்

17. குழந்தைப்பிள்ளைக்கும் குட்டி நாய்க்கும் இடங் கொடுத்தல் கூடாது. இடங் கொடுத்தல் என்ற மரபுத் தொடரின் பொருள்
(1) வசிக்க இடங்கொடுத்தல் (2) எதற்கும் இணங்கி நடத்தல்
(3) கண்டிப்பின்றி வளர்த்தல் (4) வறுமைப்படாது காத்தல்

18. "மணத்தவிசிலே மணமகள் சித்திரப் பாவை போல"
(1) ஆடாதசையாதிருந்தாள் (2) வாய்பேசாதிருந்தாள்
(3) சிங்காரித்திருந்தாள் (4) உயிரில்லாதிருந்தாள்

19 "இருதலைக் கொள்ளி எறும்பு போல" என்ற உவமைத் தொடரின் கருத்து
(1) இருதலைகளை உடைய கொள்ளி எறும்பு போல
(2) இப்பக்கமும் அப்பக்கமும் போய் அலைகின்ற கடியெறும்பு போல
(3) இருபுறமும் தீப்பற்றிய முருங்கஞ்செத்தல் போன்ற விறகின் உட்டுளைக்குள்ளே அகப்பட்டுத் தப்ப வழியின்றித் தவிக்கும் எறும்பு போல
(4) இருபுறமும் தீப்பற்றிய விறகுக்கு இடை நடுவிலே அகப்பட்ட எறும்பு போல

20. "பின்னுக்கு வரப்போகும் அபாயத்தை முன் யோசனையோடு தடுக்க முயல வேண்டாம்" என்னும் கருத்துள்ள பழமொழி
(1) வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும்.
(2) அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
(3) ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திற் கண்ணாயிரு.
(4) கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரமா?

● பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

21. "ஆதிபகவன் முதற்றேயுலகு" என்னுந் தொடரில் ஏகார இடைச் சொல்லின் பொருள்
(1) வினா (2) தேற்றம் (3) எதிர்மறை (4) பிரிநிலை

22. பகுபதத்திலே எதிர்ச்சொல்
(1) விகுதியாய் நிற்கும். (2) இடைநிலையாய் நிற்கும்.
(3) பகுதியாய் நிறகும். (4) சாரியையாய் நிற்கும்.

23. சொற்களைப் பிரிக்கும் வகையாய் இரு வேறு பொருள் கொள்ளக்கிடக்கும் ஒருதொடர்
(1) அம்பனாறும் (2) வெண்டலை (3) கானகம் (4) பொற்குடம்

24. அறுசுவை என்பது
(1) உம்மைத்தொகை (2) உவமைத்தொகை
(3) வேற்றுமைத்தொகை (4) பண்புத்தொகை

25. பனையாலே விழுந்தவனை மாடேறிமிதித்தது. இதில் "பனையாலே" என்பதில் மயங்கிய உருபு யாது?
(1) இரண்டாம் வேற்றுமையுருபு (2) மூன்றாம் வேற்றுமையுருபு
(3) ஐந்தாம் வேற்றுமையுருபு (4) ஏழாம் வேற்றுமையுருபு

26. கசகச என்ற இரட்டைச் சொல் குறித்து நிற்கும் பொருள்
(1) ஈரலிப்பு (2) விரைவு (3) சினம் (4) பயம்

27. "திங்கள் முடி சூடும் மலை எங்கள் மலை" இங்கு வந்துள்ள அணி
(1) தற்குறிப்பேற்ற அணி (2) உயர்வுநவிற்சி அணி
(3) உவமையணி (4) உருவக அணி

28. திகதியைத் தேதி எனக் குறிப்பிடுவது
(1) மங்கலம் (2) மரூஉ (3) இடக்கரடக்கல் (4) குழூஉக்குறி

29. யான் வந்தான் என்பது என்ன வழு?
(1) திணைவழு (2) பால்வழு (3) காலவழு (4) இடவழு

30. முதல் எழுத்து ஒன்றி வர அமைக்கப்படுவது
(1) சிலேடை (2) எதுகை (3) மோனை (4) மடக்கு

● பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றினதும் பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

31. சீதையை விடுதலை செய்யாவிட்டால் நீயும் உன் படைகளும்
(1) அழிவாய் (2) அழியும் (3) அழிவீர்கள் (4) அழிவோம்

32. ஆண்மகனோ, பெண்மகனோ
(1) அங்கே நிற்பவர்? (2) அங்கே நிற்பவன்?
(3) அங்கே நிற்பவள்? (4) அங்கே நிற்பது?

33. எனது பிள்ளைகள்
(1) இதுகளல்ல (2) இவைகளல்ல (3) இவர்களல்ல (4) இவர்களல்லர்

34. இரை தேடிச் சென்ற மான் கூட்டம் வேடன் வலையில்
(1) அகப்பட்டுக் கொண்டது. (2) அகப்பட்டுக்கொண்டன.
(3) ஆப்பிட்டது. (4) சிக்கின.

35. நீங்கள் முயன்று பயின்றதனாலன்றோ நன்றாகப்
(1) பாடுவீர்கள் (2) பாடுகிறீர்கள் (3) பாடலாம் (4) பாடுவோம்

● பின்வரும் பாடலைப் படித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

பருந்துணப் பாட்டியாக்கை படுத்த நான் பகைஞரோடும்
மருந்தினும் இனிய மாமன் மடிந்தநாள், வனத்துள்வைகி
இருந்துழி வந்து நங்கை இருஞ்செவி மூக்கினோடும்
அரிந்தநாள் வந்திலாதான் இனிச் செய்யும் ஆண்மை உண்டோ?

36. இருஞ்செவி என்பது
(1) பண்புத்தொகை (2) அன்மொழித்தொகை
(3) உம்மைத்தொகை (4) உவமைத்தொகை

37. யாக்கை என்பதன் கருத்து
(1) தக்கை (2) மேனி (3) வெட்கை (4) மூர்க்கம்

38. இப்பாடலில் காணப்படும் வினையாலணையும் பெயர்
(1) படுத்த (2) அரிந்த (3) வந்திலாதான (4) இருந்துழி

39. இனிய மாமன் என்பது
(1) குறிப்பு வினையெச்சம் (2) வினையாலணையும் பெயர்
(3) குறிப்புப் பெயரெச்சம் (4) வினைத்தொகை

40. இனிய மாமன் எனக் குறிப்பிடப்படுபவன்
(1) அனுமன் (2) சகுனி (3) இராவண (4) சுபாகு

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும் II

புதியபாடத்திட்டம் - மாதிரி வினாத்தாள் - 4

இரண்டு மணித்தியாலம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீர் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

   (அ) இன்று நாட்டில் மின்சார வெட்டு தொடர் கதையாகவுள்ளது. மழை வீழ்ச்சியின்மையே இதற்குப் பிரதான காரணம், மரங்களை வெட்டுவதாலேயே இந் நிலைமை தொடர்கின்றது. எனவே மரநடுகையை ஊக்குவிக்கும் வகையில் வீடுகள் தோறும் மரங்களை வளர்க்க வேண்டும். இவற்றை அடிப்படையாகக் கொண்ட உமது கருத்து வெளிப்பாடு.

   (ஆ) இன்றைய மாணவர்கள் கற்றற் செயற்பாடுகளில் கவனம் செலுத்துகிறார்கள். அடுத்துத் தமது ஓய்வு நேரத்தைப் பெரும்பாலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவதிலேயே செலவழிக்கின்றனர். மாணவர்கள் சமுதாயத் தொண்டில் ஈடுபட்டு தமது ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக்க வேண்டும். - ஓர் அறிஞர் ஆற்றும் சொற்பொழிவு

   (இ) "உண்மையே வெற்றி தரும்" என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்ட கற்பனைக் கதை.

   (ஈ) "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" எனும் முது மொழியை அடிப்படையாகக் கொண்ட விளக்கக் கட்டுரை.

2. கீழே தரப்பட்டுள்ள அ, ஆ என்னும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் சுருக்கத்தை 15-20 சொற்களில் அமையக் கூடியவாறு வேறு வேறாக எழுதுக.

   (அ) காவியங்கள் கதை போலச் சுவையான கற்பனையுடன் அமைய வேண்டும் எனினும் வர லாறு போல மதிக்கத்தக்கனவாக விளங்க வேண்டும். அதனாலே தான், பல நாடுகளிலும் அத்தகைய காவியங்களை இயற்றுவதற்குத் தெய்வம் துணை புரிந்தது என்பர். அதை நம்பாதவர் தீமைக்கு இரையாவர். உண்மையாகவே பெரிய காவியம் எழுதி முடித்த பின் அதன் ஆசிரியர் தம்மால் இது ஆக்கத்தக்கதா? என்று வியந்திருப்பார். ஏதோ ஒரு பெரிய சக்தியே தம்மைத் தூண்டியது என ஆசிரியர் கருதினார். வியாசர் கூற விநாயகரே மகாபாரதத்தை எழுதினார்.

   (ஆ) மனிதனின் எதிரிகள் இரண்டு. ஒன்று பயம். மற்றது கவலை. பயம் வலுப்படைத்த வியாதி. கவலை மெல்ல அரிக்கும் நோய். பயத்தாலும் கவலையாலும் மனிதன் தன் வாழ்வை நரகமாக்கிக் கெடுக்கிறான். இப்படிப்பட்ட பலரை நம்மிடையே நாம் காணக் கூடும். எந்தச் சாதாரண விஷயத்தை இவர்களிடம் கொண்டு சென்றாலும். நாம் எதிர்பார்க்காத பயங்களை, அபாயங்களை நம்முன் பரப்பி விட அவர்கள் முயல்வார்கள். இவர்கள் சந்தேகப் பிராணிகள். தங்களைச் சுற்றிலும் பயம், கவலை என்ற எண்ணங்களால் பெரிய சுவர்களை எழுப்பிக் கொண்டிருப்பார்.

3. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ்த்தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

   வாழ்க்கையில் நேரும் துன்பத்தை மக்கள் அனைவரும் வெறுக்கின்றனர். ஆயினும் கலை வடிவு பெறும் துன்பத்தை எவரும் வெறுப்பதில்லை. வீட்டிலும் நாட்டிலும் துன்பத்தைத் துடைக்க முயலும் மனம் பாட்டிலும் நாடகத்திலும் துன்பத்தை வரவேற்கிறது. ஆழ்ந்து நோக்கினால் காவியம், ஓவியம, இசை, நாடகம் முதலியவற்றுள் துன்பப்பகுதி உள்ளத்தைக் கொள்ளை கொள்வது போல் இன்பப்பகுதி உள்ளத்தைக் கவர்வதில்லை. சிலப்பதிகாரத்தில் மதுரை காண்டம் பல முறை கற்கப்படுவதற்கும், கம்பராமயணத்தில் அயோத்தியா காண்டமும், சுந்தர காண்டமும் திரும்பத் திரும்பப் படிக்கப்படுவதற்கும் காரணம் இதுவே. ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கிலப் பெரும்புலவர் இன்ப நாடகமும், துன்ப நாடகமுமாகப் பலவற்றை இயற்றியிருந்தும், அவருடைய துன்ப நாடகங்களே சிறந்தனவாகப் போற்றப்பட்டு விளங்குவதற்கும் இதுவே காரணம்.

   1. இப்பகுதியில் கூறப்பட்டிருக்கும் பிரதான கருத்து யாது?
   2. சிலப்பதிகார மதுரைக் காண்டம் எத்தகைய நிகழ்ச்சியை சித்திரித்துக் காட்டுகின்றது?
   3. உள்ளத்தைக் கொள்ளை கொள்ளல் என்ற தொடரின் பொருள் யாது?
   4. முத்தமிழ் எனப்படுபவை எவை?

5. சிலப்பதிகாரம் என்ற நூலின் ஆசிரியர் யார்?
ம. இப்பகுதியில் பெயரெச்சமாகவும், வினைமுற்றாகவும் கொள்ளப்படும் ஒரு சொல் கூறுக?

4. உமது பாடசாலையில் நிகழ்ந்த கலைவிழா பற்றிய அறிக்கை(100 சொற்களுக்கு மேற்படாது எழுதுக)

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும் III

புதிய பாடத்திட்டம் - மாதிரி வினாத்தாள் - 4

இரண்டு மணித்தியாலம்

- 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கும் விடை தருக.

1. பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) "தாதையைக் கொன்றான் பின்னே தலை சுமந்து இருகை நாற்றிப் பேதையன் என்ன வாழ்ந்தாய் என்பது ஓர் பிழையும் தீர்ந்தாய்".
(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்கு கூறப்பட்டது?
(iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
(iv) தாதை எனக் குறிப்பிடப்படுபவன் யார்?

(ஆ) "சகுந்தலை, உன்னை அடையாளம் காண்பதற்கு மன்னன் சிறிது சிரமப்பட்டால் உடனே அவன் உனக்களித்த கணையாழியைக் காட்டுவாயாக, மறந்து விடாதே"
(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்குக் கூறப்பட்டது?
(iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
(iv) இங்கு குறிப்பிடப்படும் மன்னன் யார்?

(இ) "இணையிலாதாரை ஈண்ட அழுது செய்விப்போம்"
(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்குக் கூறப்பட்டது?
(iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
(iv) இப்பாடல் இடம் பெறும் நூல் எது?

(ஈ) "ஆதியான் திருநகரடுக்குஞ் ஜீவ நற்
பாதை நீயறிதியேற் பகர்தியாலென....."
(i) இக் கூற்று இடம் பெறும் நூல் எது?
(ii) யாரால் கூறப்பட்டது?
(iii) யாருக்குக் கூறப்பட்டது?
(iv) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

(உ) "ஐயோ! முடிஞ்சு போச்சா? அக்கா நீ கேட்ட எதுவுமே முடியலையே"
(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்கு கூறப்பட்டது?
(iii) எச் சந்தர்ப்பத்திற் குறிப்பிடப்பட்டது?
(iv) இங்கு அக்கா எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

2. பின்வரும் செய்யுள்களின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி அவை ஒவ்வொன்றிலும் கோடிட்ட இடங்களில உள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக?

(அ) இந்திரன் செம்மல் பண்டு ஓர் இராவணன் என்பான் தன்னை
சுந்தரத்தோள்களோடும் வாலிடைத்தூங்கச் சுற்றி
சிந்துரக் கிரிகள் தாவித் திரிந்தனன் தேவர் உண்ண
மந்தரப் பொருப்பால் வேலை கலக்கினான் மைந்தன் என்றான்

(ஆ) வானுறு மமரர் வாழ்த்த மருங்குறுந்தவத்தோர் வாழ்த்தக்
கானுறும் விலங்கும் புள்ளும் கணிதமில் உயிர்கள் வாழ்த்த
மான முந் திறமுமாண்மை மைந்துடன் வாகை பூண்டு
தீனெனு முழக்கத்தோடுந் திருநபி யகத்திற் புக்கார்.

(இ) எண்ணருந்துயர்க்கெலா மிறுதி காட்டு மெய்ப்
புண்ணியம் உருக்கொடு பொலிந்திலங்கிய
வண்ணமென் றுணர்வுளார் மனங் களிப்புற
நண்ணினன் இருஞ் சுவிசேஷ நாமத்தன்.

(ஈ) பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்
விண்டு உமி போனால் முளையாதாம் - கொண்ட பேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகாத அளவின்றி
ஏற்ற கருமம் செயல்.

(உ) அன்பனே! அன்பர் பூசை அளித்த நீ அணங்கினோடும்
என்பெரும் உலகம் எய்தி இருநிதிகிழவன் தானே
முன் பெரும் நிதியம் ஏந்தி மொழி வழி ஏவல் கேட்ப
இன்பமார்ந்திருக்க என்றே அருள் செய்தான் எவர்க்கும் மிக்கான்

3. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.
(அ) சார்ங்கரவன் துஷ்யந்தனிடம் கூறிய கண்ணுவரின் செய்தி
(ஆ) கார்த்திகேசு மண்வெட்டியைக் கையில் தூக்கியமை.
(இ) அரிச்சந்திர மன்னனின் குணவியல்புகள்.

4. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினுக்கு விடை தருக
(அ) "சதீனாக் கிழவியின் வாழ்க்கை அர்த்தமற்றது" - ஆராய்க.
(ஆ) "அந்தோக்கிழவி தன் இறுதி ஆசையை வெளிப்படுத்திய முறைமை" - விபரிக்க.
(இ) "காலகண்டன் என்ற அந்தணன் வீட்டில் சந்திரமதி பட்ட துன்பங்கள்" - விளக்குக.

● 5, 6. 7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.

5. "கவிதை உள்ளம்" என்ற பாடற் பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
(அ) "எவ்வெவற்றில் நெஞ்சம் குழையலாம், தளம்பலாம்" எனக் கவிஞர் சித்திரிக்கின்றார்?
(ஆ) இயற்கையின் அசைவு தோறும் எதனை நுகரலாம்? எவற்றைத் தெளியலாம்?

6. "மணிமேகலை" என்ற பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
(அ) உதயகுமாரன் கொல்லப்பட்டதற்கான காரணம்.
(ஆ) கந்திற் பாவை மணிமேகலைக்கு உரைத்தவை.

7. "கணையாழி" என்ற பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
(அ) துருவாச முனிவர் இட்ட சாபம்
(ஆ) சகுந்தலைக்குக் கண்ணுவ முனிவர் கூறிய ஆசீர்வாதம்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும் I

மாதிரி வினாத்தாள் - 4 - விடைகள்

01. 4	11. 1	21. 2	31. 3
02. 2	12. 1	22. 3.	32. 1
03. 1	13. 4	23. 3	33. 4
04. 1	14. 2	24. 4	34. 1
05. 3	15. 3	25. 3	35. 2
06. 1	16. 2	26. 1	36. 1
07. 2	17. 3	27. 2	37. 2
08. 4	18. 1	28. 2	38. 3
09. 3	19. 4	29. 4	40. 4

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும் II

மாதிரி வினாப்புத்திரம - 4 - விடைகள்

1. (அ) வீட்டிற்கொரு மரம் வளர்ப்போம்

மரத்தின் பெருமை தெரியாத மரங்களாக நாம் இருந்ததால் இன்று "வீட்டிற்கொரு மரம் வளர்ப்போம்" என்று வீதிக்கு வீதி முழங்க வேண்டியிருக்கிறது. வீடு கட்டவும், விறகிற்காகவும் மரங்கள் என நம்பியிருந்த நம்மை, இந்த முழக்கம் இன்று விழிப்படையச் செய்து விட்டது. நாம் உயிர் வாழ்வதற்கும் மரங்கள் தேவைப்படுகின்றன என்ற உண்மை இப்போது தான் கொஞ்சம் கொஞ்சமாகப் புரியத் தொடங்கியுள்ளது. இதனால் வெற்றிடங்களில் எல்லாம் மரங்களை நட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். இது நல்ல அறிகுறி என்பதில் தவறில்லை.

இயற்கையில் முளைத்த காடுகளை அழித்தே நாம் செயற்கையான நாடுகளையும் நகரங்களையும் உருவாக்கியுள்ளோம். நாகரிக மனிதர்கள் எனவும் சொல்லிக்கொள்கிறோம். இதுவரை எவ்வளவு மரங்களை அழித்திருக்கிறோம். என்பதற்குக் கணக்கே இல்லை. நம்முடைய இலக்கியங்களில், தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களில் சொல்லப்படும் மரங்கள் பல இன்று போன இடம் தெரியவில்லை. வீடுகட்டவும், அடுப்பு எரிக்கவும் பாலங்கள் அமைக்கவும், கருவிகள் செய்யவும் மரக்கொலை புரிந்துள்ளோம். இதில் தவறில்லை. ஆனால் வெட்டிய இடங்களில் வேறொரு கன்றினை நடாமல் விட்டது தான் தவறு.

மரங்களினால் உண்டாகும் நன்மைகள் பற்பல, இலை, கிளை, குச்சி, தண்டு. வேர், பட்டை, என்று அவற்றின் ஒவ்வொரு பாகமும் நமக்குப் பயன்படுகின்றது. இது தெரிந்தது தான். தெரியாத உண்மைகளும் இருக்கின்றன. ஆலைகள் கக்கும் புகைகளினாலும், சாலைகளில் செல்லும் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகைகளினாலும், காற்று மண்டலம் கெட்டுக் கொண்டு வருகின்றது. இந்தக் கெட்ட காற்றைத் தான் நாம் உள்ளுக்கு இழுக்க வேண்டி இருக்கின்றது. அவ்வாறு ஏற்படாமல் நம்மைக் காத்து வரும் பணியில் இம் மரங்கள் ஈடுபடுகின்றன. காற்று மண்டலத்தை மரங்கள் தூய்மை செய்கின்றன.

பருவமழை இன்றைக்கு நம்மைப் பரிதவிக்க வைத்து விட்டது. குளங்களும் வறண்ட தோடு விளை நிலம் அனைத்தும் பாளம் பாளமாய் வெடித்துக் கிடக்கும் வேதனை மழைக்குக் காரணம் மரங்கள் என்பதை அறியாது வெட்டி வீழ்த்துகின்றனர். வேரிலிருந்து நீரை உறிஞ்சி அதை மேகமாக்கி, அந்த மேகத்தைக் குளிரச் செய்து, மழை ஆக்கும் மந்திரவித்தை கற்றது மரம். பச்சை மரத்தை அழித்ததால் மனிதன் இன்று பட்ட மரமாய் ஆனான். மண்ணரிப்பைத் தடுக்கும் வலிமையையும் மரங்கள் பெற்றுள்ளன.

காட்டைத் திருத்திக் கழனியாக்கிய மனிதன், மீண்டும் காட்டை உருவாக்க வேண்டிய கட்டாய நிலைக்கு வந்திருக்கிறான். வீட்டுக்கொரு மரம் வளர்ப்பதை விட ஆளுக்கொரு மரம் வளர்ப்பதால் இன்னும் மிகுதியான எண்ணிக்கையில் மரங்கள் உருவாக வழி ஏற்படும். ஆலமரத்தையும் அரசமரத்தையும் தெய்வம் என அன்று வணங்கினர். இன்று நாட்டில் நிலவும் மின்சார வெட்டுக்குக் காரணம் மழைவீழ்ச்சியே நாம் மரங்களை வளர்ப்பதன் மூலம் இப்பிரச்சினையைச் சீர்படுத்தலாம்.

(ஆ) அன்பான மாணவச் செல்வங்களே!
நாட்டின் வருங்காலச சிற்பிகளே!
நம் ஈழமாதா பெற்றெடுத்த அருமைச் செல்வங்களே!

உங்களால் மலையைக் கடுகாக்கவும் முடியும், கடுகை மலையாக்கவும் முடியும், அத்தகைய ஆற்றல் பெற்றவர்கள் நீங்கள், ஆதலால் நீங்கள் கற்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் பிறருக்கு உதவி செய்யும் பழக்கத்தையும் மேற்கொள்ள வேண்டும். இப்பழக்கம் தம்மையும் உயர்ததும். பிறரையும் வாழ வைக்கும். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்றார் நாவுக்கரசர். நாவுக்கரசரின் இந்த நல்ல நோக்கம் தான் இன்றும் அவரை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. இதையுணர்ந்து மாணவர்கள் பொதுநலத் தொண்டில் ஊக்கம் செலுத்துவது நாட்டுக்கு ஆக்கம் தரும் செயலாகும்.

அன்பான மாணவர்களே! நாட்டிற்குத் தேவையான நல்ல குடிமகனை உருவாக்கும் உலைக்களமே பள்ளிக்கூடம். இங்கு உருவாகும் மாணவர்களே நாளைய இலங்கையைப் பாதுகாக்கும் பாதுகாவலர்கள். இதனால் தான் ஒற்றுமை உணர்ச்சியை ஊட்டவும், கூடிப் பணிசெய்யும் ஆற்றலை வளர்ப்பதற்கும் ஒழுக்கத்தைப் போதிப்பதற்குமான செயல்களில் பாடசாலை ஈடுபடுகின்றது. இதற்காகச் சாரணர் இயக்கம், கடேற் இயக்கம், ஏனைய மாணவ மன்றங்கள் மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதோடு ஏனைய மாணவர்களுக்கு உதவி செய்யும் மனப்பாங்கினையும் உண்டாக்குகின்றது.

"மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்பது ஆன்றோர் வாக்கு. தெருவோரங்களில் குப்பை கொட்டுவது இன்று வழக்கமாகி விட்டது. பொறுப்புணர்ச்சி சிறிதும் இல்லாதவர்களால் சுற்றுப்புறம் தூய்மையற்றுக் காணப்படுகின்றது. குடியிருப்புக்களை ஒட்டியுள்ள பள்ளங்களில் நீர் தேங்கி நுளம்பு உற்பத்தியாகின்றது. மலேரியா, யானைக்கால்நோய் போன்ற நோய்களை நுளம்பு தோற்றுவிக்கின்றது. மாணவர்களாகிய நீங்கள் மக்களைக் குடி நீரைக் காய்ச்சிக் குடிக்குமாறு அறிவுறுத்தலாம். வீட்டைச்சுற்றியுள்ள வெற்றிடங்களில் பயன் தரும் மரங்களை வளர்க்குமாறு வற்புறுத்தலாம். இதனால் சுற்றுப்புறத்தூய்மை பாதுகாக்கப்படுகின்றது. என்பதை வலியுறுத்தலாம்.

அன்பான மாணவர்களே! நம் நாட்டில் அறிவியல் வளர்ச்சியடைந்தும் மூட நம்பிக்கைகள் அகலவே இல்லை. மூட நம்பிக்கைகளை விரட்ட நீங்கள் பாடுபட வேண்டும். படித்து வாழ்வைச் சீரழிப்பவர்களை அறப்பணிகளில் ஈடுபடுமாறு வழிகாட்டலாம். போக்குவரத்துக் காவலருக்குத் துணையாக நின்று போக்குவரத்து விதிகளை மீறுவோரைத் திருத்தலாம். தீ விபத்து ஏற்படும் இடங்களைக் கண்டு தீயணைப்புப் படையினருக்குத் தெரிவிக்கலாம். மனநலம் குன்றியவர்கள், அங்கவீனர்கள் போன்றவர்களுகுத் துணைபுரியலாம். அன்பான மாணவப் பெருந்தகைகளே! "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" சிறிய வயதில் கற்றுக் கொண்ட இப்பழக்கம், வாலிபப்பருவத்திலும் நடுத்தரப் பருவத்திலும் வளர்ச்சியடைந்து மேன் மேலும் இந்த நாட்டை முன்னேற்றுவதற்கு வழி வகுக்கும் என்று கூறி இந்தச் சொற்பொழிவைப் பூர்த்தி செய்கின்றேன்.

(இ) "உண்மையே வெற்றி தரும்"

பகீரதன், லட்சுமணன், நிஷான் ஆகிய மூவரும் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் கற்கும் மாணவர்கள். மூவரும் நெருங்கிய நண்பர்கள், எங்கு சென்றாலும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியமாட்டார்கள். பகீரதன் எப்பொழுதும் உண்மையே பேச வேண்டும் என்ற உறுதியான கொள்கையுடையவன். லட்சுமணன் பொய் சொல்லத்தயங்க மாட்டான். நிஷான் சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்பப் பொய்யும் சொல்வான். மெய்யும் சொல்வான். என்றாலும் நண்பர்களிடத்தே மிகுந்த மதிப்புடையவன். அவர்களின் ஆலோசனைப் படியே நடப்பான்.

ஒரு நாள் மூவரும் புகையிரத்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். அப்பொழுது லட்சுமணனின் காலின் கீழே மழமழவென்று ஏதோ ஒன்று நெளிவது போன்ற உணர் வேற்பட்டது. அவன் திடுக்குற்றுக் காலை எடுத்தான். அங்கே கிடந்தது ஒரு தங்கச்சங்கிலி!

லட்சுமணன் தன்னை யாரும் கவனிக்கிறார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்தான். ஒவ்வொருவரும் தமக்குள்ளே கதைத்துக் கொண்டும் வெளியிற் புதினம் பார்ததுக் கொண்டும் இருந்தனர். அவனை யாரும் கவனிக்கவில்லை. பகீரதன் ஏதோ புத்தகம் ஒன்றை வாசித்துக் கொண்டிருந்தான். நிஷான் தூங்கி வழிந்தான். லட்சுமணன் பதற்றம் எதையும் காட்டிக் கொள்ளவில்லை. குனிந்து எடுத்துத் தன் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டான்.

இறங்க வேண்டிய புகையிரத நிலையம் வந்தது. மூவரும் இறங்கினார்கள். லட்சுமணனின் மனதில் பெரும் போராட்டம் தான் சங்கிலியை எடுத்ததை நண்பருக்குச் சொல்வதா, விடுவதா என்று அவனால் தீர்மானிக்க முடியவில்லை. ஆனால் அவனுக்கு அதை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்றும் விளங்கவில்லை. வீட்டுக்கு கொண்டு செல்ல முடியாது. பெற்றோர் சண்டைக்கு வருவர். இந்த விடயத்தில் அப்பா நெருப்பு யாருக்கும் தெரியாமல் கடையில் சென்று விற்கலாம் என்றால் சிறுவனாகிய அவன் மீது கடைக்காரர்கள் சந்தேகப்படுவார்கள்.

இவ்வாறு சிந்தித்த லட்சுமணன் தன் நண்பர்களுக்குச் சங்கிலி கிடைத்ததை எடுத்துச் சொன்னான். நிஷான் முகத்தில் மட்டற்ற மகிழ்ச்சி, தனக்குத் தெரிந்த நகைக்கடைக்காரர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் கொடுத்தால் நகையின் பாதி விலையையாவது எமக்குத் தருவார். நாம் அப்பணத்தைப் பங்கிடுவோம் என்று கூறினான். லட்சுமணனுக்கு இந்த ஆலோசனை திருப்தியளித்தது. ஆனால் பகீரதன் ஒன்றும் பேசாமல் மௌனமாய் நின்றான். பின் பகீரதன் "நாம் உரியவரிடமோ புகையிரத நிலையத்திலோ இச் சங்கிலியை ஒப்படைப்போம். இதற்கு நீங்கள் ஒத்துழைக்காது விட்டால் உங்கள் முகத்தில் நான் விழிக்க மாட்டேன்" என்றான். பின் மூவரும் சேர்ந்து அச்சங்கிலியைப் புகையிரத நிலையத்தில் ஒப்படைத்தனர். சங்கிலியைப் பறி கொடுத்த பெண்மணியும் அப்போது அங்கே வந்தார். இம் மூவரினதும் உண்மையையும், நேர்மையையும் அப்பெண்மணி பாராட்டினாள்.

(ஈ) "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

"சுவர் இருந்தால் தான் சித்திரத்தைத் தீட்ட முடியும்". என்பது பழமொழி. உடல் நலம் காப்பதன் தேவையை எடுத்துரைக்கின்றது. பணத்தைத் தேடுவதிலும், பாதுகாப்பதிலும் மனிதர் தம் முழுக்கவனத்தையும் செலவழிக்கின்றனர். உடல் நலத்தைப் பேணுவதில் அக்கறை செலுத்துவதில்லை. இதனால் சேர்த்த செல்வத்தைத் துய்க்க முடியாமல் இளமைக் காலத்தில் இறந்தும் விடுகின்றனர். பொருட் செல்வத்தை விட நோயற்ற வாழ்வு தான் குறைவற்ற செல்வம்.

"சுத்தம் சுகம் தரும்", "கூழானாலும் குளித்துக்குடி", "கந்தையானாலும் கசக்கிக் கட்டு", இருப்பிடத் தூய்மை, உடல்தூய்மை, உடைத்தூய்மை, என்பவற்றை இம் முதுமொழிகள் வற்புறுத்துகின்றன. வள்ளுவர் உடல் நலம் பேணும் வழிகளை ஆராய்ந்துள்ளார். அவர் மீருந்து என்னும் அதிகாரத்தில்,

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்"

என்று கூறுகின்றார். உயிரைக் காப்பதும் உணவே உயிரை அழிப்பதும் உணவே என்பது அவரது தத்துவம். ஆதலால் உணவுக்கட்டுப்பாடு மனிதனுக்கு மிகமிகத் தேவை என்பது புரிகிறது.

இன்றைய அறிவியல் கண்டு பிடிப்புக்கள் மனிதனுக்கு எந்தளவிற்கு நலம் பயக்கிறதோ அந்தளவிற்குத் தீமையும் பயக்கின்றது. போக்குவரத்துச் சாதனங்கள், தொழிற்சாலைக லிலிருந்து வெளியேறும் கழிவு வாயுக்களால் சூழல் மாசடைகின்றது. நம் நாட்டுக்குப் பொருத்தமான ஆடை பருத்தியாடை நாம் செயற்கை இழைநார்களால் ஆக்கப்பட்ட ஆடைக ளையணிந்து தோல் நோயை வருவிக்கின்றோம். கூட்டமாகத் திரையரங்குகளில் கூடியிருப் பதும், குளுகுளு வசதியால் செயற்கைத் தன்மை ஏற்றிக் கொள்வதும் உடல் நலத்திற்குக் கேடுகளே.

மனிதன் பின்பற்றி வரும் சில பழக்கங்களும் நோயை வரவழைக்கின்றன. உடல் நலத்துக்கு ஒத்து வராத மது வகைகளை அருந்துவதும், புகைப்பதும், போதைப் பொருள் களுக்கு அடிமையாவதும், புற்றுநோய், இருதயநோய் போன்ற நோய்களுக்கு இடமாகின்றன. சுற்றுப் புறங்களும் வீடுகளும் தூய்மையற்று இருந்தாலும் நோய் பரவும் வீட்டினருகே குப்பை கூளங்களையும், அழுகிய பொருட்களையும் வைத்திருந்தாலும் உடல் நலத்திற்குக் கேடு.

நோயைத் தடுக்கும் வழி முறைகளை நாம் பின்பற்ற வேண்டும். சத்துமிக்க உணவு முறைகளைக் காலம் தவறாமல் பின்பற்றி வர வேண்டும். காற்றோட்டமும், வெளிச்சமும், தூய்மையும் கொண்டதாக வீடு அமைந்திருக்க வேண்டும். காலைப்பொழுதில் உடற் பயிற்சிகளை மேற் கொள்ள வேண்டும். அழுக்கற்ற உடைகளை உடுத்திக் கொள்ள வேண்டும். ஆண்டிற்கு ஒரு முறை உடலை மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

நோய்க்கு இடங்கொடுப்பது பேய்க்கு இடங்கொடுப்பதைப் போன்றதாகும். அதனால் தான் நம் முன்னோர்கள் "நோய்க்கு இடம் கொடேல்" என்று கூறினர். இளம் வயதிலேயே நல்ல பழக்கங்களை மேற்கொண்டு வந்தால் நோயை விரட்ட முடியும். நூறாண்டும் வாழ முடியும்.

2. (அ) காவியங்கள் சுவையான கற்பனையுடன் அமைய வேண்டும். மதிக்கத் தக்கதாக அமைய வேண்டும். காவியங்களில் தெய்வாம்சக் கருத்துக்கள் காணப்பட்டன. பல்வேறு காவியங்கள் எழத் தெய்வமே வழிகாட்டியது.

(ஆ) மனிதனின் எதிரிகள் பயமும், கவலையுமாகும். இது அவனைப் பாதிக்கும். சந்தேகப் பிரா ணிகளான மனிதன் சாதாரண விடயங்களுக்குப் பயத்தை ஏற்படுத்துவர். இதனால் தம் வாழ்வையும் பிறர் வாழ்வையும் பாழடிப்பர்.

3. (1) மக்கள் தம் வாழ்க்கையில் நிகழும் துன்பத்தை வெறுத்தாலும் கலை வடிவு பெறும் துன் பத்தை வரவேற்கின்றனர்.
(2) துன்ப நிகழ்ச்சி
(3) மனதைக் கவர்தல்
(4) இயல், இசை, நாடகம்
(5) இளங்கோவடிகள்
(6) முயலும்.

4. கொழும்பு றோயல் கல்லூரி கலைவிழா

கொழும்பு றோயல் கல்லூரிக் கலை விழா 2001 ஆம் ஆணடு நவம்பர் 12 ஆம் நாள் ஞாயிறு பிற்பகல் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவை கல்லூரியின் தமிழ் மன்றம் ஒழுங்கு செய்தது. பேராசிரியர் த. இராஜசூரியர் விழாவுக்குப் பிரதம அதிதியாக வருகை தந்தார். அதிபர் அவர்கள் மாலை சூட்டி அவரை வரவேற்றார். விழா மாணவர்களின் தமிழ் வாழ்த்துப் பாடலோடு ஆரம்பமானது. தமிழ் மன்றத் தலைவர் செல்வன். க. தனயஞ்சயன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். விழாவுக்குத் தலைமை வகித்த அதிபர் திரு. க. டேவிற் அவர்கள் தமது தலைமையுரையியல் பாடசாலையின் தமிழ்ப்பிரிவு தமிழ்க்கல்விக்கும், கலைகளின் வளர்ச்சிக்கும் ஆற்றி வரும் பணிகளைக் குறிப்பிட்டார். பிரதம அதிதி அவர்கள் உரை நிகழ்த்தும் போது கலைகளின் பெருமைகளையும் அவற்றை வளர்க்க வேண்டிய இன்றியமையாமையும் பற்றுதுரைத்தார். அறிஞர் க. சண்முகதாஸ் "முத்தமிழ்" என்னும் பொருள் பற்றிச் சிறப்புரை நிகழ்த்தினார். மாணவர்களின் இசைப்பாடல் நிகழ்ச்சி , தாளவாத்திய நிகழ்ச்சி, வில்லுப்பாட்டு, "வள்ளல் பாரி" என்ற நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைந்திருந்தன. இறுதியில் மாணவர் மன்றச் செயலாளர் செல்வன் யோ. லட்சுமணன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும் III

மாதிரி வினாத்தாள் - 4 - விடைகள்.

1. (அ) (i) இராவணனால்
(ii) அங்கதனுக்கு
(iii) உனது தந்தையைக் கொன்றவன் பின்னே நீ சென்று அடிமை போலச் சேவகம் செய்து மற்றவர் உன்னை அறிவிலி என்று கூறுமாறு வாழ்ந்தாய் என இகழ்ச்சியாகக் கூறும் பழிச்சொல் அகலுமென்று கூறினான்.
(iv) வாலி

(ஆ) (i) பிரியம்வதையால்
(ii) சகுந்தலைக்கு
(iii) சகுந்தலை கணவனிடம் செல்வதற்குப் புறப்பட்ட வேளையில் தோழிகளிடம் விடை பெற்ற வேளை கூறப்பட்டது.
(iv) துஷ்யந்தன்

(இ) (i) மனைவியால்
(ii) இளையான்குடிமாற நாயனாருக்கு
(iii) சமைத்த கறியமுதைக் காட்டி விருந்தினரை எழுந்தருளச் செய்து அமுது செய்வோம் என்று கூறியபோது
(iv) பெரியபுராணம்

(ஈ) (i) இரட்சணிய யாத்திரிகம்
(ii) ஆந்தும விசாரியால்
(iii) சுவிசேஷகனுக்கு
(iv) இறைவனது திருநகருக்குச் செல்லும் பாதையைத் தனக்குக கூறுமாறு கேட்ட போது

(உ) (i) வேலாயுதத்தினால்
(ii) வேலாயுதத்தை தூக்கி வந்தோருக்கு
(iii) அக்காவின் மரணச் செய்தி கேட்டதும் மயங்கி விழுந்த வேளையில் கூறியது.
(iv) பொன்னம்மா

2. (அ) " முற்காலத்தில் தன்னை இராவணன் என்று சொல்லிக் கொண்ட ஒருவனைத் தனது வாலில் தொங்கும் படி அவனது அழகான தோள்களுடன் சுற்றிக் கட்டி, யானைகள் நடமாடும் மலைகளில் எளிதாய் பாய்ந்து திரிந்தவனும், தேவர்கள் உண்ணும்படி மந்தர மலையால் பாற்கடலைக் கடைந்தவனுமான இந்திரன் மகனுமாகிய வாலி என்பவனின் புதல்வன் யான்" என்று தன்னை அங்கதன் இராவணனுக்கு அறிமுகப்படுத்தினான்.

மந்தரப் பொருப்பால..... தேவர்களும், அசுரர்களும் மந்தரமலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பை கயிறாகவும், சந்திரனை அடைத் தூணாகவும் கொண்டு பாற்கடலைக் கடந்தனர். அப்பொழுது அவர்கள் தளர்வுற்றுக் களைத்தபோது வாலி தன் கையால் பாற்கடலில் அமுதம் தோன்றும் வரை கடைந்தான்.

(ஆ) விண்ணிலுள்ள தேவர்கள், அக்கம்பக்கத்தில் இறைவனைத் தொழுதவர்கள். காட்டிலுள்ள மிருகங்கள், பறவைகள், கணக்கற்ற உயிரினங்கள் வாழ்த்தின. இவ்வாறு எல்லாவுயிர்களும் வாழ்த்திட மானத்துடனும், திறமையுடனும், ஆண்மையுடனும், வெற்றி வாகை சூடி, "தீன்" என்னும் முழக்கத்தோடு இபுறாஹீம் நபி அவர்கள் நமது இல்லத்தினுள் நுழை கள்.

தீன் எனும் முழக்கத்தோடு - தீன் எனும் முழக்கம் ஒலித்திட நபி வீட்டினுள் புகுந்தார். இதன் மூலம் இறைவனுக்கு விரோதமாகச் செயற்பட்ட நமுறூதுவைத் தோற்கடித்தா.

(இ) கணக்கற்ற துன்பங்கள் அனைத்துக்கும் அழிவை ஏற்படுத்தத் தக்க உண்மையான புண்ணி யமே ஓர் வடிவு எடுத்து மிகவும் அழகுடன் விளங்கிய வடிவம் இதுவோ? என்று உண புள்ளவர் நெஞ்சம் மகிழ, சுவிசேஷகன் என்ற மகிமைக்குரிய பெயரையுடையவன் அங்கு வந்து சேர்ந்தான்.

எண்ணருந் துயர்க்கெலா..... அளவற்ற துன்பங்களுக்கு முடிவு கட்டத்தக்கவன். ஆத்தும விசாரிக்கு சுவிசேஷகனின் அருள் ஒழுகும் தோற்றம் இங்கு சித்தரிக்கப்பட்டுள்ளது.

(ஈ) அரிசி இருக்கும் நெல் தான் முளைக்கும். அரிசியை முடியிருக்கும் உமி நீங்கினால் முளைக்காது. எந்த ஒரு காரியத்தையும் நிறைவேற்ற என்ன தான் திறமை இருந்த போதும், தகுந்த துணை இல்லாமல் விட்டால் அதைத் தனியாகச் செய்து விட முடியாது. தக்க துணை ஒருவருக்கு அவசியம் வேண்டும்.

விண்டுமி போனால..... அரிசியை மூடியிருப்பது உமி. அது பயன் குறைந்த பொருளாயினும் நெல் முளைப்பதற்கு அது அவசியம். உமி நீங்காவிட்டால் நெல் முளைக்காது.

(உ) "அன்புடையவனே! அடியார்களது பூசையைச் சற்றும் தவறாது செய்து வந்த நீ, உனது மனைவியோடும் எமது பெரிய உலகத்தை அடைந்து குபேரன் தானே முன்னர் பெரிய நிதிகளை ஏந்தி உனது சொற்படி ஏவற் பணிகளைச் செய்ய, ஒப்பற்ற பேரின்பம் அனுபவித்துக் கொண்டிருப்பாயாக" என்று முழு முதல்வன் அருள் செய்தான்.

இருநிதிக்கிழவன் தானே..... எடுக்க எடுக்கக் குறையாத சங்கநிதி, பதுமநிதி ஆகிய இருவகை நிதிகளையுடையவன். குபேரன், குபேரனே உனது கட்டளைகளுக்கு அடி பணிவான்.

3. (அ) "நாம் தவ வலிமையால் மேம்பட்ட செல்வந்தர். நீரோ! இந் நாட்டை ஆள்வதால் செல்வந்தர். சகுந்தலை உன்மேல் மிகுந்த அன்புடையவள். நன்றாக ஆராய்ந்து யோசித்து சகுந்தலையை இல்லறத் துணைவியாக ஏற்பீர். அதற்கு மேல் அவள் நல்வினை எப்படியோ அப்படி நடக் கட்டும்" இவ்வாறு என் சார்பில் அரசனிடம் கூறுவாயாக என்று கண்ணுவர் கூறினார் என்ற செய்தியைச் சார்ங்கரவன் துஷ்யந்தனிடம் கூறினான்.

(ஆ) கார்த்திகேசு மாட்டுவண்டி வைத்துப்பிழைப்பு நடாத்தினான். ஆனால் திடீரென்று அவர் பிழைப்பில் மண் விழுந்து விட்டது. மலையாளத்தானின் மோட்டார் கார் வருகையைத் தொடர்ந்து அவர் பாதிப்புக்குள்ளாகினார். மக்கள் மாட்டுவண்டிச் சவாரியைக் கைவிட்டனர். மோட்டார் வண்டியை நாடினர். மலையாளத்தான் கார்சவாரி மூலம் பணம் சம்பாதித்தான். இதைப் பார்ததுப் பலர் கார்கள் வாங்கிச் சவாரி நடாத்திப் பிழைப்பு நடத்தினர். கார்த்திகேசு இந்நிலையில் மாட்டு வண்டி வைத்துப் பிழைப்பு நடாத்துவது கடினம் என்பதை உணர்ந்தான். மீண்டும் விவசாயத்தில் ஈடுபட மண் வெட்டியைக் கையில் எடுத்தான். மாட்டு வண்டிச் சவாரிப் பிழைப்பைக் கைவிட்டான்.

(இ) அரிச்சந்திரன் கோசல நாட்டரசன். அவன் மனைவி சந்திரமதி. விசுவாமித்திரர் அரிச்சந்திரனைப் பொய் சொல்ல வைப்பதற்காகப் பல்வேறு சூழ்ச்சிகள் புரிந்தார். விசுவாமித்திரரின் கோபத்தால் நாடு, நகர், என்பவற்றை இழந்தான். காலகண்டன் என்ற அந்தணனுக்கு மனைவியையும், மகன் தேவதாசனையும் விற்றான். தானும் புலையனுக்கு அடிமையாகினான். சுடலை காக்கும் பணியில் ஈடுபட்டான், கடைசி வரை "கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலோம்" என்று வாழ்ந்தவன். சோதனைகள், வேதனைகளைத் தாங்கி வாய்மை காத்தான். உண்மை, நேர்மை என்பவற்றை இறுதி வரை காத்தான். மண்ணுக்கும் விண்ணுக்கும் தூய்மை தருவது வாய்மையே என்று வாழ்ந்தான். வாய்மைக்கு இலக்கணம் அரிச்சந்திரன்.

4. (அ) சகீனாவின் தாய் கட்டுப்பெட்டித் தனமாக, மூடத்தனமாக வாழ்ந்தவர். ஆனால் சகீனாவின் முகத்தைக் கண்ணாடியில் பார்க்க அவள் அனுமதிக்கவில்லை. சகீனாவின் தாய் கால மாற்றத்தை அறியாதவள். இதனால் அறுபது வயது வரை தன் முகத்தைக் கண்ணாடியில் பார்க்காமல் காலத்தைக் கழித்துள்ளாள். இது அவளது அறியாமையையும், தாயின் அர்த்தமற்ற கட்டளையை மீறாத செயலையும் புலப்படுத்துகின்றது. மகன் ரஸாக் "ஒலகம் தெரிந்த மாதிரிப் பேசிறியே. ஒன்ட முகம் உனக்குத் தெரியுமா?" என்ற வினா எழுப்புகின்றான். இதன் மூலம் தனது தவறைச் சகீனாக் கிழவி உணர்கின்றாள். கிணற்றுத் தவளை போன்றதே அவள்து வாழ்க்கை.

சகீனாக் கிழவி காலத்தையும் மாற்றத்தையும் பற்றி உணரவில்லை. உலகத்தையும் போக்கையும் பற்றி நினைத்ததில்லை. அவளது வாழ்க்கை இருட்டறை போன்றது. கால ஓட்டத்துடன் வாழ்க்கையை மாற்றிக் கொள்ளவில்லை. பழைய சம்பிரதாயத்தைப் போற்றி வாழ்ந்தாள். அறுபது வருட வாழ்க்கை வெறும் சூனியமாய் வெட்ட வெளியாகச் சகீனாவுக்குக் காணப்பட்டது. குடிசையைச்சுற்றி இருந்த இந்தத் தட்டு வேலிக்குள் அறுபது வருட வாழ்க்கை யைக் கழித்திருக்கிறாள். சகீனா அறுபது வருடங்கள் என்ன ஆயிரம் வருடங்கள் வாழ்ந்தாலும் அவளது வாழ்க்கை அர்த்தமற்றது. தான் வாழ்க்கையில் எவ்வளவு தூரம் ஏமாந்து விட்டோம் என்பதை எண்ணிய பொழுது அவள் மனம் குமுறியது. எனவே சகீனாவின் வாழ்க்கை அர்த்தமற்றது என்றால் மிகையாகாது.

(ஆ) அந்தோக் கிழவியின் இறுதி ஆசை இறப்பதற்கு முன் தன் மகனின் காகிதத்தைக் காண வேண்டும் என்பதாகும். அவள் உயிர் பிரியாமல் இழுத்துக் கொண்டு கிடக்கின்றது. "காயிதக்காரன் போவான். பாரடி அடிக்குரலில் கூறுகிறாள். தபாற்காரன் சங்கரப்பிள்ளைக்குக் கிழவியின் ஏக்கம் புரிகிறது. கிழவியின் இறுதி ஆசையை அவன் பூர்த்தி செய்ய விரும்புகிறான். ஒரு கடிதத்தை "மகன்ர காயிதம் ஆச்சி" என்று சொல்லி அவளது கைக்குள் வைக்கிறான் அப்பொழுது கிழவி அடைந்த இன்ப உணர்வை விபரிக்க முடியாது.

கிழவியின் கைகால்கள் பதறின. கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது. முகம் பிரகாசித்தது. நீரில் மூழ்கித் தத்தளிப்பவன் தும்பைப் பிடிப்பது போலக் கடிதத்தைப் பற்றினாள். கண்ணில் ஒற்றிக் கொண்டாள். இதன் மூலம் கிழவியின் இறுதி ஆசை மக னின் கடிதத்தைக் காண வேண்டும் என்பதாகும். தனது இறுதி மூச்சு உள்ள வரை கடித த்தைக் கண்ணில் ஒற்றிக் கொண்டதும் அவளது உயிர் இவ்வுலகை விட்டுப் பிரிகின்றது.

(இ) சந்திரமதியும் மகனும் அந்தணனுக்கு விற்கப்படுகின்றனர். சந்திரமதி அந்தணன் வீட்டில் ஏவிய வேலைகளைக் குற்றமின்றிச் செய்தாள். இரவு விடிய இன்னும் ஒரு சாமம் இருக்கிறது என்ற பொழுதில் எழுந்திருக்கிறாள். வேலையை முடிக்கின்றாள். இராப்பொழுது வந்து இரண்டு சாமம் ஆனபின் அந்தணன் அளித்த கூழை உண்கிறாள். உறங்குகிறாள். சந்திர மதி கையில் உலக்கையைப் பிடித்து நெல் குற்றுகிறாள். அவளது கையில் இரத்தம் சிந்துகின்றது. உடம்பிலிருந்து வியர்வை நீர் வழிகின்றது. கண்களிலிருந்து கண்ணீர் அருவி போல ஒழுகுகின்றது. சந்திரமதி நெல் குற்றும் போது படும் துன்பங்களைப் பார் த்து தேலலோகப் பெண்கள் வருந்திச் சோர்ந்தனர்.

5. (அ) குழந்தையின் சிரிப்பில் மனம் நெகிழலாம். அதில் மகிழ்வு கொள்ளலாம். கள்ளங்கபடமில்லாத குழந்தையின் சிரிப்பில் உள்ளத்தைப் பறி கொடுக்காதவர் யாருமில்லை. விடியற் பொழுதில் விழுகின்ற பனித்துளிகள், புல்லின் விளிம்பினில் ஓரங்களிற் பட்டுப் படிந்திருக்கும் அழகைப் பார்த்தது மகிழலாம். நிலத்திற் குந்தி இருந்தும் பின்னர் எழுந்தும் பறக்கின்ற சிறிய பறவைகளின் வண்ண வண்ண நிறங்களைக் கொண்ட சிறகுகளின் அழகிலும் அசைவிலும் உள்ளம் மகிழ்ந்து தளம்பலாம். உள்ளம் பூரித்துப் பொங்குகின்றது.

(ஆ) இயற்கையின் அசைவு எல்லாவற்றிலும் இன்பத்தை அனுபவிக்கலாம். ஆகாய வெளிகளில் உலக வாழ்வில் மறைந்து கிடக்கும் சூக்கும நிகழ்வுகளையும் அவற்றின் தத்துவங்களையும் நன்கறிந்து தெளிவு கொள்ளலாம். நமது அயலவர்களின் துன்பங்கள் துயர நிகழ்வுகளில் பங்குகொள்ளலாம். பிறர் துன்பத்தில் பங்கு கொள்வது மனிதாபிமான செயலாகும். நமது வாழ்க்கையில் நிலவும் கீழ்மைத்தனமான செயல்களை ஒழித்தால் தான் நாம் மகிழ்வுடன்

வாழலாம். இதனாலேயே எல்லோரும் ஒன்று பட்டு கீழ்மைத் தனங்கள் ஒழிய மகிழ்வுடன் காவியம் பாடவேண்டும்.

6. (அ) உதயகுமாரன் காயசண்டிகையின் கணவனால் கொல்லப்பட்டான். மணிமேகலை உதயகுமாரனிடம் இருந்து தப்புவதற்காகக் காயசண்டிகையின் வடிவத்துடன் காணப்பட்டாள். உதயகுமாரன் இங்கு வந்தான். காயசண்டிகையின் வடிவத்தில் மணிமேகலை இருப்பது அவளது கணவனுகும் தெரியாது. காயசண்டிகையின் கணவனும் தனது மனைவியே என்று நினைத்தான். உதயகுமாரன் முன்பே காதல் உரைத்தான். உதயகுமாரன் தன் மனைவியிடம் தகாத முறையில் நடப்பதாகக் காயசண்டிகையின் கணவன் நினைத்தான். இதனால் கடுங்கோபம் கொண்ட உதயகுமாரனைக் காயசண்டிகையின் கணவன் வெட்டிக் கொன்றான்.

(ஆ) கந்திற் பாவை மணிமேகலையிடம் அவளது முற்பிறப்பையும், உதயகுமாரனின் முற்பிறப்புப் பற்றியும் கூறியது "முற்பிறப்பில் இலக்குமியாகிய நீயும், இராகுலனாகிய உன் கணவனும் ஒரு முனிவருக்கு உணவளிக்கப் புக்க போது, அடிசிலாக்குவான் தாமதித்து வந்தான். அவன் தரையில் வழுக்கி விழுந்தான். உணவு நிலத்தில் சிந்தி விட்டது. அது கண்டு இராகுலன் கோபித்தான். அவனை வாளால் வெட்டி விழுத்தினான். அப்பாவ அவன் அப்பிறப்பில் திட்டிவிடம் என்ற பாம்பு கடித்து இறந்தான். இப்பிறப்பிலும் வெட்டுண்டு வீழந்தான். உதயகுமாரனை நீ நினைக்காதே" என்று கந்திற்பாவை மணிமேகலையிடம் உரைத்தது.

7. (அ) துருவாச முனிவர் கண்ணுவமுனிவரின் ஆச்சிரமத்துக்கு வந்தார். வந்து வாயிலில் நின்றபடி உள்ளே யார் இருக்கிறார்கள்? என்று வினாவினார். ஆனால் ஆச்சிரமத்தின் உள்ளே இருந்து பதில் ஏதும் கிடைக்கவில்லை. உள்ளே இருந்த சகுந்தலை ஏதோ சிந்தனையில் மூழ்கியிருந்தாள். பலமுறை அழைத்தும் பதில் கிடைக்காததால் முனிவர் கடுங் கோப மடைந்தார். "வந்த விருந்தினரை அவமதித்து விட்டாய். நானோ தவசிரேட்டன் என்னை அவமதித்து நீ யாரோ ஒருவனை நினைத்துக் கொண்டிருக்கிறாய், அவன் உன்னை மறப்பானாக, அதுவே உனக்குத் தகுந்த தண்டனை என்று சாபமிட்டார்.

பின்னர் அநசூயை சகுந்தலையின் குற்றத்தை மன்னிக்குமாறு முனிவரிடம் வேண்டுகிறாள். அப்போது துருவாசமுனிவர் "நானிட்ட சாபத்துக்கு விமோசனம் கிடையாது. என்றாலும் இவ்விடயத்தில் சகுந்தலையின் கணவன் அவருக்குக் கொடுத்த அணிகலன் ஒன்றை அவன் காண நேரிட்டால் நானிட்ட சாபமும் நீங்கும்" என்று பதிலளித்தார்.

(ஆ) "சகுந்தலா! சாமிஷ்டை முன்னர் யயாதியால் எவ்வாறு மதிக்கப்பட்டாளோ அவ்வாறு நீயும் உனது கணவனின் மதிப்பைப்பெற வாழ்த்துகிறேன். பூருவைப் போன்ற சகல சிறப்புகளையும் பெற்ற மன்னர் மன்னனான மகனை நீ அடைவாயாக!"

நீ செல்லும் வழியெல்லாம் நல்ல வழியாக இருக்கட்டும். பார்க்கும் இடமெல்லாம் மலர்களும் பசுஞ் செடிகளும் அழகு காட்டட்டும். நன்னீர்த் தடாகங்கள் தண்ணளியை வழங்கட்டும். நறுந் தருக்கள் வழி நெடுகிலும் நிழல் தரட்டும். மந்த மாருதம் வீசட்டும். வன விலங்குகள் வழிவிட்டு நிற்கட்டும். எங்கும் மங்கலம் தங்கட்டும். மகளே வனதேவதையை வணங்கி விடை பெற்றுக் கொள். இவையெல்லாம் நிகழட்டும் என்றார் கண்ணுவர்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ் மொழியும் இலக்கியமும் I

புதிய பாடத்திட்டம் - மாதிரி வினாத்தாள் - 5

ஒரு மணித்தியாலம்.

- பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. "தருமத்தின் வதனம் எனப்பொலிந்தது தனி வெண் திங்கள்" இங்கு வதனம் என்பது
(1) பாதம் (2) முகம் (3) சிரசு (4) வயிறு

2. "அட்டாலும் பால் சுவையிற் குன்றாது" இங்கு அட்டாலும் என்பதன் பொருள்
(1) காயச்சினாலும் (2) வெண்மையாதல் (3) கறந்தாலும் (4) விரும்பினாலும்

3. அக்குடும்பம் சிக்கனமாய் வாழ்ந்தது. சிக்கனம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
(1) உலோபம் (2) ஆடம்பரம் (3) அடக்கம் (4) ஊதாரித்தனம்

4. நடுவு நிலைமையைப் போற்றுவதே நீதிபதியின் தலைமைப் பண்பாகும். நடுவு நிலைமை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
(1) பாரபட்சம் (2) பின்தள்ளல் (3) பட்சபாதம் (4) வாய்மை

5. களிறு என்பதற்கு பிடி என்பது போல எயினன் என்பதற்கு எதிர்பால்
(1) எயிற்றி (2) எயினி (3) எயினனி (4) எயினற்றி

- பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

6. வாணி விழா.....நடைபெற்றது.
(1) கோலகலமாக (2) கோலகாலமாக (3) கோலாகாலமாக (4) கோலாகலமாக

7. தோழிகள் புடைசூழ மணமகள் .....நடந்து வந்தாள்.
(1) நடுநாயகமாய் (2) பிறைச்சந்திரன் போல
(3) சனசமுத்திரம் போல (4) அலங்காரப்பொம்மையாய்

8. களைப்பு மிகுதியால் அவன்.....கொண்டான்.
(1) அனந்தல் (2) சோர்துயில் (3) கோழி உறக்கம் (4) சிறுதூக்கம்

9 இன்று வெளிவரும் சில. கவிதைகள் .....இல்லாத வெறும் சொற் கூட்டங்களாக விளங்குகின்றன.
(1) வெளியீடு (2) குறியீடு (3) உள்ளீடு (4) இடையீடு

10. அரசாங்க சேவை நியமனங்கள் பற்றிய பொது விதிகள் .....பிரசுரிக்கப்படும்.
(1) சுற்றுநிருபத்தில் (2) கையேட்டில் (3) வர்த்தமானியில் (4) விண்ணப்பத்தில்

11. மனம், வாக்கு, காயம் எனப்படுபவை
(1) முப்பழம் (2) முக்காலம் (3) மும்மலம் (4) முப்பொறி

12. திறப்பின் கூட்டத்தைக் குறிக்கும் பெயர்
(1) கோர்வை (2) கோவை (3) குவியல் (4) கும்பல்

13. மயில் அகவும் என்பது போல புறா
(1) குறுகுறுக்கும் (2) கத்தும் (3) இரையும் (4) கதறும்

14. தலைவனும் தலைவியும் சுற்றத்தாரறியா வகையில் களவிற் செய்யும் மணம்
(1) காந்தருவம் (2) சுயம்வரம் (3) திருட்டுத்தாலி (4) கைக்கிளை

15. வியாபார நிறுவனங்களில் முடிவான இலாப நட்டக் கணக்கு
(1) பேரேடு (2) வருமானம் (3) ஐந்தொகை (4) உபரித்தொகை

● பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

16. "வேலைக்கள்ளிக்கு பிள்ளைப் பராக்கு" என்னும் பொருள் அமைந்த மற்றொரு பழமொழி
(1) எடுக்கிறது பிச்சை, ஏறுவது பல்லக்கு.
(2) துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்.
(3) ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?
(4) நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாட்டு.

17. "முருக்குப் பெருத்துத் தூணுக்கு உதவுமா?" என்னும் பழமொழியின் கருத்து.
(1) முருக்க மரம் வைரம் இல்லாதது.
(2) முருக்க மரம் பாரம் தாங்காது.
(3) தோற்றத்தைக் கொண்டு வலிமையை அறிய முடியாது.
(4) தோற்றத்துக்கு ஏற்ற வலிமை தேவை.

18. கூலிக்கு மாரடித்தல் என்ற மரபுத் தொடரின் கருத்து
(1) கூலிக்கு வேலை செய்தல் (2) கூலி பெற்றுக் கொண்டு மார்பில் அடித்தல்.
(3) கூலிக்கேற்ற வேலை செய்தல். (4) வேண்டா வெறுப்பாக வேலை செய்தல்.

19. வறுமையால் வாடிய குடும்பம் முயற்சியால் தலையெடுத்தது. தலையெடுத்தல் என்னும் மரபுத் தொடரின் பொருள்
(1) தலைதூக்கல் (2) முன்னேறுதல் (3) வெளிப்படல் (4) தலைகொடுத்தல்

20. எசமான் வேலைக்காரனைப் பம்பரம் ஆட்டினார். பம்பரமாட்டல் என்றால்
(1) அலைக்கழித்தல் (2) அடித்தல் (3) தட்டிக்கொடுத்தல் (4) விளையாடுதல்

● பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

21. கோப்பையில் சோறு இருந்தது. கோப்பை என்பது
(1) மலையாள மொழி (2) போர்த்துக்கேய மொழி
(3) ஒல்லாந்த மொழி (4) பிரெஞ்சு மொழி

22. ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் வராத வாக்கியம்
(1) வீரத்தில் சிறந்தவன் (2) கொழும்பின் வடக்கு நீர் கொழும்பு
(3) பாடசாலையின் விலகினான். (4) பொந்தில் வாழும் குருவி

23 பின்வருவனவற்றில் மொழிக்கு முதலில் வரும் மெய்யெழுத்துக் கூட்டம்
(1) க்,ம்,வ் (2) ற்,ட்,ர் (3) ண்,ன்,ல் (4) ற்,ன்,ர்

24. ஆற்று நீர் சலசல என்று ஓடியது.
(1) அடுக்குமொழி (2) இரட்டைமொழி (3) இணைமொழி (4) மரபுத் தொடர்

25. பின்வருவனவற்றில் வந்த குற்றியலுகரச் சொல்
(1) நெல்லு (2) கதவு (3) ஆண்டு (4) வாயு

26. பின்வருவனவற்றுள் பயனின்மைப் பொருளில் வரும் இடைச்சொல்
(1) மற்று (2) மன் (3) தோறும் (4) வாளா

27. கோபாலன் இறையடி துஞ்சினார். இதில் வரும் துஞ்சினார் என்பது
(1) குழூஉக்குறி (2) மங்கலம் (3) இடக்கரடக்கல் (4) மரூஉ

28. "மரல்கரி காத்தளித்த மாலுடைய மாலை சூழ்
மரல் வரைத்தேன் ஆதரித்த மாலையார் - மால்இருள் சூழ" எனத் தொடர்ந்து வரும் பாடல் பின்வருவனவற்றுள் என்ன அணி?
(1) உவமைஅணி (2) சொல்லின் வருநிலையணி
(3) தற்குறிப்பேற்றஅணி (4) உருவகஅணி

29.. பொற்றொடி என்பது
(1) வினைத்தொகை (2) உவமைத்தொகை (3) உம்மைத்தொகை (4) அன்மொழித்தொகை

30. இரு நோக்கு இவளுண் கண் உள்ளது. இது
(1) எண் வழுவமைதி (2) திணை வழுவமைதி
(3) பால் வழுவமைதி (4) இட வழுவமைதி

- பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றினதும் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

31. பழங்கள் எல்லாம்
(1) நல்லதாய் இருந்தது (2) நல்லதாய் இருந்தன
(3) நல்லனவாய் இருந்தன (4) நல்லனவாய் இருந்தது

32. பொய்யுங், களவும் நன்மை
(1) தராது (2) தரவில்லை (3) தரா (4) தரும்

33. நாரைக் கூட்டம் வயல் வரம்பில் நேற்று
(1) இருந்தன (2) இருக்கும் (3) இருந்தது (4) இருந்தார்கள்

34. நானும் நீயும் அவனும் சிரமதானப் பணி
(1) செய்தாய் (2) செய்தோம் (3) செய்தார்கள் (4) செய்தான்

35. நாட்டார் பாடல்களில் இடம் பெறும் உவமைகள் எளிமையும் அழகும்
(1) நிறைந்தனவையாகக் காணப்படுகின்றன (2) நிறைந்ததாகக் காணப்படுகின்றன.
(3) நிறைந்ததாகக் காணப்படுகின்றது. (4) நிறைந்தனவாகக் காணப்படுகின்றது

- பின்வரும் செய்யுள்களை வாசித்த பின்னர் கீழ் உள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(1) காலைப் பொழுதில் விழித்துமே - தன்
கடமைகள் யாவும் முடித்துமே
மேலைப் பரம் பொருள் சேவடி - மிக்க
வேட்கையோடும் பணிந்தேத்துவான்.

(2) கையினில் மண்வெட்டி கொண்டுமே - உயிர்க்
காதலியானவள் பின் வர
வெய்யில் எழுந்திடு முன்பு அவன் - தன்
விளை நிலம் நாடிப் புகுவனே!

(3) ஏழை எளியவர் வாழவே - அன்பு
என்றுஞ் சொரிந்திடும் ஈகையான்
கூழெனினும் பிறர்க்கீந்தலால் - தான்
குடித்தறியாக் குணக் குன்றன்.

36. இப்பாடல்களில் சிறப்பிக்கப்படுபவன் செய்யும் தொழில்
(1) விவசாயம் (2) கோயில் தொண்டு (3) மீன்பிடி (4) சுரங்கத்தொழில்

37. கடைசிச் செய்யுளில் இவன் பற்றிச் சிறப்பித்துக் கூறப்படும் பண்பு
(1) அதிகாலையில் எழுதல் (2) இறைவனைத் துதித்தல்
(3) கடின உழைப்பு (4) கொடை கொடுத்தல்

38 குணக்குன்று என்பது
(1) உவமையணி (2) உருவகஅணி (3) தற்குறிப்பேற்றஅணி (4) தன்மையணி

39. ஏழை எளியவர் என்பது
(1) இணைமொழி (2) இரட்டைக்கிளவி (3) அடுக்குத்தொடர் (4) அடுக்கிடுக்குத்தொடர்

40. சேவடி என்பது,
(1) உவமைத்தொடர் (2) உம்மைத்தொடர் (3) பண்புத்தொகை (4) அன்மொழித்தொகை

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ் மொழியும் இலக்கியமும் II

புதிய பாடத்திட்டம் - மாதிரி வினாத்தாள் - 5

இரண்டு மணித்தியாலம்

1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக.

(அ) இயற்கை அன்னை தரும் இனிய காட்சிகள் பல. அவற்றுள் ஒரு இனிய காட்சி ஒன்றின் வருணனை.

(ஆ) "பழந்தமிழர் கலைகள்" விளக்கக் கட்டுரை.

(இ) ஒரு நாள் மாலையில் நான் பாடசாலையினின்றும் வீடு நோக்கி வீதி வழியாகச் சென்றேன். அவ் வீதியில் ஒரு வளைவிருந்தது. அது டகர வடிவில் அமைந்திருந்தது. அதனால் அபாயகரமானது. அப்பொழுது என்னைக் கடந்து ஒரு மோட்டார் வண்டி மிக வேகமாகச் சென்றது. அடுத்த கணம் "படார்" என்றொரு பெருஞ் சத்தங் கேட்டது..... இந் நிலைமையில் பின் நடந்தவற்றையும் உமது அனுபவத்தையும் உள்ளடக்கிய ஒரு கற்பனைச் சித்திரம்

(ஈ) "கலைகளின் வளர்ச்சியில் தொலைக்காட்சியின் பங்கு" - விமர்சனக்கட்டுரை.

2. கீழே தரப்பட்டுள்ள அ, ஆ என்னும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் சுருக்கத்தை 15-20 சொற்களில் அமையக் கூடியவாறு வேறு வேறாக எழுதுக.

(அ) எழுத்துக்களால் சொல்லும், சொற்களால் மொழியும் அமைகிறது. மொழி வளர்ச்சியின் அளவு கோலைக் கொண்டே சில சமயம் அம்மொழி பேசும் மக்களின் மன வளர்ச்சியும் வாழ்க்கை முன்னேற்றமும் கணிக்கப்படுவதும் உண்டு. ஏனெனில் மக்களின் வாழ்க்கைச் சூழல், சிந்தனைத்திறன், முயற்சி வேகம் ஆகியவற்றை அடியொற்றியே அவர்களின் முன்னேற்றம் அமையும். அம் முன்னேற்றத்திற்கு எல்லா வகையிலும் வேக முடுக்கியாக இயங்கி வருவது மொழியும், அம்மொழியின் வளர்ச்சிக்கு ஆதாரமான சொற் பெருக்கமும் ஆகும். வளர்ச்சிப் போக்கில் புதிய கருத்தையோ அல்லது உணர்வையோ ஏதேனுமொரு சொல்வடிவில் மனிதன் மற்றவர்கட்கு உணர்த்தும் புதிய சொல், காரண அடிப்படையில் அமைந்த சொல்லாகவோ அல்லது அடையாளங் காட்டும் இடுகுறிச் சொல்லாகவோ அமையும்.

(ஆ) "மற்றவர்கள் என்ன இடையூறு செய்தாலும் சரி என் கணவனுக்காக என் வாழ்க்கையைத் தியாகம் செய்வேன்" என்று வாழும் சிறந்த மனைவியைப் போல "மற்றவர்கள் எங்கள் வாழ்க்கையைக் கெடுக்க எவ்வளவு முயன்றாலும் சரி என் மனைவிக்காக என் வாழ்க்கையைத் தியாகம் செய்வேன்" என்று வாழும் உயர்ந்த கணவனைப் போலக் காந்தி சமய நெறிக்காகத் தம் வாழ்க்கையைத் தியாகம் செய்தார்.

3. பின்வரும் உரை நடைப்பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

நாற்பது அல்லது ஐம்பது வருடம் வாழ்ந்த மனிதனையும் நானூறு வருடமாக மறைய வழி தெரியாமல் திண்டாடும் கருங்கல் மதிலையும் ஒன்றாக வைத்து "இவன் நீர் மேற் குமிழியாய் மறைந்து போனான். சுவரோ நிலைத்து நிற்கிறது. இன்னும் குறைந்தது நானூறு வருடங்களுக்கு நிற்கும். ஆகவே மனிதன் வாழவில்லை. மதில் தான் வாழுகிறது."என்று யாராவது சொல்வார்களா? எவ்வளவு காலம் இருந்தோம் என்பதைக் கொண்டன்று, எப்படி இருந்தோம் என்பதைக் கொண்டே வாழ்ந்தோமோ, இல்லையா என்பதை நிருணயிக்க வேண்டியுள்ளது. எவ்வளவு காலந்தான் நின்ற போதிலும் சுவரை வாழ்ந்ததாக நாம் கருதவில்லை. அது வாழவில்லை இருக்கிறது. மனிதனோ வாழ்கிறான். அவனுள்ளே உணர்ச்சிகளும் கருத்துக்களும் எண்ணங்களும் ஊற்றெடுத்துப் பெருகி, வெள்ளக் காடாய் மண்டி விடுகின்றன.

1. இப்பந்தியில் கூறப்பட்டிருக்கும் பிரதான கருத்து யாது?
2. சுவர் வாழ்வதில்லை என்பதற்கு இங்கு என்ன காரணம் கூறப்படுகின்றது?
3. "நீர் மேற்குமிழி" என்ற மரபுத்தொடர் உணர்த்தும் பொருள் யாது?
4. பின்வரும் சொற்களின் பொருளை எழுதுக.
   (1) உணர்ச்சி (2) எண்ணம் (3) வருடம்
5. பின்வரும் சொற்களின் எதிர்ப்பொருளை எழுதுக.
   (1) காலம் (2) திண்டாடும்

4. சமாதானத்தின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தி நாட்டு மக்களிற்கு ஓர் துண்டுப் பிரசுரம் வெளியிடுக.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ் மொழியும் இலக்கியமும் - III

புதிய பாடத்திட்டம் - மாதிரி வினாத்தாள் - 5

இரண்டு மணித்தியாலம்.

பகுதி I

- 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கும் விடை தருக.

1. பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) "அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என் பால்
எழுந்தருள் பெரியோய்! ஈண்ட அமுது செய்தருள்க!"
(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்குக் கூறப்பட்டது?
(iii) எச் சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?
(iv) இக் கூற்றில் இடம் பெறும் பண்பு யாது?

(ஆ) "நாசமாப் போன மொய்தீன் கடப் போயில
எப்பவும் சருகு தான்"
(i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்குக் கூறப்பட்டது?
(iii) எச்சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?
(iv) போயில என்பதன் திருத்தமான வடிவம் யாது?

(இ) "பெண்டிற் தமையுடையீர்! பெண்களுடன் பிறந்தீர்!
பெண் பாவமன்றோ? பெரிய வசை கொள்வீரோ?
கண் பார்க்க வேண்டும்!"
(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்குக் கூறப்பட்டது?
(iii) எச் சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?
(iv) இக்கூற்று இடம் பெறும் நூல் எது?

(ஈ) "அமுத சுரபியைக் கொண்டு மக்களுடைய பசியைப் போக்குவாயாக!"
(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்குக் கூறப்பட்டது?
(iii) எச் சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?
(iv) அமுத சுரபி தோன்றிய இடம் யாது?

(உ) "சீதை நாயகன், வேறுள்ள தெய்வநாயகன், நீ செய்யும் வேதநாயகன், மேல்நின்ற விதிக்குநாயகன், தான் விட்ட தூதன் யான்"
(i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்கு கூறப்பட்டது?
(iii) எச் சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது?
(iv) இங்கு நாயகன் எனக் குறிப்பிடப்படுபவன் யார்?

2. பின்வரும் செய்யுள்களின் பொருளை இக்கால உரை நடையில் எழுதி, அவை ஒவ்வொன்றிலும் கோடிட்ட இடங்களிலுள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.

(அ) தேர்ச்சியிற் றுணைவர் மற்றுஞ் சேனையர் கத்தர் மன்னர்
சார்ச்சியினாப்பண் வெவ்வேற் றலைவனு முளத்தின் மிக்கால்
நேர்ச்சியின் முகத்துக்கஞ்ச நிரையிடை நிலவு கான்று
சேர்ச்சியின் வந்த திங்களென நபி திகழ்ந்து சொல்வார்.

(ஆ) உடைக் குலத்தொற்றர் தம் பால் உயிர் கொடுத்து உள்ளக் கள்ளம்
துடைத்துழி, வருணன் வந்து தொழுதுழித் தொழாத கொற்றக்
குடைத் தொழில் உம்பி கொள்ளக் கொடுத்துழி வேலை கோலி
அடைத்துழி வந்திலாதான் இனி வர ஐய முண்டோ?

(இ) நமக்கு முன்பிங் குணவிலை யாயினும்
இமக்குலக்கொடி பாகர்க்கினியவர்
தமக்கு நாம் இன் அடிசில் தகவுற
அமைக்கு மாறெங்ஙனே அணங்கே என.

(ஈ) வெம்படை யெறிந்து சென்னி விளங்கு பொன்முடியும் தாழ்த்துச்
செம்படை விடுத்துக் கால்கை திடுக்கொடு நருக்கல் கொண்டு
கும்பிய சீற்ற மாற்றிக் கைமையிற் குனிந்து பின்ன
ரம்புய்ன் மசகத் தாக்கி னரசனு மோடினானால்.

(உ) அரவு கடித்து அரசிளங்கோ இறந்தான் என்பது
அறியாமல் வெகுண்டு இறைவன் ஆரே இந்த
இரவுதனில் பிணஞ்சுடுவார் அறிவோம் என்னா
எழுந்திருந்து விரைந்து ஓடி "ஏடி மூடி!
தர உரிய பொருள் எனக்குத் தராதே நீ
தனியே இப்பனியிருளில் சவம் கொணர்ந்து
கரவின் அழல் சுடுவது உனக்கு அடைவோ?" என்னாக்
கால் வீசிக் கான் முளையை எடுத்து எறிந்தான்.

3. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.
(அ) கம்பர் தருமத்தை விளக்கக் கையாண்ட உவமை.
(ஆ) சகுந்தலையின் குணவியல்புகள்.
(இ) ரஸாக் கேட்ட கேள்வி சகீனாவின் மனதில் ஏற்படுத்திய பாதிப்பு.

4. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினுக்கு விடை தருக.
(அ) "மலையகத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினைகளை முடியாத கதைகளில் காணலாம்" - ஆராய்க.
(ஆ) "வீட்டுக்கு வந்த சிவனடியாரை அமுது உண்பிப்பதற்காக இளையான் குடிமாற நாயனாரும் பத்தினியாரும் செய்த ஆயுத்தங்கள்" - விளக்குக.
(இ) "சுவிஷேகனைக் கண்டதும் ஆத்துமவிசாரி கூறியவை" - விளக்குக.

● 5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் 1 வினாவுக்கு மட்டும் விடை தருக

5. (அ) தனது மங்கல நாண் சுடலை காப்போனுக்குத் தெரிந்து விட்டதே என்று அறிந்த சந்திரமதி பட்ட துயரை விளக்குக.
(ஆ) இறந்தது தனது மகன் என்பதையறிந்த அரிச்சந்திரன் கூறியவற்றை எழுதுக.

6. (அ) இபுறாஹிம் நபி - நமுறூது உரையாடல் புலப்படுத்தும் இறைவனின் பெருமையை விளக்குக.
(ஆ) நமுறூதின் படை வீரர்களைக் கரிய மேகம் சூழ்ந்த காட்சியை விபரிக்க.

7. (அ) ஒளவையார் முதல் இரண்டு பொற்கிழிகளும் அறுந்து விழும் வண்ணம் பாடிய செய்யுள்களின் கருத்தை எழுதுக.
(ஆ) அடுத்து இரு பொற்கிழிகளும் அறுந்து விழும் வண்ணம் பாடிய பாடல்களின் கருத்தை எழுதுக.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ் மொழியும் இலக்கியமும் I

புதியபாடத்திட்டம் - மாதிரி வினாத்தாள் - 5

பகுதி - I **விடைகள்**

01. 2	11. 4	21. 2	31. 3
02. 1	12. 2	22. 4	32. 3
03. 4	13. 1	23. 1	33. 3
04. 3	14. 1	24. 2	34. 2
05. 1	15. 3	25. 3	35. 1
06. 4	16. 4	26. 4	36. 1
07. 1	17. 3	27. 2	37. 4
08. 2	18. 4	28. 2	38. 2
09. 3	19. 2	29. 4	39. 1
10. 3	20. 1	30. 1	40. 3

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ் மொழியும் இலக்கியமும் II

மாதிரி வினாத்தாள் - 5 **விடைகள்**

1. (அ) காலைக்காட்சி

இயற்கை அன்னை தரும் இனிய காட்சிகள் பல. அவற்றுள் காலைக்காட்சி மிக இனிய காட்சி ஆகும். காலைக்காட்சி உள்ளத்துக்கு மிக்க அமைதியும் பேருவகையும் தரும். காலைக்காட்சி மக்களுக்கு மட்டுமன்று உயிரினங்கள் அனைத்திற்கும் பேருவகை தருவதாகும்.

"யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே" என்பது போலச் சூரியன் கிழக்குத் திசையின் அடிவானத்தை அடையும் முன்பே அதன் ஒளி கிழக்கு வானில் பரந்து தோன்றும். அப்போது உலகை மறைத்திருந்த இருள் சிறிது சிறிதாக நீங்கும். சூரியனின் வரவு கண்டு சேவல்கள் கூவும். காகங்கள் கரையும். பல்வகைப் பறவைகளும் பல்வகை ஒலிகளை எழுப்பும். கோயில்களில் மணிகள் ஒலிக்கும். சமய அறிஞர்கள் தத்தம் வேதங்களை ஓதுவர்.

மக்கள் துயிலுணர்ந்து எழுவர். அடியவர்கள் இறை துதிகளைப் பாடுவர். மாணவர் தம் பாடங்களைப் படிப்பர். வீதிகளில் வண்டிகள் விரையும். மக்கள் தம் காலைக் கடமைகளில் ஈடுபடுவர். சந்திரன் தன் ஒளியை இழக்கும். விண்மீன்கள் மறையும். சூரியக் கோளம் தங்கப்பிழம்பு போலக் கிழக்குத் தொடுவானத்தில் இருந்து மேல் எழும்.

சூரியன் வரவு கண்டு மகிழ்வன போலக் கடலின் அலைகள் ஒலி எழுப்பும். மென் காற்று வீசிக்கொண்டிருக்கும். அனைத்து இடங்களிலும் பல்வகை மலர்களும் மலர்ந்து மகிழ்வூட்டும். குளங்களிற் தாமரைகள் மலர்ந்திருக்கும். வண்டுகள் மலர்களை நாடிச் சென்று இன்னிசை எழுப்பும். வானம் பேரழகோடு காட்சி தரும். செடி கொடிகளும் மரங்களும் பச்சைப் பசேல் எனக் காட்சி தரும்.

மகளிர் தம் மனைகளைச் சுத்தம் செய்து கோலமிடுவர். சில வீடுகளிற் பசுக்களில் இருந்து பால் கறப்பர். சிலர் நீராடிக் கடவுளைத் தொழுவர். பறவைகள் தம் உணவு தேடிப் பறந்து செல்லும். மந்தைகள் புல் நிலங்களை நாடிச் செல்லும். தொழிலாளர்கள் தம் தொழில் நிலையங்களுக்குச் செல்வர். இரவு வேளையில் கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் தம் வள்ளங்களோடு வீடு திரும்புவர்.

காலைக்காட்சியினால் உள்ளமும் உடலும் பெரும் நலங்களைப் பெறுகின்றன. இறைவனைத் தியானிப்பதற்கும் கல்வியைக் கற்பதற்கும் புதிய ஆக்கங்களைச் சிந்தித்துத் திட்டமிடுவதற்கும் மிக வாய்ப்பான காலமாகும். வேத கால முனிவர்கள் அதிகாலையை வைகை என்னும் தெய்வமாகத் துதித்துப் பாடல்களைப் பாடியுள்ளனர்.

காலைக்காட்சிகளைப் பற்றிப் புலவர்கள் பலர் பல வகைகளிற் பாடிப் போற்றியுள்ளனர். கூவின பூங்குயில்கள், கூவின கோழி, குருகுகள் இயம்பின. இயம்பின சங்கம், ஓவின தாரகை, ஒளி ஒளி உதயத்து ஒருப்படுகின்றது எனவும், "அருணன் இந்திரன் திசை அணுகினன், இருள்போயகன்றது. உதயநின் மலர்த் திருமுகத்தின் கருணையின் சூரியன் எழு எழு நயனக் கடி மலர் மலரமற்றண்ணல் அங்கண்ணாம் திரள் திரை அறுபதம் முரல்வன" என மணிவாசகப் பெருமான் பாடியுள்ளார். "அருணன் உதித்தனன் அம்புயம் விண்டன, அளிகளும் மொய்த்தன பாராய், கண்ணே நீ எழுந்தோடி வாராய்" எனக் கவி மணி தேசிக விநாயகம்பிள்ளை பாடி மகிழ்கிறார். இயற்கைக் காட்சிகளைக் கண்டு அவற்றின் பயன்களைப் பெறவேண்டும் என மகாகவி பாரதியார் அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்.

(ஆ) பழந்தமிழர் கலைகள்

கலைகளும் தொழில்களும் ஒன்றோடு ஒன்று தழுவி உள்ளவை. கலைகள் உயரறி வின் செயல்கள். தொழில்கள் உடம்பின் முயற்சிகள். கலைகள் சிறப்பாக விளங்கும் போது தான் தொழில்களும் சிறப்பாக விளங்கும். முதலில் கலைகள் அவற்றுக்குத் தகுதியானவர்களிடமிருந்து வெளிப்படும். அதன் பின் அவர்கள் காட்டுகின்ற குறிப்புகளின் படி மற்றவர்கள் அக்கலைநுட்பம் பொருந்தத் தொழில் செய்வார்கள். கலைகளும் தொழில்களும் நாட்டுக்கு இன்றியமையாதன. அவை விளங்கியிருக்கும் நாடே செல்வம் நிறைந்த நாடாகும்.

பழந்தமிழ் மக்கள் கலைகளினதும் தொழில்களினதும் இன்றியமையாமையைத் தெரிந்து அவற்றைப் போற்றிப். பெருமை பெற்றனர். அதனாற் கலைஞர்களும் தொழிலாளர்களும் தத்தம் கலையருமைகளையும் தொழிலருமைகளையும் நன்றாகப் பயின்று வந்தனர். இதனாற் கலைகளுக்கும் தொழில்களுக்கும் தனித்தனி மக்கட் பிரிவினர் ஏற்பட்டனர். கலையறிஞர் களுக்கும் தொழிலாளர்களுக்கும் இருப்பிடமாகத் தனித்தனியாகச் சில சிற்றூர்கள் ஏற்பட்டன. நகரங்களில் ஒவ்வொரு வகையினருக்கும் தனித்தனி வீதிகள் ஏற்பட்டன.

பழந்தமிழரது கலையுணர்ச்சியின் சிறப்பை அறிய தமிழ்ச்சொற்பிறப்பு ஆராய்ச்சி துணை புரிகிறது. வள்ளுவன், பெருஞ்சாத்தனார், நெடுங்கண்ணன், பெருங் கொல்லனார் என்பன பண்டைப் புலவர்களின் பெயர்கள். இப் பெயர்களால் முறையே அரசியற்கலை, போர்க்கலை, நாடகக்கலை, சீற்பக்கலை என்பவற்றில் சிறந்து விளங்கியவர்கள் தமிழ் நாட்டில் இருந்தனர் என்பது தெரிகிறது. தமிழில் உள்ள மணம் என்னும் சொல்லின் பொருளை ஆராய்ந்தால் மண்ணிலிருந்து மணம் தோன்றுகிறது என்னும் உண்மை வெளிப் படுகிறது. இதே போலத் தமிழிலுள்ள பெயர்களை ஆராயின் பண்டைத் தமிழ்நாடு தக்க கலையுணர்வில் சிறந்து விளங்கியது என்பதற்குத் தமிழ் மொழியே சான்றாக விளங்குகிறது. தமிழ் முன்னோர்களது கலை. தொழில் உணர்வுகள் யாவும் தமிழ் மொழியில் நிறைந்துள்ளன.

மெய்யுணர்வுக்கலை, இன்பவுணர்வுக்கலை, மெய்யுணர்வுப்பொருட்கலை, இன்பவுணர்வுப் பொருட்கலை எனக் கலைகள் நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படும். மெய்யுணர்வுக் கலை என்பது சமயம், மெய்பொருள் ஆகும். இன்பவுணர்வுக்கலை என்பது ஓவியம், சிற்பம், போன்றவை. மெய்யுணர்வுப்பொருட்கலை ஐம்முதற் பொருள்களின் ஆராய்ச்சி களையும் குறிக்கும்.

தமிழ் முன்னோர் கலைகளைக் கூர்மையாக ஆராய்ந்து அறுபத்துநான்காகப் பாகு படுத்தியுள்ளனர். அதனாலேயே கலைமகள் அறுபத்து நான்கு கலைகளுக்கும் தலைவி எனக் கூறினர். அறுபத்து நான்கு கலைகள் ஒவ்வொன்றும் பின்பு அறுபத்து நான்கு பிரிவு களாக இருந்தன. எடுத்துக் காட்டாக அரசியற்கலை என்னும் பிரிவில் அக்கர இலக்கணம் முதலாக அறுபத்து நான்கு கலைகள் கூறப்படுகின்றன. இவை சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு தமிழ் நாட்டில் கலையுணர்சசி பெரும் பரவலாக விரிந்து விளங்கியிருந்தது.

(இ) நான் கண்ட வீதி விபத்து

ஒரு நாள் மாலையில் நான் பாடசாலையினின்றும் வீடு நோக்கி விதி வழியாகச் சென்றேன். அவ் வீதியில் ஒரு வளைவிருந்தது. அது டகர வடிவில் அமைந்திருந்தது. அதனால் அபாயகரமானது. அப்பொழுது என்னைக் கடந்து ஒரு மோட்டார் வண்டி மிக வேகமாகச் சென்றது. அடுத்த கணம் "படார்" என்றொரு பெருஞ்சத்தங் கேட்டது. நான் அந்த இடத்தை நோக்கி விரைந்து சென்றேன்.

அங்கே நான் கண்ட காட்சி என்னைத் திடுக்கிடச் செய்தது. சிறிது நேரம் திகைத்து நின்றேன். அத்தகைய பயங்கரக் காட்சி. நான் இதற்கு முன் அத்தகைய பயங்கரக் காட்சியைக் கண்டதில்லை. அந்த அபாயகரமான வளைவில் மோட்டார் வண்டி வேகத்துடன் திரும்பிய அதே சமயம் மறு பக்கத்திலிருந்து வசு வண்டி ஒன்று வந்தது. ஒன்றை ஒன்று

காணவில்லை. மிக அண்மையிலே தான் அவை ஒன்றை ஒன்று கண்டன. மோட்டார்ச் சாரதியால் தன் வண்டியின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடிய வில்லை. வசுச் சாரதியோ மோட்டார் வண்டியைக் கண்டதும் வசு வண்டியை நிறுத்தினான். ஆனால் வந்த வேகத்தில் மோட்டார் வண்டி வசு வண்டியில் மோதி விட்டது. இந்த விபத்து கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்தது.

வசு வண்டி பயில்வானைப் போன்று கம்பீரமாக நின்றது. மோட்டார் வண்டி மிகுந்த சேதமடைந்திருந்தது. வசு வண்டியின் முன் பக்கத்தில் சில இடங்களில் நசிவுகள் ஏற்பட்டி ருந்தன. ஆனால் எந்திரத்தில் எவ்வித பழுதுமில்லை. மோட்டார் வண்டியோ திருத்த முடியாத வகையில் சேதமடைந்திருந்தது. அதன் விளக்குகளாகிய கண்கள் உடைந்து குருடாய் விட்டன. எந்திரமுள்ள முற்பகுதி நசிந்தும் உடைந்தும் உருக்குலைந்து காணப்பட்டது.

வசு வண்டியில் இருந்த பிரயாணிகளுக்கு எவ்வித காயமுமில்லை. ஆனால் மோட்டாரிற் பிரயாணஞ் செய்தவர்களில் மூவர் அபாயகரமான நிலையில் இழுத்தெடுக்கப்பட்டனர். அம்மூவரில் இருவருக்கு மண்டையிற் பலத்த அடி விழுந்திருந்தது. அதனால் அவர்கள் அறிவு நினைவற்றுப் பிணம் போலக் கிடந்தனர். ஒருவருக்குக் கால்களில் ஒன்று முறிந்து தொங்கியது. அவர் இரத்த வெள்ளத்திற் கிடந்து துடித்தார். வேதனை தாங்காமல் அலறினார். ஆனால் ஒருவர் மாத்திரம் தெய்வச் செயலாய் ஆபத்தின்றித் தப்பித்தார்.

அப்பொழுது அங்கே மக்கள் பெருந்திரளாகக் கூடிப் பேசிக் கொண்டிருந்தனர். ஒருவராவது உதவி செய்ய நினைக்கவில்லை. அங்கு நிற்பவர்கள் செய்வன சரியெனத் தோன்றவில்லை. அதனால் நான் மிக விரைவாக அயலிலுள்ள நகர் காவலர் நிலையத்துக்கு ஓடினேன். அவர்களுக்கு அந்த விபத்தைப் பற்றி அறிவித்தேன். அவர்கள் தாமதமின்றி அந்த இடத்துக்கு வந்தனர். காயமடைந்தோரை வைத்தியசாலைக்கு அனுப்பினர். விபத்தைப் பற்றிய எல்லாக் குறிப்புக்களையும் குறித்துக் கொண்டனர். அந்த விபத்தை இப்போது நினைத்தாலும் என் உடல் நடுங்குகிறது.

(ஈ) "தொலைக்காட்சியும் கலை வளர்ச்சியும்."

விஞ்ஞான உலகம் பெற்றுத் தந்த வியத்தகு சாதனங்களுள் தொலைக்காட்சியும் ஒன்றாகும். நவீன சாதனமாக விளங்கும் தொலைக்காட்சியில் இன்று உலக விவகாரங்கள், கலை பண்பாட்டு நிகழ்ச்சிகள், விஞ்ஞான விந்தைகள் என்பவற்றைக் கண்டு இரசிக்கக் கூடியதாகவுள்ளது. தொலைக்காட்சி செவிப்புலனுக்கும், கட்புலனுக்கும் ஒருங்கே விருந்தளி க்கும் வெகுசனத்தொடர்பு ஊடகங்களில் ஒன்றாக முக்கியம் பெற்று விளங்குகின்றது. தொலைக்காட்சியில் நமது பண்பாடு, கலை, கலாச்சாரங்களையும் கண்டு கொள்ள வாய்ப் புண்டாகின்றது. கலையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் சாதனமாகவும் தொலைக்காட்சி விளங்குகின்றது.

இன்று தொலைக்காட்சி பார்ப்பவர்கள் அறிவியல் விடயங்களை அறிவதில் ஆர்வம் செலுத்துவதில்லை.சினிமா, தொலைக்காட்சி நாடகங்களைப் பார்ப்பதிலும், தொலைக்காட்சியை வெறும் பொழுது போக்கும் கருவியாகவே பயன் படுத்துகின்றனர். கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், நாட்டியங்கள் போன்றன பண்பாட்டுப் பரிவர்த்தனைக் கோலங்களாகும். தொலைக்காட்சியில் கிராமிய நாட்டுக் கூத்துக்கள், நடனங்கள், நாட்டிய நாடகங்கள் போன்றவற்றை ஒளிபரப்ப வேண்டும். புதிய சமுதாயத்துக்கு பயன் தரத்தக்க வகையில் தொன்மைக் கலைகளை ஒளி பரப்ப வேண்டும். நடிப்புக்கலை, அரங்குக்கலை, ஒப்பனைக் கலை, பேச்சுக்கலை, ஆடற்கலை, இசைக்கலை, என்பவற்றுக்குத் தொலைக்காட்சி முக்கியத்துவமளிக்க வேண்டும்.

இன்று தொலைக்காட்சியில் தரமான காட்சிகளும், தரமற்ற காட்சிகளும் காண்பிக்கப் படுகின்றன. தொலைக்காட்சி நிறுவனங்கள் வருமானத்தை ஈட்டும் நிகழ்ச்சிகளுக்கே முதன்மையளிக்கின்றன. "விளம்பரமின்றேல் வியாபாரமில்லை" என்ற நோக்கிலேயே தொலைக்காட்சி நிறுவன உரிமையாளர்கள் செயற்படுகின்றனர். தொலைக்காட்சியில் நுண் கலை வளர்ச்சிக்கு இடமளிக்கப்பட வேண்டும். சிற்பம் செதுக்கும் சிற்பி தனது நுண்திறமை களையெல்லாம் தொலைக்காட்சியில் விளக்கி விபரிக்க முடியும். வண்ணங்கள், கற்சிலைகள், எழிலமைப்புக்கள் நுணுக்கமான சிற்ப வேலைப் பாடுகள் என்பவற்றை யெல்லாம் சாதாரண மக்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் அவற்றை விளக்க வேண்டும்.

நெல். பருப்பு, பயறு, உழுந்து என்பவற்றைக் கொண்டு மனித உருவங்களைப் படைக்கும் கலை இலங்கையில் உள்ளது. ஆனால் தொலைக்காட்சியில் அவை பற்றிய விளக்கமும், விவரணமும் இடம் பெற்றதாகத் தகவல்கள் இல்லை. இலை மறை காய் போல வாழும் கலைஞர்களின் கலைத்திறமையை வெளிக்கொணரச் சந்தர்ப்பமளிக்கப்பட வேண்டும். அபபோது தான் அறியப்படாத நம் முன்னோரது கலைத் திறமைகள் வெளிவரும். இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் கீழ்த்தரமான பாலியல் நிகழ்ச்சிகளையும் வருமானம் ஈட்டுவதற்காக ஒளி பரப்புகின்றன. இவற்றை அரசாங்கம் சட்டம் இயற்றித் தடை செய்ய வேண்டும். திட்டமிட்ட கலையறிவை வளர்க்கும் பணியில் தொலைக்காட்சி நிறுவனங்கள் ஈடுபட வேண்டும்.

2. (அ) மக்களின் வாழ்க்கையானது மொழியின் வளர்ச்சியைக் கொண்டே அளவிடப்படுவதால் மொழி ஒரு வேக முடுக்கியாக அமைகிறது. எனவே மனிதன் மனக்கருத்துக்களைப் பரிமாற இடுகுறி, காரணச் சொற்களை உபயோகிக்கின்றான்.

(ஆ) குடும்பத்தில் கணவனுக்காக மனைவியும் மனைவிக்காகக் கணவனும் தியாகம் செய்வதுண்டு. அவ்வாறே மகாத்மா காந்தி சமய நெறிக்காகத் தம் வாழ்க்கையைத் தியாகம் செய்தார்.

3. (1) நாம் வாழ்ந்த காலம் முக்கியமன்று. எப்படி வாழ்ந்தோம் என்பதே முக்கியம்.

(2) சுவருக்கு உணர்ச்சிகள், கருத்துகள், எண்ணங்கள் இருப்பதில்லை.

(3) நிலையற்ற வாழ்வு.

(4). (i) உணர்ச்சி - மெய்யுணர்வு, மயக்கம் தீர்ந்த நிலை.
(ii) எண்ணம் - நோக்கம்.
(iii வருடம் - வற்சரம், ஆண்

(5). (i) காலம் - அகாலம்
(ii) திண்டாடும் - கொண்டாடும்

4. சமாதானத்திற்கு வழி அமைப்போம்.

அன்பார்ந்த நாட்டு மக்களே!

"ஒன்றுபட்டாலே உண்டு வாழ்வு, ஒற்றுமையின்றேல் அனைருக்கும் தாழ்வு, அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பவை முது மொழிகள். இன்று நாட்டில் நிலவும் போர் நம்மை எந்தளவிற்கு வேதனை, விரக்தி என்பவற்றிற்குத் தள்ளியுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்களா? பல வருடங்களைத் தன்னுள் விழுங்கிய இந்தக் கொடிய யுத்தம் இன்னும் எத்தனை வருடங்களிற்கு நீடிக்கப்போகின்றது. சமூகத்தில் இன்று காணப்படும் பகையுணர்ச்சியும், குரோதப்பார்வையும் நீங்கி நட்புணர்வுடன் உறவாடும் நிலை ஏற்படும் நாள் எது?

மக்களே! முடிவுற்ற எதிர்கால சந்ததியினரைப் பலியெடுக்கும் போர் தேவை தானோ? சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். எனவே அனைவரும் ஒரே கூரையின் கீழ் ஒன்றிணைந்து சமாதானமாக வாழ முன் வாருங்கள். சிறந்த சமூகப் பொருளாதார கலை, கலாச்சார பண்பாடு நிறைந்த நாட்டைக் காண நீங்கள் விரும்பவில்லையா? எனவே பகை உணர்ச்சிகளையும், கருத்துப பேதமைகளையும் மறந்து அனைவரும் ஒன்றாகக் கை கோர்த்துச் சிறந்த நாட்டைக் கட்டியெழுப் புங்கள்.

எனவே மக்களே அனைவரும் சமாதானம் பிறக்க ஒன்றுபட்டு கை கோர்க்க வாருங்கள்! நாட்டில் சமாதானம் பிறக்க நாம் ஓர் அணியில் இணைவோம் வாரீர்.

செயலாளர்,
இலங்கை நல்லுறவு ஒன்றியம்
கொழும்பு.

01.01.2002

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை

தமிழ் மொழியும் இலகியமும் III

மாதிரிவினாத்தாள் - விடைகள்.

1. (அ) (i) இளையான் குடி மாறனாரால்
(ii) சிவனடியார் வேடத்தில் வந்த விருந்தினருக்கு
(iii) மனைவியார் விருந்தினரை திருவமுது செய்விப்போம் எனக் கூறியதும் மாறனார் மகிழ்ச்சியுடன் விருந்தினர் முன் சென்று அவரது துயிலை நீக்கித் திருவமுது செய்ய வருமாறு அழைத்த போது
(iv) விருந்தோம்பும் பண்பு (உபசரிக்கும் பண்பு)

(ஆ) (i) சகீனாக் கிழவியால்
(ii) தனக்குத் தானே
(iii) வெற்றிலை கூட்ட ஆரம்பித்த போது, போயிலை காய்ந்திருப்பதைக் கண்டு வெறுப்புடன் கூறியது
(iv) புகையிலை

(இ) (i) பாஞ்சாலியால்
(ii) துரியோதனன் முதலியோருக்கு
(iii) ஆடவர் நிறைந்திருந்த சபையில் பாஞ்சாலியை மான பங்கம் செய்த போது
(iv) பாஞ்சாலி சபதம்

(ஈ) (i) அறவண அடிகளால்
(ii) மணிமேகலைக்கு
(iii) மணிமேகலை அறவண அடிகளைத் தரிசித்த போது
(iv) கோமுகிப்பொய்கை

(உ) (i) அங்கதனால்
(ii) இராவணனுக்கு
(iii) நீ யார்? என இராவணன் கேட்ட போது அங்கதன் தெரிவித்தது
(iv) இராமன்

2. (அ) அனுபவம் மிக்க நண்பர்கள். மற்றும் படைவீரர்கள், தலைவர்கள், அரசர்கள், அனைவரும் கூடி இருந்த போது அக்கூட்டத்தின் நடுவே வெற்றி பெறும் வேலுடன் உள்ளத்தால் உயர்ந்தவரான, இப்றாஹிம் நபி அவர்கள், தாமரை மலர்கள் வரிசை வரிசையாகப் பூத்திருந்த இடத்தில் அம்மலர்கள் சுருங்கும் விதமாக ஒளி வீசும் சந்திரன் உதித்தது போல வந்தார்கள்.

தேர்ச்சியின் முகத்துக்கஞ்ச ..... சூரியனைக் கண்டதும் தாமரைகள் மலர்வதும், சந்திரனைக் கண்டதும் அவை வாடிச் சுருங்குவதும் இயற்கை நிகழ்வாகும். நபியவர்களின் முக ஒளி சந்திரனைப் போன்று பிரகாசித்தமையால் அங்கிருந்த தாமரை மலர் போன்ற முகமுடையோர் வாடினர்.

(ஆ) தான் எவரையும் தொழ வேண்டாத வெற்றி பொருந்திய உன் தம்பியாகிய விபூடணன் இலங்கையை ஆடசி செய்யும் தொழிலைப் பெற்றுக் கொள்ளுமாறு கொடுத்த போதும், வருண பகவான் கண்முன் தோன்றித் தன்மீது அணை கட்டும் படி வணங்கிய போதும், முயன்று கடலில் அணை கட்டிய போதும், தம் குலத்தில் பிறந்த ஒற்றர்களுடைய உயிர் களைக் கவராமல் விடுத்து, அவர்களின் மனக்கள்ளத்தைப் போக்கிய போதும் வராத அந்த இராவணன் இனி வருவான் என்று கருதச் சந்தேகமாய் உள்ளதோ?

உடைக்குலத் தொற்றர்..... இராமனின் படை வலிமை அறிந்து வருமாறு இராவணன் தன் ஒற்றர்களான சுகன,. சாரணன் ஆகிய இருவரை அனுப்பி வைத்தான். அவர்கள் வானர வடிவு கொண்டு இராமன் படையினருடன் கலந்திருந்தனர். விபீடணன் அவர்களை யார் என அறிந்து, தன் மந்திர வலிமையால் அவர்களது உண்மை வடிவைப் பெறச் செய்தான். வானரர்கள் அவர்களைத் தாக்க முயன்ற போது இராமன் தடுத்துத் தன் படை வலிமையை அவர்களுக்குக் காட்டி அதை இராவணனிடம் கூறுமாறு சொன்னான்

(இ) முன்னர் இங்கு நமக்கு உண்பதற்கு உணவில்லை என்பது உண்மையே. எனினும் இமய மலை அரசன் பெற்ற குலக்கொடியாகிய பார்வதியை இடப்பாகத்தே கொண்ட சிவனின் இனிய அடியாருக்கு நாம் இன் சுவையுணவைத் தகுந்தவாறு அமைத்தல் வேண்டும். அது செய்யும் வழி யாது? பெண்ணே! என வினாவினார்.

இமக்குலக் கொடி ..... இமயமலை பனியால் மூடப்பட்டது. இமயமலை அரசன் இமவானின் மகள் உமை. உமையம்மை கொடி போன்ற இடையையுடையவள். இவ்வாறான உமையம் மையை இடப்பாகத்தே கொண்டவர், இடப வாகனத்தில் எழுந்தருளுபவர், அடியார்க்கு இனியவர் நடராசப்பெருமான்.

(ஈ) ஆபத்தை உண்டாக்கும் படைகளை எறிந்து விட்டு, தலையில் அணிந்துள்ள பொன்னாலான முடியும் நிலத்தில் வீழ்ந்திடச், செம்மையான படைக்கலங்களை நழுவ விட்ட ஏக்கத்தினால் கை, கால்கள் நடுங்கின. இதனால் நமுறூதின் மனதிலிருந்த கோபம் நீங்கியது. அவன் இயலாமையால் குனிந்தான். அவனது அழகிய தோள்களில் கொசுக்கள் தாக்கின. நமுறூது ஓடினான்

வெம்படை யெறிந்து ..... நமுறூது மன்னன் ஆணவமிழந்து ஆற்றாமையால் ஓடினான். இதனால் அவனது தலையில் உள்ள பொன்னாலான முடியும் விழுந்தது. நமுறூது கொண்ட அவலம் விளக்கப்படுகின்றது.

(உ) அரிச்சந்திரன் பாம்பு கடித்து இறந்தது தன் மகன் என்பதை அறியாமல், கோபம் கொண்டு யார் இவ்விரவு வேளையில் பிணம் சுடுகின்றார் என்பதைப் பார்க்க ஓடி வந்தான். ஏடி "அறிவில்லாதவளே! எனக்குத் தர வேண்டிய கொள்ளித்துண்டும், காற்பணமும் தராமல் களவாக வந்து பிணத்தைச் சுடுவது சரியோ! என்று பேசிக் குழந்தையைக் காலால் எற்றி வீசினான்.

கரவின் அழல் சுடுவது..... "திருட்டுத்தனமாக நெருப்பால் பிணத்தைச் சுடுவது உனக்குத் தகுந்த செயலோ?" என்றான் அரிச்சந்திரன். இரவில் புலையனுக்குத் தெரியாது பிணத்தைச் சுட முயன்றது திருட்டுத்தனமான செயல் என்றான்.

3. (அ) தருமம் கண்ணாற் காண முடியாத பொருள். நுண்ணிய கருத்துப் பொருள். ஆனால் சந்திரனை நாம் கண்ணாற் கண்டுள்ளோம். பௌர்ணமியன்று முழுச்சந்திரனையும் ஆகாயத்தில் காணலாம். அப்பொழுது அதன் அழகை நம் உள்ளம் இரசிக்கின்றது. கற்பனையுடன் கூடிய தருமம் என்ற பொருளைக் கம்பர் சந்திரனுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றார். தருமத்தின் முகத்தைப் போன்று பூரண சந்திரன் பொலிவுடன் விளங்கிற்று. நம்முடைய கற்பனையில், அகமனதில் மட்டும் அறியப் பெற்ற தருமம், திடீரென முழுவடிவும் ஒளியும் பெற்றுக் காட்சியளிக்கின்றது. நமது கருத்தில் மட்டும் அறிந்த ஒன்றைக் கம்பர் கட்புலனுக்கு எளிதாகக் கொண்டு வருகிறார். இதனாலேயே "தருமத்தின் வதனம் எனப் பொலிந்தது. தனி வெண் திங்கள்" என்றார் கம்பர். இதன் மூலம் தருமம் பூரண சந்திரனிலும் பார்க்க மிகவுயர்ந்த இடத்தைப் பெற்று விடுகின்றது.

(ஆ) சகுந்தலை கண்ணுவ முனிவரின் ஆசிரமத்தில் வளர்ந்து வருபவள். துஷ்யந்த மன்னன் சகுந்தலையைக் கண்டு விருப்பங் கொண்டு காந்தருவ மணம் புரிகிறான். துருவாச முனிவரின் சாபத்தால் சகுந்தலையை துஷ்யந்தன் மறக்கிறான். ஆனால் அவள் துஷ்யந்தனை மறக்கவில்லை. இது சகுந்தலையின் கற்பின் மேன்மையைப் புலப்படுத்தும். துஷ்யந்தன் அவளை ஏற்க மறுக்கிறான். அவள் உனது மனைவி என்ற ஸ்தானத்தின் உரிமையை வெளிப்படுத்துகிறாள். இறுதி வரை தனது உரிமையை அவள் கைவிட வில்லை. இறுதியில் அவளிடம் துஷ்யந்தன் மன்னிப்பு கோருகிறான். அன்பு, அடக்கம், அழகு. பொறுமை, வாய்மை, நேர்மை, அநீதி கேட்டுப் பொங்கி எழும் போக்கு ஆகிய பண்பு நலன்களையுடையவள் சகுந்தலை.

(இ) "ஒலகம் தெரிந்த மாதிரிப் பேசிறியே ஒன்ட முகம் உனக்குத் தெரியுமாகா" என்ற கேள்வியை ரஸாக் தாய் சகீனாவிடம் கேட்டான். இக் கேள்வி சகீனாவின் அறுபது வருட வாழ்க்கையை அர்த்தமற்றதாக்கி விட்டது. அவளது ஆறு வயதில் அவளின் தாய் "பெண்ணாப் பொறந்தவள் கண்ணாடி பாக்கக் கூடாதடி" என்று கட்டுப்பாடு விதிக்கிறாள். ஆறு வயதில் தகரப் பெட்டி ஒன்றில் இருந்த கண்ணாடியில் தன் முகத்தைப் பாக்கிறாள். அப் பெட்டியைத் தாயார் பறித்தெடுக்கிறாள். அதன் பின் அவள் தன் முகத்தைக் கண்ணாடியில் காணாது வாழ்ந்து வருகிறாள். மகள் கேட்ட கேள்வியால் தனது அறுபது வருட வாழ்க்கையும் வீணாகி விட்டது என்று வேதனைப் படுகிறாள். சஞ்சலம் அடைகிறாள். "வாழ்க்கையில் அறுபது வருடங்கள் என்ன? ஆயிரம் வருடங்கள் வாழந்தாலும் என் வாழ்க்கை இருட்டு வாழ்க்கை தான். வாழ்க்கையே அர்த்தமற்ற தாக்கிவிட்டது." என்பதால் சகீனாவின் மனம் வேதனைப்படுகின்றது.

4. (அ) மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் பலர் பிரசாவுரிமைப் பிரச்சினையை எதிர் நோக்குகின்றனர். பொன்னம்மாவின் நச்சரிப்பால் வேலாயுதம் கண்டியிலுள்ள இந்தியா ஹைகமிசனர் அலுவகத்துக்குச் செல்கிறான். ஏழ்மை, அறியாமையில் உழல்பவர்கள் அவர்கள். வேலாயுதம் மனைவியின் இரு காதுக் கொப்புகளையும் ஈடு வைப்பதிலிருந்து அவர்களின் ஏழ்மை நிலையையறியலாம். தோட்டத் தொழிலாளர்கள் 50 வருடங்களுக்கு மேலாக இவ்வாறான கஷ்டமான வாழ்க்கையையே அனுபவித்து வருகின்றனர். தோட்டங்களில் போதிய வேலை கிடைப்பதில்லை. வேலைக்கு ஏற்ற ஊதியம் சரியாக வழங்கப்படுவதில்லை. வசிப்பதற்கு சுகாதார வசதிகள் உள்ள நல்ல வீடு கிடைப்பதில்லை. லயன், காம்பராக்களில் இருட்டு வாழ்க்கை நடாத்துகின்றனர். மலையகத் தமிழ்ச் சமூதாயத்தில் முடியாத கதைகள் பலவுள்ளன.

(ஆ) இளையான் குடிமாற நாயனார் நடு இரவில் நமது இல்லத்துக்கு வந்த சிவனடியாரை வரவேற்றார். அவர் மேனியிலுள்ள ஈரத்தைத் துடைத்தார். அவருக்குத் திருவமுது படைக்க வயலில் உள்ள நெல்லை வாரிக் கொண்டு வரும் படி மனைவியார் கூறினார். நாயனார்

மழைக்கால நள்ளிரவில் கூடை ஒன்றைத் தலையில் கவிழ்த்துக் கொண்டு வயலுக்குச் சென்றார். மழை நீரில் மிதந்து வரம்பு ஓரங்களில் சேர்ந்த நெல் வெண் முளைகளைக் கைகளால் சேர்த்தார். வாரி எடுத்தார். நிறை கூடையில் நிறைத்தார். பின் கூடையைத் தூக்கித் தலை மேல் சுமந்தார். வீடு திரும்பினார். கூடையை மனைவியாரிடம் கொடுத்தார். பத்தினியார் நெல் முளைகளைக் கழுவிச் சுத்தம் செய்தார்.

பத்தினியார் நாயனாரிடம் அடுப்பில் தீ மூட்ட விறகு இல்லையே" என்றார். கீலமாய்க் கிடந்த தம் வீட்டுக் கூரை வரிச்சுக்களை அறுத்துத் தள்ளினார். அவற்றை மனைவியார் அடுப்பில் வைத்து நெருப்பு மூட்டினார். நெல் முளைகளை வறுத்தார். அரிசியாக்கி அமுதாக்கினார். வீட்டின் கொல்லைப் புறத்துக்கு மாறனார் சென்றார். கீரை போன்ற சிறிய பயிர்களைக் கைகளால் தடவிப் பிடுங்கினார். கொண்டு வந்து மனைவியாரிடம் கொடுத்தார். மனைவியார் கீரையைக் கழுவிச் சுத்தம் செய்தார். பலவகைக் கறியமுதாக்கினார். பின் சிவனடியாரை அமுதுண்ண அவரை நித்திரையினின்றும் நாயனார் எழுப்பினார்.

(இ) ஐயனே! கேளுங்கள் நான் நாச தேசத்தில் வாழ்பவன். அங்கே வாழ்கின்ற கொடியவர்களில் கொடியவன். கடவுளுடைய கோபாக்கினி விழுந்தது. ஒன்றாக அவிந்தது. பரலோக ராஜனால் நியாயத் தீர்ப்பு வழங்கப்படுவது நிச்சயம். கருணை வேந்தனின் கட்டளையை மீறியோர் அக்கினி நரகத்துள் தள்ளப்படுவது உறுதி. வேதாகமறை நூலில் கூறப்படுவதை ஆராய்ந்ததால் நான் இத் துயரக்கடலில் அமிழ்ந்தினேன். நான் இறைவனை நினையாது மறந்தேன். நாள் தோறும் இழிந்த காரியங்களைச் செய்தேன். வீண் பொழுது போக்கினேன். கீழ் மகனாகிய நான் வருகின்ற தண்டனையை எவ்வாறு எதிர்கொள்வேன்? இறப்பதற்கும் மனம் வரவில்லை. தண்டனையை எதிர்நோக்கவும் தைரியமில்லை. வெளியே உள்ளாரைப் போல் விட்டுப்போவதற்கும் வேறு மாற்று வழியுமில்லை. இதற்குப் பிரதியீடாக ஏதாவது செய்யலாம் என்றால் அதற்குச் சிறிதும் பலமில்லை. வேறு புகலிடமின்றிப் பதைக்கின்றேன்.

5. (அ) "என் கணவனாகிய அரிச்சந்திரனுக்கு மட்டுமேயன்றி, மற்றொருவருக்கும் தோன்றாத எனது மங்கல நாண் இன்று புலையனாற் காணப்பட்டதே! இது பொல்லாத காலம் போலும்" என்று சந்திரமதி புலம்பினாள். தேவர்களால் கூட காண முடியாத இத்தாலியைப் புலையன் கண்டு விட்டானே! என்று பதை பதைத்தாள். வேடர் அம்பு உயிர் நிலையில் பட்ட மான் போல் துடித்தாள். உலைக்களத்தில் வைத்த மெழுகு போல் அழிந்து உருகினாள். கடல் போன்ற அன்புடையவன் அரிச்சந்திரன். அவன் என்னையும், மகனையும் அந்தணனுக்கு விற்றான். அப்போது எனது குலப்பண்பு என்னை விட்டு விலகிச் சென்றது. அழகு, பொறுமை, தவநிலை என்பன எம்மை விட்டுப் போகலாம். ஆனால் எனது கற்பு போவதற்கு என்ன காரணம் என்று உள்ளம் வெதும்பினாள். அழிவில்லாத பெருமையுடையவன் அரிச்சந்திரன். அவனுக்கு மட்டும் தெரிய வேண்டிய தாலி சுடலை காப்பவனுக்குத் தெரிந்து விட்டதே என்று வருந்தினாள்.

(ஆ) அரிச்சந்திரன் இறந்தது தன் மகன் என்பதை அறிந்தான். உண்மையுணர்ந்து புலம்பத் தொடங்கினான். அவனது மனம் வேதனைக்குள்ளாகியது. விதியின் செயலை நினைத்துப் பேசுகிறான். "மகனே! நீ தனியே சென்று காட்டில் பாம்பு கடித்த போது உன்னையும் சந்திரமதியையும் அந்தணனுக்கு விற்ற என்னை எவ்வாறு நினைத்து மனம் வருந்தி இறந்தனையோ? அறியேன்" என்றான். நான் உன்னைக் கால கண்டன் என்ற அந்தணனுக்கு விற்றேன். அப்பொழுது நீ என் உடலைத் தழுவி நின்றாய். நீ அவ்வாறு தழுவிய கைகளை அந்தணன் இழுத்துக் கொண்டு சென்றான். அக் கொடுமையைப் பார்த்தும் உன்னைப் பிரிந்து வந்தேன். இந்நாள் வரையும் உன்னை மீட்பதற்குரிய வழி காணாமலும், உன்னைக் குறித்து இரங்காமலும் இருந்தேன். ஆதலால் என்னைக் காண்பது பாவமென்று உன்னுயிரை மாய்த்தனையோ? என்று அரிச்சந்திரன் புலம்பினான்.

6. (அ) "உனது மனதில் நிறைந்துள்ள இறைவனது உயிரை எனது அம்பு பாய்ந்து சென்று குடித்தது. நான் வீழ்ந்து விட்டேன். இதுவே உண்மை" என்று நமுறூது கூறினான்.

அதற்குப் பதிலாக இபுறாஹிம் நபி அவர்கள் இறைவனின் பெருமைகளைக் கூறுகின்றார். "இறைவனுக்கு இயற்கையாகவோ, செயற்கையாகவோ உடலுறுப்புக்கள் இல்லை. உன் சொந்தக் குணத்தை அறியக் கூடிய அறிவும் உன்னிடத்தில் இல்லை. புத்தி தெளிவற்ற நீ இறைவனை அம்பு எய்து கொன்றது உண்மையல்ல. அது புதுமை" என்கிறார். இறைவன் உருவமற்றவன் என்று இஸ்லாமியக் கோட்பாடு கூறுகிறது. அவனுக்கு உடலுறுப்புக்கள் இயற்கையாகவோ, செயற்கையாகவோ இல்லை என நபி கூறினார்.

(ஆ) இறைவனின் கட்டளையின் படி செயற்படுபவர்கள் தேவர்கள். அவர்கள் மேகக் கூட்டத்தைக் கருமை நிறம் கொள்ளுமாறு பணித்தனர். அதன் படி நமுறூதின் படையிலுள்ள வஞ்சக மனமுடைய கயவர்களைக் கரிய மேகம் சூழ்ந்து கொண்டது. இறைவனின் தூதர்களின் பணிப்புக்கமைய வானம் கருமை நிறம் கொண்டது. இறைவனின் கட்டளைக்

கேற்பவே அனைத்தும் நிகழும். இதனாலேயே நமுறூதின் படை வீரர்களைக் கரிய மேகம் சூழ்ந்து கொண்டது.

7. (அ) சபையில் பேசுபவரின் பேச்சைக் கேட்டு நன்கு உணர்ந்து கொள்ளும் திறனுடையோர் நூற்றுக்கு ஒருவரே. கற்றறிந்த புலவர்களுள் தரமான புலவர்கள் ஆயிரத்தில் ஒருவரே. கேட்போர் உள்ளங்களைக் கொள்ளும் பேச்சாற்றல் மிக்கோர் பதினாயிரத்தில் ஒருவரே. வாரி வழங்கும் சிறந்த கொடையாளர் கோடியில் ஒருவரே. செந்தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமியே! இவை உண்மையாயின் மேலே தொங்கும் பொற்கிழிகளில் ஒன்று அறுந்து விழுவதாக!

பிறர் ஒன்றைக் கேளா முன்னரே அவரது குறிப்பறிந்து அளிக்கப்படுமாயின் அது முயற்சியால் ஈட்டப்பட்ட பொருள். அடுத்து வந்த கேட்டு அளிக்கப்படுமாயின் கொடையாகும். திரும்பத் திரும்ப ஒருவனை நாடி நடந்து சென்று அவனிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுமாயின் அப்பொருள் நடைக் கூலியாகும். பல முறை நடந்து சென்று கெஞ்சிக் கேட்டும் ஒருவன் கொடுக்கவிலலையானால் அவனது சந்ததி, தொடர்பே அற்று அழிந்து போகும். இது உண்மையாயின், பொற்கிழியும் அறுந்து விழுவதாக!

(ஆ) உண்மையான வழக்கு ஒன்றை விசாரித்து நடுவர்கள் நேர்மையாகத் தீர்ப்பளிக்க வுள்ளனர். அந்நேரம் ஒருவன் கையூட்டைப் பெறுவதற்காகக் குறுக்கிட்டு அவ்வழக்கைத் தள்ளி விட முற்பட்டால் அவன் தன் மக்களை இழந்து விடுவான். அவன் சுற்றமும் பரம் பரையும் அழிந்து போகும் என்பது உண்மையாயின் மற்றொரு பொற்கிழியும் அறுந்து விழுவதாக!

பாதிக்கப்பட்ட ஒருவன் நீதி மன்றில் தொடுத்த வழக்கை, எதிரிக்காகத் திறமையுடன் வழக்காடுபவனுக்குத் துணையாக ஒருவன் நின்று அவ்வழக்கைத் தோல்வியுறச் செய்வானா யின் அவன் நீதியைப்பெறாமல் தோற்றுப் போன வழக்காளியும், அவன் சுற்றத்தினரும் உள்ளம் உருகி அழுத கண்ணீரால், சந்ததியுடன் அழிந்து போவது உறுதி என்பது உண்மையானால் எஞ்சி நிற்கும் பொற்கிழியும் அறுந்து விழுவதாக!

விற்பனை முகவர்களாக :~

யாழ் நகரில் :-

* பூபாலசிங்கம் புத்தகசாலை
* துர்க்கா ஸ்ரேசனரீஸ் (சுன்னாகம்)
* மண்டேலா புத்தகசாலை
* சிறீகரன் புக் சென்ரர் (சுன்னாகம்)
* மக்மிலன் புத்தகசாலை
* சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை (நெல்லியடி)

கொழும்பு நகரில் :-

* பூபாலசிங்கம் புத்தகசாலை
* ஜெயா புத்தகசாலை
* வி.ஜே.பி. இன்ரனசினல்
* பிற்றப்பன்
* பமிலா புக் சென்ரர்
* அஷ்டலஷ்மி பதிப்பகம்
* சாயி ஸ்ரேசனரீஸ்
* வின்சர் புக் சொப்
* டானியல் புக் சொப்
* ஆயிஷா புக் சென்ரர்
* பிறைட் புத்தக நிலையம்
* மக்மிலன் புத்தகசாலை
* எம்.டி.குணசேன அன்கோ
* சிறீலங்கா ஜமாத் இஸ்லாமிக் சென்ரர்

மட்டு நகரில் :-

* சக்தி நூல் நிலையம்
* யுனைற்டட் புக் சென்ரர்
* அறிவு நூல் நிலையம் (ஏறாவூர்)
* ராஜா புக் சென்ரர்
* கிருஷ்ணா புக் சென்ரர்

திருமலையில் :-

* கப்பி புக் சென்ரர்
* ரசாக்கியா புக் சென்ரர்
* எவர்சயின் பிரின்டேர்ஸ் (கின்னியா)
* ராஜா புக் சென்ரர்
* ஈஸ்ற் லிங் கொம்னிகேசன்
* லெஸ்னி புத்தகசாலை
* சிறீ துர்க்கா என்றபிறைஸ்

வன்னி நகரில் :-

* கவிதா ஸ்ரோர்ஸ்
* கஜன் சென்ரர்
* கே.பி.கே சென்ரர்
* வாணி புத்தகசாலை

கல்முனையில் :-

* அன்பு ஸ்ரோர்ஸ்
* A to Z (நிந்தாவூர்)
* சிற்றி புக் சென்ரர்
* சொய்ஸ் பளெஸ்
* புக்ஸ்வேல்ட்

கண்டியில் :-

* கலைவாணி புத்தக நிலையம்
* லங்கா சென்ரர் புத்தகசாலை
* பராசக்தி ஏஜன்சிஸ் (பண்டாரவளை)

ஹற்றனில் :-

* நியூ கேசவன்
* முரளி கொம்னிகேசன்

அக்கரைப்பற்றில் :-

* சென்ரல் புக் சென்ரர்
* ரோயல் புத்தகசாலை

புத்தளத்தில் :-

* பேப்பர் கவுஸ்
* சத்தியா புக் கவுஸ்

* அல்குரஸி புத்தகசாலை - மாத்தளை
* நித்தியா புக் சென்ரர் - மன்னார்
* பேருவளை புக் சென்ரர் - பேருவளை
* அப்துல் ரஹீம் பிரதர்ஸ் - சம்மாந்துறை
* குமரன் ரேட் சென்ரர் - நுவரேலியா
* கொலிஜ் புக் சென்ரர் - மாவனெல்ல
* மகின்டாஸ் - பதுளை
* வீஸ்டம் புக் சென்ரர் - நீர்கொழும்பு
* மில்லேனியம் புக் சென்ரர் - வாழைச்சேனை
* K.M.A காதர் அன் சன்ஸ் - அக்குறன

அஸ்ரன் பதிப்பகம்

100 A/1 W. A. சில்வா மாவத்தை, கொழும்பு – 06.

கல்வியின் நோக்கம் உயர் மேம்பாடடைவதே.
நோக்கம் வெற்றிபெற கல்வி தொடரவேண்டும்.
கல்வி தொடர பரீட்சை முடிவுகளே மூலாதாரம்.

க.பொத சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகளே
உயர்கல்வி தொடர உண்மையான அத்திவாரம்.
பரீட்சையில் வெற்றிபெற இந்நூல் ஒரு வழிகாட்டி.
தவறான முறைகளை கைவிட உதவும் கருவி

பரீட்சையின் முடிவுகள் உயர்வாக அமைய
இப்பயிற்சி நூல் உதவியாக அமையும்.

"Work hard victory shall follow"

பதிப்பாசிரியன்

அஸ்ரன் பதிப்பகம்
100 A/1, W.A. சில்வா மாவத்தை
கொழும்பு-06

Astan Publications No :100 A/1 W.A De Silva MW Colombo-6
T.P 2366821

178/-